வரு.76 இல. 37 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2024 செப்டெம்பர் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை | September 22 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-






03
ஆசியாவின் பிரமாண்டமான வாகனங்கள் பொருத்தும் நிறுவனம்



08
வர்த்தகக் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு; இலங்கை பெற்ற மாபெரும் வெற்றி



12
இஸ்ரேலின் புதிய தாக்குதல் உத்தியும் மேற்காசிய அரசியலும்



24
கிரிக்கெட் ஜாம்பவான்களின் பாதையில் கமிந்து



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க - கொழும்பு பல்கலைக்கழக College House இல் வாக்களிப்பு.



ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச - இராஜகிரியவிலுள்ள ஸ்ரீவிவேகாராமய விகாரையில் வாக்களிப்பு.



ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க - பஞ்சிகாவத் தையிலுள்ள Saykoji ஆரம்ப பாடசாலையில் வாக்களிப்பு.



ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ - மெதமுலன டி.ஏ.ராஜபக்ஷ வித்தியாலயத்தில் வாக்களிப்பு.

### 09 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்யும்

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு அமைதியான முறையில் நிறைவு

- 75 வீதத்துக்கும் அதிகமான வாக்களிப்பு
- சிறு சிறு சம்பவங்கள் தவிர்ந்த குறிப்பிடத்தக்க வன்முறைகள் எதுவும் பதிவில்லை
- இன்று முழுமையான பெறுபேறுகள் வெளியிட முடியும்
- வெற்றியை அமைதியாகக் கொண்டாடுமாறு அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் மிக அமைதியான வகையில் நடைபெற்றது.

நாட்டு மக்கள் வாக்களிப்பில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றதோடு இம்முறை தேர்தலில் 75 வீதத்துக்கும் அதிகமான வாக்களிப்பு நடைபெற்றது.

கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலோடு ஒப்பிடும் போது இம்முறை சற்று குறைந்த வாக்குப் பதிவுகளே இடம்பெற்றுள்ளன. அத்துடன் தேர்தல் வரலாற்றில் அமைதியான முறையில் நடைபெற்ற சிறந்த தேர்தல் இதுவென நம்புவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் குறிப்பிடத்தக்க எத்தகைய வன்முறைகளோ முறைகேடுகளோ பதிவாகவில்லை என்றும் சிறு சிறு வன்முறை சம்பவங்களும் தேர்தல் சட்டங்களை மீறியுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள்

06



ஜனாதிபதி வேட்டபாளர் பா. அரியநேத்திரன் - அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயத்தில் வாக்களிப்பு

## நாளை 23ஆம் திகதி விசேட அரச விடுமுறை

### பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளையிட்டு நாளை 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் விஷேட அரசாங்க விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிவிப்பை நேற்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டதுடன் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை

06



06
விசேட வர்த்தமானி வெளியீடு
எரிபொருள், மின்சாரம் என்பன அத்தியாவசிய சேவைகளாகின



06
வாக்குச்சீட்டை கிழித்து வீசிய இளைஞர் யாழ். நகரில் கைது

### எங்கள் கருத்து...

## தாயகத்தின் எதிர்காலத்துக்காக ஒத்துழைப்புடன் செயற்படுவோம்!

இலங்கை மக்கள் மாத்திரமன்றி முழுஉலகுமே பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடந்து முடிந்துள்ளது. நாட்டின் தலைமைத்துவத்தை எவரிடம் கையளிக்க வேண்டுமென்ற தீர்ப்பை மக்கள் தமது வாக்குச்சீட்டுகள் மூலமாக வழங்கி விட்டனர்.

உலகில் ஜனநாயக அரசியலை உயர்வாகப் பேணுகின்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். பிரித்தானிய காலனித்துவத்தின் போது ஆங்கிலேய ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறைமையை அடிப்படையாக வைத்து இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு முறையானது தொடர்ந்தும் வழுவாது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் ஜனநாயக விழுமியங்களுக்கு அமைய

06

## மட்டு. கல்லடி, உப்போடையில் பேச்சி அம்மன் ஆலயம் தீக்கிரை



### மூலஸ்தானம் முற்றாக எரிந்து நாசம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடி, உப்போடை பேச்சி அம்மன் ஆலயம் நேற்றுமுன்தினம் (20) இரவு முற்றாக தீக்கிரையானது. மேற்படி

06

### ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நிறைவு

## பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்; அமைதி பேணுமாறு கோரிக்கை



**பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ**

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நிறைவடைந்துள்ள இந்தத் தருணத்தில் சட்ட விதிகளுக்கும் சட்டத்துக்கும் முரணாக செயற்படாது இருக்குமாறு பொதுமக்களிடம்

06

## நாடு முழுவதும் இன்று காலை 06 மணிவரை ஊரடங்கு அமுல்



**ஸாதிக் ஷிஹான்**

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நிறைவுற்றதையடுத்து நேற்று (21) இரவு 10 மணி முதல் இன்று (22) காலை 06 மணி வரை நாடளாவிய ரீதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நேற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. தேர்தல் வாக்களிப்பு

06



# ஜனாதிபதி தேர்தல் –2024 வாக்களிப்பு

## மேல் மாகாணம்



பிரதமர் தினேஷ் குணவர்த்தன
கொழும்பில் வாக்களிப்பு



ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர
மிரிஹான ஸ்ரீசந்தாராராமய விகாரையில் வாக்களிப்பு



அமைச்சர் பந்துல குணவர்த்தன
நுகேகொடை, மகா மாயா கல்லூரியில் வாக்களிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ
ஹம்பாந்தோட்டையில் வாக்களிப்பு



அக்மீமன தயாரத்ன தேரர்
தெஹிவளை சென். மேரிஸ் பாடசாலையில் வாக்களிப்பு



மனோ கணேசன் எம்.பி.
பாமன்கடை விகாரையில் வாக்களிப்பு



ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச ராஜபக்ஷ எம்.பி.
கொழும்பில் வாக்களிப்பு

### குருநாகல் மாவட்டம்




தயாசிறி ஜயசேகர எம்.பி.
குருநாகலில் வாக்களிப்பு

## வடமாகாணம்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வாக்களிப்பு



இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்
வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.
யாழ். குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வாக்களிப்பு




ரிஷாட் பதியுதீன் எம்.பி.
மன்னார் தாராபுரத்தில் வாக்களிப்பு.



அங்கஜன் இராமநாதன் எம்.பி.
யாழ். அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் வாக்களிப்பு



திலீபன் எம்.பி.
வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் வாக்களிப்பு.

## கிழக்கு மாகாணம்



க.குகதாசன் எம்.பி.
திரியாய் கிராமத்தில் வாக்களிப்பு




இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்



ஏ.எல்.எம். அதாஉல்லா எம்.பி.
அக்கரைப்பற்று அஸ் சிராஜ் மகா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்
ஏறாவூர் அரபா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



இரா.சாணக்கியன் எம்.பி.
பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா
ஏறாவூர் அல் ஜிப்ரிய்யா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி.
கல்முனை அல் ஸுஹரா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எம்.பி.
காத்தான்குடியில் வாக்களிப்பு



கோ.கருணாகரம் எம்.பி
மட்டக்களப்பு சென். மேரிஸ் வித்தியாலயத்தில் வாக்களிப்பு



கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர்
ஏறாவூர் அல் ஜிப்ரிய்யா வித்தியாலயத்தில் வாக்களிப்பு



முன்னாள் எம்.பி. க.கோடீஸ்வரன்
அக்கரைப்பற்று இராமகிருஸ்ண மிசன் மகா வித்தியாலயத்தில் வாக்களிப்பு

## மலையகம்



அமைச்சர் ஜீவன் தொண்டமான்
கொத்மலை வேவன்டன் தமிழ் வித்தியாலயத்தில் வாக்களிப்பு



ரவூப் ஹக்கீம் எம்.பி.
கண்டியில் வாக்களிப்பு



எஸ்.பி.திசாநாயக்க எம்.பி.
ஹங்குராங்கெத்த ரிகல்லகஸ்கட ஜயபிம கனிஷ்ட பாடசாலையில் வாக்களிப்பு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்
பண்டாரவளை நகர விகாரையில் வாக்களிப்பு



பழனி திகாம்பரம் எம்.பி.
தலவாக்கலை வட்டகொடை கலாபுவனம் தமிழ் பாடசாலையில் வாக்களிப்பு



இ.தொ.கா. தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன்
தலவாக்கலை வட்டகொட, மடக்கும்புர தெற்கு தமிழ் வித்தியாலயத்தில் வாக்களிப்பு




மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி.
நாவலப்பிட்டி, குருந்துவத்த எம்.எஸ்.அளுத்கமகே தேசிய பாடசாலையில் வாக்களிப்பு

ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்பு நேற்று (21) நடைபெற்றது. முக்கிய பிரமுகர்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்

**(படங்கள் - ஹற்றன் சுழற்சி, யாழ். விசேட, மன்னார் குறுப், வவுனியா விசேட, திருகோணமலை தினகரன், வாச்சிக்குடா விசேட, அட்டாளைச்சேனை குறுப், கந்தளாய் தினகரன், பெரியபோரதீவு தினகரன், திராய்க்கேணி தினகரன், அட்டாளைச்சேனை விசேட, தெஹிவளை கல்கிஸை விசேட நிருபர்கள்)**

தொகுப்பு - ஆர்.சுகந்தினி

இறக்குமதி செய்யும் செலவை விட மிகவும் குறைந்த விலையில் உயர் தரத்திலான புதிய வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம்.

வருடாந்தம் 400 மாணவர்கள் இலவசமாக வாகனத் தொழில்நுட்பத்தைக் கற்கும் பயிற்சிக் கல்லூரி



முதலில் சீனாவின் வர்த்தக நாமத்தைக் கொண்ட Fonton வகையின் பயணிகள் போக்குவரத்து வேன், டபள் கெப் மற்றும் Great Wall Motors (GWM) வகை வாகனங்கள்.

ஒரு நாளைக்கு ஆறு வாகனங்கள் பொருத்தப்படுகின்றன.

முதலாவது வேன் ஒரு மாதத்தில் சந்தைக்கு

# ஆசியாவின் பிரமாண்டமான வாகனங்கள் பொருத்தும் நிறுவனம்; Western Automobile Assembly Private Limited

கடந்த காலங்களில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனவே இதற்குரிய தீர்வாக இலங்கையில் வாகனங்களைப் பொருத்தும் தொழிற்சாலைக்குப் புத்துயிர் கிடைத்ததோடு, சமீபத்தில், ஒரு பெரிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தெற்காசியாவின் மாபெரும் வாகனங்களைப் பொருத்தும் சந்தை குளியாப்பிட்டியவில் உருவானது. இந்நாட்டில் நவீன வாகனங்களைப் பொருத்தும் பிரமாண்டமான நிறுவனமான குளியாபிட்டியவில் அமைக்கப்பட்டுள்ள வெஸ்டர்ன் ஓட்டோமொபைல் அசம்ப்ளி பிரைவெட் லிமிடட் (*Western Automobile Assembly Private Limited WAA*) கடந்த 17ம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அதிநவீன தொழிற்சாலையானது, நிலையான வளர்ச்சி மற்றும் நீண்ட கால செழுமைக்கு தேவையான நவீன தொழில்நுட்ப திறன்கள் மற்றும் அறிவை நாட்டின் இளைஞர்களுக்கு வழங்குவதன் மூலம் நமது உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். இலங்கை முதலீட்டுச் சபையின் (BOI) அனுமதியைப் பெற்ற திட்டமான இது சர்வதேச வாகன விசேட நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜேர்மனி, ஜப்பான் மற்றும் கொரியாவின் நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் இயந்திரங்கள், உதிரிப்பாகங்களைக் கொண்டு உயர்தர சர்வதேச தரத்தின் கீழ் செயற்படும் வாகனங்களைப் பொருத்தும் நிறுவனமே இதுவாகும். அதன் செயல்திறன் பல வர்த்தக நாமங்களைக் கையாளக்கூடிய ஒரு நெகிழ்வான அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது. கடுமையான சர்வதேச தரத்தை கடைபிடிப்பதன் மூலம், தொழிற்சாலை பிராந்தியத்தின் முதன்மையான வாகனங்களைப் பொருத்தும் கேந்திர மையங்களில் ஒன்றாக மாறும்.

இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கடந்த 2015ஆம் ஆண்டில் கிடைத்துள்ளது. அந்த அனுமதி இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரிய அளவில் வாகனங்களைப் பொருத்துவதற்குத் தேவையான அனைத்து பாகங்களையும் கொண்டுவந்து இலங்கையில் *reassemble* எனப்படும் மீளப் பொருத்தும் மிகப்பெரும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காகும். இந்தப் பணியைத் முன்னெடுத்துச் செல்வதற்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் மூலமான இணக்கப்பாட்டுக்கு வந்தது அதன் பின்னரேயாகும். இது வாகனங்கள், உதிரிப்பாகங்கள் எனும் *SemiKnocked Down kits (SKD)*ஐ இறக்குமதி செய்து, இலங்கையில் வாகனங்களைப் பொருத்தும் பணிகளுக்கு ஆரம்பத்தை வழங்கியது.





குளியாபிட்டி நகரிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள காணி முதலீட்டுச் சபையின் ஊடாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருப்பது இந்த தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காகும். 50 ஆயிரம் சது அடி பரப்பில் இந்த தொழிற்சாலையின் நிர்மாணப்பணிகள் கடந்த 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பத்துடன் வாகனங்களைப் பொருத்துவது தொடர்பில் உலகளாவிய தொழிற்சாலைத் தேவையைப் பூர்த்தி செய்யும் பயிற்சிக் கல்லூரிக்கான அடித்தளமும் இடப்பெற்றது நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு இத்துறை தொடர்பான பயிற்சியை வழங்கும் நோக்கிலாகும். இத்தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போது, புதிய மாணவர்களுக்கான பயிற்சிக் கல்லூரியையும் ஆரம்பிக்க வேண்டும் என்பது நிர்வாகத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இக்கோரிக்கைக்குச் செவிசாய்த்து, அதற்கான அடித்தளத்தை வழங்கி, வருடத்திற்கு 400 மாணவர்களுக்கு *Automobile technology* எனும் வாகனத் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை வளப்படுத்துவதற்கு அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர். இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு, இரண்டு வருட அனைத்து பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். NVQ இன் பல்வேறு நிலைகளில் உள்ள மாணவர்களுக்கு இதற்கான வாய்ப்பு கிடைப்பதோடு, குளியாப்பிட்டியவில் வாகனங்களைப் பொருத்தும் தொழிற்சாலைக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி கட்டடமாகும். தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் போது இந்தப் பயிற்சி கல்லூரியின் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது. வெஸ்டர்ன் ஒட்டோமொபைல் அசெம்ப்ளி பிரைவெட் லிமிடட் (*Western Automobile Assembly Private Limited*) என்ற பெயரில் குளியாபிட்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் வாகனங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் நான்கு அசம்பிள் லைன்ஸ் (*Assemble lines*)இன் கீழ் இடம்பெறும்.



அது வாகன உதிரிப்பாகங்களைத் தனித்தனியாகப் பொருத்துவதற்காகும். இந்த லைன்களில் கார், கெப், ஹைஏஸ் போன்ற பயணிகள் போக்குவரத்து வேன் போன்ற அனைத்து வகை வாகனங்களையும் பொருத்தக்கூடிய வகையில் உலகின் அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்டுள்ளது. தெற்காசியாவின் மிகப்பெரிய வாகனங்களைப் பொருத்தும் தொழிற்சாலையான வெஸ்டர்ன் ஒட்டோமொபைல் அசெம்ப்ளி பிரைவேட் லிமிடெட்டின் முதலீடு 27 மில்லியன் டொலர்களாகும்.

*Western Automobile Assembly Private Limited* என்ற பெயரிலான இந்த தொழிற்சாலையானது முற்றிலும் தனியார் துறை நிறுவனமாகும். இலங்கையில் பல்வேறு தரப்பினரால் வாகனங்கள் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் முதற்தடவையாக பாரியளவிலான மற்றும் முறையான வகையிலான உலகின் அதிநவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி வாகனங்களைப் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்தியா, இந்தோனேசியா, மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இவ்வாறான தொழிற்சாலைகள் இருந்த போதிலும் சர்வதேச மட்டத்தில் செயற்படும் தெற்காசிய பிராந்தியத்தில் வாகனங்களைப் பொருத்தும் பிரமாண்டமான தொழிற்சாலை இதுவாகும்.



வாகனங்களைப் பொருத்துவதற்கான ஆரம்பத்தினை வழங்கி தற்போது வாகனங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது *Fonton* வகை பயணிகள் வேன்கள் மற்றும் டபள் கெப்களைப் பொருத்தும் பணிகளாகும். இதற்காக தற்போது வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. *Great Wall Motors (GWM)* வகை வாகனங்களும் முதல் கட்டமாகப் பொருத்தப்பட உள்ளன. இந்த வகை டபள் கெப் மற்றும் *SUV (Sports Utility Vehicles)* வாகனங்களும் இங்கு பொருத்தப்பட உள்ளன. இந்த தொழிற்சாலையின் கீழ் முதலில் 4 வகையான வாகனங்கள் பொருத்தப்படும். அதன் பின்னர் மேலும் இரண்டு வகையான உதிரிப் பாகங்கள் சீனா ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட உள்ளன. எதிர்காலத்தில் சிறிய கார்களும் வாடிக்கையாளர்களால் தாங்கக் கூடிய விலையில் பொருத்தப்படவுள்ளன.

சீனாவின் வர்த்தக நாமத்தைக் *Fonton* மற்றும் *GWM* ஆகிய இரண்டு வகைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் சீனாவிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. இந்த வாகனங்கள் சீனாவில் தயாரிக்கப்பட்ட பிரபலமான வாகன வகைகளாகும். இத்தொழிற்சாலையின்ஊடாக பொருத்தப்படும் வாகனங்கள் வரும்காலங்களில் உள்ளூர் சந்தைக்கு விடப்படவுள்ளதோடு, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுடன் ஒப்பிடும் போது இந்த வாகனங்களின் விலைகள் மிகவும் குறைவாகவே இருக்கும் எனவும் இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். வாகனங்களின் வகைகளுக்கு ஏற்ப விலைகள் மாறுபடும் என்றாலும், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைப் போலவே, உயர் தரத்திலான புதிதாகப் பொருத்தப்படும் வாகனங்களும் இங்கு தயாரிக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

**எம். எஸ். முஸப்பிர்**

# பக்தர்களின் தலைவிதியையே மாற்றி எழுதிடும் கந்தவேள்!

**தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை பழனியில் நடத்திய “அனைத்துலகமுத்தமிழ் முருகன் மாநாடு 2024” 24.08.2024 ஆம் திகதி “அடியார்க்கு அருளும் அழகன்” கருத்தரங்கில் இறைநீதி அண்ணல், நீதியரசர் டாக்டர்ஆ.சொக்கலிங்கம் ஆற்றிய தலைமை உரை.**

தமிழ்க் கடவுள் திருமுருகனின் புகழையும், கருணை வெள்ளத்தையும் உலகமெங்கும் பரவச் செய்து அதன் மூலம் ஆன்மிக உணர்வையும், பக்தியையும், தமிழர் பண்பாட்டையும் அதில் விரவிய வாழ்வியல் நெறியையும், உலக மக்கள் அனைவரும் உணருமாறு அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்தும் தமிழகத்தின் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும், உறுதுணையாக இருந்து விழாவை நடத்த வடிவம் கொடுத்து, முயற்சி எடுத்து நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை மாண்புமிகு அமைச்சர் பி.கே சேகர் பாபுவுக்கும் உள்ளத்தின் உள்ள ஒலிநாடாவிலிருந்து பாராட்டுதல்களை முதலில் பதிவு செய்கிறேன்.

முத்தமிழ் முருகனுக்கு அரசு கண்டிருக்கும் இம்மாநாட்டில் கருத்தரங்கத்திற்கு தலைமை ஏற்கக் கிடைத்த அரும்பேற்றிற்கு அருள்தரு பழனியாண்டவரின் பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். கருவியாக இருந்து எனக்கு வாய்ப்பு வழங்கிய அமைச்சர் பி.கே. சேகர் பாபுவுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

“அடியார்க்கு அருளும் அழகன்” என்னும் இக்கருத்தரங்கத்தில் தம் அறிவுப் பெட்டகத்தைத் திறந்து தம் கருத்துக்களை அள்ளித்தர வந்திருக்கும் சொல்லச் சொல்ல மீறும் சொல் பேசும் சொ.சொ.மீ. சுந்தரத்தையும், மலேசியாவிலிருந்து வருகை தந்திருக்கும் டான்ஸ்ரீ டத்தோ நடராஜா, டத்தோஸ்ரீ டாக்டர் சரவணன், பேராசிரியர் ஜெயபாலன் வள்ளியப்பன் ஆகியோரையும், இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் பரம்நந்தாவையும், இலங்கையிலிருந்து வருகை தந்திருக்கும் இந்து சமய இயக்குநர் அனிருத்ரனையும் வரவேற்பதோடு அவர்களோடு நானும் பங்கு பெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்கருத்தரங்கத்தில் என்னோடு அறுவர் பங்கேற்கிறார்கள். சிவபிரானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகள் பழனியம்பதி சரவணப் பொய்கையில் விழுந்து, ஆறு குழந்தைகளாக மலர்ந்து முருகன் அவதரித்தது போல் இம்மேடையில் அறுவர் காட்சி தருகின்றனர். சிவபிரானின் பெயரைக் கொண்டதால் தானோ என்னவோ அனுபவத்தில் சிறியவன் என்னை இவ்வரங்கத்திற்கு தலைமை ஏற்க திருமுருகன் பதிவு செய்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.



**விழாவின் சிறப்பு**

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தமிழ்க் கடவுள் முருகன் சரவணப் பொய்கையில் உதித்ததாக வரலாறு கூறும் பழனியம்பதியில் நடைபெறுவது சிறப்பு. விழாவின் துவக்கத்தில் திருமடங்களின் தலைவர்கள் ஆசியுரை வழங்குவது சிறப்பு.

இதுபோல் முத்தமிழ் முருகனின் அருளையும், புகழையும் செம்மொழித் தமிழின் தேமதுர ஓசையோடு முதன் முதலாக தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை வாயிலாக பெரிய அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக நடத்துவது சிறப்பு. தொல்காப்பியம் சங்க காலம் துவங்கி இன்றைய நாள் வரையில் தொன்மையும், வளமையும், உயர்வும், சீரும் சிறப்புமிக்க தமிழ் இலக்கிய வரலாறு கண்ட ஏராளமான இலக்கியங்கள் கூறும் திருமுருகனின் அளப்பரிய கருணையையும், கொள்ள வேண்டிய பக்தி நெறியையும் நன்கு கற்று உணர்ந்து தம் உணர்வுகளை எழுச்சியுடன் எடுத்துரைக்கும் சமயப் பெரியவர்கள், தமிழறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரை அழைத்து ஆயிரக்கணக்கான ஆன்மிக அன்பர்கள், பொதுமக்கள் ஆகியோர் அனைவரும் கலந்து கொண்டு இப்பெரும் விழாவின் பயன்பெறத்தக்கவாறு மிகுந்த ஏற்பாடுகள் செய்திருப்பது விழாவிற்கு அணி சேர்ப்பதாகும்.

**தொடர் 20ஆம் பக்கத்தில்**

**தொகுப்பு: எச்.எச். விக்கிரமசிங்க**

# 300 கிலோமீற்றர்களை தன்னந்தனியாக கடந்த சயோஜிதாவின் கதை!



நடக்கும் கால்கள் ஆயிரங்கள் பெறுமதியானது என முன்னோர்கள் கூறியிருப்பது பல காரணங்களினாலாகும். நடைப்பயிற்சி உடலுக்கு மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல நன்மைகளைத் தருகிறது. 11 நாட்களில் 300 கிலோமீட்டர் தூரம் நடந்த இளம் பெண்ணைப் பற்றியே நாம் இங்கு கூறப்போகிறோம். அவளது பெயர் சயோஜிதா விஜேகுமாராகும். அவளுடைய இந்த அற்புதமான பயணத்தின் கதை சிலருக்கு கொஞ்சம் விசித்திரமாக இருக்கலாம்.

ஆசியாவின் மிக அழகான சாலைகளில் ஒன்றாகக் கருதப்படும் இந் நாட்டின் மத்திய மலைநாட்டின் ஊடாக 300 கிலோமீட்டர் நீளமுள்ள அழகிய சாலையான Pekoe Trail வழியாகவே அவர் இவ்வாறு தனியாகப் பயணித்துள்ளார். ஹந்தானையில் இருந்து ஆரம்பிக்கும் இந்தப் பயணம் நுவரெலியா பேத்ரோ தோட்டத்தில் நிறைவடைகிறது. இலக்கை அடையும் வரை இந்த பயணத்தில் 22 சிறப்பு இடங்கள் கடக்கப்பட்டுள்ளன. மேலும் பல மலைப்பாங்கான நிலப்பரப்புகள் இங்கு குறுக்கிட்டன. பல மலைகள் ஏற வேண்டும். மலைகளின் குளிர்ச்சியான மற்றும் சில சமயங்களில் மேகமூட்டமான மற்றும் பனிமூட்டமான சூழல் மற்றும் அழகிய மலைக் காட்சிகளுடன், புல்வெளிகள் முதல் வெப்பமண்டல காடுகள் வரை பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளும் இந்தப் பயணத்தில் காணப்படுகின்றன. சயோஜிதா விஜேகுமார் என்ற 23 வயது அழகான பெண், தனியாக பயணித்தமைதான் இந்தப் பயணத்தில் சிறப்பு.

"இது ஒரு ஆபத்தான பயணம் என்று ஒருவர் நினைக்கலாம். ஆனால் நான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்" என சயோஜிதா புன்னகையுடன் கூறினார். சயோஜிதாவின் இந்தப் பயணம் சோலோ ட்ரவல் என்ற வகையைச் சேர்ந்ததாகும். சோலோ ட்ரவல் எனும் தனிமையான பயணத்தில் கிடைக்கும் நன்மைகள் ஏராளமானதாகும். இவ்வாறான பயணங்கள் தனியாக புதிய இடங்கள் மற்றும் மனிதர்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுதந்திரத்தை வழங்குவதோடு, தான் விரும்பிய இடத்திற்குச் செல்லவும், விரும்பும்போது சாப்பிடவும், இயற்கையை விரும்பியவாறு ரசிக்கவும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இவ்வகையான தனிப் பயணங்கள் இலங்கையர்களுக்கு மிகவும் பரிச்சயமற்றவை என்றாலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இவ்வகையான பயணங்கள் மிகவும் பிரபலமானவையாகும். எவ்வாறாயினும், சயோஜிதாவின் பயணத்தின் மூலம், தனியாகப் பயணம் செய்யும் எண்ணம் எவ்வளவு அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.




கண்டி அலவத்துகொட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சயோஜிதா விஜேகுமார் கண்டி உயர்தர பெண்கள் பாடசாலையின் பழைய மாணவியாவார். 2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் தனியார் பல்கலைக்கழகமொன்றில் சர்வதேச உறவுகளில் பட்டம் பெற்று அதன் பின்னர் பல தொழில்களில் ஈடுபட்டார்.

"பட்டப்படிப்பை மேற்கொள்ளும் போதே நான்கு வருடங்கள் தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டதன் பின்னர் களைப்பை உணர்ந்தேன். இதற்கிடையில் பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன். வாழ்க்கையில் ஒரு மாற்றம் தேவை என்பதை உணர்ந்தேன். அதற்காக என்ன செய்யலாம் என்று யோசித்தபோது தனிமைப் பயணம் எனக்கு நினைவுக்கு வந்தது. சின்ன வயதிலிருந்தே எனக்கு சாகச செயல்கள் ரொம்பப் பிடிக்கும். பாடசாலை பருவத்திலிருந்தே மலை ஏறுவது, சைக்கிள் ஓட்டுவது, நடப்பது போன்றவற்றைச் செய்து வருகிறேன். எனக்கு மிகவும் பிடித்த ஒன்றைச் செய்ய விரும்பினேன், அதற்காகத்தான் Pekoe Trail ஐ தெரிவு செய்தேன். முதலில் இந்தப் பயணத்தை 12 நாட்கள் மேற்கொள்ளவே திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 11 நாட்களில் என்னால் இந்தப் பயணத்தை முடிக்க முடிந்துள்ளது. 300 கிலோமீட்டரில் 215 கிலோமீட்டர் நடந்தேன். சுமார் 45 கிலோமீட்டர் மலை ஏறவேண்டும். நான் இந்த பயணத்தின் போது சந்தித்த அனைத்து சிறப்புக்குரிய இடங்களுக்கும் சென்றேன்".



இதற்காக தான் ஆயத்தமான விதத்தை அவர் இவ்வாறு விபரித்தார்.a"பயணத்தைத் திட்டமிடும் போது, நான் முதலில் நினைத்தது, இலங்கை மக்களுடன் தங்கி அவர்களைச் சந் திப்பேன் என்றுதான். நான் மலையில் வசித்தாலும், பெரும்பாலும் நகரத்திற்கு அருகிலேயே வாழ்ந்திருக்கிறேன். அதனால்தான் மலையகத்தில் வாழும் நம் மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறிய விரும்பினேன். அவர்களும் தமிழர்களே. நானும் தமிழன் தான். ஆனால் நான் அவர்களிடம் சென்று அவர்களின் வாழ்க்கையைப் பற்றி கேட்டால், அவர்கள் அதைப் பற்றி பேச விரும்பவில்லை. அதனால் அவர்களிடம் சென்று அவர்களுடன் இருந்து அந்த வாழ்க்கையை அறிந்து கொள்ள விரும்பினேன். அதனால் இந்தப் பயணத்திற்கு நான் ஹோட்டல் முன்பதிவு செய்யவில்லை. எனது நண்பர்களிடமிருந்து கிடைத்த தகவலின் மூலம் தங்குவதற்கு சில இடங்களைக் கண்டுபிடித்தேன். சாகசச் செயல்களில் ஈடுபடும் எனது நண்பர் சஞ்சீவன், என் சகோதரி மற்றும் குடும்பத்தினரும் எனக்கு அதற்கு உதவினார்கள். முதலில் ஒரு நாளைக்கு சுமார் 30 கிலோமீட்டர் நடக்க வேண்டும் என்று நினைத்தேன். நான் வழக்கமாக தினமும் காலையில் கொஞ்சம் ஓடுவேன். ஆனால் இந்தப் பயணத்திற்குத் தயாராக வேண்டும் என்பதால், ஒரு மாத காலம் தினமும் காலையில் சுமார் 7 கிலோமீட்டர் ஓடினேன். அந்த நாட்களில் நான் கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்தேன். மேலும், ஊரில் இருந்து வீட்டுக்கு வந்த நாட்களில் மலை ஏறி பயிற்சி செய்து வந்தேன். இதுபோன்ற பயணத்திற்கு அந்த மாதிரியான தயாரிப்பு தேவை என்று நான் நினைக்கிறேன்."

"நான் முதலாவது நாளின் பயணத்தை ஆரம்பித்தது ஹந்தானவிலாகும். அன்று எனது தோழி ஒருத்தி என்னோடு வந்தார். அவர் முதலாவது பொயிண்ட்டுக்கு 14 கிலோ மீற்றர் தூரம் என்னோடு வந்தார். அதற்கு அப்பால் அவரால் நடக்க முடியாது என பஸ் ஒன்றில் ஏறி லுல் மலைக்குச் சென்றார். நான் அங்கிருந்து நடந்தே லுல் மலைக்குச் சென்றேன். அங்கு சென்ற போது அங்கு நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. நான் தனியாகவே இரவு 8 மணியளவில் லுல் மலையின் மேலே சென்றேன். எனது நண்பி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் யுவதியாகும். அவளால் சிங்களம் பேச முடியாது. இதனால் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. நான் லுல் மலையின் மேலே இருந்த போது அவள் கீழே சிறிய கடை ஒன்றுக்கருகில் தங்கி நின்றாள். இரண்டு இளம் பெண்கள் தனியாக இந்த இரவில் என்ன செய்கிறீர்கள் என அந் நேரம் அக்கடையில் இருந்தவர் கேள்வி கேட்டுள்ளார். அவர் எம்மைப் பற்றி பொலிஸாரிடமும் கூறியுள்ளார். என் நண்பி இது தொடர்பில் எனக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கூறிய போது நானும் கலவரமடைந்தேன். நான் மேலே இருந்து கொண்டு அழுதேன். நான் கீழே வருவதற்கான வழியை அறிந்திருந்தாலும் அந்நேரம் நானும் கலவரமடைந்திருந்தேன். எம்மிடம் பாஸ் இருந்தது. பயப்பட வேண்டிய தேவையும் இல்லைதான். என்றாலும் அந் நேரத்தில் நான் கலவரமடைந்தேன். எவ்வாறாயினும் நான் இரவு 9, 9.30 மணியளவில் கீழே வந்தேன். அங்கிருந்த ஒருவர் எம்மை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு வழங்கி எமக்கு தங்குவதற்கு இடம் வழங்கினார். அந்நேரம் பொலிஸாரும் அங்கு வந்து எம்மோடு நட்புறவுடன் உரையாடியதால் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. இரண்டாவது நாளில் நான் தனியாகவே எனது பயணத்தை ஆரம்பித்தேன்"

இரண்டாவது நாளில் சயோஜிதா மற்றொரு புதிய அனுபவத்திற்கு முகங்கொடுத்தார். அன்றைய நாள் அவள் லுல் மலையிலிருந்து தவலம் தென்ன திசையில் 18 கிலோ மீற்றர் அளவில் நடந்து சென்றாள்.

"நான் அந்த தூரத்தின் அரைவாசி தூரத்தைக் கடந்த போது ஊரார் சிலரைச் சந்தித்தேன். நான் செல்லும் வழியில் சிறுத்தைகள் இருப்பதால் தாம் கூறும் வழியில் செல்லுமாறு அவர்கள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் கூறிய வழியில் செல்வதே எனக்குப் பாதுகாப்பானது என்பதால் நானும் அவ்வழியிலேயே சென்றேன். வெகுதூரம் சென்றதன் பின்னர் பார்த்த போது அதற்கப்பால் வீதி இருக்கவில்லை. அப்போது நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. கீழே பாதாளம். வழியில்லாமல் நான் எங்கு செல்வது என நன்றாகப் பயந்து போனேன். சுமார் மூன்று மணிநேரம் முன்னாலும், பின்னாலும் பயணிக்க முடியாமல் நான் ஒரே இடத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன். நன்றாக மழை பெய்து கொண்டிருந்ததால் ஒரு தடவை நான் வழுக்கி விழுந்து விட்டேன். அந்நேரம் நான் நன்றாகவே பயந்து போனேன். அந்நேரம் எனக்கு கோயில் மணி ஒன்றின் சப்தம் கேட்டது. கோயில் இருந்தால் அவ்விடத்தில் மக்கள் இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு நான் அந்த வழியைத் தேடிக் கொண்டு சென்றேன். அவ்வாறு செல்லும் போது எனக்கு வழி தெரிந்தது. தங்குமிடமும் கிடைத்தது. சில நாட்களில் நான் ஏற்கனவே பேசி புக் பண்ணிய இடங்களில் தங்கினேன். அதேபோன்று எதேச்சையாகச் சந்தித்தவர்கள் அவர்களது வீடுகளுக்கு என்னை அழைத்துச் சென்று எனக்கு உணவு பானங்களை வழங்கி தங்க வைத்து என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள். இவ்வாறான அபூர்வமான அனுபவங்கள் எனக்கு இந்தப் பயணத்தில் கிடைத்தது. இது எனது முதலாவது சோலோ டுவர் என்பதால் நான் 20 கிலோ பேக் ஒன்றை எடுத்துச் சென்றிருந்தேன். ஹப்புத்தளையில் நான் மழையில் நன்றாக நனைத்து விட்டேன். இதனால் இடைவழியில் பேக்கின் எடையைக் குறைத்துக் கொண்டேன்".

சயோஜிதா நுவரெலியாவில் உள்ள பேத்ரோ தோட்டத்தில் இந்த அழகான மற்றும் சிலிர்ப்பான பயணத்தை முடித்தார்.

"அனைவருமே இவ்வாறான சோலோ டுவர் ஒன்றை மேற்கொண்டால், சாகச அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டால் அது வாழ்நாளில் மிகவும் பயனுள்ளதாக அமையும் என நினைக்கின்றேன். அதன் மூலம் எம்மால் வாழ்க்கையைப் பற்றிய நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ளலாம். நான் இதற்கு முன்னர் மலை ஏறியிருந்தாலும், சமீபகாலமாக அதுபோன்ற எந்த ஒரு செயலையும் செய்யாததாலும், உடல் வலிமை இல்லாததாலும் முதலில் நான் அசௌகரியமாக உணர்ந்தேன். இந்தப் பயணத்தில் அதுதான் எனக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. பயணத்திற்குப் பிறகு நான் 5 நாட்கள் ஓய்வெடுத்தேன். நான் அனுராதபுரத்தில் உள்ள விபஸ்ஸனா தியான மையத்தில் 10 நாட்கள் தங்கியிருந்தேன்"



இவ்வாறு தெரிவு செய்ததற்கான காரணத்தையும் சயோஜிதாவிடம் கேட்டோம்.

"சோலோ ட்ரவலின் போது தொடர்ந்து நடக்க வேண்டுமே தவிர, ஒரு இடத்தில் நிற்க முடியாது. மனதை அமைதிப்படுத்த வேண்டுமானால் இப்படி ஒரு நிறுத்தம் அவசியம் என்று உணர்ந்தேன். அதனால் தான் நான் அந்த தியான மையத்திற்குச் சென்றேன். அது மிகவும் சுதந்திரமான இடம். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து இரவு 9.30 மணிக்கு உறங்கச் சென்றேன். கைபேசியைப் பயன்படுத்தாமல், எவருடனும் பேசாமல் தனியாக எனக்கே உரிய நேரத்தை கழித்தேன். புத்த தத்துவம் மற்றும் தியானத்தின் மூலம் வாழ்க்கையைப் பற்றி ஒரு புதிய சிந்தனையை உருவாக்கினேன்.

என்றாலும் இந்த அனுபவம் சயோஜிதாவுக்கு எளிதாக அமையவில்லை. அதற்கு காரணம் சிலரது சமூக மனப்பான்மையே தவிர வேறெதுமில்லை.

"சிறு வயதிலிருந்தே, பொண்களுக்கு அது கூடாது, இது கூடாது என்ற பேச்சுக்களையே கேட்டு வந்துள்ளோம். அங்கு போகக் கூடாது இங்கு போகக் கூடாது, மக்கள் ஆபத்தானவர்கள். அவர்களை நம்பக்கூடாது இப்படியான கதைகளையே கேட்டு வந்துள்ளோம். இப்படி ஒரு பயணத்தை மேற்கொள்ளப் போகிறேன் என்று சொன்னதும் என் குடும்பத்திற்கு அது பிடிக்கவில்லை. காடு, மலைகளில் பல நாட்கள் தனிமையில் பயணம் செய்வது பெண்ணுக்கு ஏற்றதல்ல என பலரும் கூறினர்.

என் தாய் ஒரு திறந்த மனதுடைய பெண்ணாகும், ஒரு ஆசிரியையும் கூட. அதனால், என் பயணத்தை அவர் அனுமதித்தாலும், சமூகம் என்ன சொல்லுமோ என்ற பயமும் அவருக்கு இருந்தது. ஆனால் நான் பயணத்தை முடித்துக்கொண்டு வந்ததன் பிறகு தாயின் அணுகுமுறை மாறியது. உண்மையில் அந்த பயணத்தின் போது நான் மக்களைப் பற்றி நிறைய கற்றுக்கொண்டேன். கெட்டவர்கள் இல்லாமல் இல்லை. அப்படிப்பட்டவர்களையும் இந்தப் பயணத்தில் நான் சந்தித்தேன். எனினும் அதிகமாக நல்லவர்களையே சந்தித்தேன். நம் சமூகத்தில் மக்களிடையே அன்பும், கருணையும், பாசமும் இன்னும் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். என்றாலும், நமது பாதுகாப்பிற்கு நாமே பொறுப்பு என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது".





23 வயதான சயோஜிதா தற்போது முதுகலை பட்டப்படிப்புக்கு தயாராகி வருகிறார். தனது குடும்பம் இந்துவாக இருந்தாலும், ஒரு மதத்துக்கு மட்டும் தான் தன்னை சிறை படுத்திக் கொள்ள விரும்பவில்லை என இந்த அழகிய கருத்துக்களைக் கொண்ட இந்த இளம்பெண் கூறுகின்றார்.

"நான் நம்பிக்கை கொண்டிருப்பது மதத்தில் அல்ல, இயற்கையின் மீதாகும். மூன்று வருடங்களுக்கு முன்னர் எனக்கு மதம் இல்லை என்று என் தாயிடம் கூறினேன். அன்று என் தாய், தம்பி, தங்கை அனைவரும் இது தொடர்பில் என்னோடு தர்க்கம் புரிந்தார்கள். இப்போது யாரும் அதைப் பற்றி என்னோடு பேசுவதில்லை. ஆனால் நான் சொல்லும் செய்யும் விடயங்களுக்கு எனது தாய் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறார். என் தாயின் புரிதல் என் வாழ்க்கையை இலகுவாக்கியது".

பதினொரு நாள் பயணத்தில் மலைகளின் அழகை ரசித்தவள், அந்த அழகு சில சமயங்களில் தன்னை ஆச்சரியப்படுத்துவதாகவும் கூறினார்.

"இலங்கை என்பது மிகவும் அழகான ஒரு நாடு. அதேபோன்று இலங்கையின் காலநிலையும் ஆச்சரியமானது. நுவரெலியாவில் எமக்கு குளிரான காலநிலை நிலவினாலும் கண்டியில் வெப்பமான காலநிலையை எம்மால் அனுபவிக்க முடியும். எமது நாட்டின் கலாசாரம் மற்றும் இயற்கை அழகு எனக்கு மிகவும் பிடிக்கும். இந்தப் பயணத்தில் நான் நிறைய பேரைப் பார்த்தேன். சந்தித்தேன். அவர்களின் வாழ்க்கை முறையை பார்த்தேன். இப்போது முன்னரைப் போல் இன ரீதியாக மக்களுக்குள் பிளவுகள் இல்லை என்று நினைக்கிறேன். அவ்வப்போது அவ்வாறான இடங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் அவற்றால் எனக்கு எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. மாறாக, எங்கள் மக்களிடையே விருந்தோம்பல், அன்பு மற்றும் ஒற்றுமையை நான் அதிகம் கண்டேன். அதனால்தான் நான் இலங்கையை மிகவும் நேசிக்கிறேன்.

பட்டப் பின் படிப்பிற்காக வெளிநாடு சென்றாலும், மீண்டும் இலங்கைக்கு வந்து இலங்கைக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்" என்றார். அவளுடைய கருத்துக்கள் நெகிழ்வானவை, மென்மையானவை, அழகானவை. படித்த, புத்திசாலி, அழகான இந்த பெண்ணின் வார்த்தைகள் சுயநலத்திற்காக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கனவு காணும் சிலருக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"தாம் விரும்பியதைச் செய்வதற்கு பெண்ணாக இருப்பதைத் தடையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். ஆனால் அது யாரையும் புண்படுத்திவிடக் கூடாது" என்பது அவரது எண்ணங்களில் இருப்பது ஒரு விசித்திரமான வசீகரமாகும்.

"நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் வெளி நபர்களுடன் பேசி வெளி உலகத்திலிருந்தே அனைத்தையும் தேட முயற்சிக்கிறோம். தமது மகிழ்ச்சி, ஆறுதல் இவை அனைத்தையும் நாம் வெளி உலகத்திலிருந்து அல்லது வெளி ஆட்களிடமிருந்ததே தேடிக் கொள்ள முயற்சிக்கிறோம். இப்படியான ஒரு சாகசச் செயல், தனியான சுற்றுப் பயணத்தில் ஈடுபடுவதன் மூலம், தனக்கு தன்னுடன் அதிக நேரம் செலவழிக்க வாய்ப்பு கிடைக்கிறது. தனக்கு தனக்கான ஒரு நேரம் கிடைக்கிறது. அதன் மூலம், தன்னைத் தேடிக் கொள்வதற்கும், தான் உண்மையிலேயே நேசிக்கும் விடயங்களைத் தேடிக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. எனக்கு அந்த அனுபவம் கிடைத்ததோடு, நான் அதனை அனுபவித்தேன். அந்தப் பயணம் என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவமாகும் . அந்த அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் நம்புகிறேன். எனவே, அந்தப் பயணத்தின் அனுபவத்தில் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கின்றேன்".

**சுரேக்கா நில்மினி இளங்கோன்**
**தமிழில்**
**எம். எஸ். முஸப்பிர்...**



# பங்களாதேஷில் பாராளுமன்ற தேர்தல் எப்போது?

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும், பாராளுமன்றத் தேர்தல் குறித்து எந்த அறிவித்தலும் இதுவரை வெளியிடாதது சவாலாக அமைந்துள்ளது. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி நீக்கம் செய்து நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனுஸை பிரான்ஸில் இருந்து அழைத்து வந்து இடைக்கால அரசை அமைத்த அந்நாட்டு மாணவர் இயக்கம் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்த போதிலும், இதுவரை அது தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பங்களாதேஷின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அண்மையில் டாக்கா நகரில் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கட்சியின் தலைமையகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொதுத் தேர்தலை நடத்தி நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு கலிதா ஜியா தலைமையிலான கட்சி இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் பேராசிரியர் மொஹமட் யூனுஸிடம் வலியுறுத்தியதாக அந்நாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

**டாக்கா பல்கலைக்கழக மோதலில் மாணவர் ஒருவர் உயிரிழப்பு**

இதற்கிடையில், பங்களாதேஷின் டாக்கா பல்கலைக்கழகத்தினுள் அரசியலைத் தடை செய்யுமாறு கோரி பங்களாதேஷ் தலைநகரில் டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் எண்ணிக்கையானோர் நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், பங்களாதேஷின் மாணவர்கள் இரு பிரிவினராக பிளவுபட்டதன் காரணமாக பல்கலைக்கழக வளாகத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தப் பதற்றம் சில தினங்களுக்கு முன்னர் தீவிரமடைந்ததோடு, அந்தச் சம்பவத்திற்கு ஒரு நாளின் பின்னர் ஒரு இரவில் அந்தப் பல்கலைக்கழகத்தின் விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

டாக்கா பல்கலைக்கழகத்தில் மாணவர் மோதலில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன அந்த மாணவர் உயிரிழந்திருப்பது மாணவர் விரிவுரை மண்டபத்திலாகும். அவர் அடித்துக் கொல்லப்பட்டது தெரியவந்துள்ளது. மேலும் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. கைது செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவர் டாக்கா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீட மாணவர் ஒன்றியத்தின் பிரதி செயலாளர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்கா பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த மாணவர்கள் கைது

செய்யப்பட்டுள்ளதாகவும், உயிரிழந்த மாணவர் திருடன் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், டாக்கா பல்கலைக்கழக வளாகத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கக் கோரி போராட்டம் நடத்தப்பட்ட சம்பவத்திற்கும் பல்கலைக்கழக மாணவர் படுகொலை செய்யப்பட்டமைக்கும் தொடர்பு உள்ளதா என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது டாக்கா பல்கலைக்கழகத்தில் 95% மாணவர்கள் அரசியலை பல்கலைக்கழகத்தில் இருந்து அகற்றுமாறு கூறியுள்ளதாகவும், ஒரு சிலரின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைகழக வளாகத்தில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதித்ததற்காக அதிபரை கடுமையாக விமர்சித்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலை காரணமாக டாக்கா பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**@ 5 மில்லியன் தொழில் இழக்கப்படும் ஆபத்து**

பங்களாதேஷில் வெளிநாட்டு உற்பத்தி மற்றும் தொழில்துறை நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் அதிகரித்துள்ளதாக பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தங்கள் நிறுவனங்களில் தொழிலாளர்களிடையே அமைதியின்மை அதிகரித்துள்ளதன் காரணமாக இடைக்கால அரசின் மீதான முதலீட்டாளர்களின் நம்



பிக்கையும் சரிவடைந்துள்ளதாக பங்களாதேஷின் 'டெய்லி ஸ்டார்' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சில தொழிற்துறை பிரதேசங்களில் குறைந்த அளவிலான பொலிஸ் பாதுகாப்பு இருப்பதாகவும், எதிர்பாராத ஊழியர்களின் போராட்டங்கள் அல்லது வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாரின் தலையீடு தொடர்பில் சந்தேகத்திற்கிடமான நிலையும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் அந்நாட்டு வெளிநாட்டு காலணி நிறுவனத்தின் மீது தொழிலாளர்கள் குழுவொன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதோடு, சம்பளத்தை அதிகரிக்குமாறு வற்புறுத்தி பணியாளர்களின் போராட்டங்களும் தீவிரமடைந்து வருவ

தாகவும், அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. சுமார் 35 நாடுகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் பங்களாதேஷில் 21க்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றதோடு, முதலீட்டாளர்கள் பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு பங்களாதேஷை விட்டு வெளியேறினால், அந்த நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 5 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலை இழப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**@ ஊடக வேட்டை ஆரம்பம்**

கடந்த மாதம் மாணவர் போராட்டத்தின் போது மொஹமட் ஃபஸ்லு என்ற 31 வயது நபர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணையில் நாட்டிலுள்ள 25 ஊடகவியலாளர்களும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் 165 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போராட்டத்தின் போது உயிரிழந்த நபரின் மூத்த சகோதரர் சமீபத்தில் தலைநகர் டாக்காவில் உள்ள காவல்நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, முன்னாள் பிரதமர் மற்றும் அவாமி லீக் அரசின் முன்னாள் நீதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர், முன்னாள் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் ஆணையாளர் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளும், அவாமி லீக் கட்சியின் பல தலைவர்களும் வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பங்களாதேஷில் உள்ள பிரபல வர்த்தக குழுவொன்றின் தலைவர் மற்றும் அந்த வர்த்தகத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான அவரது மகனும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


மாணவர் போராட்டத்தின் போது, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் முகமது ஃபஸ்லூ கொல்லப்பட்டதாகவும், அவரது மரணத்திற்கு 25ஊடகவியலாளர்களைப் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருப்பது ஆச்சரியமாக உள்ளது என பங்களாதேஷ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. போராட்டத்தில் செய்தி சேகரிக்க வந்த 5 அந்நாட்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதுடன், 20க்கும் மேற்பட்டோர் போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் போராட்டத்தின் போது பாராளுமன்றத்திலிருந்து 90 லட்சம் டக்கா காணாமல் போயுள்ளது.

வங்கதேசத்தில் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்ததால் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு தப்பிச் சென்றதையடுத்து போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டதன் பின்னர், நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ மற்றும் தனியார் பணம் 90 இலட்சம் காணாமல் போயுள்ளமை சமீபத்தில் தெரியவந்துள்ளது. ஆகஸ்ட் 5ம் திகதி டாக்காவில் அமைந்துள்ள பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்களால் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் தகவல் வெளியானதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பாராளுமன்றத்தில் பதில் செயலாளரினால் பாராளுமன்ற நிதிக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, காணாமல் போன பணத்தை மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக வங்கதேச நாடாளுமன்றத் தலைமைச் செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. பாராளுமன்ற கட்டடத்தின் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் உப பிரிவுகளில் காணாமல் போன பல்வேறு பொருட்கள் தொடர்பிலும் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பட்டியல் ஒவ்வொரு திணைக்கள தலைவர்களிடமும் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்திற்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு அமர்ந்து கொண்டும், புகைபிடித்துக் கொண்டும் பாராளுமன்ற மண்டபத்திற்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்ததோடு, பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறியிருந்தனர். நாடாளுமன்ற சபை மண்டபத்தில் போராட்டக்காரர்கள் நடந்துகொண்ட விதம் குறித்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வந்ததைக் காணமுடிந்தது.

**பௌஸ் முஹம்மட்**
**தமிழில் – எம். எஸ். முஸப்பிர்...**



# யார் வென்றாலும், தோற்றாலும் கோடிக் கணக்கில் கைமாறும் பணம்

## இரத்தினபுரியின் தேர்தல் பந்தயம்

சிங்கம் இல்லாத காட்டில் நரி ராஜா என்பது ஒரு கதையாகும். ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் இரத்தினபுரியில் இடம்பெற்றுவரும் தேர்தல் பந்தயங்கள் பற்றி சிந்திக்கும் போது அந்தக் கதையின் உண்மையும் பொய்மையும் புலப்படும். ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது இறுதி முயற்சியுடன் தேர்தல் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், இரத்தினபுரியில் தேர்தல் பந்தயம் கட்டியவர்கள் உசாராக பணியில் இறங்கியுள்ளார்கள்.

தேர்தல் காலத்தில் பந்தயம் கட்டுவது புதிய விடயமல்ல. ஏனைய காலங்களில் பந்தயம் கட்டுவது ஒன்றில் தலை முடியை வழிப்பதற்கும், அல்லது மொட்டையடிப்பதற்குமேயாகும். அல்லது வெற்றி பெற்ற கட்சியின் நிறத்தில் ஆடை அணிந்து கொண்டு ஊர் முழுதும் சுற்றிவருவதாகும். ஆனால் காலப்போக்கில் அந்தப் பந்தய முறை மாறி அது பணத்தைப் பந்தயம் கட்டும் முறையாக மாறியது. அதுவும் 10, 20, 100 ரூபாய் போன்ற எண்ணிக்கையில் அமைந்திருந்தது. என்றாலும் நாம் பேசப் போவது இரத்தினபுரியில் தேர்தல் பந்தயங்கள் முற்றாக மாறி சூதாட்ட வடிவத்தை எடுத்துள்ளதைப் பற்றியேயாகும்.

> **இரத்தினபுரியில் குறிப்பிட்ட சில தேர்தல் பந்தயங்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டது கோடிக் கணக்கிலாகும். இம்முறை இவ்வாறான வாக்குப் பந்தயத்தின் அதிகூடிய பெறுமதி 6 கோடி ரூபாவாகும் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.**

அண்மைய திகதியின்படி, இரத்தினபுரியில் குறிப்பிட்ட சில தேர்தல் பந்தயங்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டது கோடிக் கணக்கிலாகும். இம்முறை இவ்வாறான வாக்குப் பந்தயத்தின் அதிகூடிய பெறுமதி 6 கோடி ரூபாவாகும் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த பந்தயங்கள் பேச்சோடு வரையறுக்கப்பட்டவையல்ல. பந்தயம் கட்டும் இரு தரப்பினரும் பந்தயத்தின் பெறுமதியை செல்லுபடியாகும் பண நோட்டுக்களில் வைப்பிலிடுவது கட்டாயமாகும். இரு தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்ட பணம் நம்பகமான நபர் ஒருவரிடம் வைப்புச் செய்யப்பட வேண்டும். பணத்தை பாதுகாப்பாக வைத்திருப்பவர்களுக்கு வெற்றித் தொகையில் 5 சதவீதம் கிடைக்கும்.

இரத்தினபுரி தேர்தல் பந்தயங்களில் எளிமையான தேர்தல் பந்தயம் அவ்வாறிருந்தாலும், இதனைவிட மிகவும் சிக்கலான தேர்தல் பந்தயங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த நோக்கத்திற்காக, ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் ஓட்டப்பந்தய சீட்டைப் போன்ற போட்டிக் கூப்பன்களைத் தயாரித்துக் கொண்டு ஒவ்வொரு விலைகளில் அவற்றை விற்பனை செய்கின்றார்கள்.

இரத்தினபுரி நிமல் முதலாளி தேர்தல் பந்தயம் தொடர்பில் விபரங்களைக் கூற ஆர்வத்துடனிருந்தார். காரணம் இரத்தினபுரி மாமரத்தின் கீழ் பல வருடங்களாக இடம்பெற்று வரும் தேர்தல் பந்தயங்கள் பற்றி அவர் அறிந்த தகவல்களை மாத்திரமின்றி, தேர்தல் வரலாறுகள் தொடர்பில் அவர் சேகரித்து வைத்திருக்கும் தரவுகளுமேயாகும். இரத்தினபு தேர்தல் பந்தயங்கள் தொடர்பில் நன்கு அறிந்து வைத்துள்ள நிமல் முதலாளியை நாம் சந்தித்தது மாமரத்தின் கீழ் இரத்தினக்கல் மையத்திற்கு அருகிலாகும்.

“எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. என்றாலும் இரத்தினபுரியில் தேர்தல் பந்தயம் இம்முறை முன்னரை விடவும் உற்சாகமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பது எனக்கு நன்கு விளங்குகின்றது. காரணம் தேர்தல் ஒன்று வந்திருப்பது நீண்ட காலத்திற்குப் பிறகல்லவா. அதேபோன்று மக்களின் ஆர்வமும் இப்போது அதிகரித்திருக்கின்றதுதானே. அதனால் பந்தயம் கட்டுவதும் அதிகரித்துள்ளது. இன்று காலை ஆறு கோடிக்கான பந்தயம் பிடிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அதேபோன்று இன்னும் ஒரு கோடிக்கான பந்தயமும் பிடிக்கப்பட்டுள்ளது. அதிகமான பந்தயங்கள் பத்து இலட்சத்திற்கும் அதிகமானவையாகும். இந்த தேர்தல் பந்தயம் தொடர்பில் அதிகமானோரிடத்தில் பெரும் ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது”

“இவ்வாறான பெரிய பந்தயங்கள் மட்டுமின்றி, இன்னும் சிறிய சிறிய பந்தயங்களும் இருக்கின்றதுதானே? பெறும் வாக்குகளின் எண்ணிக்கை, அதிகப்படியான வாக்குகளின் எண்ணிக்கை, வெற்றி பெறும் வேட்பாளரைப் பெயருக்கு புள்ளடியிடும் போட்டிகளும் உள்ளதுதானே...?” என நிமல் முதலாளியின் பேச்சை வேறு திசைக்குத் திருப்பும் வகையில் நான் கேட்டேன்.

“ஆம்... ஆம்... அவ்வாறான பந்தயம் பிடிக்கும் விதிகள் ஏராளம் உள்ளன. அவ்வாறான ஒரு சீட்டைக் காட்டுகிறேன். இதோ பாருங்கள் இந்தப் பேப்பரை. இதில் இந்த A B C D என பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் அட்டவணையில் உள்ள A என்ற வேட்பாளர் தொகுதி மட்டத்தில் பெறுவார் என எதிர்பார்க்கும் வாக்குகளின் எண்ணிக்கையும், ஒரு கூட்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது. மற்றொரு அட்டவணையில் இருப்பது பொதுவாக மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளாகும். அவற்றில் ஒவ்வொரு வேட்பாளரும் பெறும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட முடியும். அதனைச் சரியாக அல்லது அண்மித்த வகையில் குறிப்பிடுபவர்களுக்கு பரிசு கிடைக்கும். அந்தப் பரிசுத் தொகை அந்த பரிசு அட்டைகளில் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடுபவர் அந்தப் போட்டிப் பத்திரத்தில் குறிப்பபடப்பட்டிருக்கும் பெறுமதியைச் செலுத்த வேண்டும்.

> **தெவுவாவத்த வீதி இரத்தினக்கற்களுக்குப் பெயர்போன வீதியாக இருந்தாலும் இந்நாட்களில் அங்கு அதிகம் பேசப்படுவது தேர்தல் பந்தயம் பற்றியேயாகும். தேர்தல் பந்தயச் சீட்டுக்களை விநியோகிக்கும் பலரை அங்கு சந்தித்தோம். மிகவும் வற்புறுத்தி புள்ளடியிடப்பட்ட சில சீட்டுக்களை அங்குமிங்கும் பார்ப்பதற்கு அனுமதி கிடைத்தது பலத்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதன் பின்னரேயாகும்.**

விற்கப்படும் டிக்கெட்டுகளின் மதிப்புக்கு ஏற்பவே பரிசுத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. போட்டிப் பத்திரத்தின் பெறுமதி 2,000 ரூபா 5,000 ரூபாயாக இருந்தாலும், கிடைக்கும் பரிசுத் தொகை சில நேரம் 100,000 ரூபாய்க்கு மேல் இருக்கலாம். இதுபோன்ற பல போட்டிப் பத்திரங்கள் இந்நாட்களில் விநியோகிக்கப்படுகின்றன. அவற்றை சேகரிப்பவர்களும் ஏராளமானோர் உள்ளனர். அத்தகைய போட்டிப் பத்திரங்களை நிரப்புவதற்கும் சிறந்த அறிவு இருக்க வேண்டும்.

> **இரத்தினபுரியில் தேர்தல் பந்தயம் என்பது வெறும் பந்தயம் மட்டும் அன்றி, அதன் மூலம் சிறந்த அரசியல் ஆய்வுகளும் காட்டப்படுவதோடு, இந்நாட்களில் தேர்தல் பந்தயங்களால் மறைத்து வைக்கப்பட்ட பணம் வெளிவருவதாகவும் தெரிகிறது.**

இந்த பத்திரத்தைப் பாருங்கள். கிளிநொச்சி மாவட்டம், அதேபோன்று திருகோணமலை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மாவட்டங்களும் உள்ளன. இதனை நிரப்புபவருக்கு கடந்த தேர்தல் முடிவுகள் தொடர்பிலும் சிறந்த புரிந்துணர்வு இருக்க வேண்டும். அவ்வாறு கஷ்டப்பட்டுத்தான் இந்தப் பத்திரங்களை நிரப்ப வேண்டும். அவ்வாறில்லாமல் விரும்பியவாறு பந்தயம் கட்டுவதில்லையே நான் இங்கு காட்டியது ஒன்றை மாத்திரமேயாகும். இவ்வாறான பல பத்திரங்கள் இப்போது நகரில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. வெள்ளிக்கிழமை மாலைக்குள், பந்தயம் பிடிப்பது நிறுத்தப்பட்டு, இந்த பேப்பர்கள் பணத்துடன் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படும்” என்றார்.

நிமல் முதலாலியிடம் விடைபெற்று அடுத்ததாக நான் சென்றது தெவுமாவத்த வீதிக்காகும். தெவுவாவத்த வீதி இரத்தினக்கற்கள் வியாபார வீதியாக இருந்தாலும் இந்நாட்களில் அங்கு அதிகம் பேசப்படுவது தேர்தல் பந்தயம் பற்றியேயாகும். நிமல் முதலாளி கூறியதைப் போன்று தேர்தல் பந்தயச் சீட்டுக்களை விநியோகிக்கும் பலரை அங்கு சந்தித்தேன்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

**தர்மசிரி லியனஆராச்சி**
**தமிழில் – எம். எஸ். முஸப்பிர்...**

# அமைதியாக செயற்பட்டு புதிய பாதையில் பயணிக்க இணையுங்கள்

## வாக்களித்த பின்னர் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க சென்று நேற்று (21) காலை வாக்களித்துள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைவரும் அமைதியாக செயற்பட்டு ஒன்றிணைந்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றார்.

இந்த நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையை நிறைவு செய்து, தேர்தலை நடத்துவதற்கான பின்னணியை தான் உருவாக்கியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று நடைபெறும் தேர்தல் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்குமென்றார்.

நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்திற்கொண்டு புதிய தலைமைத்துவத்தை பரிசீலிக்க இது சரியான தருணமென்று நம்புகின்றீர்களா? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் தான் நாட்டின் பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்தியதாக தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து தேர்தலை நடத்த முடிந்தமை தொடர்பாக தாம் பணிவுடன் பெருமை கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த தேர்தல் இலங்கையில் ஒரு திருப்புமுனையாகவும் நாட்டை அழித்த பாரம்பரிய அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளிலிருந்து விலகி நாட்டில் புதிய சமூக மற்றும் அரசியல் அமைப்பை கட்டியெழுப்புவதற்கான பெறுமதியான சந்தர்ப்பமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் அமைதியான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்த முடிந்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

அத்துடன் தேர்தலில் பங்குபற்றிய அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நன்றி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று மாலை நிறைவடைந்ததை தொடர்ந்து யாழ்ப்பாணம், தீவகப் பகுதிகளிலிருந்து வாக்குப்பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டன. விமானப்படையினரின் ஹெலிகொப்டர் மூலம் மத்திய கல்லூரி மைதானத்துக்கு வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்ட போது...
(படம் – யாழ். குறூப் நிருபர் சுமித்தி)

# வாக்குச்சீட்டை கிழித்து வீசிய இளைஞர் யாழ். நகரில் கைது

யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்



யாழ்ப்பாணத்தில் வாக்களிக்க சென்ற இளைஞர் ஒருவர் வாக்குச்சீட்டை கிழித்து வீசியதை அடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாயன்மார்கட்டு, மகேஸ்வரி வித்தியாசாலையில் நேற்று சனிக்கிழமை வாக்களிக்கச் சென்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது வாக்காளர் அட்டையை காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் வாக்குச்சீட்டை பெற்றுக்கொண்ட பின்னர் வாக்களிக்காமல் அதனை கிழித்து வீசியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பொலிஸாருக்கு அங்கிருந்த அதிகாரிகள் அறிவித்ததை அடுத்து இந்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் பொலிஸாரும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களும் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின் போது இந்த இளைஞர் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதல் தடவையென தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் சட்ட மீறல்கள் பத்து பேர் நேற்று கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களை மீறிய குற்றத்திற்காக நேற்றைய தினம் 10 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் நடைபெற்ற நேற்றைய தினத்தில் பல்வேறு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பொத்துவில், திருகோணமலை, இம்புல்கட, கிராந்துருகோட்டை உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்கள் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள், மின்சாரம் என்பன அத்தியாவசிய சேவைகளாகின

## விசேட வர்த்தமானி வெளியீடு



மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். இதற்கமைய மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்து சேவைகளும் பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம் அல்லது விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

# இம்முறை ஜனாதிபதி தேர்தல் நாட்டின் வரலாற்றை மாற்றும் தேர்தலாக அமையும்

## அனுரகுமார திசாநாயக்க

லோரன்ஸ் செல்வநாயகம்

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் வரலாற்றை மாற்றும் தேர்தலாக அமையும் என்பதுடன் வரலாற்றில் வலுவான திருப்புமுனை யாகும் என்றும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பஞ்சிகாவத்தை அபேசிங்கராம விகாரை வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கை அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பஞ்சிகாவத்தை அபேசிங்கராம விகாரையில் நிறுவப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் வரலாற்றை மாற்றும் என நான் நினைக்கின்றேன். காலங்காலமாக, அரசாங்கங்களை அமைப்பதற்கும், அரசாங்கங்களை கவிழ்ப்பதற்கும் அதனை மாற்றுவதற்கும் தலைவர்களை மாற்றுவதற்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

இந்த தேர்தல் இலங்கை வரலாற்றில் மிக வலுவான திருப்புமுனை என நான் நினைக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# நுவரெலியா மாவட்டத்தில் 80 சதவீத வாக்குகள் பதிவு

## பெருந்தோட்ட மக்கள் அதிக ஆர்வம்

ஹட்டன் சுழற்சி நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று மாலை 4.00 மணிவரை ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றதாகவும் 80 சதவீத வாக்குகள் அளிக்கப்பட்டதாகவும், நுவரெலியா மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நந்தன கலபட தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடன் நேற்று மாலை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த போது, வாக்களிப்புகள் எந்தவித அசம்பாவிதமுமின்றி மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக குறிப்பிட்டார். இதன்போது பொலிஸாரும் அதிகாரிகளும் தமது கடமையை உரிய முறையில் முன்னெடுத்ததாகவும், அவர் கூறினார்.

நேற்று காலை 7.00 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகிய போதிலும், காலையில் பல பகுதிகளில் மந்தகதியிலேயே வாக்களிப்பு நடைபெற்றது. ஆனாலும் பின்னர் பெருந்தோட்ட பகுதி மற்றும் நகர் புறங்களில் வாக்களிப்பு மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் காலை 9.00 மணிவரை 30 சதவீத வாக்குகளே பதிவாகின. நண்பகல் 12.00 மணியளவில் 45 சதவீதமாகவும் பகல் ஒரு மணியளவில் 72 சதவீதமாகவும் வாக்களிப்பு நடைபெற்றது. பகல் ஒரு மணிக்கு பின்னர் வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றது. அதிகளவான பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். நுவரெலியா மாவட்டத்துக்கு சர்வதேச கண்காணிப்பு குழு உறுப்பினர்களும் விஜயம் செய்ததுடன், இந்த தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றதாக, பொதுமக்களும் கருத்து தெரிவித்தனர்.

எங்கள் கருத்து...

# தாயகத்தின் எதிர்காலத்துக்காக ஒத்துழைப்புடன் செயற்படுவோம்!

நேற்று ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டிருக்கின்றது. தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஒவ்வொரு வேட்பாளரும் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். வேட்பாளர்களிடமிருந்து அனல் பறக்கும் வார்த்தைப் பிரயோகங்கள் வெளிப்பட்டதையும் காண முடிந்தது.

ஆனால் அவ்வார்த்தைகளையெல்லாம் இனிமேல் தனிப்பட்ட குரோதங்களின் வெளிப்பாடாக எவரும் எடுத்துக் கொள்ள முடியாது. விளையாட்டு மைதானமொன்றில் இறுதிப்போட்டியின் பரபரப்பான தருணத்தில் வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடுவதைப் போன்றே, தேர்தல் களத்திலும் வேட்பாளர்கள் உச்சகட்டப் பரபரப்பில் பிரசாரத்தில் ஈடுபடுவதுண்டு.

அவ்வாறான வார்த்தைக் கணைகளையெல்லாம் மறந்து ஒதுக்கி விட்டு, நாட்டின் நலனுக்காக அனைத்துத் தரப்பினரும் இனிமேல் ஒத்துழைப்புடன் செயற்படுவதே அரசியல் நாகரிகம் ஆகும். வேற்றுமையை வளர்ப்பதால் விளைவது தீமையே என்பதை மறந்து விடலாகாது.

எமது நாடு கடந்த காலத்தில் மிகமோசமான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அந்த வீழ்ச்சியில் இருந்து எமது தாயகம் முற்றாக மீண்டெழ வேண்டும் என்பதே மக்களின் ஏக்கம் ஆகும்.

இத்தேர்தலில் நாட்டு மக்கள் தங்களது தீர்ப்பை வழங்கி விட்டனர். இனிமேல் அனைத்துத் தரப்பினரும் அரசியல் கோபதாபங்களை மறந்து நாட்டின் நலனுக்காக தலைமைத்துவத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

## ஜனாதிபதித் தேர்தல்...

தெரிவித்துள்ளனர். வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று பிற்பகல் 04 மணிக்கு நிறைவடைந்ததுடன் நேற்று நள்ளிரவு தபால் மூல வாக்களிப்புக்கான பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து தொகுதி வாரியான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

தொடர்ந்தும் மாவட்ட மற்றும் தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருவதுடன் இன்றைய தினம் மாலை முழுமையான முடிவுகளை வெளியிட முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக போட்டியிட்டார்.ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக்காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிக்கு நிறைவு பெற்றதுடன் அதற்கான நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அதற்கிணங்க இம்முறை தேர்தலில் அதிகூடிய வாக்களிப்பு நுவரெலியா, கண்டி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன. அந்த மூன்று மாவட்டங்களிலும் 80 வீத வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக கொழும்பு மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் 78 வீத வாக்களிப்பும் மொனராகலை மாவட்டத்தில் 77 வீத வாக்களிப்பு மற்றும் புத்தளம், இரத்தினபுரி மாவட்டங்களில் 75 வீத வாக்களிப்பும் பதுளை மாவட்டத்தில் 73 வீத வாக்களிப்பும் திகாமடுல்ல மாவட்டத்தில் 70 வீத வாக்களிப்பும் கிளிநொச்சி மாவட்டத்தில் 68 வீத வாக்கெடுப்பும் வன்னி மாவட்டத்தில் 65 வீத வாக்களிப்பும் இரத்தினபுரியில் 75 வீத வாக்களிப்பும் இடம்பெற்றுள்ளது.

இம்முறை தேர்தல் மிக அமைதியாக நடைபெற்றதுடன் குறிப்பிடத்தக்க வன்முறைகள் மற்றும் முறைகேடுகளின்றி இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியாக நடந்த தேர்தல் இதுவென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று பிற்பகல் 4 மணியின் பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப் பெட்டிகள் வாக்குகளை என்னும் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 1,713 நிலையங்களில் இரவு 7 மணி முதல் வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

நேற்றைய வாக்களிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தேர்தல் வாக்களிப்பு அமைதியாக நடைபெற்றதாகவும் தொடர்ந்து முழுமையான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இதே விதமாக அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதே நேரம் வெற்றியை மிக அமைதியாக கொண்டாடுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுமானால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் 13321 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெற்றது. அதனை யடுத்து 1,713 நிலையங்களில் வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தேர்தல் கடமைகளில் ஒரு இலட்சத்து 52 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் வாக்குகளை என்னும் நடவடிக்கைகளுக்காக 50 ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

அந்த வகையில் நேற்று வடக்கில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில மாவட்டங்கள் மற்றும் கிழக்கில் சில பகுதிகளிலும் நண்பகல் 12 மணி வரை வாக்குப் பதிவுகள் மந்த கதியிலேயே வாக்களிப்பு இடம்பெற்றதுடன் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வாக்கு பதிவு வீதம் வேகமாக அதிகரித்ததைக் காண முடிந்தது.

தேர்தல் கண்காணிப்பாளர்களின் கணிப்புகளின்படி கொழும்பு மாவட்டத்தில் 15 தொகுதிகளில் 17,65,351 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 80 வீதமானோரும் , கம்பஹா மாவட்டத்தில் 13 தொகுதிகளில் 1,881,129 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 80 வீதமானோரும் , களுத்துறை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் 10,24,244 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீத மானோரும் வாக்களித்துள்ளனர்.

அத்துடன்,கண்டி மாவட்டத்தில் 13 தொகுதிகளில் 11,91,399 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 78 வீதம் வரையிலானோரும் ,மாத்தளை மாவட்டத்தில் 4 தொகுதிகளில் 4,29,991 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 74 வீதம் வரையிலானோரும் , நுவரெலியா மாவட்டத்தில் 4 தொகுதிகளில் 6,05,292 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 80 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்.

காலி மாவட்டத்தில் 10 தொகுதிகளில் 9,03,163 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 74 வீதம் வரையிலானோரும் , மாத்தறை மாவட்டத்தில் 7 தொகுதிகளில் 6,86,175 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 83 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்.

அதேவேளை, வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 தொகுதிகளில் 5,93,187 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 67 வீதம் வரையிலானோரும் , வன்னி மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 3,06,081 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 69 வீதம் வரையிலானோரும் வக்களித்துள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 4,49,686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 69 வீதம் வரையிலானோரும் , திகாமடுல்ல மாவட்டத்தில் 4 தொகுதிகளில் 5,55,432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 70 வீதம் வரையிலானோரும் , திருகோணமலை மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 3,15,925 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 76 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்.

அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் 14 தொகுதிகளில் 14,17,226 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீதம் வரையிலானோரும் , புத்தளம் மாவட்டத்தில் 5 தொகுதிகளில் 6,63,673 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீதமானோரும் வாக்களித்துள்ளனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் 7 தொகுதிகளில் 7,41,862 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீதம் வரையிலானோரும் , பொலனறுவை மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 3,51,302 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 78 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 9 தொகுதிகளில் 7,05,772 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 73 வீதம் வரையிலானோரும் , மொனராகலை மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 3,99,166 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 77 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 8 தொகுதிகளில் 9,23,736 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீதம் வரையிலானோரும் , கேகாலை மாவட்டத்தில் 9 தொகுதிகளில் 7,09,622 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களில் 75 வீதம் வரையிலானோரும் வாக்களித்துள்ளனர்

இம்முறை இலங்கையில் நடைபெறும் இந்த ஜனாதிபதித் தேர்தல் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் சர்வதேச கண்காணிப்பாளர்களும் ஆயிரக்கணக்கான உள்ளூர் கண்காணிப்பாளர்களும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கான பணிகள் முற்றாக நிறைவு பெறும் வரை அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளதுடன் வெற்றி பெறும் வேட்பாளர் ஏனைய வேட்பாளர்களுக்கு அபகீர்த்தி ஏற்படாத வகையில் தமது வெற்றியை கொண்டாடுவது முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை 23ஆம் திகதியும்...

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன அறிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை யொட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியிருந்ததுடன் நாளை திங்கட்கிழமை 23ஆம் திகதியும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்...

கேட்டுக்கொள்வதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பையிட்டு 63 ஆயிரத்துக்கும் அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 3,083 பொலிஸ் நடமாடும் சேவை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக 12,400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

269 வீதிகளில் விசேட வீதி தடைகள் அமைக்கப்பட்டு நேற்று மற்றும் இன்றைய தினங்களில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேவை ஏற்படுமாயின் இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும். இதற்காக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரப்படையினர் பணியில் அமர்த்தப்படுவார்களெனவும், அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் கலகத்தடுப்பு பிரிவுகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அடையாளம் காணப்படும் பகுதிகளில் முப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் காலத்தில் சில இடங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச சபைகளை அடிப்படையாக கொண்டு மின் விநியோகிக்கும் மத்திய நிலையங்கள், நீர் விநியோக பிரிவுகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக சுமார் மூவாயிரத்துக்கும் அதிகளவான இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 12 ஆயிரத்துக்கும் அதிகளவான சிவில் பாதுகாப்பு படையினரும் 2,500 க்கும் மேற்பட்ட பொலிஸ் விசேட அதிரப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கொழும்பு, இராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்துக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேசிய பாதுகாப்புக்கும் தேர்தல் நடவடிக்கைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறு பொதுமக்களிடம் அவர் மீண்டும் கேட்டுக்கொண்டார்.

## நாடு முழுவதும் இன்று...

நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற்று நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவும் நிலையிலும் பொதுமக்களின் மேலதிக பாதுகாப்பை கருத்திக்கொண்டு இவ்வாறு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் நிமித்தம் செல்பவர்கள் தமது கடமைநேர அடையாள அட்டையை உபயோகித்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் நேற்று ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளது.

## மட்டு. கல்லடி, உப்போடையில்...

ஆலயத்தில் பூஜைக்காக ஏற்றப்பட்டிருந்த விளக்கு, ஆலயத்தின் ஓலைக் குடிலில் பட்டு தீப்பிடித்து எரிந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

திடீரென ஓலைக் குடிலில் ஏற்பட்ட தீ, பெரும் சுவாலையாக எரிய தொடங்கியதை அடுத்து அப்பகுதி பொதுமக்கள் மற்றும் தீயணைப்பு படையினர் ஒன்றிணைந்து தீயை சில மணி நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்த போதும் ஆலயத்தின் மூலஸ்தானம் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது

பேச்சி அம்மனின் சிலை ஆரம்ப காலந்தொட்டு ஓலைக் குடிலில் வைக்கப்பட்டு மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக பிரதேச மக்களால் போற்றப்படுகின்றது.

இவ்வாறு தீப்பிடித்ததை அவதானித்த அப்பகுதி மக்கள் படையெடுத்து வந்து ஆலயத்தை சூழ்ந்து கொண்டனர். இதனை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன், ஆலயத்தின் மூலஸ்தானம் தீப்பிடித்ததை அவதானித்த பக்தர்கள் கத்தி அழுது புலம்பியதுடன், பெரும் கவலையடைந்தனர்.

# அதீத சித்தாந்தங்கள் உருப்படுவதில்லை



தலாத்து ஓயா கணேஷ் எனப் பொதுவாகவும் கே. கணேஷ் என நண்பர்கள், உறவுகள் மத்தியிலும் அறியப்பட்ட இவர், மலையகத்தின் முன்னோடி இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர் மட்டுமன்றி இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பின் முன்னோடியாகவும் இவரைக் கருதலாம்.

கண்டி அம்பிட்டியவில் 1920ஆம் ஆண்டு பிறந்த இவரின் இயற்பெயர் சித்திவிநாயகம். வீட்டில் செல்லமாக கணேசன் என்றே இவரை அழைத்ததால், அதுவே அவரது பெயராகி கே. கணேஷ் என்றாகியது. கண்டியில் கல்வியை ஆரம்பித்தவர், பின்னர் மதுரை தமிழ் சங்கத்தில் கல்வி கற்றார். அது சுதந்திரப் போராட்ட காலமானதால் இந்திய சுகந்திரப் போராட்டத்தில் அவர் நாட்டம் திரும்பியதில் ஆச்சரியமில்லை. காங்கிரஸ் கட்சியால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தாலும் பின்னர் இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்திலும் பரவிய கம்யூனிச முற்போக்குவாதம், அவருடைய இயல்புத் தன்மையோடு ஒத்துப்போனதாலோ என்னவோ முற்றுமுழுதாக சமவுடைமைக் கொள்கைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தன் இலக்கிய வாழ்வில் அவர் ஏழு சிறுகதைகளை எழுதினார். ஆனால் ஏராளமான மொழிபெயர்ப்புக்களில் அவர் ஈடுபட்டார். அவருடைய இரு சிறுகதைகள் மணிக்கொடியில் வெளிவந்தன. கவிஞர்களின் நூல்களைத் தமிழுக்கு கொண்டுவந்த பாரிய பணியை இவர் செய்தார். இவரளவுக்கு மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் பெயர்போன ஒருவரை சமகாலத்தில் காணமுடியாது. 2003ஆம் ஆண்டில் கனேடிய இலக்கியத் தோட்டம் இவருக்கு 'இயல்' விருது வழங்கிக் கௌரவித்தது. இயல் விருது பெற்ற கணேஷை கனடாவில் இருந்து வெளிவரும் 'காலம்' இலக்கிய சஞ்சிகைக்காக பேராசிரியர் நுஃமான் நேர்காணல் செய்தார். 2003ஆம் ஆண்டில் வெளிவந்த அந்நேர்காணல் கணேஷின் நூற்றாண்டு விழாவையொட்டி மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.



பேராசிரியர் நுஃமான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைக்குடியில் 1944 இல் மக்புல் ஆலிமுக்கும் சுலைஹா உம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார். தந்தை ஒரு மதப்பணியாளர், அரபு மொழி ஆசிரியர். ஈழத்து தமிழ் அறிஞர். பேராசிரியர், கவிஞர், எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், இதழாளர் என பல துறைகளில் செயல்பட்டவர். நவீனத் தமிழ் உரைநடைக்கான இலக்கணத்தை உருவாக்க பணியாற்றியவர்.

பேராசிரியர் நுஃமான் ஆரம்பக் கல்வியைக் கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைக் கல்முனை உவெசுலி உயர்தரப் பாடசாலையிலும் படித்தார். பின்னர் 15 ஆண்டுகள் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றினார். அட்டாளைச் சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். இளங்கலை மொழியியல் பாடத்தை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் பயின்றார். அதுபோல் முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வைப் பேராசிரியர் குமாரசாமி இராசாவின் மேற்பார்வையில் மூன்றாண்டுகள் செய்தார். பேராசிரியர் நுஃமான் 1969–1970ல் 'கவிஞன்" என்ற பெயரில் காலாண்டு இதழை நடத்தினார்.

**கடந்தவாரத் தொடர்**

***நுஃமான் : மார்க்சியத்தில் முக்கியமாக உங்களைக் கவர்ந்த அம்சங்கள் எவை?***

*கணேஷ் : தொழிலாளர்கள், உழைப்பவர்கள் எல்லமே மிகவும்: கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். இது நாம். கண்ணால் பார்ப்பது. மார்க்சியம் இவர்களுக்கு, ஒரு சொர்க்கத்தைப் பெற்றுக் கொடுக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் பின்னால் பார்க்கும்போது அது ஒரு மாயையாகப் போய்விட்டது. நாம் பாஸிசத்தைக் குறை சொன்னோம். கடைசியில் இவர்களும் பாஸிசத்தைத்தான் நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் மதங்களைச் சொன்ன மாதிரி, பெயரில் தான் கம்யூனிசம் இருந்ததே ஒழிய நடைமுறையில் இருக்கவில்லை. உண்மையில் போலந்திலும், செக்கோஸிலவாக்கியாவிலும் சுதந்திரத்தை, நகுக்கியமுறை, கருத்துக்களைத் தன்னிச்சையாக வளரமுடியாமல் செய்த ஒரு தன்மை, இவற்றையெல்லாம் பார்த்தபோது வேண்டாம் என்று ஆகிவிட்டது.*

***நுஃமான் : ஒரு குறிப்பிட்ட கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டு உருவாகின்ற மார்க்சிய இயக்கம் போன்ற ஒன்று, அந்தக் கருத்துநிலையின் அடிப்படையில் ஒரு சமூகத்தை உருவாக்க முனையும்போது இந்த மாதிரி நடக்கக்கூடிய அடக்குமறைகள் தவிர்க்க முடியாதவை என்ற ஒரு கருத்து இருக்கிறது. ரஷ்யாவில் எவ்வளவோ அடக்குமுறைகள் இருந்தாலும் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்த அந்த நாட்டை ஒரு பெரிய சக்தியாக, பெரிய சமூகமாக வளர்த்தெடுப்பதற்கு லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சர்வாதிகார முறைமை பயன்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்து உண்டு. அது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?***

*கணேஷ் : ஜேர்மனியிலும், இத்தாலியிலும் பாஸிசம் வளர்ந்து. அந்த நாடுகளும் பெரும் சக்திகளாக வளர்ந்தன. ஆனால் நான் சொல்லுவது என்னவென்றால் aims and means அதாவது நோக்கமும் வழிமுறையும் சரியாக இருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் அந்த சமூகம் எதுவாக இருந்தாலும் நிலைத்து நிற்காது. ஜேர்மனியும், இத்தாலியும் யுத்தத்தில் அழிந்தன. ஜப்பானும்தான் அழிந்தது. மீண்டும். அவற்றைக் கட்டி எழுப்ப வேண்டி இருந்தது. இவற்றையெல்லாம் கூர்ந்து பார்க்கும் போது அதீத சித்தாந்தங்கள் உருப்படுவதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.*

***நுஃமான் : முசோலினி, ஹிட்லர் ஆகியோரின் சர்வாதிகார முறைக்கும் ஸ்டாலினின் சர்வாதிகார முறைக்கும் இடையில் நீங்கள் வேறுபாடு ஒன்றையும் காணவில்லையா?***

*கணேஷ் : ஆரம்பத்தில் கம்யூனிசம் சிறந்ததாகத் தெரிந்தது. ஏனென்றால் அது பொதுமக்களை மையமாகக் கொண்டிருந்தது. ஒரு நாட்டை என்று இல்லாமல் உலகம் முழுவதையும் அது கருத்தில் கொண்டிருந்தது. புரட்சியினால் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. பாட்டாளிகள் மட்டுமல்ல விவசாயிகளும் புரட்சியின் பங்காளிகள் என்ற நிலை இருந்தது. ஆனால் பாட்டாளிகள், கைத்தொழில் துறையில் இருப்பவர்கள்தான் முக்கியத்துவம் பெற்றார்கள். அப்பறம் மாசேதுங் வந்தார். அவர் வந்த பொழுது, பெரும் நன்மை கிடைக்கும். என்று நாம் நினைத்தோம். ஆனால் கடைசியில் பார்க்கும்போது விவசாயிகளுக்கு மேலாக கைத்தொழில் துறைதான் மேலாதிக்கத்துக்கு வந்தது. விவசாயிகள் கஷ்டத்துக்காளாயினர். இத்தகைய நடைமுறையைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது எல்லா முறைகளும் சுயநலத்தில்தான் முடிவடைகின்றன என்று கூறத் தோன்றுகின்றது.*

***நுஃமான் : சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கும் உலகளாவிய ரீதியில் கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமே காரணியாக இருந்திருக்கிறது என்று கூறப்படுகின்றது. அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

*கணேஷ் : அதில் சந்தேகமே கிடையாது. ரஷ்யரும் அமெரிக்காவின் தத்துவங்களை அதாவது, முதலாளித்துவத்தை உடைப்பதற்கு முயன்றார்கள். அமெரிக்கா தனது*

> **எந்த அமைப்பு என்பதற்கு அப்படை என்ன என்று கேட்டால் கல்வி அடிப்படையில் இருந்துதான் தொடங்கவேண்டி இருக்கிறது. பதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடிப்படைக் கல்வி வேண்டும். புதிய தலைமுறைக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை போன்ற நல்ல உயர்ந்த பண்புகளை, விழுமியங்களை ஊட்ட வேண்டும். அதில் இருந்துதான் புதிய சமுதாயம் வரமுடியும் இப்போது இருப்பதைப் பற்றி நான் சொல்லப் போனால் என்னை ஒரு ஃபெசிமிஸ்ற், அவநம்பிக்கைவாதி என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் நான். சொல்வது பெசிமிசம் அல்ல. புதிய முறையில் தான் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அது படிப்படியாகத்தான் வரும். அது தானே உருவாகும். அதாவது கலியுகம் மறைந்து திருதயுகம் வரவேண்டும்**

*சக்திகளைப் பயன்படுத்தி ரஷ்ஷியாவை உடைக்க முயன்றது. CIA போன்ற ஸ்தாபனங்கள் இதில் முயன்றன. ரஷ்யர்களும் இதைச் செய்தார்கள். ஒருவர் மற்றவருடைய சித்தாந்தத்தை அழிப்பதற்காகவும் தங்கள் சித்தாந்தத்தை வளர்ப்பதற்காகவும் வேலை செய்தார்கள். ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டே மற்றவருடைய தத்துவத்தைப் பற்றிக் குறை சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டக்களில் உண்மையும் இருந்தது.*

***நுஃமான் : தற்போதைய நிலையில் உலகளாவிய ரீதியிலும் சரி தேசிய ரீதியிலும் சரி, சமூக ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள், மோதல்கள் எல்லாவற்றையும் நீக்கி மனித விடுதலையைக் கொண்டுவர முடியுமாக இருந்தால், எந்த அமைப்பு மூலமாக அதைக் கொண்டு வரலாம் என்று நினைக்கிறீர்கள்?***

*கணேஷ் : எந்த அமைப்பு என்பதற்கு அப்படை என்ன என்று கேட்டால் கல்வி அடிப்படையில் இருந்துதான் தொடங்கவேண்டி இருக்கிறது. பதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடிப்படைக் கல்வி வேண்டும். புதிய தலைமுறைக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை போன்ற நல்ல உயர்ந்த பண்புகளை, விழுமியங்களை ஊட்ட வேண்டும். அதில் இருந்துதான் புதிய சமுதாயம் வரமுடியும் இப்போது இருப்பதைப் பற்றி நான் சொல்லப் போனால் என்னை ஒரு ஃபெசிமிஸ்ற், அவநம்பிக்கைவாதி என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் நான். சொல்வது பெசிமிசம் அல்ல. புதிய முறையில் தான் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அது படிப்படியாகத்தான் வரும். அது தானே உருவாகும். அதாவது கலியுகம் மறைந்து திருதயுகம் வரவேண்டும்*

***நுஃமான் : மதங்கள் எல்லாம் அரசியல்மயப்பட்டுப் போன இன்றைய நிலையில், இறை நம்பிக்கை சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த போதனைகள் மூலம் ஒரு புதிய சமூகந்தைக் கட்டி வளர்க்கலாம் என்பது எந்த அளவு சாத்தியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.***

*கணேஷ் : இன்றைய நிலையில் நாம் விரக்தி அடைந்துதான் போயிருக்கிறோம். ஆனால், உலகம் முழுவதும் பார்த்தீர்கள் என்றால் பிறநாடுகளில் கூட துன்புறும். மக்களுக்கு உதவவேண்டும் என்ற இரக்க உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அரச சார்பற்ற நிறுவனங்கள் இதைக் காட்டுகின்றன. அவையும் ஸ்தாபனமயப் பட்டு, அவற்றிலும் பல கோளாறுகள் உள்ளனதான். இருப்பினும் அவற்றின் ஊடாகவும் நல்லவை நடக்கின்றன. மனிதன் என்பவன் தானே. உணர்பவனாகவும் இருக்கிறான். எப்பொழுதும் நமக்குள் நன்மை, தீமையை உணரக் கூடிய ஒரு சக்தி இருந்துகொண்டு தான் இருக்கிறது. அரிச்சுவடியில் இரந்துதான் நாம் இப்பொழுது ஆரம்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்தச் சமுதாயம் இல்லாவிட்டாலும் அடுத்த சமுதாயமாவது ஒரு நல்ல ஒழுக்கமான் சமுதாயமாக வரும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு,*

***நுஃமான் : மார்க்சிய சித்தாந்தத்துக்கு உலகளாவிய ரீதியில் ஒரு எதிர்காலம் இல்லை என்றா கருதுகிறீர்கள்?***

*கணேஷ் : மார்க்சிய தத்துவமே அடிப்படையில் தொழிலாளர்களை மையமாகக் கொண்டது தானே. அது தொழிலாளர்கள் உழைப்பவர்கள் உயர வேண்டும் என்ற தத்துவம் அந்தத் தத்துவத்தை யாருமே மறுக்க முடியாது. தனிப்பட்ட முறையில்: மதத்தைக் குறை சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கப் போனால் எல்லாவற்றிலும் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. அதை எல்லாம் மீறி அடிப்படைத் தத்துவத்தைத்தான் பார்க்க வேண்டும். அடிப்படைத் தத்துவமே நசுக்கப்பட்டவர்கள் அல்லது கீழ்நிலையில் உள்ளவர்கள் உயர வேண்டும் என்பது. உயர வேண்டுமானால் அவர்கள் ஒழுக்கத்தை விடக் கூடாது. அதை விட்டு விட்டால் அந்த சமூகம் உருவாக முடியாது.*

***நுஃமான் : ஒழுக்கம் என்பதை எப்படி வரையறுக்கிறீர்கள்?***

*கணேஷ் : ஒழுக்கம் என்று நான் சொல்வது என்னவென்றால் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய நேர்மை, சமூகத்துக்கு முரண் இல்லாத பண்புகள், அடிப்படைப் பண்புகள் என்று சொல்லுகிறோம் அல்லவா, எல்லா மதங்களும் அவற்றைப் பற்றிப் பேசுகின்றன. அவற்றில் உயர்ந்தவற்றை நாம் எடுத்துக் கொள்ளலாம்.*

***நுஃமான் : உயரிய பண்புகளைத்தான் ஒழுக்கம் என்று, சொல்லுகிறீர்கள்.?***

*கணேஷ் : ஆமாம், ஆமாம். நான் வரையறுத்துச் சொல்லக் கூடியது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. இப்பொழுது மாமிசம் சாப்பிடுகிற ஒருவனைச் சைவனாக இருக்கச் சொல்ல முடியாது. சைவனாக இருப்பவனை மாமிசம் சாப்பிடச் சொல்ல முடியாது. ஆனால் அடிப்படையில் எது நன்மை எது தீமை என்று தெரிந்திருக்க வேண்டும். பொதுவாகவே குடிக்கக் கூடாது, கொலை செய்யக் கூடாது. இந்த அடிப்படைப் பண்புகளை மட்டும் கவனித்தாலே போதும் பஞ்சமாபாதகங்களைச் செய்யாமல் இருந்தால் அதுவே பெரிய விசயம்.*

***நுஃமான் : இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை நீங்கள் சொல்லக் கூடிய தீர்வுகள்***

*கணேஷ் : எல்லாவற்றுக்கும் பொறுமை சார்ந்த ஒரு நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்வேன். ஒருவருக்கும் பொறுமை இல்லை. மொழி, மதம் எல்லாம் ஒரு வெறித்தன்மையை ஏற்படுத்திவிடுகின்றன. அந்த வெறித்தன்மை இல்லாமல் நடுவு நிலையோடுதான் பார்க்க வேண்டும். அதற்கு உயர்ந்த பண்புகள் உருவாக வேண்டும். மேலோர் அல்லது சான்றோர் என்று சொல்கிறோமே அந்தச் சான்றாண்மை ஏற்பட வேண்டும். அது இல்லாவிட்டால் என்ன தீர்வுதான் வந்தாலும் அதுபோய்க் கொண்டுதான் இருக்கும்.*

**– முற்றும் –**







## ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் மூர்த்தி கோவில் கப்பிதாவத்தை மருதானை கொழும்பு

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 14.10.2024 அன்று மாலை 6.30 p.m. மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற திருவருள் கூடியுள்ளது என்பதை உபயகாரர் நன்கொடை வழங்கியவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**



**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**உள்நாட்டு மருத்துவ பீடம்**

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு – கல்வி ஆண்டு 2024

பின்வரும் சான்றிதழ் கற்கை நெறிகளுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவ பீடம், யுனானி மருத்துவ சிகிச்சைத் திணைக்களம் மற்றும் யுனானி மருந்தியல் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | கற்கை நெறியின் பெயர் | கற்கைநெறிக் காலம் | அறிவுறுத்தல் மொழி மூலம் | விண்ணப்பக் கட்டணம் | கற்கை நெறிக் கட்டணம் | இறுதித் திகதி | பதிவு மற்றும் சான்றிதழ் கட்டணம் | தொடர் பிலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Certificate Course on Hijamat (Cupping) and Irsal e Alaq (Leech Therapy) | 3 மாதங்கள் | ஆங்கிலம் | 2000.00 இ.ரூபா (உள்நாட்டு அபேட்சகர்கள்) 10$ (வெளிநாட்டு அபேட்சகர்கள்) (மீளளிக்கப்படாதது) | ரூபா 40,000.00 (உள்நாட்டு அபேட்சகர்கள்) (வெளிநாட்டு அபேட்சகர்களுக்கு - 130$) | 2024-09-30 | 5000.00 இல. ரூபா | 0767569377 |
| 02 | Certificate Course in Ilaj bil Ghiza (Dietotherapy) | 16 வாரங்கள் (வார இறுதி நாட்கள்) (கலப்பு) | ஆங்கிலம் | 2000.00 இ.ரூபா (உள்நாட்டு அபேட்சகர்கள்) 30 USD (வெளிநாட்டு அபேட்சகர்கள்) (மீளளிக்கப்படாதது) | இல. ரூபா 29,500.00 (உள்நாட்டு அபேட்சகர்கள்) 250 USD (வெளிநாட்டு அபேட்சகர்கள்) | 2024-10-31 | 5000.00 இல. ரூபா | 0774984929 |
| 03 | Certificate Course in Tadabeer e Mashaikh (Geriatric Care) | 10 வாரங்கள் (60 கற்கை மணித்தியாலங்கள்) | ஆங்கிலம் | 2000.00 இ.ரூபா (மீளளிக்கப்படாதது) | 30,000.00 இல. ரூபா | 2024-11-01 | 5000.00 இல. ரூபா | 0718399773 |
| 04 | Certificate Course on Cross-Cultural Readiness for Overseas Domestic Workers | 4 வாரங்கள் (வார இறுதி நாட்கள்) (கலப்பு) | ஆங்கிலம்/ சிங்களம்/ தமிழ் | 2000.00 இ.ரூபா (மீளளிக்கப்படாதது) | 15,000.00 இல. ரூபா | 2024-10-31 | 2500.00 இல. ரூபா | 0773770482 |


குறித்த சான்றிதழ் கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு நாளின் போது கற்கை நெறி ஆரம்பிக்கப்படும் நாள் அறியத்தரப்படும். தகுதிக்கான மூலப்பிரமாணம் மற்றும் விண்ணப்ப நடைமுறை உட்பட அனைத்து விபரங்களையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம். https://fim.cmb.ac.lk/

**பதிவாளர்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்.**
**2024-09-11.**

**இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக கடந்த காலத்தில் நடைபெற்றுள்ள தேர்தல்களில், நேற்று நடைபெற்ற தேர்தல் மிகவும் எதிர்பார்ப்பு மிக்கதொரு தேர்தலாக அமைந்திருந்தது.**




# சுமுகமாக நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தல்!





## மக்களின் ஆணைக்குத் தலைவணங்கி, நாட்டின் எதிர்கால நலனுக்காக அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்படுவதே அரசியல் நாகரிகம்

இதுவரையான ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் போட்டியிட்ட தேர்தலாக நேற்றைய தேர்தல் அமைந்திருந்தது. வேட்பாளர்களுக்கிடையில் பலமுனைப் போட்டி இத்தேர்தலில் நிலவியிருந்தது. இவ்வாறு பல்வேறு விடயங்கள் இத்தேர்தலைப் பரபரப்பாக்கியிருந்தன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் பின்னரான சவால்களையடுத்து நடைபெற்ற தேர்தல் இதுவாகும்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா, இல்லையா என்ற சந்தேகம் ஆரம்பத்தில் காணப்பட்டாலும் தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நேரத்தில் தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்து தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டதிலிருந்து கடந்த 18ஆம் திகதி நள்ளிரவு வரை தேர்தல் களம் பரபரப்பாகவே காணப்பட்டது. கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களை விட இம்முறை தேர்தலில் 38 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வாறு வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் ஒரு வேட்பாளர் இயற்கை எய்தியிருந்தார்.

இவ்வாறான நிலையில் நேற்றையதினம் ஜனாதிபதித் தேர்தல் சுமுகமான முறையில் நிறைவடைந்துள்ளது. 17 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததுடன், இதில் கணிசமானவர்கள் நேற்றையதினம் தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியிருந்தனர்.

நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டிருந்த 13,421 வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவுகள் இடம்பெற்றிருந்தன. இம்முறை தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தாலும், போட்டி என்னவோ பிரதான சில வேட்பாளர்கள் மத்தியில் மாத்திரமே காணப்பட்டிருந்தது.

வேட்பாளர்கள் மத்தியில் போட்டி அதிகமாக இருந்தபோதும் ஒப்பீட்டளவில் தேர்தல்கால வன்முறைகள் மற்றும் தேர்தல் விதிமீறல்கள் குறித்த சம்பவங்கள் குறைவாகவே காணப்பட்டுள்ளன. தேர்தல் காலத்தில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லையென தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அது மாத்திரமன்றி, தேர்தலில் சமூக ஊடகங்களின் வகிபாகம் அதிகமாக இருந்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில 2015ஆம் ஆண்டே முதன் முறையாக சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. இந்த நிலைமை இம்முறை கணிசமாக அதிகரித்திருந்ததைக் காண முடிந்தது.

இளம் வாக்காளர்கள் தமது கருத்துகளையும், மாற்றுக் கருத்துகளையும் முன்வைப்பதற்கு சமூக ஊடகங்களை அதிகமாகப் பயன்படுத்தியிருந்தனர். பிரதான ஊடகங்களைவிட சமூக ஊடகங்களை மையமாகக் கொண்ட பிரசாரங்களுக்கு அரசியல் கட்சிகளும் முக்கியம் கொடுத்த போக்கையும் இம்முறை காண முடிந்தது.

இது முன்னேற்றகரமான நிலைமையாக இருந்தபோதும், சமூக ஊடகங்களினால் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் குறித்த விமர்சனங்களும் அதிகம் என்றே கூற வேண்டும். போலியான சமூக ஊடகக் கணக்குகள் பல ஆரம்பிக்கப்பட்டு ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் வகையிலான சம்பவங்கள் அதிகரித்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக தேர்தல் கணிப்பீடுகள் அல்லது மக்களின் கருத்துக்களை அறியும் விதத்தில் சமூக ஊடகங்களினால் முன்னெடுக்கப்பட்ட கணிப்பீடுகள் வாக்காளர்களைக் குழப்பும் வகையில் அமைந்திருந்தன. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் கவனம் எடுத்திருந்தது. எதிர்காலத்தில் இது பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்படலாம்.

எனினும், மாற்றமொன்றை எதிர்பார்த்து இந்தத் தேர்தலை மக்கள் அணுகியிருந்தனர். பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள், மக்களுக்கான சலுகைகள், ஊழல் ஒழிப்பு போன்ற பல்வேறு விடயங்கள் பொதுவானவையாகக் காணப்பட்டிருந்தன. நாட்டு மக்கள் பெரும்பாலும் எதிர்பார்க்கும் விடயங்களுக்கு அவற்றில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருந்ததாக அரசியல் அவதானிகள் பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

2022 ஆம் ஆண்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடிய நிலையில் நேற்றையதினம் மக்கள் ஜனநாயக ரீதியான அமைதிப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். தமது எதிர்பார்ப்பு என்ன என்பதை தமது ஜனநாயக உரிமையின் மூலம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். மக்களின் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. யார் தமது தலைவர் என்பதை அவர்கள் தெரிவு செய்து விட்டார்கள்.

மக்களின் ஆணையைப் பெற்ற தலைவருடன் அனைத்து அரசியல் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்படுவதே நாட்டின் எதிர்காலத்திற்கு சிறந்ததாக அமையும். தேர்தல் காலத்தில் வேட்பாளர்களும், அவர்களுக்கு ஆதரவானவர்களும் அரசியல் போட்டியான கருத்துகளை மாற்றுத்தரப்பினர் மீது முன்வைத்திருந்தனர். இம்முறை தேர்தல் பலமுனைப் போட்டியாக அமைந்ததால் தேர்தல் களத்தில் ஒருவர் மீது ஒருவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களும், கருத்துக்களும் காரசாரமாகவே இருந்தன. இந்த நிலையில் நேற்று மக்கள் தமது வாக்கு மூலம் இவற்றுக்குப் பதில்களை வழங்கி விட்டார்கள்.

எனவே, தேர்தல் காலத்தில் ஒருவரை ஒருவர் தாக்குவதற்குப் பயன்படுத்திய விடயங்களை இனியும் பொருட்படுத்தியவாறு மற்றையவர்களுடன் எதிர்ப்பைக் கடைப்பிடிப்பது நாகரிகமாக அமையாது. மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு தலைவணங்கி நாட்டை எவ்வாறு தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டு செல்வது என்பதைப் பற்றியே அனைவரும் சிந்திக்க வேண்டும்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி முன்னிலையில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பொருளாதாரப் பிரச்சினைகளை சீர்செய்து நாட்டையும், மக்களையும் அதிலிருந்து மீட்சிக்குக் கொண்டுவரும் பாரிய பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை அவரால் தனியாக நின்று நிறைவேற்ற முடியாது என்பதால் அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகின்றது. எனவே, அரசியல் பேதங்களை மறந்து அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவதே நாட்டின் நலனுக்கு சாதகமாக அமையும்.

**பி.ஹர்ஷன்...**

---



# வர்த்தகக் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு; இலங்கை பெற்ற மாபெரும் வெற்றி

## கொழும்பு பல்கலைக்கழக பொருளாதார கற்கை பீடத்தின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க

அண்மையில் நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் சிங்கப்பூர் சந்தை வெளியிட்டுள்ள அறிக்கை, இலங்கை சர்வதேச கடன் பத்திரம் வைத்திருப்பவர்களுடன் கொள்கையளவில் உடன்பாட்டை எட்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. இதில் சர்வதேச நாணய நிதியத்துடன் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ், 17 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடன் நிவாரணம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2033ஆம் ஆண்டின் இறுதியில், நாட்டின் வெளிநாட்டு வணிகக் கடனின் சுமார் 17.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை மறுசீரமைப்பது குறித்த கொள்கை ரீதியான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

> **சர்வதேச நாணய நிதியம் 17 பில்லியன் டொலருக்கும் அதிகமான கடன் நிவாரணத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, 2033ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்நாட்டில் இருந்த 17.5 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு வணிகக் கடனை மறுசீரமைக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.**

சர்வதேச முதலீட்டாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிணைப்பத்திர உரிமையாளர்களின் தற்காலிக குழு (Ad Hoc Group of Bondholders (AHGB) மற்றும் உள்ளூர் நிதி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் உள்ளூர் கூட்டமைப்பு (Local Consortium of Sri Lanka LCSL) ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் ஊடாக, இந்த சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்நாட்டு இறையாண்மை பிணைப் பத்திரங்களில் 50 வீதத்திற்கும் அதிகமானவற்றை இந்த இரண்டு குழுக்களும் கொண்டுள்ளன.

இந்த இணக்கப்பாடுகளின் கீழ், 11 சதவீத தள்ளுபடி விகிதத்தின் அடிப்படையில் 40.3 சதவீத தற்போதைய மதிப்புக்கு (Net Present Value) நிவாரணங்களை வழங்க பிணைப் பத்திரதாரர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த இணக்கப்பாட்டின் மூலம் ஜூலை 2024ல் நிறுவப்பட்ட கூட்டு நடவடிக்கை கட்டமைப்பை விட இந்த ஒப்பந்தத்தினால் இலங்கைக்கு அதிக கடன் நிவாரணம் கிடைப்பதோடு, புதிய விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று வட்டி செலுத்தல்களிலும் குறைப்பு இடம்பெறவுள்ளது. இலங்கை அண்ணளவாக 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இறையாண்மைக் கடனை மறுசீரமைப்பது தொடர்பான முக்கிய நிதி விதிமுறைகள் தொடர்பில் சீனா அபிவிருத்தி வங்கியுடன் (CDB) இலங்கை கொள்கையளவில் இணக்கப்பாட்டை எட்டியுள்ளது. சீனாவின் எக்சிம் வங்கி, இலங்கையின் உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு (OCC), சீனா அபிவிருத்தி வங்கி (CDB) மற்றும் கடன் பத்திரதாரர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தங்களின் விளைவாக, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்ட காலத்தினுள் இலங்கைக்கு 17 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் நிவாரணம் கிடைத்துள்ளது.

இதில் சீனாவின் எக்சிம் வங்கியிடமிருந்து அண்ணளவாக 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களும், உத்தியோகபூர்வ கடன் வழங்குபவர்கள் குழுவிடமிருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களும், சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து (CDB) 2.5 பில்லியன் டொலர்களும் பிணைப் பத்திரதாரர்களிடமிருந்து 9.5 பில்லியன் டொலர்களும் அடங்கும்.

இங்கு விசேடமாக பெரும்பான்மை பிணைப்பத்திர உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி, அதேபோன்று இலங்கையின் நிதி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட அமைப்பு என்ற இந்த இரண்டு குழுக்களும் சீனாவின் எக்சிம் வங்கியுடன் இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடு தொடர்பில் கொள்கையளவிலான இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பது தெளிவாகின்றது.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர், பத்திரப்பதிவுதாரர்களிடமிருந்து ஒரு இறுதி முன்மொழிவு வந்ததுள்ளதோடு, இலங்கை அந்த முன்மொழிவை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த இணக்கப்பாடுகளின் கீழ், சுமார் 17 பில்லியன் டொலர் அளவிலான சர்வதேச கடன் பத்திரங்கள் மறுசீரமைக்கப்படும். இந்த மறுசீரமைப்பினுள் தொழில்நுட்ப விடயங்கள் பாரியளவில் உள்ளன. இது தொடர்பிலான அடிப்படை அறிவு இல்லாத சாமானிய மக்களால் இதனைப் புரிந்துகொள்வது கடினமான விடயமாகும். என்றாலும் நாம் இந்த பிணைப்பத்திர மறுசீரமைப்பினுள் இலங்கை பெற்றுக் கொண்ட முன்னேற்றம் தொடர்பில் கவனத்தைச் செலுத்தினால் பல விடயங்களின் காரணமாக இவ்வாறு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளமை இலங்கை அடைந்த வெற்றியாகக் குறிப்பிடப்பட முடியும்.

> **தற்போது இலங்கைக்கு வரும் அந்நிய செலாவணியான சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தால், வெளிநாட்டு பணியாளர்களிடமிருந்து கிடைக்கும் நிதியில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டால், ஏற்றுமதி துறை வீழ்ச்சியடைந்தால், அது இலங்கையின் சுற்றுலாத்துறையில், ஏற்றுமதித் துறையில்,வெளிநாட்டு பணம் அனுப்புதலில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தலாம்.**

நாம் அறிந்த முதல் விடயம் என்னவென்றால், நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்லும்போது, கடன் பத்திரங்களை முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் அவசியமான ஒன்று என்பதில் நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

உலக அளவில் மிகப்பெரிய நிச்சயமற்ற தன்மை நிலவுவதால், நாம் அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஒரு யுத்தம் இடம்பெற்று வருகிறது. அதேபோன்று மறுபுறம், ரஷ்ய உக்ரைன் யுத்தம் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் உலக அளவிலான அரசியல் மாற்றங்கள் குறிப்பாக தெற்காசிய பிராந்தியத்தில் பெரும் சமூக மற்றும் அரசியல் எழுச்சிகள் இடம்பெற்று வருகின்றன. வங்கதேசம் மற்றும் மாலைதீவுகள் தொடர்பாகவும், மறுபுறம் பாகிஸ்தான் தொடர்பாகவும் நிச்சயமற்ற நிலை இருப்பதாகத் தெரிகிறது.

மொத்தத்தில் எடுத்துக் கொண்டால், தற்போதைய வெளிநாட்டுச் செலாவணி இலங்கைக்கு வரும் சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்தால், வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கும் பணம் தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டால், ஏற்றுமதித் துறை வீழ்ச்சியடைந்தால், குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அந்த நிலை, இலங்கையின் சுற்றுலாத் துறையில், ஏற்றுமதித் துறையில், வெளிநாட்டு தொழிலாளர்களின் பணம் அனுப்புதலில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தலாம், இவ்வாறான நிலையில் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாவிட்டால் எம்மால் அதன் காரணமாக சர்வதேச கடனைப் பெற முடியாது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

**சுபத்ரா தேசப்பிரிய**
**தமிழில் – எம். எஸ். முஸப்பிர்...**

# உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய லெபனானின் வயர்லெஸ் தொடர்புசாதனங்கள் தாக்குதல்!



**லெபனானில் பேஜர், வோக்கிடோக்கி உள்ளிட்ட வயர்லெஸ் தகவல் தொடர்புசாதனங்களை வெடிக்கச் செய்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் உலகையே அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கியுள்ளன.**

கடந்த செவ்வாய்க்கிழமை (17.09.2024) லெபனானின் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3.30 மணி முதல் பெய்ரூட் உட்பட தெற்கு லெபனானின் பல பிரதேசங்களில் பேஜர்கள் திடீர் திடீரென வெடித்துச் சிதறின. சுப்பர் மார்க்கட்டுகள், அங்காடி நிலையங்கள், முடிதிருத்தும் நிலையங்கள், சந்தைகள் என எல்லா இடங்களிலும் இவ்வெடிப்பு சம்பங்கள் பதிவானதோடு, மரணங்களும் காயங்களும் ஏற்பட்டன.

செய்வதறியாது திகைத்துப் போன லெபனானிய அதிகாரிகள் பேஜர்களை உடனடியாக தூர எறிந்துவிடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினர்.

இச்சம்பவம் லெபனான் முழுவதும் உச்சகட்ட பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது. இச்சம்பவத்தில் காயங்களுக்கு உள்ளானவர்கள் உடனுக்குடன் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். தெற்கு லெபனான் பிரதேசங்களில் அம்புலஸ் பற்றாக்குறை ஏற்பட்டதால் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் அன்புலன்ஸ் வண்டிகளை அவசர உதவிக்கு அழைக்கும் அளவுக்கு காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

இந்நிலையில் வைத்தியசாலைகளில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் அவசர அவரசமாக இரத்தம் வழங்க முன்வருமாறு லெபனான் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தது. அதற்கேற்ப இரத்ததான முகாம்களும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. வைத்தியசாலை ஊழியர்களின் விடுமுறைகள் யாவும் உடனடியாக இரத்து செய்யப்பட்டதோடு, சகல ஊழியர்களும் அவசர அவசரமாகக் கடமைக்கு திரும்புமாறு அழைக்கப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் லெபனான் சுகாதார அமைச்சர் பிராஸ் அபியாட், 'பேஜர்கள் வெடிப்பு சம்பவங்களில் 2800 பேரளவில் காயமடைந்துள்ளனர். அவர்களில் லெபனானுக்கான ஈரான் தூதுவர் முஜிதபா அமானியும் அடங்கியுள்ளார். 300 இற்கும் மேற்பட்டவர்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 12 பேர் மரணமடைந்துள்ளனர். அவர்களில் லெபனான் பாராளுமன்ற உறுப்பினர் அலி அம்மாரின் மகனும் ஒருவராவார்' என்று தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் பெரும்பாலானவர்களுக்கு மார்பு, கண், முகம், வயிறு, தொடைப் பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. 500 பேர் கண்பார்வையை இழந்துள்ளனர். சிலருக்கு கைவிரல்களும் இன்னும் சிலருக்கு கைகளின் மணிக்கட்டுக்கு கீழ்ப்பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த ஈரானிய தூதுவருக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேஜர் என்பது மூன்று நான்கு அங்குலங்கள் நீளமானதும், இரண்டு மூன்று அங்குலங்கள் அகலமானதும் சுமார் ஒரு அங்குலம் தடிப்பானதுமான ஒரு வயர்லெஸ் தகவல் தொடர்புசாதனமாகும். குறுந்தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் இந்த உபகரணத்தைப் பயன்படுத்துபவர்கள் பெரும்பாலும் மேற்சட்டை பொக்கட் அல்லது நீளக் காற்சட்டை பொக்கட் அல்லது இடுப்புப்பட்டியுடன் பொருத்தி வைத்திருப்பது வழமையாகும்.

அதனால்தான் பேஜர் வெடிப்பு சம்பவத்திற்கு உள்ளானவர்களுக்கு மார்பு, வயிறு மற்றும் தொடை பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக வயிற்றுப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளவர்களின் வயிற்றின் உட்பகுதி தசைகளில் பேஜரின் நுண் துகள்கள் பதிந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம் இச்சம்பவத்தினால் முகம் மற்றும் கண்களில் அநேகருக்கு காயங்கள் ஏற்படக் காரணம் யாதெனில், பேஜர் வித்தியாசமான ஒலி எழும்பியதும் குறுந்தகவல் வந்திருப்பதாகக் கருதி அதனைப் பார்க்க முற்பட்ட சமயம் வெடிப்பு ஏற்பட்டமையாகும். இதன் விளைவாக பலர் பார்வையையும் இழந்துள்ளனர் என லெபனானிய மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் குறுகிய நேர காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான பேஜர் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டதால் ஈராக் இரண்டு விமானங்களில் சுமார் 100 தொன் மருந்துப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைத்ததோடு, ஜோர்தான், எகிப்து, சிரியா, துருக்கி மற்றும் ஈரான் போன்ற நாடுகள் அவசர அவசரமாக மருத்துவ உதவிகளை அனுப்பின. குறிப்பாக ஈரான் ஒரு தொகுதி கண் சத்திரசிகிச்சை நிபுணர்களுடன் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தினால் காயமடைந்தவர்கள் லெபனானில் உள்ள 100 வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட அதேநேரம், ஒரு தொகுதியினர் ஈரானுக்கும் சிரியாவுக்கும் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று லெபனானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.







**போரியல் வரலாற்றில் முதன்முறையாக ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள்!**

**பேஜர்கள் வெடிப்பில் 12 பேர் மரணம், 2800 பேர் காயம்; வோக்கிடோக்கிகள் வெடிப்பில் 25 பேர் மரணம், 608 பேர் காயம்!**

பேஜர்கள் வெடிப்பு சம்பவம் செவ்வாய்க்கிழமை சுமார் ஒரு மணித்தியாலயம் பதிவான அதேநேரம், மறுநாள் வோக்கிடோக்கி வெடிப்பு சம்பவம் பதிவானதோடு, அதில் 25 பேர் மரணமடைந்ததோடு 608 பேர் காயமடைந்தனர். சிரியாவிலும் பேஜர், வோக்கிடோக்கி வெடித்த சம்பவங்கள் ஏககாலத்தில் பதிவாகின. இந்த வயர்லெஸ் வெடிப்பு சம்பவங்கள் லெபனானில் மாத்திரமல்லாமல், பிராந்திய நாடுகளிலும் உலகிலும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தின.

### ஐயாயிரம் பேரை கொல்லும் முயற்சி:

இச்சம்பவங்களின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக லெபனான் பிரதமர் நஜீப் மிகாடி குற்றம்சாட்டியதுடன், லெபனானின் ஹிஸ்புல்லாஹ்வும் குற்றம் சாட்டியுள்ளன. இதுதொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, பதிலடி கொடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது ஹிஸ்புல்லாஹ்.

அதேநேரம் பேஜர், வோக்கிடோக்கி வெடிப்பு தாக்குதல்களுக்கு பின்னர் வி யாழனன்று மாலையில் உரையாற்றிய ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹஸன் நஸ்ருல்லா, 'சில நிமிடங்களுக்குள் ஐயாயிரம் பேரை கொல்ல இஸ்ரேல் முயற்சி செய்துள்ளது. நாம் நாலாயிரம் பேஜர்களையும் ஆயிரம் வோக்கிடோக்கிகளையும் வழங்கியிருந்தோம். இறைவனின் உதவியினால் பெரும்பாலானவர்கள் மரணத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் எங்கள் சிவப்பு கோட்டை மீறிவிட்டது. பழிவாங்கியே தீருவோம்' என்றுள்ளார்.

ஆனால் இஸ்ரேல் இவ்வெடிப்பு சம்பவங்கள் குறித்தோ, தம் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கோ உடனடியாக எவ்வித பதிலும் அளிக்கவில்லை. இந்நிலையில் இஸ்ரேலிய செய்தி இணையதளமான 'வால்லா', இவ்வார தொடக்கத்தில் மூத்த அமைச்சர்கள் மற்றும் உளவுத்துறை தலைவர்களுடனான பாதுகாப்பு ஆலோசனையின் போது லெபனானில் வயர்லெஸ் தகவல் தொடர்புசாதனங்கள் அல்லது பேஜர்கள் வெடிப்பதற்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புதல் அளித்ததாக தெரிவித்துள்ளது.

பெயரிடப்படாத மூத்த அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி, லெபனானில் நடந்த குண்டுவெடிப்புகளுக்குப் பின்னால் இஸ்ரேல் இருப்பதாகவும் அந்த இணையதளம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், போர் புதிய கட்டத்திற்குள் வடக்கு இஸ்ரேலில் அதாவது இஸ்ரேல் லெபனான் எல்லையில் பிரவேசிக்கிறது என்றுள்ளார். இதேவேளை இஸ்ரேலிய இராணுவம், காஸா மீதான போரில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இஸ்ரேலின் 98வது எலைட் படையினரை லெபனான் எல்லைக்கு நகர்த்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வெடிப்பு சம்பவங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஹிஸ்புல்லாஹ் உறுப்பினர்களாவர். காஸா மீது முன்னெடுக்கும் யுத்தத்தை நிறுத்தக்கோரி கடந்த வருடம் ஒக்டோபர் 08 ஆம் திகதி முதல் இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லாஹ் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றது. இதனால் இஸ்ரேலும் ஹிஸ்புல்லாஹ்வும் எல்லை தாண்டிய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதோடு, லெபனான்இஸ்ரேல் எல்லையில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

இஸ்ரேல் ஹிஸ்புல்லாஹ் மோதலை பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதியின் விஷேட பிரதிநிதி அமொஷ் கொச்செஸ்ரின் முன்னெடுத்து வருகிறார். 'காஸா மீதான யுத்தத்தை நிறுத்தினால் நாங்களும் தாக்குதல்களை நிறுத்தி விடுவோம்' என்கிறது ஹிஸ்புல்லாஹ்.

### பேஜருக்கு மாறக் காரணம்:

ஆனால் கடந்த சில மாதங்களாக ஹிஸ்புல்லாஹ்வின் முக்கியஸ்தர்கள் இஸ்ரேலின் துல்லிய தாக்குதல்கள் மூலம் கொல்லப்பட்டு வருகின்றனர். இது ஹிஸ்புல்லாஹ்வுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹஸன் நஸ்ருல்லா, அன்ரொய்ட் கையடக்கத் தொலைபேசிகளின் வட்ஸ்அப் ஜியோ லொக்கேசனைப் பயன்படுத்தியே இஸ்ரேல் இத்தகைய தாக்குதல்களை மேற்கொள்வதாகத் தெரிகிறது. அதனால் அதன் பாவனையைத் தவிர்க்குமாறு சில மாதங்களுக்கு முன்னர் தம் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியதோடு, புதிய தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு செல்லவும் நடவடிக்கை எடுத்தார்.

இதே சூழலில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரானின் புதிய ஜனாதிபதி மசூட் பெசஸ்கியானின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு வடக்கு தெஹ்ரானிலுள்ள இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் (ஐ.ஆர்.ஜி.சி) கட்டுப்பாட்டில் உள்ள விருந்தினர் மாளிகையில் தங்கி இருந்த சமயம், அவரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் கடந்த ஜுலை 31 இல் கொல்லப்பட்டனர்.

**பேஜர், வோக்கிடோக்கி வெடிப்புகளால் நிலைகுலைந்து போனது லெபனான்!**



கடும் பாதுகாப்பு கட்டமைப்பைக் கொண்ட ஈரானில் இப்படுகொலை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்று உலகம் அதிர்ச்சியடைந்திருந்த சூழலில், கையடக்கத் தொலைபேசியின் ஜியோ லொக்கேஷனைப் பயன்படுத்தி அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற தகவலும் பரவியது. ஈரான் பல கோணங்களிலும் விசாரணைகளை முன்னெடுத்தது.

இந்நிலையில் ஹனியேவின் மகன் அப்துல் சலாம் தனது தந்தை படுகொலை இடம்பெற்று சில வாரங்கள் கடந்த பின்னர் 'அல் அரபியா'வுக்கு அளித்திருந்த பேட்டியில், தந்தையின் உடம்பின் மார்புக்கு மேற்பகுதியே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. அவரது கையடக்க தொலைபேசி கண்காணிக்கப்பட்டு வழிகாட்டப்பட்ட ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் அன்ரொய்ட் கையடக்கத் தொலைபேசிப் பாவனையில் இருந்து வெளியேறத் தீர்மானித்த ஹிஸ்புல்லாஹ் பேஜர் பாவனைக்கு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கேற்ப ஐயாயிரம் ஏ.ஆர்924 மொடல் பேஜர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பேஜரானது ஒரு தடவை சார்ஜ் பண்ணினால் சுமார் 85 நாட்கள் செயற்பாட்டில் இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

இந்த பேஜர்கள் 5 மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும் கடந்த ஒரு மாதத்திற்குள்தான் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. குறித்த தினத்தன்று இப்பேஜரில் திடீரென ஒரு வித்தியாசமான ஒலி வெளிப்பட்டதும் அதனை கையிலெடுத்தபோதும், அதில் குறுஞ்செய்தி வந்ததாகப் பார்த்த சமயமுமே இவ்வெடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இவை ஏன் வெடித்துத் சிதறின என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளன. இந்நிலையில் பிரித்தானியாவின் இராணுவ ஆயுதங்கள் தொடர்பான முன்னாள் நிபுணர் ஒருவர் பி.பி.சியிடம் குறிப்பிடும் போது, 'இச்சாதனங்கள் ஒவ்வொன்றிலும் 10 முதல் 20 கிராம் வரை அதிசக்திமிக்க வெடிமருந்துகள் நிரப்பி, போலி மின் சாதனக்கூறுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம். அது ஒரு alphanumeric குறுஞ்செய்தியை சமிக்ஞையாக பயன்படுத்தி வெடிக்கச் செய்திருக்கலாம் என்றுள்ளார்.

இதேவேளை மேற்குலக புலனாய்வுத் தரப்பினர் 'த நஷனலு'க்கு வழங்கியுள்ள தகவல்களில், இந்த பேஜர்களில் இரண்டு முதல் 20 கிராம் வரை வெடிக்கும் பொருள் எந்தவொரு கண்டுபிடிக்கும் உபகரணத்திலும் பதிவாகாதபடி மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம். இது மிகவும் எரியக்கூடிய PETN (Pentaerythritol tetranitrate) ஆக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இச்செயலை இஸ்ரேலின் மொசாட் தான் பெரும்பாலும் செய்திருக்கும் என்ற கருத்து பரவலாக நிலவும் சூழலில், நியூயோர்க் ரைம்ஸ் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களும் ஹிஸ்புல்லாஹ் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மாற்றப் போவதை முன்கூட்டியே அறிந்து கொண்ட மொசாட் உளவுப் பிரிவினர் இதில் ஊடுருவி இருக்கலாமென என்றுள்ளன.

### பேஜர் உற்பத்தி நிறுவனத்தின் மறுப்பு:

இந்நிலையில் குறித்த வகை பேஜரை உற்பத்தி செய்ததாகக் கருதப்படும் தாய்வானின் கோல்ட் அப்பலோ நிறுவனம், லெபனானில் வெடித்த ஏ.ஆர்924 மொடல் பேஜர்களை தாம் தயாரிக்கவில்லை என மறுத்துள்ளது.

குறிப்பிட்ட பிராந்தியங்களில் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு எங்கள் வர்த்தக நாமத்தைப் பயன்படுத்த ஹங்கெரியின் பி.ஏ.சி நிறுவனத்திற்கு நாம் அங்கீகாரம் வழங்கியுள்ளோம். இத்தயாரிப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முழுவதுமாக பி.ஏ.சி நிறுவனத்தினால் கையாளப்படுகிறது என்று அந்நிறுவனத்தின் உரிமையாளர் Hsu Cheng Quang தெரிவித்துள்ளார்.

தாய்வானின் பொருளாதார விவகார அமைச்சின் தரவுகளின்படி, கோல்ட் அப்பல்லோ நிறுவனம் சுமார் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேஜர்களை அமெரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் 2022 முதல் 2024 ஓகஸ்ட் வரை ஏற்றுமதி செய்துள்ளது. ஆனால் லெபனானுக்கு பேஜர்களை அனுப்பியதற்கான எந்தப் பதிவும் தைபேயிடம் இல்லை என்றுள்ளது. தாய்வான் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் குறித்த நிறுவனத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை ஹங்கேரி நிறுவனமும் லெபனானில் வெடித்த பேஜர்கள் தாம் உற்பத்தி செய்தவை அல்ல என்றுள்ளது.

இதேவேளை லெபனான், சிரியாவில் வெடித்த வாக்கிடோக்கிகளின் உற்பத்தி நிறுவனமாகக் கருதப்படும் ஜப்பான் நாட்டின் ஐகொம் விடுத்துள்ள அறிக்கையில், லெபனானில் வெடித்து சிதறிய ஐ.சிஎ 82 வோக்கிடோக்கி மாதிரிகளைத் தயாரிப்பதை பத்து வருடங்களுக்கு முன்பே நாம் நிறுத்திவிட்டோம். தற்போது லெபனானில் வெடித்திருப்பவை எங்கள் நிறுவனத்திலிருந்து அனுப்பப்படவில்லை என்றுள்ளது. ஆனபோதிலும் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது அந்நிறுவனம்.

இவை இவ்வாறிருக்க, லெபனானின் வெடிப்பு சம்பவங்களுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்றுள்ளது அமெரிக்கா. இத்தாக்குதலை ரஷ்யா, பிரான்ஸ், ஈரான், துருக்கி உள்ளிட்ட நாடுகள் கண்டித்துள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டனியோ குட்டரெஸ், சிவிலியன் பொருட்களை ஆயுதமாக்கக் கூடாது. லெபனான் முழுவதும் ஹிஸ்புல்லாஹ் உறுப்பினர்கள் பயன்படுத்தும் சாதனங்கள் குறிவைக்கப்பட்டாலும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொருட்களை ஆயுதம் பயன்படுத்தலாகாது' என்றுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் பேஜர், வோக்கிடோக்கி உள்ளிட்ட வயர்லெஸ் தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு லெபனான் உள்ளிட்ட நாடுகளது மக்கள் தயக்கம் காட்டத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக வரலாற்றில் தகவல் தொடர்பாடல் சாதனம் ஒரு போரியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.





**மர்லின் மரிக்கார்...**

# பாதாள உலக குழுக்கள் மீண்டும் தலையெடுக்க இடமளிக்கலாகாது!



**தேர்தல் பரபரப்புக்கு மத்தியில், கடந்த சில நாட்களாக அதிகரித்திருந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்த செய்திகள் ஊடகங்களில் அதிகம் இடம்பெற்றிருந்தன.**

கடந்த ஓரிரு நாட்களில் மாத்திரம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தெஹிவளை பிரதேசத்தில் மாத்திரம் 2 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தெஹிவளை பொலிஸ் பிரிவில் கடவத்தை வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். தெஹிவளை, கல்கிசை மாநகரசபையின் ஊழியர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதற்கு முதல் நாள் தெஹிவளை சரணங்கர வீதியில் சாப்பாட்டுக் கடையொன்றின் உரிமையாளரும் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படவோவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கும் இந்த இரு படுகொலைகளுக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலிஸ் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதாள உலகக் குழுவினருக்கு இடையிலான முரண்பாடே இதற்குக் காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தவிரவும், தங்காலை பகுதியில் 32 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது. அதேநேரம், மாத்தறை பகுதியில் 38 வயதுடைய மீன்கடை உரிமையாளர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதேபோல, நமுவாவ பிரதேசத்தில் 30 வயது ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் படுகொலைகள் யாவும் பெரும்பாலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களாகவே பதிவாகியுள்ளன. பாதாள உலகக் குழுக்களுடன் காணப்படும் தொடர்புகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த ஆறு மாதங்களில 50 இற்கும் அதிகமானவர்கள் இதுபோன்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸ் புள்ளிவிபரங்களுக்கு அமைய 2023ஆம் ஆண்டில் 120 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதுடன், இவற்றில் பெரும்பாலானவற்றுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களே காரணம் என்றும் தெரியவந்துள்ளது. சட்டவிரோத ஆயுதங்களின் பயன்பாடு தென்பகுதியில் அதிகரித்திருப்பதன் வெளிப்பாடாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.



பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் குறிப்பாக இந்த வருட ஆரம்பம் முதல் அதிகரித்திருந்த நிலையில், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தது. குறிப்பாக போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 'யுக்திய' என்ற செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

**வன்முறைக் குழுக்களிடையே மோதல்கள்! கடந்த சில தினங்களாக அதிகரித்திருந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்!**

2023ஆம் ஆண்டு டிசம்பர் ஆரம்பிக்கப்பட்ட யுக்திய செயற்றிட்டத்தின் கீழ் போதைப்பொருடன் தொடர்புபட்ட 130,000 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன், அவர்களிடமிருந்து பல கிலோ போதைப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன. போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் பதாள உலகக் குழுவினரின் வலையமைப்பைத் தேடியறிந்து அதனை இல்லாமல் ஒழிக்கும் நோக்கிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் குற்றச்செயல்கள் ஒப்பீட்டளவில் குறைந்திருந்த போதும், இவை மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளனவா என்ற சந்தேகம் இப்போது தோன்றியுள்ளது.

போதைப்பொருள் வியாபாரத்தில் இலங்கையை முக்கிய இடமாகப் பயன்படுத்துவதற்கு பாதாள உலகக் குழுக்கள் எடுக்கும் முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும். வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்படும் போதைப்பொருட்கள் இங்கிருந்து வெவ்வேறு பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாகப் பல குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. அது மாத்திரமன்றி நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருட்கள் காரணமாக எதிர்கால சந்ததியினர் கடுமையாகப் பாதிக்கப்படுவதற்கான ஆபத்தும் காணப்படுகின்றது.

எனவே, போதைப்பொருள் மற்றும் அது தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவினர் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் மக்களின் விருப்பமாகும். இது தொடர்பான தேவையை உணர்ந்தே போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் செயற்பட்ட இந்தக் குழு தனது அறிக்கையை அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. போதைப்பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவது, அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் குழுவின் அறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளை அழைத்து நடத்திய தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பின்னரே இந்தக் குழுவின் அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

விசேடமாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவது கட்டாய தேவையாக உள்ளது.

அதேநேரம், போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கையில் கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தி அதிகபட்ச தண்டனைகளை வழங்கும்போது இவற்றை கணிசமானளவு குறைக்க முடியும்.

யுக்திய போன்ற நடவடிக்கைகளின் மூலம் பெருமளவிலான போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள். எனினும், அவர்களுக்கு மேல் உள்ள புள்ளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டில் அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும், போதைப்பொருள் வியாபாரத்திற்கும் இடையில் தொடர்புகள் இருப்பதால் இவற்றைக் கட்டுப்படுத்த உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**பி.மகேஸ்வரன்...**

# ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியாவில் நிலவிய உயர்வான நாகரிகம்!



இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குநராக 1902 இல் பதவியேற்ற ஜோன் மார்ஷல், ஹரப்பாவில் பரந்த அளவில் அகழாய்வு நடத்த உத்தரவிட்டார். அங்கிருந்து 680 கிமீ தொலைவில் உள்ள மொகஞ்சதாரோவிலும் அகழாய்வு நடந்தது.

சிந்துவெளி நாகரிகத்தின் ராவி ஆற்றங்கரையில் கண்டறியப்பட்ட முதல் நகரம் ஹரப்பா. அதனால், இந்த நாகரிகத்தையே ஹரப்பா நாகரிகம் என வரலாற்று ஆய்வாளர்கள் அழைக்கிறார்கள். அதேநேரம், பரவலான பகுதியைக் கொண்டிருப்பதாலும், இந்த நாகரிகத்தின் பெருநதியாகச் சிந்துநதி இருந்ததாலும், 'சிந்துவெளி நாகரிகம்' எனப்பட்டது.

வெண்கலக் காலத்தைச் சேர்ந்த இந்தப் பகுதியில் பெரிய நெற்களஞ்சியம், மக்கள் கூடும் அரங்கம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. இந்திய வரலாற்றின் திசையையே திருப்பிய பிரதேசம் இது.

மொகஞ்சதாரோ என்பது சிந்துவெளி நாகரிகத்தில் கண்டறியப்பட்ட மிகப் பெரிய ஊர். 'இறந்தவர்களின் புதைமேடு' என்பதே இந்தப் பெயருக்கு அர்த்தம். பெரிய கிணறுகள், தாய் தெய்வச் சிற்பங்கள் இந்த ஊரில் கண்டறியப்பட்டுள்ளன. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த நகரத்தில் இந்தியக் கிராமங்களில் இருப்பதுபோல் மேடான பகுதிக் குடியிருப்பு, தாழ்வான பகுதிக் குடியிருப்புகள் இருந்துள்ளன. இந்திய விடுதலைக்குப்பின் மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டன.

சிந்துவெளிப் பண்பாடு பற்றிய பொதுவெளி உரையாடல்கள் கடந்த சில ஆண்டுகளில் பெரிதும் அதிகரித்திருக்கின்றன. 1924 செப்டம்பர் 20ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) சிந்துவெளிப் பண்பாடு அறிவிக்கப்பட்டுச் சரியாக நூறு ஆண்டுகள் ஆகியுள்ளன.

இந்திய வரலாற்றை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களோடு மட்டும் தொடர்புபடுத்திக் காலவரையறை செய்யப்பட்டு வந்த காலகட்டத்தில், இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு அதற்கும் முந்தியது என்பது தெரியவந்தது. அது நகர்மய வரலாறு, அறிவியல் சார்ந்த, வணிகம் சார்ந்த, மக்கள் மைய வரலாறு என்று அனைவருக்கும் அறிவித்த பெருமை இந்தியத் தொல்லியல் துறையின் தலைவராகப் பணியாற்றிய ஜோன் மார்ஷலையே சாரும். "சிந்து, பஞ்சாப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் முதிர்ந்த பண்பாட்டோடு, அருமையாகக் கட்டியெழுப்பப்பட்ட நகரங்களில் உயர்தரமான கலை, கைவினைத் திறன்களோடும், வளமான எழுத்தறிவோடும் வாழ்ந்துள்ளனர்" என்ற ஜோன் மார்ஷலின் கருத்து இந்தியத் துணைக்கண்ட வரலாற்று எழுத்தியலின் போக்கைப் புரட்டிப்போட்டது. இந்திய வரலாற்றுக்குப் புதிய முகவரி அளித்த ஜோன் மார்ஷலுக்கு முழு உருவச்சிலை திறப்பதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

பரந்து விரிந்த ஹரப்பா பண்பாட்டு நிலப்பகுதியில் ஒரே வகையான மக்கள் வாழவில்லை. அதில் உள்ள பொறிப்புகளைப் பார்த்தாலே தெரியும். அழகான பின்னலாடையை உடுத்திய நகர மனிதர்கள், அணிகலன்களை அணிந்தவர்கள், எருமையுடன் சண்டையிடுபவர்கள், எருமை மாட்டின் கொம்பை வைத்து நடனமாடுபவர்கள், பலி கொடுப்பவர்கள், தாய்த் தெய்வங்கள், கடலில் பயணிப்பவர்கள் என்று இந்தப் பொறிப்புகள், முத்திரைகள் பன்முகத்தன்மையைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

அதேநேரத்தில் செங்கற்கள், எடைக்கற்கள், உலோகக் கலவை, ஒரே மாதிரியான பொறிப்புகள் என்கின்ற தரம் சார்ந்த ஒழுங்கும் காணப்படுகிறது. வெளிநாட்டு வணிகமும் செழித்திருந்தது. அத்தகைய சூழலில் பொதுவான தொடர்புமொழி என்பது தவிர்க்க முடியாத வளர்ச்சிப் படிநிலை. ஆனாலும் அம்மொழியை இதுவரை வாசிக்க இயலவில்லை. அதனால், சிந்துவெளி மொழிப் புதிர் தொடர்கிறது.







**சிந்துவெளி நாகரிகம் கண்டறியப்பட்டு நேற்றுமுன்தினம் 100 ஆண்டுகள் பூர்த்தி!**

சிந்துவெளி மக்கள் எங்கே போனார்கள்? சிந்துவெளியின் வாழ்க்கை முறையில், பொருளாதாரத்தில் ஏதோ ஒரு பெரிய நலிவு ஏற்பட்டுள்ளது. ஒரு பகுதியில் வாழ்க்கை சிரமம் என்றால், வேறோர் இடத்துக்குப் புலம்பெயர்வது மனித இயல்பு. அதுதான் சிந்துவெளியிலும் நடந்திருக்கக்கூடும். நீண்ட வரட்சி, பஞ்சம் பட்டினி, பெருவெள்ளம், நிலநடுக்கம், வணிகச்சரிவு, புதிய மொழி/பண்பாட்டினரின் வருகை என்று காரணம் எதுவாகவும் இருக்கலாம். அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கூட்டுக்காரணிகள் இருக்கலாம். காரணம், எதுவாகினும் அவர்களில் ஏராளமானோர் புலம்பெயர்ந்தார்கள் என்பதில் ஐயமில்லை. குறிப்பாகத் தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் நகர்ந்துள்ளார்கள்.

சிந்துவெளி மக்கள் தெற்கு நோக்கி நகர்ந்தனர் என்பதற்குத் தொடர்ச்சியான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. குஜராத், லோத்தல், தோலாவிரா, ராஜஸ்தான் முதலிய இடங்களில் முதிர்ந்த ஹரப்பா பண்பாட்டுக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பிந்திய கால ஹரப்பா பண்பாட்டின் தடயங்கள் மகாராஷ்டிரத்தில் உள்ள தைமாபாத்தில் உள்ளன.

சிந்துவெளி மக்களின் புலப்பெயர்வை ஆராய்வதில் மட்பாண்டங்கள் உதவுகின்றன. சிந்துவெளியில் அதிகமாக இருப்பது செந்நிறப் பாண்டம். தெளிவாகக் கறுப்பு சிவப்புநிறப் பாண்டம் குஜராத் சூழலில் காணப்படுகிறது. குஜராத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட நிலையில், சிந்துவெளி மக்கள் கிழக்கு நோக்கி தபதி நதியை ஒட்டியே நகர்ந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கவும் போதிய தடயங்கள் உள்ளன.

தொல்லியல், மொழியியலைவிட மரபணு ஆய்வுகள் துல்லியமானவை என்கிற கருத்து பரவலாக நிலவுகிறது. இந்தியத் துணைக்கண்ட மக்களின் ஆகத் தொன்மையான மரபணுத்தொகுதி தொல் தென்னிந்திய மூதாதையர் (AASI) என்று அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

இதைப் போலவே ஹரப்பா பண்பாட்டு மக்களுடன் ஸ்டெப்பி (புல்வெளி) மேய்ச்சல் பண்பாட்டினர் கலந்து, தொல் வட இந்திய மூதாதையர்கள் தோன்றினார்கள். இன்றைய தெற்காசிய மக்கள்தொகை இந்த இரண்டு மக்கள்தொகையும் கலந்து உருவானதே. இன்னொரு வகையில் சொல்வதெனில், இன்றைய தெற்காசிய மக்களில் பெரும்பாலானோர் ஏதோ ஒருவகையில் ஹரப்பா பண்பாட்டு மக்கள்தொகையோடு தொடர்புடையவர்களே.

தமிழ்நாட்டின் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, பொற்பனைக்கோட்டை, வெம்பக்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெறும் அகழாய்வுகள் புதிய வெளிச்சம் தருகின்றன. சிந்துவெளித் தடயங்கள், சங்க இலக்கிய மீள்நினைவுப் பதிவுகள், தமிழ்நாடு அகழாய்வுத் தடயங்கள் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் உள்ளன.

சிந்துவெளி அகழாய்வில் கிடைத்த முதல் தொல்பொருள் செங்கற்கள் தான். சுடப்பட்ட, நவீன வடிவிலான இந்தச் செங்கற்கள் அனைத்தும் ஒரே அளவில் கிடைத்தன. சுமார் அரையடி நீளம், அதில் பாதி அகலம், அதிலும் பாதித் தடிமனை இவை கொண்டிருந்தன. சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த பகுதி முழுவதும் இதுபோன்ற செங்கற்களே கிடைத்தன. எனவே, அவை ஒரு குழுவால் தரப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

மொகஞ்சதாரோவில் மிகப் பெரிய குளம் ஒன்று இருந்திருக்கிறது. உடைமாற்றும் இடங்கள், படிக்கட்டுகள், கரைப்பகுதிகள் ஆகியவை இதில் உள்ளன. சிந்துவெளி நாகரிகத்திலும், பண்பாட்டிலும் நீர் முதன்மை இடம்பிடித்ததற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சான்று. திராவிடச் சடங்குகள் நீரை மையமாகக் கொண்டு நடப்பதை வைத்துப் பார்க்கும்போது, இந்தப் பெருங்குளம் உருவாக்கப்பட்டதன் தொடர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும்.

சிந்து சமவெளி, திராவிடப் பண்பாட்டோடு இணைக்கப்பட்டு விவாதிக்கப்படுகிறது. இதற்கான விதையை விதைத்தவர் வங்காளத்தைச் சேர்ந்த மொழியியல் அறிஞரான சுனிதி குமார் சாட்டர்ஜி.

சிந்துவெளிப் பண்பாடு கண்டறியப்பட்ட சில ஆண்டுகளிலேயே, இந்தப் பண்பாட்டைக் குறிப்பிட 'ஆரியர் அல்லாத', 'ஆரியர் காலத்திற்கு முற்பட்ட' என்ற சொற்கள் பயன்பாட்டிற்கு வர ஆரம்பித்தன.

சிந்துவெளி மக்கள் பேசியது திராவிட மொழியே என்று வரலாற்று ஆய்வாளர்கள் பலர் கூறியுள்ளனர்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் காட்டப்படும் வாழ்க்கை சிந்து சமவெளியில் இருந்த வாழ்க்கையல்ல. ஆனால், சங்க இலக்கியங்களில் காட்டப்படும் வாழ்க்கை சிந்து சமவெளி வாழ்க்கைக்கு நெருக்கமாக இருக்கிறது. சிந்து சமவெளி ஒரு புதிர் என்றால், தமிழ்நாடு அதன் சாவி.

தமது கலாசாரத்திற்கு பங்களிப்பு செய்த ஜோன் மார்ஷலை நினைவுகூர்வதன் மூலம் இந்திய துணைக்கண்ட வரலாற்றின் மீது தனக்குள்ள உரிமையை தமிழ்நாடு உறுதி செய்கிறது.

சிந்து சமவெளி கண்டுபிடிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கடந்துவிட்டாலும், இன்னும் சில தீராத புதிர்கள் இருக்கின்றன. அதாவது, சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் என்ன மொழி பேசினார்கள் என்பதில் விவாதம் நீடிக்கிறது.

அதேபோல, சிந்து சமவெளியில் கிடைத்த குறியீடுகள், ஒரு மொழியின் எழுத்துகளா அல்லது சித்திர எழுத்துகளா அல்லது வெறும் குறியீடுகளா என்ற கேள்விகள் இன்னமும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. அங்கு பேசப்பட்ட மொழி தொல் திராவிட மொழி என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.



**ஹரப்பா, மொகஞ்சதாரோ பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள் என்பதே வரலாற்று ஆசிரியர்கள் பலரின் நம்பிக்கை!**



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர், இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமரின் ஏற்பாட்டில் தென்னிந்தியத் திரைப்பட நடிகை ஸ்ரீதேவியை வரவேற்கும் நிகழ்வும் விருந்துபசாரமும் அண்மையில் சங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்றது. தினகரன் நாளிதழ் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.ஸ்ரீ கஜன், மற்றும் புரவலரின் பாரியார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

# புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு கிரிக்கெட் போட்டி; சம்பியன் ரீமாஸ் அணி



புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவும், புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு சுயதொழிலாளர்கள் சங்கமும் இணைந்து மூன்றாவது தடவையாகவும் ஏற்பாடு செய்த எல்.டபிள்யூ. பெரேரா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கட் கிண்ணத்தை 28 ஓட்டங்களால் ரீமாஸ் அணி தன்வசப்படுத்தியது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை சந்திரா சில்வா மைதானத்தில் நடைபெற்ற 12 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு ரீமாஸ் மற்றும் பிரின்ஸ் செலஞ்சர்ஸ் அணிகள் தகுதி பெற்றன.

மின் ஒளியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பிரின்ஸ் செலஞ்சர்ஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ததுடன் போட்டியின் ஆரம்பம் முதலே அதிரடியாக ஓட்டங்களை குவித்த ரீமாஸ் அணி மூன்று விக்கட் இழப்பிற்கு 53 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் எம்.சப்ராஸ் 19 ஓட்டங்களையும் டபிள்யூ.டி. தனுஷ்க 17 ஓட்டங்களையும் பெற்றனர். பிரின்ஸ் செலஞ்சர்ஸ் பந்துவீச்சில் என். லசன்த் 9 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தினார்.

54 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பிரின்ஸ் செலஞ்சர்ஸ் நான்கு விக்கட் இழப்பிற்கு 25 ஓட்டங்களை குவித்து 28 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஐக்கிய தேசிய சுய தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நிகழ்வில் சம்பியன் கிண்ணத்தை வென்ற அணிக்கு எல். டபிள்யூ.பெரேரா ஞாபகார்த்த கிண்ணமும் ஏனைய பரிசுகளும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு கிண்ணமும் ஏனைய பரிசுகளும் வழங்கப்பட்டன.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக ரீமாஸ் அணியின் எம்.சப்ராஸ் தெரிவானார். தொடரின் சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் தொடரின் சிறந்த வீரர் ஆகிய இரண்டு விருதுகளையும் டபிள்யூ.டி தனுஷ்க தன்வசப் படுத்தினார். பிரின்ஸ் செலஞ்சர்ஸ் அணியின் என்.லசந்த் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரரானார்.




# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

## 201 வியாபார வாய்ப்புகள்

சிற்றுண்டிச்சாலை (CANTEEN) - 200க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட ஒரு தொழிற்சாலையில் காலை, மதியம் மற்றும் இரவு உணவு (BUFFET) பாணியில் வழங்கக்கூடிய உணவகம் நடத்த ஒரு அனுபவமிக்க உணவகம் தேவை. உணவுப் பட்டியலுடன் (MENU CARD). கீழே உள்ள முகவரிக்கு வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 0766200300, 0772217989. 064507

## வேலைவாய்ப்பு

## 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொள்ளுப்பிட்டிய வீடு ஒன்றிற்கு வாகன ஓட்டுநர் (DRIVER) தேவை. AUTO CAR ஓட்டத் தெரிந்த காலை வந்து மாலை செல்லக் கூடியவர் தேவை. வயதெல்லை 40 - 60 இடைப்பட்டவர். நாள் சம்பளம் Rs. 2000 வழங்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு கிழமை நாட்களில் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 0766200300. 064508

## 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு வீட்டில் வேலை செய்வதற்கு 45 - 52 பெண் தேவை. தேசிய அடையாள அட்டை, பொலிஸ் அறிக்கை கட்டாயமானது. 0703685168. 063892

## 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கெஷியர், வெயிட்டர் ஆண், பெண்(பயிற்சியுடன்) ரைஸ், கொத்து, சோர்டீஸ், சைவ உணவு (பாஸ்மா ர்) உணவு பரிமாறல், பொதி செய்தல், கை வேலைக்கா க (ஆண்) தேவை. ஆரி க பே, இல.16 C, போதி ராஜ மாவத்தை, புறக்கோட்டை. தொ.பே - 0762680414, 071-0758167. 064027

நிட்டம்புவவில் அமைந்துள்ள மரபெலட் வேலைத் தளத்திற்கு (Wooden Pallets) 20 - 55 வயதிற்கிடைப்பட்ட ஆண் - பயிற்சியற்ற ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சிக் காலத்தில் ரூ. 4000 செலுத்தப்படும். பயிற்சியின் பின்னர் சம்பளம் ரூ. 70000/ = - 80000/= பெறலாம். தங்குமிடம் மற்றும் உணவுக் கொடு ப்ப னவுகள் வழங்கப்படு ம். 0777937844. 064400

பேக்கரி பாஸ்மார் (அவன்/போறனை) வெயிட்டர், கிச்சன் ஹெல்பர், தேநீர் பென்றி, (டீ மேக்கர்) ரைஸ், சைனீ ஸ் பா ஸ்மா ர் தேவை. தங்குமிடம் உண்டு. நிவ் விஜ ய லங்கா கேட்டர்ஸ் பேக்கர்ஸ். கம்புறுபிட்டிய (மாத்தறை) 0772004590. 064191

Resturent பார் வேலைக்கு ஆண்கள் தேவை. வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Cashier வேலை, Cooking helper வேலை, Resturent மேசை பார்க்கும் வேலை. இதை தொடர்பு கொள்ள வேண்டிய இலக்க ம். No. 077-8500501, 076-1047410, 076-8414746. 064399

## 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

குருநாகல் தோட்டத்தில் வேலை செய்வதற்கு 45 - 55 வயதிற்கிடைப்பட்ட குடும்பம் தேவை. தேசிய அடையாள அட்டை, திருமண சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, வதிவை உறுதி செய்யும் கடிதங்கள் க ட்டாயமானது. அழையுங்கள் - 0703685168. 063890

## 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

தும்பு ஆலையில் தங்கி வேலை செய்வதற்கு குடும்பம் தேவை. தங்குமிட வசதி உண்டு. 0777161736, 0771617374. 064398




## காணி/தோட்டம்

## 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

களனியில் சதுர வடிவான 20 பே முதன்மையான காணி விற்பனைக்கு. தெளிவான உறுதி, களனி பன்சலைக்கு 300 மீ. கொஹல்வில சந்தி மற்றும் பியகம வீதிக்கு 75மீ, கிரிபத்கொடவிற்கு 3 கி. மீ எந்தவொரு திசையிலிருந்தும் இலகுவான நுழைவு வழியுண்டு. கொஹல்வில வீதி பிரதேசத்திலுள்ள ஏனைய காணிகளுடன் ஒப்பிடுகையில் வெள்ளப்பெருக்கிற்கு இடமில்லை, பசளைக் காணியுடன் உயரமான தே க்கு மரமுமுண்டு. குடியிருப்பு பிரதேசம் மற்றும் நல்ல பக்கத்து வீட்டுக்காரர். 1 பேர்ச் 1.65மி. சிறிதளவு பேசித் தீர்க்கலாம். எம்.டபிள்யு பெரேரா (உரிமையாளர்) உடன் 0706963322 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும். 061920

வத்தளை பள்ளியவத்தையில் காணி விற்பனைக்கு. 8 பேர்ச் வீதம் மூன்று காணித்துண்டுகள் அல்லது முழுக்காணியும் (24 பேர்ச்) ஒரு பேர்ச் ரூபா.1.5 மில்லியன் (பேசித்தீர்க்கலாம்) வீதம் உடன் விற்பனைக்கு. அனுமதிக்கப்பட்ட வரைபடங்கள், தூய உறுதி, நீர், மின்சார வசதிக ள், வத்தளை சந்தி க்கு 10 விநாடிகள் கெரவலப்பிட்டி அதிவேக பிரவேசத்திற்கு 15 விநாடிகள், கொழும்பிற்கு 20 விநாடிகள் - தரகர்கள் அழைக்க வேண்டாம். உண்மையான கொள்வனவாளருக்கு மட்டும் - தமிழ் - 0771317797, சிங்களம்/English - 076- 6185821. 064345

www.adz.lk
it's what you want

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මඟින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721







Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com




தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



# மலையக மக்களின் காணி, வீட்டுரிமைப் பிரச்சினைகள்; சட்ட அடிப்படையிலான விளக்கம்



மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை அரசியல் களத்தில் தற்போது பேசு பொருளாக இருந்து வரும் நிலையில், கடந்த காலங்களில் இந்நாட்டினை மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் இதற்கு தீர்வை காணத் தவறியுள்ளர்.

சிவில் அமைப்புக்களினதும் இம்மக்கள் மீது அதீத அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் செயற்பாட்டாளர்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் காரணமாகவும் மலையக அரசியல்வாதிகள் மட்டுமல்லாது ஏனைய அரசியல் பிரமுகர்களும் மலையக மக்களுடைய காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இருப்பினும் சமூக நிறுவனங்களின் ஆவணப்படுத்தல்கள் மேலும் இவ் விடயத்தினை கூர்மைப்படுத்தி வருகின்றது என்பது நிதர்சனமான உண்மை. அந்த வகையில் 'பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனம்' மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைப் பிரச்சினைகள்: ஒரு சட்ட அடிப்படையிலான விளக்கம் எனும் ஆய்வு நுலை கடந்த 17.09.2024 அன்று ஹட்டன் சிவாலயா மண்டபத்தில் வெளியிட்டு வைத்ததுடன், இதன் ஆய்வாளராக மலையக சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு சட்ட அடிப்படையில் இப்பிரச்சினையை விளக்கும் முயற்சிகள் மிகக் குறைவாக காணப்படுவதை உணர்ந்து அதனை ஒரு ஆவணமாக வெளிக்கொண்டு வந்ததன் விளைவாக இந்நூல் வெளிவந்துள்ளது. குறிப்பாக மலையக மக்களின் காணி உரிமை தொடர்பாக அக்கறை கொண்டோர் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் பலரிடம் மலையக மக்கள் அரசிடம் இருந்து காணி உரிமையை எவ்வாறு பெறுவது? மலையக மக்கள் காணி உரிமையைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக உள்ள சட்டப் பிரச்சினைகள் எவை? சட்டரீதியாக ஏற்புடைய தீர்வுகள் எவை? என்ற பிரச்சினைகளுக்கு அல்லது கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்கள் குறைவாகவே காணப்படுகின்ற நிலையில் இக்கேள்விகளுக்கு சட்டரீதியான விடை காண்பதும் அதனூடாக செயற்பாட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடம் கருத்தாடல்களை விரிவுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியும் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை வெளிக்கொண்டு வருவதற்காக கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக மலையக மக்களுடைய காணி மற்றும் வீட்டுரிமைக்காக குரல் கொடுத்துவரும் 'பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனம்' (சிப்ஸ்) மற்றும் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் தலைவர் எஸ்.டி.கணேசலிங்கம் மேற்கொண்ட முயற்சியின் பலனாகவே இந்த ஆவணம் முழுமை பெற்றுள்ளது. இந்த நூலானது ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். முதற் பகுதியானது மலையக மக்களின் வீட்டுரிமை மற்றும் தொழிலுக்கான காணி உரிமை பிரச்சினையை சட்ட வரலாற்றின் அடிப்படையில் விளக்க முயற்சிக்கின்றது. இரண்டாவது பகுதியானது மலையக மக்களின் காணிப் பிரச்சினையை விளக்க காணி உரிமை பற்றிய பொது அடிப்படைகளை அறிந்திருத்தல் முன்நிபந்தனை என்ற வகையில், காணி உரிமை பற்றிய பொதுவான சட்ட விளக்கத்தை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அரச காணிகள் தொடர்பாக குறிப்பான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது பகுதியினூடாக மலையக மக்களின் காணி உரிமைப் பிரச்சினையை இன்று வரையான அம்மக்களுடன் தொடர்புடைய சட்டங்களின் அடிப்படையில் விளங்கிக் கொள்வதற்கும் அதனூடாக சட்ட அடிப்படையில் நிலவும் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கும் முயற்சிக்கப்பட்டுள்ளது.



பகுதி நான்கானது மலையக மக்களின் காணி உரிமை பிரச்சினைகளின் சாராம்சத்தை அடையாளப்படுத்தியுள்ளதுடன் கடைசி பகுதியினூடாக மலையக மக்களின் காணி உரிமையை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சில விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வெளியீட்டு விழாவில் மலையக சட்டத்தரணிகள், கல்வியலாளர்கள், மலையக சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், மலையகத்தின் ஏனைய மாவட்டத்தில் உள்ள சிவில் செயற்பாட்டாளர்கள் உட்பட பொது மக்கள் என 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தது விசேட அம்சமாகும். நூல் தொடர்பான அறிமுக உரையினை ஏ.சி. ஆர்.ஜோன், விமர்சன உரையினை சட்டத்தரணி நேரு கருணாகரன், கருத்துரையை விரிவுரையாளர் சண்முகவடிவு ஆகியோரும் நிகழ்த்தியதுடன் ஏற்புரையை சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமாரும் செய்திருந்தனர். நிகழ்வின் நோக்கம் மற்றும் இதன் முக்கியத்துவம் தொடர்பாக நிறுவன தலைவர் எஸ்.டி.கணேசலிங்கம் தெளிவுபடுத்தினார்.

இதில் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல தலைமுறைகளை அர்ப்பணிப்பு செய்துள்ள மலையக சமூகமானது 200 வருடங்களை கடந்து வந்த நிலையில், இன்னும் அவர்கள் சொந்த நிலத்திற்காக உரிமையைக் கோர முடியாதவர்களாகவும், தமது வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்து கொள்வதில் ஏனைய சமூகங்களுக்கு நிகராக வளர்ச்சியடையாமலும் இருப்பது இந்நாட்டின் ஜனநாயத் தன்மையின் மீதான கேள்விக்கு பதிலற்ற சட்ட திட்டங்களை ஆட்சியாளர்கள் இன்னும் தமது ஆயுதமாக பயன்படுத்தி வருவதை எவரும் மறுப்பதற்கில்லை. நிலத்திற்கு சொந்தமில்லாத எவரும் ஒரு நாட்டின் பிரஜையாக இருப்பதில் அர்த்தமில்லை.

அந்த வகையில் நிலப் பிரச்சினை இந்த நாட்டில் உள்ள ஏனைய சமூக பிரஜைகளுக்கும் இருப்பதை மறுப்பதற்கில்லை, ஆனால் முற்று முழுதாக ஒரு சமூகத்திற்கே அதுவும் 200 வருட வரலாற்றைக் கொண்ட நாட்டின் தேசிய வருமானத்திற்காக பல தசாப்தங்களாக உழைத்த சமூகத்திற்கு நில உரிமை மறுக்கப்பட்டிருப்பதானது உலகில் வேறெந்த நாட்டிலும் இருக்க முடியாத வரலாறு சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் மலையக சமூகம் அனுபவித்த, அனுபவித்து வரும் துன்பங்களானது மேலும் மற்றுமொரு தலைமுறைக்கு கொண்டு செல்லும் அபாயகரமான செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடியாவிட்டால், இச்சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குட்படுத்தப்பட்டு, சமூக அடையாளத்தை இல்லாமற் செய்து இவர்களுடைய பரிணாம வளர்ச்சியை முற்றாக இல்லாமல் ஆக்கிவிடும் ஆபத்தான அரசியல் சூழ்நிலை உருவாகிவிடுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

மலையக மக்களுடைய காணி மற்றும் வீட்டுரிமை பிரச்சினை முற்றாக தீர்க்கப்படுவதற்கு சட்டரீதியாக பல மாற்றங்களை செய்ய வேண்டியதுடன், இதனை நடைமுறைப்படுத்த தற்போதைய சட்டம் எவ்வாறு இடையூறாகவும், சிக்கலான நிலையிலும் இருக்கின்றது என்பதை தனது தேடலின் மூலம் வெளிக்கொண்டு வருவதற்கு சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார் ஒத்துழைத்தமையே இந்நூலின் முக்கியத்துவமாக காணப்படுகின்றது. நீண்ட காலமாக எமது சமூக மட்ட விடயங்களில்

(18 ஆம் பக்கம் பார்க்க)



மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்
செ. தி. பெருமாள்

# இஸ்ரேலின் புதிய தாக்குதல் உத்தியும் மேற்காசிய அரசியலும்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேலிய – ஹமாஸ் போர் இதுவரை கண்டிராத புதிய நெருக்கடிக்குள் மேற்காசிய பிராந்திய அரசியலை சிக்க வைத்துள்ளது. இஸ்ரேல் மீதான ஹமாஸ் அமைப்பின் தாக்குதல் படிப்படியாக விரிவடைந்து தற்போது லெபனான் தென்பகுதியை மையப்படுத்தி நிகழத் தொடங்கி இருக்கின்றது. உலக வரலாற்றிலே யூதர்களே அதிகம் போர் உத்திகளை பிரயோகப்படுத்தப்படுத்தியவர்கள். குறிப்பாக 1967 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆறு நாள் யுத்தத்தைப் போன்று உத்திகளை மாற்றுவதும் எதிரியை அழிவுக்கு உள்ளாக்குவதும் இஸ்ரேலின் அல்லது இராணுவத்தின் பிரதான உத்தியாக உள்ளது. அண்மையில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மீது இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலானது உலக வரலாற்றின் யூதர்களுக்கே உரிய இராணுவ உத்தியாக தெரிகின்றது. அதிலும் குறிப்பாக பேஜர்களையும் வோக்கிடோக்கியையும் வைத்துக்கொள்ளும் போர் வீரர்களை எவ்வாறு அழித்து ஒழிப்பது என்பது மிக முக்கியமான போரியல் தந்திரமாக மாறி இருக்கின்றது இக்கட்டுரையும் ஹமாஸ் இஸ்ரேலிய போரின் புதிய போக்குகளை தேடுவதாக அமைய உள்ளது.

18.09.2024 தொடக்கப்பட்ட இந்த தாக்குதல் ஹிஸ்புல்லா அமைப்பினரது தொலைத்தொடர்பு சாதனங்களை மையப்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதலாகும். இது பாரிய அழிவை ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஏற்படுத்தியுள்ளது. ஏறக்குறைய ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பேஜர்கள் வெடித்துச் சிதறியுள்ளன. அதனைத் தொடர்ந்து வோக்கிடாக்கிகள் வெடித்த நிகழ்வு ஹிஸ்புல்லாக்களின் போரியல் உபாயங்களை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் 3300க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். ஏறக்குறைய ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் போர்க்களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரேலியர்களின் தாக்குதல் போரில் பிரதான எதிரிகளாக ஹிஸ்புல்லாக்கள் விளங்குகின்றனர். கடந்த காலங்களில் இருந்த அனைத்து நெருக்கடிகளையும் இஸ்ரேலிய இராணுவமும் அதன் உளவுப் பிரிவும் உத்திகளை மாற்றிக் கொள்வதன் ஊடாக வேகமாக நகர்ந்து வருகிறது. இது ஏறக்குறைய பிராந்திய அரசியலை தன்வசம் கட்டுப்படுத்தி வைத்திருப்பதில் கவனம் கொள்ளுகின்ற போர் உத்தியாகவே தென்படுகிறது.

போர் என்பது உத்திகளை கொண்ட கலையாகவே கொள்ளப்படுகிறது. எதிரியின் இலக்குகளையும் எதிரியின் படைகளையும் ஆயுத தளவாடங்களையும் அழித்தொழிப்பது மிகப் பிரதானமான போரியல் உத்தியாக உலக வரலாறு முழுவதும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இத்தகைய நகர்வையே இஸ்ரேலிய இராணுவம் ஒவ்வொரு போரிலும் பிரயோகித்துவருகிறது. அத்தகைய ஒரு சூழலை தான் தற்போது மேற்காசிய நாடுகளும் உலக போரியல் வல்லுநர்களும் எதிர்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய உத்தியை எதிர்த் தரப்பு எதிர்பார்க்காத சந்தர்ப்பத்தை ஒரு முறியடிப்பு போர் வழிமுறையாக மேற்கொண்டு இருக்கின்றது. இத்தகைய இஸ்ரேலிய தாக்குதல் மூலம் பலமான கட்டுமானங்களை சிதைப்பதன் ஊடாக இஸ்ரேல்; தன்னுடைய இலக்கை சாத்தியப்படுத்தி வருகிறது. குறிப்பாக ஈரான் பாரிய போரியல் திறன்களைக் கொண்ட இஸ்ரேலுக்கு சவால் விடக்கூடிய சக்தியாக காணப்பட்டது. இது ஹமாஸ் இஸ்ரேல் போரின் ஆரம்பகால பகுதியில் விளங்கியது. அதனை முடிவுக்கு கொண்டுவர ஈரான் ஜனாதிபதி மீதான தாக்குதல் பயன்பட்டது. மற்றும் வெளியுறவு அமைச்சர் இராணுவ தளபதிகள் கொல்லப்பட்டமைக்கு பின்னர் ஈரான் வலுவிழந்துள்ளது. இதுவே இஸ்ரேலிய இராணுவ நகர்வாக காணப்படுகிறது. அதனடிப்படையில் ஈரான் போரின் பிரதான பாத்திரத்தை இழந்தவுடன் ஈரானை தக்க வைப்பது முக்கியமானது என கருதும் நிலையை ஈரானிய ஆட்சியாளர்கள் எதிர்கொண்டுள்ளனர். ஆரம்பத்தில் ஹமாஸ் அமைப்பு பாரிய எதிர்ப்பை இஸ்ரேலுக்கு வழங்கியபோதும் அதனை காசா பகுதி மீதான தாக்குதலுடன் முற்றாகவே நெருக்கடிக்கு உள்ளாகிறது. இவ்வாறு ஹமாஸ் அமைப்பு பின்னர் ஈரானிய தரப்பு என்ற அடிப்படையில் போரில் பிரதான பங்கெடுப்பை விலக்கிக் கொண்ட இஸ்ரேல் தற்போது ஹிஸ்புல்லா பிரிவினர் மீது அதே வகையான அணுகுமுறையை பின்பற்ற தொடங்கியிருக்கின்றது. இது பெருமளவுக்கு போரை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அணுகுமுறையாக அமைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஹவுத்தி படைப் பிரிவு அல்லது தீவிரவாத பிரிவு இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலில் கவனம் கொண்ட போதும் அது தற்போது வெளிப்படையாக அதிக தாக்குதலை மேற்கொள்வதில் இருந்து விலகி இருப்பதோடு செங்கடலை இலக்கு வைத்த தீவிரவாத அமைப்பாகச் செயல்படுகின்றது. எனவே இஸ்ரேலிய இராணுவம் தனது போரியல் உத்திகளை படிப்படியாகவும் நிதானமாகவும் போரிலிருந்து அகற்றப்பட வேண்டிய தரப்புகளை இனம்கண்டு அவற்றின் பிரதான பங்கெடுப்பாளர்களே அழிவுக்கு உள்ளாக்குவதில் வெற்றிகரமான நகர்வை சாத்தியப்படுத்தி வருகிறது. இத்தகைய நகர்வுக்கு பின்னால் இருக்கக்கூடிய வலுவான அம்சங்களை தேடுவது அவசியமானது.



முதலாவது தாக்குதல் நடந்த பிற்பாடு, ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா தெரிவித்த கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பேஜர், வோக்கிடோக்கி வெடிப்பு லெபனான் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாதவகையில் மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகுந்த சூழலை ஏற்படுத்தி உள்ளது. அத்தகைய சூழலில் நாம் உள்ளோம் என்பதில் சந்தேகம் இல்லை. இது மாதிரியான தாக்குதலை உலகம் எதிர்கொண்டிருக்க வாய்ப்பில்லை. இந்த தாக்குதல் அனைத்தும் எல்லைகளை அத்துமீறி இஸ்ரேல் நடத்தியுள்ளதாக தெரிகின்றது. எதிரி தரப்பான இஸ்ரேல் அனைத்து நெறிமுறைகளையும் சட்டத்தையும் அதற்கு அப்பால் சென்று நிகழ்த்திய போர் குற்றம். இது படுகொலைக்கு சமமானது. இப்படுகொலை லெபனான் மீதும் அதன் மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே உள்ளது. இதற்கான பதில் தாக்குதலை அல்லது தண்டனையை விரைவில் கொடுப்போம் என தெரிவிக்கப்பட்டது. இது ஹிஸ்புல்லாக்களின் உண்மையான நிலையை தெரியப்படுத்தி இருப்பதோடு, பேஜர்கள் மீதான இஸ்ரேலிய தாக்குதலின் விளைவுகளை அடையாளப்படுத்தவும் ஹிஸ்புல்லாக்கள் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியை விளங்கிக் கொள்ளவும் போதுமானது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் 20.09.2024 இஸ்ரேலிய வடக்கு பகுதி நோக்கி தாக்குதலை தொடங்கின. குறிப்பாக வடக்கு இஸ்ரேல் பகுதிகளில் அமைந்திருக்கின்ற இராணுவ தளங்கள் மீது ஹிஸ்புல்லா அமைப்பு பாரிய ரொக்கட் தாக்குதல்களை நிகழ்த்தியது. இதனுடைய விளைவுகள் பற்றி தெரியவராத போதும் பாரிய அளவில் சேதங்களை இஸ்ரேலிய பாதுகாப்பு தரப்புக்கு ஏற்படுத்தியிருப்பதாக ஹிஸ்புல்லாக்கள் அறிவித்துள்ளார்.

இரண்டு பேஜர்கள் மற்றும் வோக்கிடோக்கி தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் எதுவித பதிலையும் வெளிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யாவ் கேடன் குறிப்பிடுகின்ற போது இஸ்ரேலியப் படையினர் போரின் புதிய கட்டத்தை தொடங்கியுள்ளனர். அதற்கான உறுதியும் விடாமுயற்சியும் தேவை என தெரிவித்துள்ளார். ஏறக்குறைய தாக்குதலை இஸ்ரேலிய தரப்பு மேற்கொண்டது என்பதை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரது கருத்து உணர்த்துகின்றது. இத்தகைய தாக்குதல்களை இஸ்ரேலிய தரப்பு, நீண்ட காலமாகவே எதிரியை கையாளுவது அல்லது அழிப்பதில் உத்தியாக கையாண்டுவருகிறது. அவ்வாறான ஒரு நகர்வை தற்போதைய தாக்குதல்கள் ஏற்படுத்தி இருக்கிறது.

மூன்று உலக போரியல் வரலாற்றில் மேற்கு நாடுகளில் ஆயுதங்களும் தளபாடங்களும் மிகப் பிரதான பங்கெடுக்கின்ற சாதனங்களாக காணப்படுகின்றன. கிழக்கு நாடுகளில் நிகழ்த்துகின்ற அனைத்து போர்களுக்கும் பின்னால் வளர்ந்த நாடுகளின் போரியல் ஆயுதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இஸ்ரேலிய இராணுவத்தினால் பேஜர்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் இஸ்ரேலிய கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் அவற்றையே ஹிஸ்புல்லாக்கள் ஆயுத தளபாட கொள்ளளவு செய்கின்ற நாடுகளிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும் தெரியவருகிறது. இது ஒரு நீண்டகால உத்தியாக காணப்படுகிறது என்றும் தெரியவருகின்றது. உலக வரலாறு எவ்வாறு மேற்கு உலகத்தின் நலன்களுக்கு ஏற்ற வகையில் வரையப்படுகிறது என்பதை இனம்கண்டு கொள்ள முடிகிறது.

ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் மேற்கு நாடுகள் கிழைத்தேச நாடுகளுக்கு வழங்குகின்ற போது எவ்வாறான தந்திரங்களை பிரயோகிக்கின்றன என்பதை உணர முடிகின்றது. உலக சந்தை பொதுத்தளமாக இருந்தாலும் அது மேற்கின் தளம் என்பதை இத் தாக்குதல் மீண்டும் ஒரு தடவை உலக வரலாற்றுக்கு அல்லது கீழைதேச வரலாற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதனுடைய விளைவு ஆயுததளபாடங்களை கொள்வனவு செய்யும் நாடுகளும் போரியல் அல்லது போர்களை நடத்தும் தரப்புகள் அனுபவிக்க வேண்டும் என்பதும் உணர்த்தப்படுகிறது. தகவல் யுகத்தின் வளர்ச்சியும் உலகத்தை பூகோளமயமாக்கி இருக்கின்றது என்ற அடிப்படையிலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதனுடைய விளைவுகளை உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாடுகளும் நாடுகளோடு இராணுவமும் இராணுவத்தினுடைய போரியல் வடிவங்களும் அவற்றை முதன்மைப்படுத்துகின்ற பாதுகாப்பு தரப்புக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக இவ்வாறு செயல்படுவதால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. ஹமாஸ் – இஸ்ரேல் போரில் ஹிஸ்புல்லா அமைப்பை அப்புறப்படுத்துகின்ற நிலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவே இஸ்ரேலிய இராணுவத்தின் உறுதியான நகர்வாக காணப்படுகின்றது.

எனவே இஸ்ரேலிய – ஹமாஸ் போர் ஆரம்பத்தில் ஹமாஸ் பக்கம் வலிமையானதாக இருந்தாலும் படிப்படியாக இஸ்ரேலிய தரப்புகள் தமது கட்டுப்பாட்டுக்குள் போரை மாற்றியுள்ளன.

இத் தாக்குதலுக்கு பின்னால் எழுந்திருக்கக் கூடிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் அமெரிக்கா தனது 12 போர்க்கப்பல்கள் இப்பகுதி நோக்கி நகர்த்துகிறது. 4000 போர் வீரர்களையும் பாரிய அளவிலான ஆயுத தளபாடங்களையும் இஸ்ரேலிய தரப்புக்கு கைமாற்றுகின்ற நோக்கத்தோடு நகர்வை அமெரிக்கா மேற்கொண்டிருக்கின்றது. மேற்கு இஸ்ரேலியக் கூட்டு அல்லது அமெரிக்க இஸ்ரேலியக் கூட்டு வலுவான நிலையில் இப்போரை கையாள ஆரம்பித்திருக்கிறது. இது படிப்படியாக இப்போரிலிருந்து ஹிஸ்புல்லா அப்புறப்படுத்தப்படுவதும் ஒரு புதிய கட்டத்தை நோக்கி பிராந்தியம் நகர்த்தப்படுவதும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஆளில்லாத விமானங்கள் ஆளில்லாத படகுகள் எவ்வாறு உலக போரியல் களத்தை ஆதிக்கம் செய்ய தொடங்கியிருக்கின்றனவோ, அவ்வாறே இத்தகைய உத்திகளும் போரியலில் ஒரு பிரதான பங்கெடுப்பாக மாறியுள்ளது. இஸ்ரேலிய தரப்பு நீண்ட காலமாகவே அராபிய தரப்புக்கு எதிராக இத்தகைய உத்திகளை மேற்கொண்டுள்ளது.


அதனை நோக்கி உலகத்தின் தீவிரவாத அமைப்புகளும் அவற்றினுடைய தலைமைகளும் அண்மை காலங்களில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. அதனுடைய நீட்சியே ஹிஸ்புல்லா மீதான இஸ்ரேலிய தாக்குதலாகும்.

# 1876 முதல் மொரீசியஸ் நாணயத்தில் தமிழ்

## மொரீசியஸ் முதல் ரீயூனியன் வரை...

மாத்தளை சோமு

06



மொரீசியசுக்கு இந்தியாவிலிருந்து தமிழர்கள், தெலுங்கர்கள், மராட்டியர்கள், வங்காளிகள், முஸ்லிம்கள், இந்தி பேசும் மக்கள் ஆகியோர் குடியேற்றப்பட்டதால் அவர்கள் மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும் தனித்து நின்று தங்களை அடையாளப்படுத்தினார்கள். பிரெஞ்ச் ஆட்சியின் போது அவர்கள் பிரெஞ்ச் மொழியைக் கற்றுக் கொண்டார்கள். அத்தோடு பிரெஞ்ச் கலாசாரமும் அவர்களுக்குள் ஊடுருவியது. பிரெஞ்ச் ஆட்சியில் மத அழுத்தங்களால் குறிப்பிடத்தக்கவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள்; மற்றவர்கள் கிறிஸ்தவப் பெயரைக் கூப்பிடு பெயராக மாற்ற வேண்டி வந்தது. இன்றும் பலருக்கு கிறிஸ்தவப் பெயர் இருப்பதைக் காண முடியும். மொரீசியஸ் பயணத்திற்காகத் தொடர்பு கொண்ட போது அறிமுகமானவர் ஸ்டீபன் நாராயணப்பிள்ளை. முதலில் அவரைக் கிறிஸ்தவராகவே எண்ண வேண்டி வந்தது. ஆனால் அவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர். முந்திய ஆட்சியின் அழுத்தத்தால் கிறிஸ்தவப் பெயரை வைக்க வேண்டி வந்துள்ளதாகச் சொன்னார். ஆங்கிலேயரின் ஆட்சியில் ஆங்கில மொழியும், ஆங்கில கலாசாரமும், குடியேறிய மக்களைச் சேர்ந்தது. பிரெஞ்ச் ஆங்கில கலாசாரத்தினால் குடியேறிய மக்கள் தங்களின் சொந்தக் கலாசாரத்தில் சிலவற்றை விட வேண்டி வந்துள்ளது.

கரும்புப் பயிர்ச்செய்கை, வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்ட ஆங்கிலேய அரசு மத அழுத்தங்களில் தங்கள் செயல்பாடுகளைக் குறைத்தார்கள். அக்காலத்தில் தான் கோயில்கள் தமிழர்களால் முறைப்படி கட்டடங்களாக, கோபுரங்களோடு கட்டப்பட்டன. பிரெஞ்ச் ஆட்சியின் போது தமிழர்கள் குடிசைக் கோயில்களில் வழிபாடு நடத்தியிருக்கிறார்கள். இக்கோயில்களில் குடியேறிய ஏனைய மக்களிடமிருந்து தமது தனித்துவ அடையாளங்களைப் பேண முடிந்ததாக தமிழர்கள் நம்புகிறார்கள்.

இலங்கையில் சிங்களவரோடும், மலேசியாவில் மலாய், சீன மொழிக்காரர்களோடும் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் பேணி தலைநிமிர முடிந்தது. ஆனால் மொரீசியஸில் தெலுங்கு, மராட்டி, வங்காளம், இந்தி ஆகிய மொழி பேசுபவர்களோடு தமிழர்கள் வாழ வேண்டியதால் அவர்களோடு தொடர்பு கொள்ள ஒரு மொழியைத் தேர்வு செய்ய வேண்டி வந்தது. அம்மொழி ஆங்கிலம், பிரெஞ்ச் மொழிகளுக்கு மாற்றாக இருந்தது. அதுவே கிரியேல் மொழி.

ஹைட்டி (HAITI) என்ற ஆபிரிக்க நாட்டில் தான் அதிகமான மக்கள் கிரியோல் மொழியைப் பேசுகிறார்கள். ஆனால் அதனை ஹைட்டி கிரியோல் என்று அழைக்கிறார்கள். மொரீசியஸ், ரியூனியன் ஆகியவற்றில் பேசப்படும் கிரியோல் மொழி பிரெஞ்ச், ஆபிரிக்க மொழி என்பன கலந்து பேச்சு மொழியாக உருவானது. கிரியோல் என்ற சொல் போர்த்துகேய மொழிச் சொல்லான *CRIOULO* என்பதிலிருந்து உருவானது. அதன் அர்த்தம் கறுப்பு. *(BLACK)* இவற்றிலிருந்து ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட கறுப்பர்களைக் குறிக்கும் சொல் என்பதை உணர முடிகிறது. ஆங்கிலேயர், போர்த்துகேயர், டச்சுக்காரர் ஆகியோர் தங்கள் காலனித்துவ ஆட்சியை விரிவுபடுத்த ஆபிரிக்கா, ஆசியா போன்றவற்றுக்குக் கறுப்பர்களைக் குடியேற்றிய போது உருவான மொழி தான் கிரியேல்.

அந்த கிரியேல் மொழியைப் பேச வேண்டிய கட்டாயம் மொரீசியசில் உள்ளவர்களுக்கு உருவானது. இளைய தலைமுறையினர் ஆங்கிலம், பிரெஞ்ச், கிரியோல் ஆகிய மொழிகளைக் கற்க வேண்டியுள்ளது. தமிழ் சில பள்ளிகளில் படிக்க முடியும். ஆனால் தமிழில் பேசுவதில் பெரிய பின்னடைவு. தமிழ் சொல்லிக் கொடுக்கிற சில ஆசிரியர்களைச் சந்தித்தபோது அவர்கள் தமிழ் சரளமாகப் பேச முடியாத நிலையில் இருந்தார்கள்.

ஸ்டீபன் நாராயணப் பிள்ளை வரச்சொன்ன ஆலயத்திற்குப் போனோம். அங்கு அவர் ஒரு தொண்டராக இருந்தார். தேவார, திருவாசகம் பாடப்பட்டது. ஒரு பெண்மணி அருமையான குரலில் பாடினார். அவர் பாடி முடித்ததும் வழக்கறிஞர் மதியழகன் அந்தப் பெண்மணியைச் சந்தித்து 'அருமையாகப் பாடினீர்கள்' என்று தன் பாராட்டுகளைத் தெரிவித்தபோது அவரால் தமிழில் பதில் பேச முடியவில்லை. மதியழகன் என்ன சொன்னார் என்பதை அவரால் உணர முடியவில்லை. பின் எப்படிப் பாடினார் என்று புருசோத்தமன் கேட்டபோது இளவயதில் பாடமாக்கியதையே பாடியிருக்கிறார் என்று பதில் சொல்லப்பட்டது. சில தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் பாடல்களை, வசனங்களை ஆங்கிலம், பிரெஞ்ச் போன்ற மொழிகளில் எழுதி பாடுவது வழக்கம். ஆனால் இங்கு இங்கு மனனம் செய்ததை மீட்டு பாடுகிறார்கள். ஆனால் முதல் தலைமுறையினரிடம் தமிழ் இருந்தது. அதற்கான முயற்சி அப்போது மேற்கொள்ளப் பட்டது...

1854ஆம் ஆண்டு மார்ச் 22இல் மொரீசியஸ் தேவாலய சங்கம் கவர்னர் ஹிக்கின்சன்னிடம் தமிழ், ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப் பள்ளிகளைக் கட்ட வேண்டுகோள் எழுப்பியது. அத்தோடு அனுபவமான, தகுதியான ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து அழைக்கவும் வேண்டியது. 1866இல் தம்பி நாராயணன் என்ற திறமையான மாணவனை ஆசிரியராக மொரீசியஸ் அரசு பள்ளியில் நியமித்தார்கள். பேராசிரியர் ராஜரத்தின முதலியார் தமிழ்த்துறை தலைவராக இருந்தார். 1864க்குப் பிறகு ஐந்து பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது. 1886லிருந்து 1891வரை மேலும் எம்.மாயவரம், பி.குண்டசாமி, ராமசாமி, கோவிந்தன், ஆர்.நாராயணன், ஆர்.வெங்கடசாமி மற்றும் பி.லச்சிமயா ஆகியோர் தமிழாசிரியர்களாக இருந்தார்கள். தொடக்கத்தில் 195 ஆரம்ப பாடசாலைகளிலும், 12 உயர்தர பாடசாலைகளிலும் தமிழ் பாடம் கற்பிக்கப்பட்டது

தொடக்கக் காலத்தில் தமிழை முன்னெடுக்கும் பணிகளும் நடந்திருக்கின்றன. தலைநகரில் தமிழ் பெயரில் வீதிகள் உண்டு. 1876 முதல் நாணயங்களில் தமிழ் உண்டு. 1911இல் துலசிங்க நாயனார் தமிழ், ஆங்கில இதழ் ஒன்றை நடத்தினார். அதன் மூலம் கவிதை, நாடகம் எழுத அழைப்பு விடுத்தார். பண்டிட் பெருமாள் சுப்பராயன், ராமதேவர் வீரபத்ரன், செந்தமிழ் வி.சௌந்தரராஜன், வடிவேல் செல்லன் ஆகியோர் இலக்கிய முயற்சிகள் செய்தனர். பெருமாள் சுப்பராயன் பிரெஞ்ச் நாவலொன்றை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அவருடைய ஆசிரியர் நாவலர் வி.எ.துலசிங்க நாயனார். அவர் அஞ்சலி பற்றி கவிதைகள் எழுதியுள்ளார். இலக்கிய முயற்சியாக சித்தலெட்சுமி எனும் நூலை 1927இல் G.வெங்கடசாமி வெளியிட்டார்.

1930–1950 வரை மொரீசியசில் தமிழ் இலக்கியப் பொற்காலம். G.வெங்கடசாமி வெளியிட்டார். 1940களில் அருணாசலம் கலைமகள் போதனம், எஸ்.முதலியார் தமிழ் மன்னன் குமணன், G.சீனிவாசன் தமிழ் பிரெஞ்சு அகராதி, R.நரசிங்கநாயுடு உலக சமயங்கள் ஆகிய நூல்களை வெளியிட்டார்கள். பிரெஞ்சில் முத்துக்குமரன் சங்கிலி, ராமு சூரிய மூர்த்தி ஆகியோர் பிரெஞ்ச் மொழியில் நூல்களை வெளியிட்டார்கள். முத்துக்குமரன் சங்கிலி திருக்குறளை பிரெஞ்ச் மொழியில் மொழிபெயர்த்து பிரெஞ்ச் பத்திரிகையில் வெளியிட்டார். மொரிசீயஸ் தமிழரின் வரலாற்றை *LES TAMOGLES A I'LLE MAURICE* என்ற தலைப்பில் பிரெஞ்சில் வெளியிட்டார். வேறு சிலவற்றை டி.கண்ணபிரான் பிள்ளை, வாசன் லெட்சுமணன், எஸ்.பழனியாண்டி, எல்.சொர்ணம் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். 1930இல் அருணாசலம் என்பவர் சில தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். தைப்பூச காவடி, சித்திரை வருடப்பிறப்பு, புரட்டாசி விரதம், ஆடி மாதம், தீபாவளி, டி, அம்மிகன் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சான்றிதழ் தமிழ்க் கல்வி கற்றவர். பள்ளி ஆசிரியராக இருந்தவர். 1982இல் சுப்ரமணிய பாரதி எனும் நூலை எழுதி வெளியிட்டார். *LD LUMIERE* என்ற பிரெஞ்ச் பண்பாட்டு மாத இதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். மொரீசியசின் *LE MAURICEN* என்ற பிரெஞ்சு தேசிய இதழின் வாராந்த மலரில் கட்டுரைகள் எழுதியவர். ஆனால் இன்று தமிழில் எழுதுபவரை தேடிப்பிடிக்க வேண்டியுள்ளது.

1985இல் தமிழர்கள் குறிப்பாக இந்தியர்கள் குடியேறி 250 ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள் நடந்தன. அதனை முன்னிட்டு *rose hill plaza* வில் தமிழ் *monument*. ஒன்று கட்டப்பட்டது. ஆனால் இன்று தமிழில் எழுதுபவரை தேடிப் பிடிக்க வேண்டியுள்ளது

இன்று மொரீசியஸில் தமிழ் பேசவும், தமிழ் கற்கவும் அங்குள்ள தமிழ் அமைப்புகளால் பெரும் முயற்சி செய்து வருகின்றன. அம்முயற்சிக்கு ஆதரவாக இருப்பது மகாத்மா காந்தி நிறுவனம் *(MAHATMA GANDHI INSTITUTE)* மொரீசியஸில் இந்தியர்களின் அடையாளமாகத் திகழ்கிறது. இதனைக் கட்ட நிலம் கொடுத்தது (1969இல்) *MON DESERT ALMALD* என்ற கரும்புத் தோட்ட நிறுவனமாகும். அந்நிலத்தில் மகாத்மா காந்தியின் பெயரில் மொரீசியஸ் அரசும், இந்திய அரசும் ஒரு நிறுவனத்தைக் கட்ட முனைந்ததில் அதற்கு அடிக்கல் நாட்டியவர் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியாகும். (1970இல்) 1976இல் முழுமையடைந்த மகாத்மா காந்தி நிறுவனத்தை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும், மொரீசியஸ் பிரதமர் சீவோசகுர் ராம்குலாமும் *(SEEWOOSAGUR RAMGOOLAM)*ம் திறந்து வைத்தார்கள். இன்று அந் நிறுவனத்தைச் சுருக்கமாக MOK என்றும் MGI என்றும் அழைக்கிறார்கள்.

இந்த மகாத்மா காந்தி நிறுவனத்தில் இந்தியக் கல்வித் துறையில் தமிழுக்கென்று தனித்துறையும் உண்டு. அதில் தமிழில் டிப்ளோமா, பி.ஏ., தமிழ், எம்.ஏ., தமிழ், பகுதி நேரத் தமிழ் என பல பிரிவுகளில் தமிழ் கற்க முடியும். இந்தத் தமிழ்த் துறைக்கும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக அயல் கல்வித் துறைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் உண்டு.

இதன் மூலம் பல மொரீசியஸ் தமிழ் ஆசிரியர்கள், மாணவர்கள் தமிழில் உயர்கல்வி பெற்றதை முன்னாள் தஞ்சை அயலகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சா.உ தயசூரியன் ஒருமுறை, என்னிடம் குறிப்பிட்டார். இன்று அதனைத் தொடர்ந்து முன்னெடுத்து வருபவர், இப்போதை அயலத்தமிழ்க் கல்வித் துறை தலைவர் குறிஞ்சி வேந்தன்.

மகாத்மா காந்தி நிறுவன அரங்கினுள் நுழைந்தோம், நூற்றுக்கணக்கானவர்கள் அமர்ந்திருந்தார்கள். பெண்கள் சேலை அணிந்து வந்திருந்தார்கள், மாணவர்களும் கூடியிருந்தார்கள். எங்கள் மூவரையும் முன்வரிசையில் அமர வைத்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. மொரீசியஸ் துணைப் பிரதமரும் கல்வி. பிரதேசக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சருமான திருமதி லீலா தேவி தூக்குன் லூச்சூமுன் ஜிக்ஸ்க் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் தமிழ்க் கல்விக்கு தமது அரசு செய்து வரும் உதவிகளைப் பட்டியலிட்டுப் பேசினார்.

அவர் பேசி முடித்து சிலருக்கு நற்சான்றிதழ் வழங்கிவிட்டுப் புறப்பட்டார். அப்போது ஸ்டீபன் நாராயணப்பிள்ளை ஒருவரை அறிமுகப் படுத்தினார்.






(17 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா ஒரு நோக்கு
### வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்



# ராகுல் மீது எறியப்படும் வார்த்தை அம்புகள்

இந்திய அரசியலில் அண்மைக்காலமாக நாகரீகமற்ற பேச்சுக்கள் மேலோங்கி வருவது வருத்தமளிக்கிறது. குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி மீது வன்முறையான வார்த்தைகளை உபயோகித்து பா.ஜ.க கட்சியினர், விமர்சனம் செய்து வருகின்றனர். நாக்கை அறுக்க வேண்டும். ராகுல் காந்தி ஒரு தீவிரவாதி என்றெல்லாம் வர்த்தைகளை பயன்படுத்தி விமர்சிப்பது முகம் சுளிக்க வைப்பதோடு கண்டிக்கத் தக்கதாகவும் இருக்கிறது.

ராகுல் காந்தி தற்சமயம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு மேடைகளில் உரையாற்றியும் வருகிறார். இவரது பேச்சில் இந்தியாவில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். ஆளும்கட்சியான பா.ஜ.க எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி எல்லாம் விமர்சனம் செய்து உரை நிகழ்த்திவருவது. பா.ஜ.க. வினரிடையே எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்க இந்தியர்களிடையே பேசிய ராகுல் காந்தி இந்தியாவில் சீக்கியர்கள் ஒடுக்கப்படுவதாக குற்றம் சாட்டியிருந்தார். சீக்கியர் உரிமைக்கான ஆதரவு பேச்சுக்கு இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடாக காலிஸ்தான் கோரும் பிரிவினைவாத இயக்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன. இது இந்திய அரசியலிலும், பா.ஜ.க ஆதரவு சீக்கியர்களிடையேயும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ராகுல் காந்தியின் பேச்சை கண்டிக்கும் வகையில் மத்திய அமைச்சர் ரன்வீத் சிங் பேசும்போது காங்கிரஸ் கட்சியினர்தான் சீக்கியர் தாய்மார்களையும் சிறுமிகளையும் தெருக்களில் பலாத்காரம் செய்து கொன்றொழித்தனர், சீக்கியர்களின் தலைப்பாகைகளை அகற்றி முடியை மழித்தனர். எனவே ராகுல் காந்தியின் சீக்கியர் பற்றிய பேச்சு இந்தியாவில் பிரிவினையைத் தூண்டுகிறது. என்று கண்டிருந்தார்கள். பா.ஜ.க தலைவர்கள் பலரும் இதையே மேற்கோள் காட்டி கடுமையாகத் தாக்கி விமர்சித்து வருகின்றனர்.

ராகுல் காந்தி இந்தியாவின்முதன்மையான தீவிரவாதி என்று விமர்சனம் செய்யப்பட்டிருந்தார். இதற்கு பதிலடியாக காங்கிரஸ் கட்சியினரும் இந்தக் கருத்தை கண்டிக்கும் வகையில் டெல்லியில் போராட்டம் நடத்தி ரன்வீத் சிங் பிட்டுவின் உருவ பொம்மையையும் எரித்துள்ளனர். ராகுல் காந்தி இப்படியே பேசிவந்தால் உங்கள் பாட்டிக்கு (இந்திராகாந்தி) ஏற்பட்ட நிலைதான் உங்களுக்கும் ஏற்படும் என்று பா.ஜ.க தலைவரிகளில் ஒருவரான தர்விந்தர் சிங் மார்வா எச்சரித்திருப்பதும் காங்கிரஸ் கட்சினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராகுல் காந்தி அமெரிக்காவில் மற்றும் ஒரு கூட்டத்தில் பேசும் போது இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இடஒதுக்கிட்டை முடிவுக்குக் கொண்டு வரும் என்று பேசியதும் பா.ஜ.க. வினரிடையே எரிச்சலை மூட்டியிருக்கிறது. இட ஒதுக்கீட்டை ரத்து செய்வோம் என்று கூறிய ராகுல் காந்தியின் நாக்கை துண்டிப்பவர்களுக்கு ரூ 11 இலட்சம் பரிசு வழங்குவதாக ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா கட்சி சட்டமன்ற உறுப்பினர் சஞ்சய் கெய்க்வாட் மிரட்டலாக கூறியிருப்பதும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கருத்தை கருத்தால் எதிர்கொள்ள வேண்டும். அதை விடுத்து வன்முறையைத் தூண்டும் விதமாக கருத்து தெரிவிப்பது பா.ஜ.கவினருக்கு புதிதானது அல்ல, தொடர்ந்து வார்த்துகளால் வன்முறையைத் தூண்டுவதும் அவர்களுக்கு வாடிக்கையாக இருக்கிறது. இவ்வாறான தவறான பேச்சுக்கள் கட்சிக்கு அவப்பெயரை உண்டாக்கும் என்று பா.ஜ.கவின் உயர்மட்ட தலைவர்களும் கண்டிப்பது இல்லை. சர்ச்சைக்குரிய வகையில்பேசி தங்களை விளம்பரப் படுத்திக் கொள்ளவும் பா.ஜ.க.வில் சிலர் முயல்கின்றனர்



இது போன்ற சர்ச்சைக்குரிய பேச்சுக்களை ஊடகங்களும் பெரிது படுத்து பேசி வருகின்றன.

யாரோ ஒருவர் பேசும் பேச்சால், பா.ஜ.க கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் என்றும் பா.ஜ.க தலைவர்கள் இதற்கு தடை விதிப்பதில்லை.

எதிர்க்கட்சியான காங்கிரஸை இதுபோன்ற விமர்சனங்களால் வீழ்த்த வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர், மக்கள் மத்தியில் ராகுல் காந்திக்கு ஏற்படும் ஆதரவைக் கண்டு பயப்படுகிறார்களோ என்றும் கூட எண்ணத் தூண்டுகிறது.

சாதி, மதம் பார்க்காமல் எளிய மக்களிடமும் ராகுல் காந்தி பழகி வருகிறார். இந்தியா முழுவதும் இளைஞர்கள் மத்தியில் ராகுலின் அணுகுமுறை வரவேற்பைப் பெற்றுள்ளது. இன்று காங்கிரஸ் தலைமையிலான இந்தியா காட்டணி வலுவான எதிர்க்கட்சியாக இருக்கிறது என்றால் அதற்கு ராகுல் காந்தி மேற்கொண்ட நடைப் பயணமும், எளிய மக்களிடம் அவர் பழகிய விதமுமே பெரிய வெற்றியைக் கொடுத்தது, என்றும் சொல்லலாம். இது பா.ஜ.க.வினருக்கு எரிச்சலை தந்து கொண்டே இருக்கிறது. எப்படியாவது மக்கள் மத்தியில் ராகுல் காந்திக்கு இருக்கும் செல்வாக்கை குறைக்க வேணடும் என்பதே பா.ஜ.க வினரின் நோக்கமாகவும் இருக்கிறது.

சீக்கியர்கள் பற்றி ராகுல் பேசியதை கண்டிக்கும், பா.ஜ.க. வினர் மணிப்பூர் கலவரம் பற்றி வாய்திறப்பதில்லையே ஏன்! என்று எதிர்க்கட்சினர் எழுப்பும் கேள்விகளுக்கு பா.ஜ.க.வினர் மௌனமாகவே இருந்து வருகின்றனர். பா.ஜ.க ஆளும் மணிப்பூரில் மக்களைக் காப்பாற்ற முன்வராத, இவர்களின் இரட்டை வேடத்தை மக்களும் அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். என்று அரசியல் நிபுணர்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதால் அவரது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசை தமிழ்நாட்டு முதலைமைச்சர் மு.க. ஸ்டாலினும் வலியுறுத்தியுள்ளார்.

பா.ஜ.க தலைவர் ஒருவர் "ராகுல் காந்தியின் பாட்டிக்கு நேர்ந்த கதி தான் அவருக்கும் நேரும் " எனவும் ஷிண்டே சேனாவின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் "ராகுல் காந்தியின் நாக்கை அறுப்பவருக்குப் பரிசு எனவும் இன்ன பிறவகையிலும் மிரட்டல் விடுத்திருப்பது அதிர்ச்சியளிக்கின்றது.

ராகுல் காந்தியை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவதும், நாளுக்கு நாள் அவருக்கு கூடிவரும் பொதுமக்களின் ஆதரவும் பலரையும் மிரளச் செய்துள்ளதன் தொடர்ச்சியாகவே இத்தகைய அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

ராகுல் காந்தியின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து. அச்சுறுத்தலுக்கும் வன்முறைக்கும் மக்களாட்சியில் இடமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மக்களாட்சியை மதிக்கும் அரசு இது போன்ற வன்முறைப் பேச்சுகளை ஊக்குவித்தால் மிகப்பெரிய ஆபத்துகளை விளைவிக்கும் என்பதை ஆளும் கட்சியான பா.ஜ.க உணர வேண்டும், பேச விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் எதிர்க்கட்சியினரும் சும்மா இருப்பார்களா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.




## மீலாதுன் நபி

பாவக்கறைகள்
படிந்த வாழ்க்கை
வாழ்நாள் முழுக்க
நன்மை என்று
தீமையினை விரும்பி
செய்த சமூகம் அது

பிறந்திட்ட இறுதி நபி
நாற்பது வயது வரை
உண்மையும்
நம்பிக்கையும்
நேர்மையையும் தன்
அணிகலனாய் சூடி
மக்கள் மனதில்
தடம்பதித்தார்

இஸ்லாம் மார்க்கம்
எடுத்துரைத்த அவர்மேல்
பொல்லாத பழிகளும்
இல்லாத
இட்டுக்கதையும்
சூனியமும் சேர்த்து
அழித்தொழிக்க
தலைகள்
போட்ட திட்டம்
அறுபத்து மூன்றுவரை
பலிக்கவில்லை

இரு தசாப்த
நபித்துவத்தில்
கலக்கமில்லா வாழ்க்கை
பிறக்க இருக்கும்
மானிடனுக்கும்
பொருந்தும் விதமாய்
வாழ்ந்த உத்தமர்
நபி முஹம்மத் கோமான்

அவர் பிறந்த
தினமாம் இன்று
அவர் உருவம் உலகில்
எங்குமில்லை சிலையாய்
சித்திரமாய்
ஏக இறைவனை வணங்க
வழிகாட்டிய போதகர்

வியாபாரியாய்
கணவனாய் தந்தையாய்
மகனாய் நண்பனாய்
அரசியல் தலைவனாய்
போர் வீரனாய்
நீதிபதியாய்
சமூக சேவகனாய் என
பல பரிமாணம் எடுத்த
நபி வழி பின்பற்றுவோம்
பிறருக்கும் உரைத்து
நிரந்தர சமாதானம்
வளர உதவிடுவோம்.

**முகம்மது முகைதீன் நௌபீக்**
தோப்பூர்



## காத்திருக்கிறேன்

ம்ஹூம் ம்ஹூம் ம்ஹூம்

நேரநெடுகையில் அடுக்கிக் கொள்ளும்
நினைவெல்லாம் நீ தான்

அந்த ஜோதியாய் நீந்தும்
வெண்ணிலவு போலவே

எந்தன் நாள் பொழுதின் ஜோதியாய்
உந்தன் கரம் சேர வேண்டும்

காணா உறவே
கனவாகி தொடர்வதேனோ

நிஜமாகிட தான் ஏனிந்த தாமதமோ

வருவாயோ வாசனைப்பூவின்
வாசனை சூடிட்ட காற்றைப்போலவே

நீ வாராயோ என்றும் நேசம் தாராயோ

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்


## உறக்கமில்லா உலகு !

உலகு உறங்குவதில்லை மானுடா ..!
தோல்வி கண்ட மனிதன்போல்
அது விழித்துக்கொண்டே
இருக்கிறது !

மனிதப் பிரயாசைகளாக,
அவர்தம் மலினங்களாக ..
மானுட மௌனங்களாக,
அவர்தம் மரணங்களாக

உலகு உறங்குவதில்லை மானுடா ..!

காவியக் கவியரசு
**எம்.எஸ்.அப்துல் ஹை**



## பூமான் நபி பிறந்த பொன் நாள்

மக்கத்து மண்ணிலே பூத்திட்ட பெருமானே
அல்லாஹ்வின் அருட்சுடரே
உத்தமரே எம் இறை தூதரே
வையகத்தின் இருளகற்றி
ஒளிதரும் பெருவிளக்காய்
நல்வழி காட்டிட பிறந்திட்ட நாயகமே
தயாளத்தின் உறைவிடமாய்
உண்மையின் உயர் விளக்காய்
பொறுமையின் புகலிடமாய்
பெயர் பெற்ற நாயகமே
நம்பிக்கைக்குறைவிடமாய்
நேர்மைக்கு விதை நிலமாய்
நீதியை நிலைக்கச் செய்த
பெருந்தகையே நாயகமே
தோழர்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கிய
பெருமானே நாயகமே
நேர்வழி காட்டி சீர்வழி ஊட்டிய
கோமானே நாயகமே
குறைஷியர் வாழ்வில்
இன்னலை போக்கிய அண்ணலே
புனிதமான தீன் மார்க்கம் தந்த வள்ளலே
இனிய தேன் மறையை போதித்த புனிதரே
ஏழ்மையாகவே வாழ்ந்து சென்ற ஏந்தலே
படிக்காத உம்மி நபியே போதகரே
பகுத்தறிவினை போதித்து சென்ற இறை தூதரே
பிறப்பு முதல் இறப்பு வரை
தீனுக்காய் உழைத்தவரே
கோடி துயர் குறுக்கிட்டும்
பொறுமையாய் சகித்தவரே
மதீனாவில் அன்சாரிகளின் வரவேற்பு பெற்றவரே
பல கொடுமைகள் கொடுத்தும்
பொருமை கொண்ட வள்ளலே
உங்கள் ஒளிமுகம் பார்த்து சொர்க்கத்தில்
மகிழ்ந்திட வேண்டும் நபி நாதரே
உங்கள் பொற் கரம் தொட்டு
தழுவிட ஆசை நபி சீலரே
மறை தந்த புனித தீனை உயர வைத்தவரே
உயர்வு கண்ட மனிதன் தீனை மறந்து விட்டானே

**தேசகீர்த்தி எம்.நிசாம்தீன்**

## கைபேசி....

அடங்கிப் போவதென்றால் அர்த்தம்
பேசாமல் இருப்பதுதானே...
கைக்குள் அடங்கிப்போனாலும்
கைப் பேசி மட்டும்
பேசிக்கொண்டே இருக்குதே....

கண்ட உறவு..
காணாத உறவு..
நல்ல உறவு...
நலங்கெட்ட உறவு...
அனைத்திற்கும் வாழ்வளிப்பது
இந்த கை பேசிதானே...

இணையான துணையை விரல் தொடாமல்...
இணையத்தில் துணைதேடி
இல்லறம் இடிக்குது இந்த கைப்பேசி...

அடக்கி வாசிக்க அருகதையான
அழகான விடயங்களும்...
அவசரமாய் அரங்கேறிவிடுது
அல்லல்தரும் அலைபேசியால்..

இறுகிப்போன இதயங்களை
இலகுவாக்குது..
அதுபோல்
இளகியே இருந்த இதயங்களை
இரும்பாக்குது...

இணையமே
துணையாய் ஆகிப்போன இவ்வுலகில்
கைபேசியில்லா கைகளும் உண்டோ..

கடல்கடந்து போன உறவுகளை
கைநழுவிடாமல் காப்பாற்றிட
கை கொடுப்பதுவும் கைபேசிதான்..

நூல் பார்த்த கண்களெல்லாம்
முகநூல் பார்க்குது...
முகம் கண்டிரா முகங்களையெல்லாம்
முகநூல் உறவென்று உளறுது...

இனியும் இல்லை என்றாகி
இறந்துபோன நட்புகளும்..
இரத்தம் பாயும் நரம்புகளைப்
பெற்று இன்னிசை பாடுவதும்
கைபேசியால் தானே...

தொடுதிரை தொட்டுத் தொட்டு
தொழிலின்றி வழியின்றி
தொல்லைகளோடு தொலைந்தே
போகுது வாலிப வயது..

அழிந்துபோகும் மனிதநேயத்தை
அடுத்த பரம்பரைக்கு
சொல்லிக்கொடுக்க சற்றே
அப்புறமாய் வைக்கச் சொல்லுங்கள்
தொல்லை தரும் தொலைபேசியை.

**நுஸ்ரத் மஹ்ரூப்**
மாதம்பை





## நேசத்துமி

நான் பிரியம் கொள்கையில்
உனக்குப் பிரியம் இல்லை
நீ பிரியம் கொள்கையில்
நேரத்துக்குப் பிரியம் இல்லை
நேரம் எடுத்து மையல் கொள்ள
சூழல் விடுவதாக இல்லை
சூழல் விட்டும் வெளியேறித்
தொலைகையில் வெறுமையின்
தொல்லை
வெறுமையை நிரப்பி
விரைகையில் பொறுமை
இற்றுப்போய் விட்டது

பொறுமை கொண்டு
பொத்தல்கள் சரிசெய்து
காத்திருக்கையில்
மனங்கள் பொருந்துவதாகவில்லை
அப்படியென்றால்
எப்போதுதான் நேசிப்பது?
ஆயுள் கரைந்து தீர்ந்து
போன பிறகா?
ஆன்மா அழிந்து
அரூபமான பின்னரா?
நேசிப்பதற்கென்று
நேரம் ஒதுக்கும்

ஒரே உயிரினம்
மனிதன் மட்டும்தான்
அதையும் கொன்று
கூறு போட்டு
நூறாய்ப் பகுப்பவனும் அவன்தான்
காலில் மிதிபட்டு
காலச்சுழிக்குள் சிக்கிக்
காணாமலே போய்விட்டது
நேசத்துமி!!

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

## மரத்துப் போன காதல் இதயம்....

எத்தனையோ வலிகள்
வந்து போயிருக்கிறது
ஆனால் இது
ஒரு புதுவிதமான
வலியாக இருக்கிறது
என்பது உனக்கு
தெரியாது என்பது
ஆச்சரியமாய் இருக்கிறது
இந்த இதயம்
வலிகளை வாங்கி
மரத்துப் போனதால்
இருக்குமோ என்று.

பல தடவை
அழுத கண்கள்
களவு செய்யப்பட்டது
அவள் வலிகளுக்குள்
வாழ்ந்து விடக்
கூடாதென்று.

கற்பனையில் சிந்திக்காத
அளவு கரைந்து
போகத் தொடங்கியது
என்னுடனான அவள்
கொண்ட காதல்.

இருந்தும் அவளுக்கு
தெரியவில்லை அவள்
கூறிய வார்த்தை
நான் வழி
மறந்து நடந்து
திரியும் பித்தன்

என்பதால் என்னுள்
நுழைந்திருக்காதென்று.

பரவாயில்லை அவள்
ஆனந்தமாய் இருந்து
கொண்டிருக்கிறாள் என்பதை
பார்க்கும் போதும்
எனக்குள் தனிமை
ஆறுதல் கூறுகிறது.

பல ஏமாற்றங்கள்
நடுவில் என்
வாழ்க்கை நகரத்
தொடங்கினாலும் அவள்
பேசிப் போன
வார்த்தைகள் என்

கல்லறைச் சுவரில்
பதிக்கப்பட்டிருக்கும் என்பதை
அவள் அறியாமல்
பேசினாளோ எனத்
தெரியாது இன்னும்.

எனக்கானவள் எனக்காக
தந்த நினைவோடு
பேசிக் கொண்டிருக்கிறேன்
என்றும் உனது
காதலனாய் நிரந்தரமில்லாத
வாழ்க்கை நிரந்தரமாய்
நீ தந்து
விட்டுப் போனதை
நினைத்த படி.

இருந்தும் மனம்
மரத்துப் போகிறது
என்னை நீ
வெறுத்து போனதால்
இருக்குமோ எனத்
தெரியாது.

ஆனந்தமாய் இருந்து
கொள் உனக்கான
வழி(லி)யாய் இனிமேல்
நானிருக்க மாட்டேன்
வலிகளுக்குள் நான்
புதைந்திருப்பதால் என்றும்.



**பொத்துவில் அஜ்மல்கான்**

## அதிர்ஷ்டங்களை உருவாக்குவோம்

ஆறறிவு
படைத்தவனாக
மனிதன்
படைக்கப்பட்டான்
மனிதனது பிறப்பிடம்

அவனது அதிர்ஷ்டம் தானா
அதிர்ஷ்டத்துடன் பிறந்தவன்
அனைவரும் கூறுவர்
யார் இதை அறிவர்
அதிர்ஷ்டத்தின் உண்மையை

அன்புள்ள மனிதர்களே
அதிர்ஷ்டத்தை நம்பி
வாழாது இருக்காதீர்கள்
வாழ்ந்தவர் கதையை பாருங்கள்

மனிதன் எந்தச் சூழலில்
பிள்ளையாய் பிறந்தாலும்
வாழ்வில் செழிப்புறுவதை
கண்ணாரக் காண்கின்றோம்

எந்த மனிதன்
எங்கு இருந்தாலும்
அந்த மனிதனுக்கு
சந்தர்ப்பங்களை
அள்ளி
வழங்குகின்றது
இயற்கை
அதை

நீ அறிவாயா
சந்தர்ப்பங்களை
இனங்காண்பதே
மனித வாழ்வின்
வெற்றி

முயற்சி செய்வோம்
அதிர்ஷ்டங்களை
உருவாக்குவோம்
அதிர்ஷ்டங்களுக்காக காத்திருந்து

காலத்தை வீணாக்கிய
காலத்தை மாற்றுவோம்
அதிர்ஷ்டம் நம்மை தேடி வராது
நாமே அதனை உருவாக்குவோம்

வாழ்வில் வளம் பெற்ற
மக்களை எல்லாம்
அதிர்ஷ்டக்காரன் என்று
சோம்பேறிகளே சொல்லுவர்

அவன் அதிர்ஷ்டங்களை
உருவாக்கியதை
அவர் அறியார்
அறிந்திருந்தால்
அப்படி நினைக்காது
அவர் மனம்!

**குப்பிளான் குமரன்**

## அவளின் நப்பாசை

உன் அலைபேசியாய்
நானும் ஆகிடல் வேண்டும்
யாராய் நீ ஆகிட வேண்டும்?
எனக் கேட்கும் கேள்விக்கு
உன்னை தொல்லை செய்தினும்
தொலைக்காது துணையென
நொடியின் சிமிட்டலில்
தொட்டுக்கொள்ளும் வேகத்தில்
தொடும் தூரத்தில்

இரக்குமோ என அஞ்சி
உயிர்பித்துக் கொண்டே
அவ்வப்போது தடவியும்
வருடியும் கொடுத்து
கைக்குள் பாந்தமாய்
அடங்கும் வகையில்
அடங்கலும் அடங்கியதாய்

தன் பிரதி என
தன்மொத்தம் சேமித்த
தனக்கு மட்டும் உரித்தான
எவரும் தொட விரும்பாத
எவரிடமும் பகிர விரும்பாத

உடன் உறங்கி
உடன் எழுந்து
ஒன்றாய் உண்டு பருகி என
எல்லாமுமாய் இருக்கும்
உன் அலைபேசியாய்
நானும் ஆகிடல் வேண்டும்
சில நிமிடங்களாய் ஏனும்
உன் அலைபேசியாய்
நானும் ஆகிடல் வேண்டும்

நச்சரிக்கும் என்று தூக்கி
போட்டதும் இல்லை
பேசாது நீ அணைத்ததும் இல்லை

விழி மூடச் செய்யும் மோகனமாய்
உறக்கம் களைய முன்னே
அரைக்கண் தேடும் அழகியாய்
யாவரும் இருக்க
துணை என நீ அடைக்கலம் ஆகும்

தனிமை என நட்புக்கு
கரம் கோர்க்கும்
எப்போதும்
நீ விட்டுப்பிரிய மறுக்கும் ஒன்றாய்
அதுமட்டுமே அதுவும் இருக்க
எனக்கும் வேண்டியதெல்லாம்



உன் அலைபேசியாய்
நானும் ஆகிடல் மட்டுமேதான்

இயந்திரங்கள் எப்போதும்
உயிர்ப்பதில்லை
உயிர் கொண்டவளை ஏனோ
இயந்திரமாய் ஆக்கிவிட்டாய்
கேட்பதெல்லாம் ஒன்றுமில்லை

உன் நேசத்தினை தவிர
எனக்காய் எனக்கு மட்டும்
என்னது என்னுடையதாய்
மட்டும் வேண்டும்
நீ வேண்டும்
அவ்வளவுதான்


**இமையி...**

# மாரஸ்ஸன தமிழ் மகா வித்தியாலய வரலாற்று நிகழ்வு









கண்டி மாவட்டத்தில் மாரஸ்ஸன தமிழ் வித்தியாலயம், மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டதை முன்னிட்டும், பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக மாணவத் தலைவர்களுக்கு பதக்கம் அணிவிப்பதற்குமான விஷேட நிகழ்வு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. சகுந்தலா தேவி, கண்டி கல்வி வலய தமிழ் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான எஸ் தமிழ்ச்செல்வன், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை கொடியை அதிபர் வீ. பாலகுமாரும், கல்வி வலயக் கொடியை திருமதி ஐ. சகுந்தலா தேவியும், தேசிய கொடியை சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸும் ஏற்றி வைத்தனர். மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் விழாவை மேலும் மெருகூட்டின.

இவ்வித்தியாலயத்தில் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக பாடப்பட்டு வருகின்ற பாடசாலை கீதத்தை இயற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி, ரஷீத் எம். இம்தியாஸ் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் அப்பாடசாலை கீதம் புதிய மெட்டமைப்பில் அவரால் மீள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்வித்தியாலயத்தின் வரலாற்றில் முதன் முறையாக 16 மாணவ மாணவிகள் மாணவத் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவிக்கப்பட்டனர். பெருந்திரளானோர் கலந்து கொண்ட இந் நிகழ்வில் மாணவத் தலைவர்களின் சத்தியப் பிரமாண வைபவமும் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வீ. பாலகுமார், கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. சகுந்தலா தேவி, சிரேஷ்ட சட்டத்தரணி, ரஷீத் எம். இம்தியாஸ், கண்டி கல்வி வலய தமிழ் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ் தமிழ்ச்செல்வன் உட்பட மற்றும் பிரமுகர்களின் உரைகள் விழாவை மேலும் சிறப்படையச் செய்தன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் கண்டி மாவட்ட இணைப்பாளரும் கவிஞருமான ரஷீத் எம். றியாழ், கண்டி கல்வி வலய ஆசிரிய ஆலோசர்களான கே ரவீந்திரன், கே மஸாஹிரா, தலாத்துஓய தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஈ. இந்திரகுமார் ,உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜே ஹபீழ், கிரிமெட்டிய தமிழ் வித்தியாலய அதிபர் எஸ் இராதாகிருஷ்ணன், ஹந்தானை சிவானந்தா ஆரம்ப தமிழ் பாடசாலையின் அதிபர் என். கிருஷ்ணகுமார், உட்பட சிங்கள மொழி பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாரஸ்ஸன, தலாத்துஓய, போப்பிட்டிய முதலான பல இடங்களையும் சேர்ந்த தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் வீ. பாலகுமார் தலைமையிலான ஆசிரியர்கள், பெற்றோர்கள் அடங்கிய ஏற்பாட்டுக் குழுவினர் இந்நிகழ்வினை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து வருகை தந்தோரின் பாராட்டைப் பெற்றனர். மாரஸ்ஸன தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் இந்நிகழ்வு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

## தேர்தல் ஒன்று வருகிறது!

தேர்தல் ஒன்றருகே வருகிறது
தேர்ந்திட வாய்ப்பு கிடைக்கிறது
சேர்ந்து நல்லவருக்கு வாக்களித்து
சிறந்ததோர் ஆட்சிதான் மலர்கிறது

நல்லவரின் நல்லாட்சி வருகிறது
அல்லவை அழிந்தே மறைகிறது
கள்வர்கள் கூட்டம் ஒழிகிறது
கயவர்கள் கொட்டம் கரைகிறது

போதைப் பொருளும் அழிகிறது
மேதைகள் குணமும் சிறக்கிறது
சாதிமத போட்டிகளும் சரிகிறது
நீதி நியாயமெங்கும் நிலைக்கிறது.

சோதனை பனிபோல் மறைகிறது
வேதனையோ செத்து மடிகிறது
போதனை நெஞ்சில் பதிகிறது
சாதனை வாழ்வுதான் சிறக்கிறது

வானம் வளமாய் பொழிகிறது
பூமியும் செழிப்பாய் விளைகிறது
கானம் மகிழ்வாய் ஒலிக்கிறது
தேனாய் வாழ்வே இனிக்கிறது

இத்தனையும் எந்நாட்டில் நடக்கிறது
சத்தியமாய் வாழ்வே சுவைக்கிறது
திடிரென என் கனவு கலைகிறது
அத்தனையும் கனவுதான் புரிகிறது



**இலக்கியச் செம்மல், கலாபூஷணம்
சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ்**

## அமரர் பண்டாரநாயக்க பற்றிய வி. முத்தழகுவின் தமிழ் பாடல்களுக்கு 50 வருடங்கள் பூர்த்தி



அமரர் பண்டாரநாயக்க பற்றி, பாடகர் வி. முத்தழகு பாடிய தமிழ் பாடல்களுக்கு இன்றுடன் 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அமரர் பண்டாரநாயக்க பற்றி, பாடகர் வி. முத்தழகு பாடிய தமிழ் பாடல் கடந்த 1974ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி முதல் தடவையாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது.

தேசிய கலை, கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க மீது பாடப்பட்ட பாடல்களை, நமது நேயர்கள் மீண்டும் இலங்கை வானொலி, தமிழ்ச் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பாடல்களை இலங்கையின் தேசிய பாடகரும், வானொலி, தொலைக்காட்சி, தமிழ் சிங்கள திரைப்பட பின்னணிப் பாடகருமான கலாபூஷணம் வி. முத்தழகு பாடியிருக்கிறார்.

தேசிய உணர்வூட்டும் இந்த இனிய பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின், தமிழ்ச்சேவை அலைவரிசையில் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வி. முத்தழகு கூட்டுத்தாபன தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஹட்சன் சமரசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இப்பாடல்களை பிரபல கவிஞர்களான காலஞ்சென்ற ஈழத்து ரத்தினம், மர்ஹூம் யு.எஸ்.ஹமீட், டொக்டர் எஸ். கணேசன் ஆகியோர் இயற்றியிருக்கிறார்கள்.

பாடல்களுக்கான இசையமைப்பை தமிழ், சிங்கள வானொலி, மெல்லிசை திரைப்படங்களுக்கான பிரபல இசையமைப்பாளர் காலஞ்சென்ற எம்.எஸ்.செல்வராஜா வழங்கியுள்ளார்.

இலக்கிய கர்த்தா மர்ஹூம் எச்.எம்.பி முஹைதீனின் ஒத்தாசையின் பலனாகவே இப்பாடல்கள் அப்போது உருவாகும் நிலை ஏற்பட்டது.

இப்பாடல்கள் அமரர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கவை நினைவு கூரும் முகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் சிறப்பு நிகழ்ச்சிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றமை விசேட அம்சமாகும்.

***இது குறித்து 1994ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் வெளியான செய்தி வருமாறு...***

***அமரர் பண்டாரநாயக்கா பற்றி முத்தழகு பாடிய தமிழ் பாடல்களை ஒலிபரப்ப மேலதிக பணிப்பாளர் ஏற்பாடு***

தேசிய கலை, கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க மீது 1974ஆம் ஆண்டில் பாடப்பட்ட பாடல்களை மீண்டும் நமது நேயர்கள் இலங்கை வானொலி தமிழ் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாடல்களை இலங்கையின் பிரபல தேசியப் பாடகரும் வானொலி, ரி.வி, தமிழ், சிங்கள திரைப்படங்களின் பின்னணிப் பாடகருமான .வி.முத்தழகு பாடியிருக்கிறார்.

தேசிய உணர்வூட்டும் அந்த இனிய பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதில் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் சார்பில் வி. முத்தழகு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை மேலதிக பணிப்பாளர் வி.என். மதியழகனுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இதையடுத்தே நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்ததினால் குறிப்பிட்ட ஒலித்தட்டுக்களுக்கு ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப ரீதியான பாதிப்புக்களை நீக்குவதற்கு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இப்பாடல்களை இலங்கையின் பிரபல கலைஞர்களான ஈ. இரத்தினம், யூ.எஸ்.ஹமீட், டாகடர் எஸ். கணேசன் போன்றோர் இயற்றியுள்ளனர்கள். பாடல்களுக்கான இசையை பிரபல வானொலி, சினிமா இசையமைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜா இசையமைத்திருக்கிறார். இலக்கிய கர்த்தா எச்.எம்;.பி. மொகிதீனின் ஒத்தாசையின் பயனாகவே இப்பாடல்கள் அப்போது உருவாகும் நிலை ஏற்பட்டது.

இந்தப் பாடல்களை அமரர் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவை நினைவு கூருமுகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை தயாரித்தளிக்கவிருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

## 2024 சர்வதேச சட்டத்தரணிகள் சங்க மாநாட்டில் இலங்கை பிரதிநிதியாக சட்டத்தரணி அஜ்ரா அஸ்ஹர்



கொழும்பு அசோசியேட்ஸ் லீகலின் பங்குதாரரும், இளம் மற்றும் ஆற்றல் மிக்க சட்டத்தரணியுமான வழக்கறிஞர் அஜ்ரா அஸ்ஹர், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் (IBA) 2024 ஆண்டு மாநாட்டில், இலங்கையின் தேசியப் பிரதிநிதியாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

இந்த மைல்கல் கொழும்பு அசோசியேட்டுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் மகத்தான பெருமையைத் தருகிறது.

அஜ்ரா அஸ்ஹர், ஒரு முழுநேர சட்டத்தரணி. சட்ட உலகில் ஒரு முன்னோடி, அவர் கார்ப்பரேட் சட்டம் மற்றும் மனித உரிமைகளுக்கான அவரது சிறந்த பங்களிப்புகளுக்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மரியாதையைப் பெற்றுள்ளார். செப்டம்பர் 15 முதல் 2024 செப்டம்பர் 20 வரை நடைபெறும் IBA மாநாட்டில் அவர் பங்கேற்பது, அவரது சட்டத்துறை பயணத்தில் மற்றொரு உயர் புள்ளியைக் குறிக்கிறது.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, அஜ்ரா "நவீன சட்டப்போக்குகளும் AI தொழில்நுட்பமும்" என்ற தலைப்பில் 18 செப்டம்பர் அன்று சிறப்புரையை ஆற்றினார்.

மேலும் "புதுமையான சட்டப் போக்குகள்" என்ற தலைப்பில் ஒரு தனித்துவமான இளம் வழக்கறிஞர் பயிற்சி அமர்வுக்கு தலைமை தாங்குகிறார். அதிகரித்து வரும் டிஜிட்டல் உலகில் சட்டத்தின் எதிர்காலம் குறித்த உலகளாவிய விவாதங்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றார்.

அஜ்ரா அஸ்ஹர், புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவி ஆவார், மேலும் அவரது குறிப்பிடத்தக்க சாதனைகள் பிராந்தியம் முழுவதிலும் உள்ள இளம் பெண்களை ஊக்கப்படுத்துகின்றது.

இலங்கையில் உள்ள அடுத்த தலைமுறை சட்ட வல்லுனர்களுக்கு உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாக அவர் திகழ்வதையும் பாராட்டுகிறது.




# இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரானவர்கள் யார்?

**(கடந்த வாரத் தொடர்...)**

1947ஆம் ஆண்டு இந்திய வம்சாவளியின் சார்பில் முதலாவது பாராளுமன்றத்தில் 8 பேர் அங்கத்துவம் வகித்தனர். இவர்களில் 6 பேர் இலங்கை இந்திய காங்கிரசைச் சேர்ந்தவர்கள். அப்பொழுது இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை இருந்தது.

1948, 1949ஆம் ஆண்டுகளில் இந்திய வம்சாவளியினருக்கான பிரஜா உரிமை இரத்து செய்வதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டது

1950ஆம் ஆண்டளவில் இந்த மக்கள் சார்பில் எந்தவொரு பிரதிநிதியும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை. எந்த கட்சி அரசாங்கம் பிரஜாவுரியை பறித்ததோ அதே கட்சி அரசாங்கத்திடமிருந்து அதனை பெற்றுக்கொண்டார். பாராளுமன்றத்தில் நியமன எம்பியாக செயல்பட்ட வரலாறுகள் பல அவருக்க உண்டு. 1970ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிட்டார்.

மூன்று பாராளுமன்ற தொகுதியைக் கொண்ட நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் இருந்து 03ஆவது உறுப்பினராக தெரிவானார். பின்னர் அமைச்சரவையில் தொண்டமான் தனியொரு அமைச்சராக செயல்பட்டார்.

ஜே.ஆர். அரசாங்கத்துக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் ரணசிங்க பிரேமதாச 1989 ஆம் ஆண்டு போட்டியிட தயாரானார். இதனை சாதகமாகப் பயன்படுத்தி தீர்வில்லாதிருந்த தமது மக்களின் பிரஜாவுரிமைக்கு இராஜதந்திரி ரீதியில் அவர் நடவடிக்கை மேற்கொண்டார். பதிவுப் பிரஜாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பிப்பது போன்ற சிரமங்களிலிருந்து பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு நடைமுறையில் தீர்வுக்கு வழி வகுத்தார்.

அப்போது நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமது மக்கள் அனைவரும் ரணசிங்க பிரேமதாசவுக்கு வாக்களிப்பார்கள் என உறுதிமொழி தெரிவித்த தொண்டமான். அதில் வெற்றியும் பெற்றார். அமைச்சரவையில் தனியொரு அமைச்சராக இருந்த இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலும் பகிரங்கமாக கருத்து தெரிவித்தார். மோதல் உக்கிரமடைந்த நிலையில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிடம் வடக்கு – கிழக்கு பிரதேச நிர்வாகத்தை 5 வருடங்களுக்கு கையளிக்குமாறும் கூறினார். அப்பிரதேச அபிவிருத்திக்கு நிதியை அரசாங்கம் வழங்கத் தேவையில்லையென்றும் அவர்களே சமாளித்துக் கொள்வார்கள் என்பதை துணிச்சலாகக் கூறியதையும் நாம் இன்றும் மறந்துவிடலாகாது.

இந்தநிலையில் தான் மாகாண சபை சட்டமாக்கப்பட்ட பின்னர், மாகாண சபையை பயன்படுத்தி எவ்வாறு வடக்கு – கிழக்கை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதையும் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வாக முடியமென்பதையும் குறிப்பிட்டார்..

மாகாண சபை வடக்கு – கிழக்கை அடிப்படையாக ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் முழுநாட்டின் 9 மாகாணங்களிலும் மாகாண சபை நிர்வாகம் இடம்பெற்றது. முதலமைச்சர்கள் செயல்பட்டனர். முதலமைச்சர்களுக்கான அமைப்பும் இருந்தது. இதனை சரியான முறையில் பயன்படுத்தி குறைக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய பல சந்தர்ப்பங்கள் இருந்ததை தமிழ் தரப்பினர் ஏன் தவறவிட்டார்கள் என்பது தெரியவில்லை.

இந்திய மாநிலமான தமிழகத்திலும் அமரர் அண்ணாத்துரை போன்ற பழம்பெரும் அரசியல்வாதிகள் தனித் தமிழீழம் தொடர்பில் போராட்டம் மேற்கொண்டனர். இறுதியில் அதனைக் கைவிட்டனர். இன்று அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கவனத்தில் கொள்வது மிகச் சிறந்தது. தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியாவின் மத்திய அரசாங்கத்தை குறைக் கூறிக்கொண்டே தமிழகத்தை அபிவிருத்திப்பாதையில் முன்னெடுக்கவில்லையா என்று சிலர் தெரிவிப்பதை புறந்தள்ளிவிட முடியாது.

மத்திய கிழக்கில் மூர்க்கத்தனமான தாக்குதல் நடக்கிறது.44 ஆயிரம் பேர் உயிரிந்துள்ளனர். யார் தடுத்தலும் இஸ்ரேலின் தாக்குதல் தொடருகிறது. மறுபுறத்தில் ரஷ்யா உக்ரைன் போர் வருடங்களாக தொடருகிறது. இந்த நிலையில் தமிழ் தரப்பு காலத்திற்கு ஏற்ற தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்பட வேண்டுமல்லவா.

# நெஞ்சினலைகள்

அன்று அதிகாலைப் பொழுது ஆதவனை வரவேற்கப் பட்சிகளின் ஆரவாரம் தொடங்கி இருந்தது. ஐந்து மணிக்கே தூக்கம் கலைந்து போனது சாருமதிக்கு. அரச வங்கி விடுதியில் தங்கியிருந்த சாருமதிக்கு எழுந்திருக்க அசதியாக இருந்தது.

அந்த விடியலில் பட்சிகளின் ஆரவாரம் அவளது மனதிற்கு மகிழ்வைத் தந்திருக்க வேணும். கண்ணை மூடி மெய் மறந்து அதனை ரசித்தாள். இருள் மெல்ல மெல்ல விலகத் தொடங்கியது. வாகனங்களின் இரைச்சலும் மனித நடமாட்டமும் ஆக்கிரமிக்க அந்த நகரப் பிரதேசம் விழித்துக் கொண்டது.

"ஓ இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை ஓய்வு தானே இன்னும் சற்று நேரம் படுக்கையில் கிடப்பம் மனதுக்கு இதமாக இருக்கும்". நினைத்த மறு நிமிடம் சாருவின் போன் அலறியது.

"ஆராக..இருக்கும் இந்த வேளையில் மேசையில் கிடந்த போனை எழுந்து எடுப்பதா இல்லை விடுவதா". அவள் மனதுக்குள் ஒரு ஒத்திகை நடந்தது.

"புதிய நம்பராக இருக்கே எதுக்கும் போனை எடுப்பம்".

"ஹலோ சாருமதிதானே நான் உன் கிளாஸ் மேற் சிந்து கதைக்கிறன்". எங்கோ ஒரு பொறி தட்டியது. புரிந்து போனது சாருமதிக்கு.

"ஓ சிந்துவாடீ நீ எப்படி இருக்காடீ"

"நான் நல்லா இருக்கன். எனக்கென்ன கணவன் பிள்ளைகள் என என் வாழ்க்கை போகுது. ஓய்வு நாளில் நான் உன் உறக்கத்த கலைச்சுப் போட்டனா".

"நீ வேற சிந்து..என் உறக்கம் எப்பவோ கலஞ்சு போச்சுடி அதை விடு. நீ மட்டுந்தான் பள்ளியை விட்டு போன பின்னும் அப்பப்ப என்னோட கதைக்கிறா நானும் உன் போன் நம்பரை 'சேவ்' பண்ண மறந்திட்டன்".

"சரிதான் போடி..குடும்பச் சுமை தலைக்குமேல எங்கதான் போன் கதைக்க நேரம் கிடைக்குது". சிந்து சலித்துக் கொண்டாள்.

"என்னடி வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரி கதைக்கிறா".

"நான் அப்படி சொல்லல்ல சாரு, குடும்பம் என்று ஆகிவிட்டால்.. ஓய்வு ஒழிச்சல் இல்லாட்டியும் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிதான். சரி என்னை விடு. நீ என்னடீ.. செய்றா. உன் கலியாண வாழ்க்கை என்னாச்சு. புள்ள குட்டிகள் எத்தன அதச் சொல்லன் சாரு" மூச்சு விடாது மூணு கேள்விகளை சிந்து அடுக்கி விட்டாள்.

"இன்னும் கல்யாணமே ஆகல்லடி சிந்து.. நான் பேராதனை கம்பஸ் போய் படிச்சன். உனக்கு அதாவது ஞாபகம் இருக்கா".

"ம்ம்.. ம் சொல்லன் சாரு.."

"நான் பெஸ்ட் கிளாஸில பாஸ் பண்ணினான். அதனால அரச வங்கியில ஆரம்பத்தில உதவி மனேஜர் பயிற்சியாளராக நல்ல வேலயும் கிடச்சது சிந்து".

"பிறகென்ன என்னதான்டி ஆச்சு.. உன் கல்யாணம் நீயேன் மனம் உடைஞ்சு போய்க் கதைக்கிறா".

"எதைக் கேக்கிறா சிந்து? நான் எதை உனக்குச் சொல்றது. 'டிகிரி' முடிய வங்கியில வேலை கிடைச்சதால.. ஓய்வில்லா வேல, தொடர்ந்து படிச்சன். அதனால மனேஜர் புரோமோஷன் அதிலேயே என் காலம் எல்லாமே ஓடிப் போச்சுடீ".

"ஓ..அப்பிடியா..பிறகு".

"புறகென்ன மாஸ்டர் டிகிரிய நான் முடிச்சன். பிறகு வங்கியால் 'ஸ்கொல்' கிடைச்சு கொங்கொங் போய் வந்தன். வங்கியில நீண்ட கால உழைப்பு. நான் இப்ப வடக்கு பிராந்திய மனேஜராக இருக்கிறன்".

"ஓ..எனக்கு பெருமையாய் இருக்கு சாரு ".

"சிந்து என்னை மறக்காமல் நீ எனக்கு போன் பண்ணிருக்கடீ. உனது அன்பைப் போல வேறு ஆருக்கு வரும்? உண்மையில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்குடி".

"சாரு வெளியில போயிருக்காரு என் வீட்டுக்காரர். நானும் காலையில் சும்மாதான் வீட்டில இருக்கிறன். உன் நினைவு வந்தது அதுதான் போன் எடுத்தன்".

"அதுக்கென்ன என்ன மறக்காமல் இருக்கியே அது போதும்".

"சாரு நீ ஏன் கல்யாணமே கட்டாமல் இருக்கா. நீ ஏ.எல் படிக்கிறப்ப லவ் பண்ணினியே மோகன் அவன் என்னான்".

"அதுவா..சொல்றன். நீதான் ஏ.எல் படிக்கிறப்ப லவ் பண்ணி இடையில ஓடிப் போயித் தாயே. உனக்கெங்க அந்தக் கதை தெரியப் போகுது".

ஒரு கணம் சாருமதியின் சிந்தனை சுழன்றது..

அதிகாலையில் எழும்பி மரக்கறிக் காலைக்கு தண்ணி இறைக்கப் போகும் அப்பா..பெண் பிள்ளைகள் மூவரையும் ஸ்கூலுக்கு அனுப்பி விட்டு..ஏழு மணிக்கு பின் தண்ணிச் சோறும்..கொஞ்சம் தேங்காய்ப் பூவும் இரண்டு சின்ன வெங்காயமும் கணவன் கதிரேசனுக்கு எடுத்துக் கொண்டு கூட மாட உதவிக்குப் போவதை வழமையாக்கிக் கொண்ட அம்மா..குடியிருக்க ஒரு சாதாரண வீடு..இரண்டு தங்கைகள்.. இதுதான் சாருவின் குடும்பம்.

"உங்கள் மூவருக்கும் படிப்புத்தான் மூலதனம். கவனமாப் படிச்சுக் கொள்ளுங்க" பிள்ளைகளுக்கு கறாராகச் சொல்லி விட்டார் அப்பா கதிரேசன்.

படிப்பில் சாரு கெட்டிக்காரிதான். சாரு ஏ.எல் வகுப்புக்குள் நுழைந்த போதுதான் அவள் கடைசித் தங்கை கல்யாணி பெரியவளாகி இருந்தாள். மற்றவள் காவேரி பத்தாம் வகுப்பு அப்போது.

சாருமதியின் அழகில் எவரும் குறை சொல்ல முடியாது. அவள் அழகும் சுட்டித்தனமும் அவளுக்கு கூடவே காதலையும் இழுத்துக்கொண்டு வந்து சேர்த்தது.

"சாரு நீதான் இனி என் வாழ்க்கையே" ஏ.எல் வகுப்பில் கூடவே படிக்கும் மோகன் குழைந்து நின்றான். இருபது வயதில் ஒரு காதல்..சாருமதிக்கு மோகனின் காதலைத் தட்டிக் கழிக்கவும் முடியவில்லை .

"மோகன்..நம்ம காதல உங்கட வீட்டில ஏற்பாங்களா".

"அதப்பத்தி நீ கவலப்பட வேணாம் சாரு".

"நான் எப்பிடி மோகன் கவலப்படாம இருக்கிற நீயே சொல்லு".

"எனக்கு நீதான் வேணும் சாரு".

"சரி..மோகன் எங்கட குடும்ப நிலமை உனக்குத் தெரியாதா".

"நீ ஏன் சாரு பயப்படறா..வீட்டில நான் ஒரே பிள்ள எல்லாம் எனக்குத்தான் அத நான் பாத்துகுவன்".

"ஹலோ சாரு..என்னடி உன் சத்தத்த காணல்ல..".போனில்..சிந்துவின் குரல் சாருவை உசுப்பி விட்டது.அந்த ஒரு கணத்தில் மோகனின் காதல் சிந்தனையில் இருந்து மீண்டாள் சாரு.

"நீ சொல்ல வந்தத..சொல்லன் சாரு ஏன் அமைதியாகிட்டா".

"அதுதான் சாரு என் பள்ளிக்காதல் அது படலையோடு முடிஞ்சு போச்சுடி. மோகன் காதலில் தீவிரம் காட்டினான். எங்க காதல்.. அவன் வீட்டுக்கு அது தெரிய வந்த போது பிரச்சினை வெடித்தது.

"அத்தப் பிச்சக்காரியா..அவளையா நீ விரும்பினா வேணாம்டா அவள் உனக்கு".

அவனது தாய் மோகனை எச்சரித்தாள். அவன் பிடிவாதம் தாயிடம் தோற்றுப் போனது. நகரப் பாடசாலை ஒன்றில் அடுத்த சில நாளில் அவனைச் சேர்த்து விட்டனர். அதோட மோகன் காதலும் காணாமப் போச்சுடி சிந்து".

"நீ..பாவம்டி..உன்னக்கு பிச்சக்காரிப் பட்டமும் தந்து போட்டாங்க "

"அதுதான்டி 'சுள்' என நெஞ்சில் குத்தியது. இப்பவும் அந்த வலி இருக்கு. என் காதல் அதோட முடிஞ்சு போகல்ல சிந்து".

"என்னடி சாரு..சொல்றா"

"அதுக்குப் பிறகும் மோகன்கள் என் வாழ்க்கையில் வந்தாங்கள். எல்லாரும் சுயநலவாதிகள் வெறுத்துப் போச்சுடீ கல்யாணம்".

"புரியல்ல சாரு.."

"உன்னோட கதைச்சதால.. மனச் சுமை சற்றுக் குறைஞ்சு இருக்குடி சிந்து. சரி புரியும் படியாச் சொல்றன் கேள். கம்பஸில் ஒரு குபேரன் வந்தான்".

"ஓ..என்னடி குபேரனா"

"கம்பசில் என்னோடு படிச்ச குபேரன் லவ் பண்ணினான். நானும் அவன் காதல நினைச்சுக் கூடப்பாக்கல்ல".

"ம்..ம்ம் சொல்லன்"

"நான் ஏ.எல் வகுப்பில் மோகன..லவ் பண்ணி சூடு கண்ட பூனை அல்லவா சிந்து".

"அப்புறம்.."

"நானும் மனிசிதானே சிந்து எனக்கும் ஒரு வாழ்க்கை வேணும் என்ற யோசனை வந்தது. குபேரனின் பேச்சும் அவன் வசீகரமும் எனக்கும் பிடிச்சது நாங்க கம்பஸில் காதலர்களானோம் காலமும் அதன் காரியத்தை அரங்கேற்றிப் பாத்தது சிந்து".

"சாரு.. என்னடி..சொல்றா"

"சிந்து அவசரப்படாதடி சொல்றன். நாங்க நாலு வருசம் படிச்சம். பிறகு பட்டம் பெற்றவுடன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் குபேரன்".

"இடையில நான் உன்னக் குழப்பல்ல. நீயே சொல்லு..சாரு".

குபேரன் அன்று சொன்னது அவள் மனதை இப்பவும் குடைந்து கொண்டு இருந்தது சாருமதிக்கு இன்னும் மறக்கவில்லை அவள்..

"குபேரன் என்ன புதுசாக குண்டைத் தூக்கி போடுறீங்க"

"சாரு நம்மட காதல் வீட்ட தெரிஞ்சு போச்சு. இப்ப நல்ல சம்பந்தம் தங்கச்சிக்கு வந்திருக்கு. காசு வேணும் எனக்கு. கிடைக்கிற சீதனத்தக் கொண்டு அவளக் கரையேத்த பாக்காரு அப்பா. ரவுணில வீடு வேணுமாம் மாப்பிள்ள வீட்டாருக்கு"

"குபேரன் உங்கட பிரச்சின அது..நீங்க சீதனத்த என்னிடம் எதிர்பாத்தா என்னை லவ் பண்ணினிங்க நான் எங்க குடும்ப நிலய சொல்லியுமா நீங்க..".

"என்ட நிலைய யோசித்துப்பாரு சாரு எனக்கு எந்த வழியும் தெரியல்ல".

"புரியுது குபேரன் உங்களுக்கு எது சரியாப் படுதோ அதச் செய்யுங்க" குபேரன் காதலும் கண்ணா மூச்சி காட்டி விட்டுப் போனது சாருவுக்கு.

"என்னடி சாரு..இப்பவும் நீ அமைதி ஆயிட்டா ..லைனில் இருக்கிறயா சாரு"

சுதாரித்துக் கொண்டாள் சாருமதி குபேரனின் சிந்தனையில் இருந்து மீண்டாள் .

"ம் ம்.. லைனிலதான் இருக்கன் சிந்து கம்பஸ் காதல நினைவு வந்தது. ஒரு சின்ன தடுமாற்றம்..இரு சொல்றன்".

"நான் முன்பே சொன்னதுதான் சிந்து. எங்க 'பட்டமளிப்பு' முடிந்து சில நாட்களில்.. குபேரன் கொழுத்த சீதனத்துடன் திருமணம் செய்து குபேரனாகி விட்ட செய்தி எனக்கு இடியாய் வந்து இறங்கியது ".



"கடவுளே.. உனக்கு இப்பிடியா இடி விழணும் சாரு. அவன் நல்லாவே இருக்க மாட்டான். கேக்கவே கண்ணீர் வந்து முட்டுது எனக்கு".

"கடவுள் என்னதான் செய்வாரு சிந்து. நீயே சொல்லு. நீயேன் சிந்து அழுவுறா. காதல் எல்லாமே சுயநலம் அதில் என் காதல் பகடை உருட்டி விளையாடியது".

"வேற எவரும் இந்த வலிகளைத் தாங்க மாட்டாங்க சாரு".

"அந்த வலிகள்தான் சிந்து நான் இந்த உயரத்துக்கு வரக் காரணம். எனக்கும் மனேஜர் பதவி கிடைச்சதால் புதிதாக வீடு ஒன்றைக் கட்டி முடிச்சன். பட்டதாரி ஆசிரியையான தங்கை காவேரியின் திருமணம் கூடி வந்தது. 'பிச்சைக்காரி' என்றவர்கள் முன் குடும்பம் தலை நிமிர்ந்தது.நான் மாஸ்டர் டிகிரி செய்த போது அங்கு ஒரு சங்கர் வந்து குறுக்கிட்டான். அவனும் வங்கியாளன் எனக்கு இரண்டு வயது மூத்தவன்.

"என்ன சாரு இன்னுமொரு காதலா உனக்கு".

"என்ன செய்வது..அது மூணாவது காதல் தான் சிந்து. மனசு ஒன்று இருக்குதே நாம விலகி..விலகி ஓடினாலும் வலிந்து வந்து நிற்குதே சிந்து".

"அப்புறம் சாரு".

"சங்கர்..அவனும் என் முன்னும் பின்னும் அலைஞ்சான். அவனுக்கும் நான் தெளிவாக எடுத்துச் சொன்னன்."

சாருமதியின் நினைவுகள் பின் நோக்கிச் சுழன்றன.

"சங்கர்.. இது வாலிப பருவத்து பள்ளிக்காதல் இல்ல. கண்டி மழையப் போல வந்து சீதனத்துக்காக காணமல் போற கம்பஸ் காதலுமல்ல என்பதை முதலில் நீங்களும் புரிய வேணும்".

"சாருமதி உங்கள நான் விரும்புறன் ஆனால் காதலுக்கு நீங்க விளக்கம் வேற சொல்றீங்க அதுதான் புரியல்ல".

"வேறு என்ன செய்வது சங்கர் சில விடயங்களை நானும் புரியும்படி சொல்லத்தான் வேணும். நாங்க இப்ப விடலைகள் அல்ல சங்கர். தெளிவாக தீர்மானம் எடுக்கும் அறிவும் முதிர்ச்சியும் நமக்கு இருக்கு சங்கர்".

"ஓ..நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள் அது தெரியுது சாருமதி".

"உண்மைதான் சங்கர் நான் தெளிவாகத் தான் இருக்கன். நமக்குள் எதிர் காலத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை வரக்கூடாது என்பதில்.."

"அது சரி..நான் என் விருப்பத்த தெளிவாக சொல்லி விட்டன் சாருமதி. நீங்க உங்கட விருப்பத்த சொல்லுங்க. நாம கல்யாணத்த முறைப்படி செய்து கொள்வம். இப்ப ஓ.கே தானே. இதற்கு ஏன்..இவ்வளவு பெரிய விளக்கம்".

"ஓ.கே நீங்கள் என்னிலும் மூத்தவர். என்னை விடவும் நிறையவே அனுபவங்கள் உங்களுக்கு இருக்கும். சரி உங்களுக்கும் எதிர்பார்ப்புகள் ஏதும் இருக்கும் சங்கர். நானும் அதைத் தெரிந்து கொள்ள விரும்பினன். அதனால்தான் இவ்வளவும் கதைச்சன்".

"சாருமதி நீங்க சொன்னதை நான் தப்பாக எடுக்கல்ல. ஆனால் என் காதல நீங்க ஏற்றுக்கொண்டதாக இன்னும் ஒரு வார்த்தை கூடச் சொல்ல வில்லையே".

"சரி சங்கர்.. நான் ஐ லவ் யூ சொல்ல ஆயத்தமாக இருப்பதால் இவ்வளவும் சொன்னன். ஆனால் நீங்கதான் உங்க எதிர்பார்ப்புகள் எதையும் என்னிடம் சொல்லவே இல்லயே"

"சாருமதி என் வீட்டாரிடம் உங்களப் பற்றி எல்லாமே சொல்லி விட்டன். எந்தவித எதிர்பாப்பும் எனக்கு இல்ல. ஆனால் ஒன்று மட்டும் உங்களிடம் நான் எதிர்பாக்கிறன். பின்னாளில் நான் சொல்லவில்லை என்று நீங்க சொல்லக் கூடாது. நான் சொல்வதால் நீங்கள் என்னை பிழையாகவும் விளங்கிக் கொள்ள வேணாம்"

"சொல்லுங்க அதில் என்ன இருக்கு".

"சாருமதி நீங்க மற்றைய ஆண்களோடு கதைப்பத எதிர்காலத்தில தவிர்த்துக் கொள்வது எனக்கு நல்லதாப்படுது அதால பின்னுக்கு ஏதாவது பிரச்சினை நமக்குள் வந்து விடக் கூடாதே".

சாருமதிக்கு சுளீர் என்று தைத்தது. அந்த ஒரு நொடியில் சங்கரின் காதல் காணாமல் போனது. சாருமதி எழுந்து விட்டாள்.

"சாருமதி ஏன் எழும்பி விட்டீர்கள். நான் சொன்னது தப்பாக இருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்க".

"சொரி..சங்கர்..இது என் தப்புத்தான்".

ஒற்றை வாக்கியத்தில் தெளிவாக உறைக்கும் படி பதில் சொன்னவள் திரும்பிப் பாராமலே நடந்தாள்.

"சாரு..சாரு..என்ன சாரு..போனில் உன் குரலைக் காணல்ல என்ன அமைதி ஆயிட்டா என்னாச்சுடி ".

சிந்துவின் பதற்றத்தை அவதானித்த சாருமதி இப்போது நிகழ் நிலைக்குத் திரும்பினாள் .

"ஒன்றை மறக்க இன்னும் ஒன்று வரத்தானே செய்யுது சிந்து. நானும் ஒரு சராசரி மனிசிதானே. நான் முதலே உனக்குச் சொன்னது ஞாபகம் இருக்கா. என் வாழ்வில் வந்த மோகன்கள்.. என்றேன் மறந்து போச்சா"

"அத மறப்பனா சாரு..நீ சொல்லாமல் விட்டாலும் நான் விடமாட்டன் சரி..சரி சொல்லன்".

"சங்கர் சந்தேகக்காரன் அவனுடன் யாராச்சும் வாழ்வார்களா. நீயே சொல்லு சிந்து. அவன கட்டினா நரக வாழ்க்கைதான். அது தேவையா சிந்து. அந்த ஒரு நொடியில் அவன் காதல தூக்கி காலில் போட்டு மிதிச்சுப் போட்டு வந்திட்டன் சிந்து"

"சாரு சும்மா சொல்லக் கூடாது..பாரதி கண்ட புதுமைப்பெண் நீதான் போல".

"போடி சிந்து. உனக்கும் பகிடி விடவும் தெரியும் போல".

"உன் வாழ்க்கை இப்படிப் போச்சுதே சாரு".

"இனி என்ன வேணும் சிந்து. மற்றத் தங்கை காவேரியும் ரீச்சராகி பிள்ள குட்டிகளோட நல்லா இருக்காள்.என் குடும்பம் எனக்கு உதவியாக இருக்குது அது போதும் சிந்து".

"சரிதான் நீ கொஞ்சம் தூங்கி எழும்பு மனசில இருக்கும் பாரம் குறையும்".

"தூக்கமா..நான் தூங்கி பல வருசம் ஆச்சுடி சிந்து. சரி இன்னுமொரு நாள் கதைப்பம். எனக்கு அவசரமான போன் அழைப்பு வருது".

"ஓகே..சாரு..".

**வெல்லாவெளி விவேகானந்தம்**

**உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள். —ஆர்—**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 139

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | ■ | 04 | 05 | 06 |
| | ■ | 07 | | 08 | ■ | 09 | |
| | ■ | 10 | | | ■ | ■ | |
| | ■ | 11 | | | 12 | 13 | ■ |
| ■ | 14 | ■ | ■ | ■ | 15 | | 16 |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | ■ | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |

திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 139
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 139

**இடமிருந்து வலம்**

1. இலங்கையிலுள்ள ஓர் ஆறு
4. ஒரு தமிழ் மாதம்
7. ஒரு நிறம். படையினரின் சீருடைகளும் இதுதான் (குழம்பியுள்ளது)
9. அம்பு எய்துவதற்கு இது தேவை (திரும்பியுள்ளது)
10. இசை அல்லது பாட்டு
11. ஒருவர் தனது ஏமாற்றம், துன்பம், போன்றனவற்றை வெளிப்படுத்தி குறைபடுதல் (குழம்பியுள்ளது)
15. பறவை
17. தரையிலும் நீரிலும் வாழும் உயிரினம்
18. அங்கக் குறைபாடு (குழம்பியுள்ளது)
19. காற்று (திரும்பியுள்ளது)
20. கணவன் திரும்பிவிட்டார்.
21. ஒரு காட்டு மிருகம்
22. உறைப்புத்தன்மை

**மேலிருந்து கீழ்**

1. வயலும் வயல் சார்ந்த இடமும்
2. தமிழ் நாட்டில் வழக்கறிஞர்களை இப்படியும் சொல்வர்.
3. கடிதம்
5. நான்கில் ஒரு பகுதி
6. பல்லக்கு
8. தாவரங்களில் இலை, காய், பூ ஆகியவற்றுடன் இணைந்த மெல்லிய தண்டுப் பகுதி
12. சக்தி, வலிமை (குழம்பியுள்ளது)
13. சாப்பிடத் தூண்டும் உணர்வு
14. பாரம்
16. சிறுவர்கள் காற்றில் பறக்கவிட்டு விளையாடுவர் (குழம்பியுள்ளது)
17. வயதான பெண்களை இப்படியும் அழைப்பர்
18. காடு (குழம்பியுள்ளது)
19. மகிழ்ச்சி (தலைகீழ்)
20. மன்மதன் மனைவி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 138

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. திருடன்
4. மது
6. மானபங்கம்
8. பிரபலம்
10. புள்
11. அம்புலி
12. சபதம்
15. தப்பு
17. கல்
18. ஆடி
20. பவனி
21. கையூட்டு
22. பகல்

**மேலிருந்து கீழ்**

1. திப்பிலி
2. டமாரம்
3. அன்னம்
4. மகள்
5. தும்பு
7. பல
9. பருப்பு
12. சனி
13. தகவல்
14. பம்பல்
15. தங்கை
16. புட்டி
19. ஆடு
20. கனி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 138

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **என்.கே. வேணி**<br>25/10 சேர்ச் வீதி,<br>பலாங்கொடை. | **எம்.எச்.சீ.என். ஹம்தா**<br>411, புதிய வீதி,<br>வெலகம. | **எஸ் சஞ்சனா,**<br>735, நடுவில் தம்பி வீதி,<br>வந்தாறுமூலை. |

### பாராட்டு பெறுவோர்

**1.எம்.எம் சசாத்**
மருதமுனை

**2. கே. புண்ணியநேசன்**
காரைதீவு

**3. எப்.ஆர். ஏ. ஷுக்கூர்**
மடவள பஸார்

**4. கதீஜா**
மருதானை

**5. கே. குசேலர்**
ரக்குவானை

**6. கே. எம்.எம். பாரூக்**
மாத்தளை

**7. ஏ.டபிள்யூ. எம். நியாஸ்**
மாவனல்ல

**8. எம். தனுஷியா**
காரைதீவு

**9. எஸ். ஜனஹாசினி**
கொட்டாஞ்சேனை

**10.என். சிவசீலன்,**
நீர்வேலி

## வர்த்தகக் கடன் மறுசீரமைப்பு...

(08 ஆம் பக்க தொடர்ச்சி)

அதேபோன்று, மற்ற நாடுகளுடன் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட முடியாது. வெளிநாட்டுக் கடன் சந்தையில் கடன்களைப் பெறவும் முடியாது. இதனுள் எமது நாடு குறுகிய கால கடன் நெருக்கடிக்குள் சிக்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இதற்கு உலகில் பல உதாரணங்கள் உள்ளன. மீளக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளால் பல நாடுகள் மீண்டும் ஒருமுறை சரிவடைந்த சந்தர்ப்பங்கள் உள்ளன. குறிப்பாக குறுகிய காலத்திற்கு நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்படும் அதிர்ச்சிகளால் இது ஏற்படுகிறது. 2022ம் ஆண்டு அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட போது இலங்கைக்குள் கூட ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அதே போன்று, நாட்டில் பல்வேறு அதிர்ச்சிகள் ஏற்படும். குறிப்பாக வானிலை மற்றும் காலநிலை அதிர்ச்சிகள் ஏற்படலாம்.

எவ்வாறாயினும், எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டாலும், ஒரு நாடு என்ற வகையில் கடன் மறுசீரமைப்பு முடிவடையும் போது, மீண்டும் சில நிதி வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். குறிப்பாக குறுகிய காலத்திற்கு ஏற்படும் நெருக்கடிகளில் நாம் கடனைச் செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் சர்வதேச நிதிச் சந்தையினால் கூட கடன் வசதியை வழங்க முடியாது.

நாம் திருப்பிச் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்து அது தொடர்பில் செயற்பட்டால், நாம் மீண்டும் நெருக்கடியில் சிக்கினாலும் எம்மால் மீண்டும் கடன் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உலக வரலாற்றில் குறிப்பாக கடன் நெருக்கடியில் சிக்கிய நாடுகளை பார்க்கும் போது பல்வேறு காரணங்களால் அந்த கடன் நெருக்கடிகள் மீண்டும் நெருக்கடிக்குள் சென்றுள்ளது. அதே போன்று, நமது நாட்டைப் பொறுத்தவரை, கடன் மறுசீரமைப்பு மூலம், இதுவரை நிறுத்தப்பட்டுள்ள சில அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடிந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள், நிறுத்தப்பட்ட வர்த்தகங்களினால் முதலீடுகள் இடம்பெறவில்லை. இது ஒரு குறுகிய கால நெருக்கடியாகத் தெரியாவிட்டாலும், நீண்ட காலத்திற்குப் பொருளாதாரத்தை மிக விரைவாக சரிவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். தடைப்பட்ட திட்டங்களால் இலங்கையில் மூலதனக் குவிப்பும் இடம்பெறவில்லை. அரச துறையின் ஊ க் கு வி ப் பி ல் லா ம ல் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிப்பது இல்லை. இந்த இடத்தில், நாடு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கவும், புதிய அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடவும் முடியும்.

நாட்டில் முதலீடு செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைக்கப் போவதாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், கடனைத் திருப்பிச் செலுத்தாத நாட்டிற்கு முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள் என்பது நாம் அறிந்த விடயமாகும். குறிப்பாக வங்கிகளின் மூலம் கடனைப் பெற்று இந்த முதலீட்டாளர்களும் கூட முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அங்கு சர்வதேச வங்கிகள் கடன் வழங்கும் போது, இலங்கை போன்ற நாடுகளுக்கு கடன் வழங்கும்போது அது அபாயகரமான சூழ்நிலையாகவே கருதப்படுகிறது. அவர்கள் சாதாரண வட்டி 1 சதவிகிதத்தில் வழங்கக் கூடியதாக இருந்தாலும் எம்மைப் போன்ற நாட்டில், வட்டி விகிதம் 5 சதவிகிதம் வரை அதிகமாக உள்ளது. பொருளாதாரத்தில் உள்ள நிச்சயமற்ற தன்மையும், கடனைத் திருப்பிச் செலுத்தாத சர்வதேச சூழ்நிலையும் இங்கு தெளிவாகிறது. எனவே, வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவதை குறுகிய காலத்தில் செய்ய முடியாவிட்டாலும், அதற்கு தேவையான சூழலை உருவாக்குவது எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் முக்கியமான விடயமாகும்.

எமது நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை குறுகிய கால எல்லைக்குள் நெருங்க முடிந்திருப்பமை மிகவும் முக்கியமானதாகும். கானா மற்றும் சாம்பியா போன்ற நாடுகளின் மறுசீரமைப்பு செயல்முறைக்கு நான்கு வருடங்கள் எடுத்தன.

அந்த நாடு 2020ம் ஆண்டில் கடன் நெருக்கடிக்குள் சென்றதோடு, 2024ம் ஆண்டு வரை இந்த நிலையை சமப்படுத்தி மறுசீரமைப்புச் செயற்பாட்டை முடிப்பதற்கு எடுத்தது. அதனடிப்படையில் இலங்கை முதல் முறையாக கடன் நெருக்கடிக்குள் சென்றதோடு, மிகவும் குறுகிய காலத்தினுள் ஒரு நிலையான தன்மையைக் கொண் வருவதற்கு இலங்கையால் முடிந்திருக்கின்றது. தொடர்ந்தும் முறையாகப் பயணிப்பது மிகவும் முக்கியமாகும்.

## 1876 முதல் மொரீசியஸ்...

(13 ஆம் தொடர்ச்சி)

''இவர் புலவன் சின்னராமன் தொடக்கப்பள்ளி தமிழ் ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர்....''

''நான் அவருக்கு வணக்கம் தெரிவித்த போது அவர், ''சுருக்கமாக நீங்கள் பேச முடியுமா?'' என்று கேட்டார்.

''எத்தனை நிமிடம்?''

''ஐந்து முதல் ஏழு நிமிடங்கள்..''

''சரி. தமிழில்தான் பேசுவேன்...''

''தமிழில்தான் பேச வேண்டும்!''

அனைவருக்கும் வணக்கம் சொல்லி பேசினேன். அவுஸ்திரேலியாவிலிருந்து உங்கள் தமிழைக் கேட்க, அறிய வந்திருக்கிறேன். தமிழர்களின் ஒரே அடையாளம் தமிழ். தமிழர்களுக்கு புற அடையாளங்கள் இல்லை. தமிழ் தான் தமிழரின் முகம், முகவரி, தமிழைத் தொலைத்துவிட்டால் தொலைந்து போனது தமிழ் அல்ல; தமிழர்தான். தமிழைப் பேசுங்கள். பேசாத மொழி காணாமல் போய் விடும். யேசுநாதர் பேசிய ஹீப்ரு இன்று பேசப்படுவதில்லை.

புத்தரின் பாளி மொழி பேச மக்கள் இல்லை. சமஸ்கிருதம் பேச மக்கள் இல்லாவிட்டாலும் இந்து ஆலயங்களில் இருக்கின்றன. தமிழைத் தமிழர்கள் பேசாவிட்டால் தமிழும் இல்லை; தமிழரும் இல்லை. ஆங்கிலத்தில் கல்வி, கிரியோலில் பேச்சு மொழி என்று இருக்கிற நீங்கள் இரவு உணவின் போது, ஒன்று கூடும்போது தமிழில் பேசுங்கள்...''

பேசி முடித்து இருக்கையில் அமர்ந்தபோது புலவன் சின்னராமன் கை குலுக்கிப் பாராட்டினார். புலவன் சின்னராமன் மேடையில் பேசியபோது தமிழ் சரளமாக வரவில்லை. தடைகளைத் தாண்டி வந்ததைப் போல் வந்ததைப் புரிந்து கொண்டேன். வேறொரு சந்தர்ப்பத்தில் அவரைச் சந்தித்தபோது தமிழ் பேச்சுமொழியாக இல்லாமைக்கான, காரணங்களைச் சொன்னார்..

“ஆங்கில மொழியில் கல்வி கற்ற போதும் மாணவர்கள் கிரியோல் மொழியையே பேசுகிறார்கள். கிரியோல் மொழியைத் தவிர்க்க முடியாது. கிரியோல் மொழி இங்குள்ள பல தரப்பட்ட மக்களை இணைக்கும் பேச்சு மொழியாகும். தமிழ் படிக்கிற மாணவர்களுக்கு விளக்கமும் புரிந்து கொள்ளவும் கிரியோல் மொழியே துணை மொழியாக இருக்கிறது. மாணவர்களுக்குப் பல பாடங்களைப் புரிந்து கொள்ள விளக்க கிரியோல் மொழியே உதவுகிறது. இதனால் தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்த மாணவர்கள் பேசத் தயங்குகிறார்கள். நானும் ஒரு ஆசிரியர் தான். மாணவர்கள் தமிழில் பேச முடியாமைக்கான காரணத்தை அறிந்து செயலாற்றி தமிழில் பேசுவதை ஊக்குவித்து வருகின்றேன்..”

அவரிடமிருந்து விடை பெறும் போது, “புலவன் என்றால் தமிழில் புலமையாளன், பாடல் இயற்றுவதில் திறமைசாலி என்று அர்த்தம் உள்ளது. உங்களுக்கு எப்படி புலவன் என்ற பெயர்?” என்று கேட்டேன்.

புன்னகைத்த புலவன் சின்னராமன், “என் பெயரில் தான் புலமை இருக்கிறது. இப்படி பெயர் வைத்தது என் தந்தையார். அவர் புலவன் என்று வைத்ததால் தமிழில் புலமை பெற தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பில் இணைந்துள்ளேன்.” என்றார்.

## யார் வென்றாலும், தோற்றாலும்...

(05 ஆம் பக்க தொடர்ச்சி)

மிகுந்த வற்புறுத்தலுக்குப் பிறகு, பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அங்கும் இங்கும் குறிக்கப்பட்ட பந்தயச் சீட்டுக்களைப் பார்க்க அனுமதிக்கப்பட்டேன்.

சில சீட்டுக்கள் நிரப்பப்பட்டிருந்த முறையைப் பார்த்தபோது, அவர்கள் வெறும் பந்தயம் கட்டுபவர்கள் அல்லாமல் தேர்தல் தொடர்பான ஆய்வாளர்களுக்குச் சற்றும் சலைத்தவர்கள் அல்ல என நினைத்தேன். கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளைப் போன்று இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு கட்சியின் வேட்பாளரும் பெறக்கூடிய வாக்குகள் எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்வோரால் கூட கணிக்க முடியாத வகையில் தேர்தல் முடிவுகள் கணிக்கப்பட்டுள்ளன. சில தொகுதிகளில் முன்னிலை வகிக்கும் வேட்பாளர் அல்ல மற்றொரு மாவட்டத்தில் முன்னிலை வகிப்பது. இன்னும் சில வாக்குகள் குறிப்பிடப்பட்டிருப்பது வறுமை மற்றும் செழிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இருந்து கொண்டாகும். இன்னும் சிலர் சாதி மற்றும் மத அடிப்படையில் இருந்து கொண்டு புள்ளடியிட்டிருப்பது தெரிகின்றது.

இந்த தகவல்களைப் பார்க்கும்போது இரத்தினபுரியில் வாக்குகளுக்குப் பந்தயம் கட்டுபவர்கள் வெறும் பந்தயம் கட்டுபவர்கள் அல்ல என்றே தெரிகின்றது. இந்த பந்தயச் சீட்டுக்கள் மூன்று, நான்கினை உன்னிப்பாகப் பார்க்கும் போது, யார் வெற்றி பெறுவார்கள்? யார் முதலில் வருவார்? என்பதை அனுமானமின்றி நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். இரத்தினபுரியில் தேர்தல் பந்தயம் என்பது வெறும் பந்தயம் மட்டும் அன்றி, அதன் மூலம் சிறந்த அரசியல் ஆய்வுகளையும் காட்டப்படுவதோடு, இந்நாட்களில் தேர்தல் பந்தயங்களால் மறைத்து வைக்கப்பட்ட பணம் வெளிவருவதாகவும் தெரிகிறது. எவ்வாறாயினும் 22ஆம் திகதி மதியமாகும் போது இந்த பந்தயங்களில் வெற்றியும் தோல்வியும் தீர்மானிக்கப்பட்டுவிடும். வீடு, வாசல், உடமைகளைப் பந்தயம் கட்டாமல் இலட்சக்கணக்கில் நஷ்டம் அடைவோரும், இலட்சக் கணக்கிலும், கோடிகளிலும் வெற்றி பெறுபவர்களும் இருக்கலாம்.


# பாதுகாப்பு அமைச்சு
# இலங்கை விமானப்படை

## விலைமனுக்கோரல்

### இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்திற்கான
### POOL EXCHANGE OF ENGINE மாற்றுதல்

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு **“இலங்கை விமானப்படைக்கு சொந்தமான AN-32B விமான கப்பற்படைக்கு POOL EXCHANGE OF ENGINE FOR AN-32B AIRCRAFT OF THE SRI LANKA AIR FORCE”** கொள்வனவு செய்வதற்கு தகுதி மற்றும் தகைமைகளைக்கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. கொள்முதல் விபரங்கள் பின்வருமாறு.

| தொ இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | AHQ/23/FP/ANT/1001 | POOL EXCHANGE OF ENGINE FOR AN-32B AIRCRAFT (S/NO H29745Д001) OF THE SRI LANKA AIR FORCE | 2025.03.04 ரூ. 5,940,000.00 | 2024.11.04 | 60,000.00 | 2024.11.05 1100 மணி |
| 02. | AHQ/23/FP/ANT/1002 | POOL EXCHANGE OF PART NO AИ 20Д SERIES 5 ENGINE(S/NO H29115Д062) OF AN-32B AIRCRAFT OF THE SRI LANKA AIR FORCE | 2025.03.04 ரூ. 5,940,000.00 | 2024.11.04 | 60,000.00 | 2024.11.05 1330 மணி |
| 03. | AHQ/24/FP/ANT/1001 | POOL EXCHANGE OF ENGINE FOR AN-32B AIRCRAFT (S/NO H20545D006P1) OF THE SRI LANKA AIR FORCE | 2025.03.04 ரூ. 5,940,000.00 | 2024.11.04 | 60,000.00 | 2024.11.05 1200 மணி |

2. மனுக்கோரலானது **சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB)** இடம்பெறும்.

3. ஆர்வமுள்ள மனுதாரர்கள், **கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சகம், பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே (தொலைபேசி: +94112390719, தொலைநகல்: +94112390720, மின்னஞ்சல்: (procurement@defence.lk)** மூலமாக மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்முதலுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **2024.09.23** ஆம் திகதி முதல் அலுவலக நாட்களில் **0900 மணி முதல் 1500 மணிவரை** மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் **தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத்தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். **மேலும் 0900 மணி முதல் 1500 மணிவரை கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டேயில்** இலவசமாகப் பரீட்சித்துக்கொள்ள முடியும். மனுக்கள் 2025.02.04 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட மனு முன்மொழிவுகள் டெண்டர் அடையாள எண்ணைக் குறிப்பிட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விரைவுதபால் சேவை மூலமாக கையளிக்கப்படுதல் வேண்டும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளத் தேர்வுசெய்யும் மனுதாரர்கள் / மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் நேரத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். நேரிலோ அல்லது நிகழ்நிலை மூலமாக ஏலங்கள் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். கால எல்லை முடிவடைந்த பின்னர் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**கொள்முதல் கிளை,**
**2ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை.**

5. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் கால எல்லைக்கான முதல் எழுத்துமூல கோரிக்கையின் படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு **இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின்** மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் **“பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்”** க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.

6. மனுதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு இலங்கை விமானப்படையின் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

**பிரதான கொள்முதல் அதிகாரி,**
**கொள்முதல் பிரிவு,**
**LL2 மாடி, இலங்கை விமானப்படைத் தலைமையகம்,**
**இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.**

**தொலைபேசி: +94112347694, +94112441044 (நீட்டிப்பு 11902)**
**தொலைநகல்: +94112441553,**
**மின்னஞ்சல்: cpd@slaf.gov.lk, acpot@slaf.gov.lk**

விமானப்படை தலைமையகம்,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.

விமானப்படை தளபதி



# மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம்
# கொழும்புப் பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை ஒன்றில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது recruitment@pgim.cmb.ac.lk மின்னஞ்சல் மூலம் 2024-10-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சல் விடய வரியில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (https://pgim.cmb.ac.lk). பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது தகுதி மற்றும் அனுபவத்தை சரிபார்க்கும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட தேவையான விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதமான சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

### 01. முகாமைத்து உதவியாளர் தரம் III (06 பதவிகள்) Management Assistant Gr. III

**தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.
   - சிங்கள மொழி / தமிழ் மொழி
   - ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   - கணிதம்

**மற்றும்**

2. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல்.
3. பின்வருவனவற்றில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி பிரயோகத்தில் (Computer applications) ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்.
   **மற்றும்**
   இ) computer application packages பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**சம்பளம்** : 01.01.2020 [U MN I (III) பிரகாரம் மாதாந்தம் ரூபா 30725-17x300-35825.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**தெரிவு செய்தல்** : எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயது** : விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### 02. தொழில்நுட்ப அதிகாரி (செவிப்புலம் கட்புலம்) (01 பதவி) Technical Officer (Audio Visual)

**தகைமைகள்:**

I. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது பாடப்பரப்பில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

II. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் நிறுவப்பட்ட நியதிகள் சட்டசபை நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் / இலத்திரனியல் அல்லது கட்புல செவிப்புல நுட்பத் துறையில் NVQ 5 நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கட்புல செவிப்புல வேலைகளில் ஒரு வருட கால அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் மேற்கூறிய (II) (அ) தகைமைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தொலைத்தொடர்பாடல் / இலத்திரனியல் அல்லது கட்புல செவிப்புல நுட்பத் துறையில் தொழில்நுட்பத் தகைமையைப் பெற்றிருத்தல்.

**தெரிவு செய்தல்** : எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயது** : விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : 01.01.2020 [U MT I (III) பிரகாரம் மாதாந்தம் ரூபா 31625- 7x300; 10x355 – 37275.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

### 03. வேலைகள் அத்தியட்சகர்(சிவில்) (01 பதவி) Works Superintendent (Civil)

**தகைமைகள்:**

I. தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா அல்லது இதற்கு நிகரான தகைமை மற்றும் இந்தத் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் நான்கு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**கவனிக்கவும்:** உள்ளகப் பயிற்சிக்கான நான்கு வருட காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

II. தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் அல்லது இதற்கு நிகரான தகைமை மற்றும் இந்தத் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பத்து வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பளம்** : 01.01.2020 [U MN 2 (II) பிரகாரம் மாதாந்தம் ரூபா 37,275 – 18x470-45,735.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**வயது** : விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்தல்** : எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**கவனிக்கவும்:**

1. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
2. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. இந்தப் பதவிகளுக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் ஏற்புடையது.

**பணிப்பாளர்,**
**பட்டப் பின்படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2024-09-22.**

## மலையக மக்களின் காணி, வீட்டுரிமை...

(12 ஆம் பக்கம் பார்க்க)

காத்திரமான பங்களிப்பை செய்துவரும் சட்டத்தரணி, மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் நீண்ட காலமாக ஆழமாக தகவல்களை சேகரித்தும், பல்வேறுபட்ட விடயங்களை வாசித்தும் தனது அனுபவத்தினை முன்மாதிரியாகக் கொண்டு இவ்விடயங்களை ஒரு நூலாக கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும் என்று குறிப்பிட்டார். இந்நூலின் சாராம்சமான விடயங்கள் கீழ்கண்டவாறு தொகுக்கப்பட்டுள்ளதுடன், முழுமையான விளக்கங்களுக்காக நூலை பெற்றுக்கொள்வதற்காக 0773884113 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மலையக

மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை சார்ந்து அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகள்.

➢ மலையக மக்கள் கூலித் தொழிலாளர்களாக கருதப்பட்ட நிலையில் அவர்களுக்கு காணியுடனான வீட்டுரிமையை வழங்க பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் முன்வரவில்லை. அத்தோடு மக்கள் வாழும் குடியிருப்பு பிரதேசங்கள் மற்றும் பெருந்தோட்டப் பயிர்கள் அத்துடன் அதன் முகாமை பிரதேசங்கள் என்ற வேறுபாடு பேணப்படவில்லை.

➢ பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் பெருந்தோட்ட உடைமையாளர்களைச் சார்ந்திருந்த நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியுடனான வீட்டுரிமையை வழங்க தலையீடு செய்யவில்லை.

➢ பெருந்தோட்ட மக்களின் குடும்பங்களுக்கான வீட்டுரிமை 1942ஆம் ஆண்டு வரையில் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

➢ பெருந்தோட்டங்களில் வாழும் மக்களின் குடும்பமொன்றுக்கு ஒரு லயன் அறையை பெருந்தோட்ட உடைமையாளர்கள் வழங்க வேண்டும் என்ற நிலை 1942ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்டது.

➢ தோட்டங்களில் தொழில் செய்பவர்கள் தவிர வேறு மக்கள் அனைவரும் அனுமதியின்றி குடியிருப்பவர்கள் என்ற வகையில் தாம் வசிக்கும் லயன் வீட்டிற்கு உடைமை உரித்தை கொண்டவர்கள் அல்ல.

➢ தோட்டங்களில் தொழில் செய்பவர்கள் மற்றும் செய்யாதவர்கள் தோட்டக் காணியை உடைமைக் கொள்வதற்கான உரிமையை பெற்றவர்கள் அல்ல.

➢ பெருந்தோட்டக் காணிகளில் ஏக பெரும்பான்மையான காணிகள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனிநபர்களுக்கும் கம்பனிகளுக்கும் 1970களின் ஆரம்பம் வரை சொந்தமாகவே காணப்பட்டன.

➢ பெருந்தோட்டக் காணிகளும் பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புக் காணிகளும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு 1972ஆம் ஆண்டின் பின்னர் சொந்தமாகின.

➢ காணி சீர்திருத்த சட்ட ஏற்பாட்டைக் கொண்டு 20 பேர்ச்சஸ் அளவான காணியை தோட்டங்களில் வாழ்ந்த ஒவ்வொரு குடும்பமும் பெற்றுக் கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் இருந்தும் அது அக்காலத்திலும் 1972ஆம் ஆண்டு பிற்பட்ட காலத்திலும் கருத்திற் கொள்ளப்படவில்லை.

➢ பெருந்தோட்டக் காணிகளும் பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புக் காணிகளும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் சில பொது கூட்டுத்தாபனங்களுக்கு நிர்வகிப்பதற்கு 1975ஆம் ஆண்டு தொடக்கம் 1980 வரை வழங்கப்பட்டன.

➢ காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான பெருந்தோட்டக் காணிகளும் பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புக் காணிகளும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் 1980 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டன.

➢ குறித்த கூட்டுத்தாபனங்களுக்கு 1990களின் ஆரம்பத்தில் ஒப்படைக்கப்பட்டு நிர்வகித்து வந்த பெருந்தோட்டக் காணிகளும் பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புக் காணிகளும் 20 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் தனியார் கம்பனிகளுக்கும் நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டன.

➢ ஏழு பேர்ச்சஸ் காணித் துண்டில் 1995 தொடக்கம் வீடுகள், வீட்டுக் கடன் அடிப்டையில் கட்டிக்கொள்ளப்பட்ட போதும்; அவை கட்டப்பட்டுள்ள காணிகள் தொடர்ந்தும் அரசுக்கு சொந்தமான காணிகளாகும்.

➢ பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் பெருந்தோட்டக் காணிகளில் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது அரசக் காணிகள் (உடைமை மீட்டல்) என்ற சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் குற்றமுறையான அத்துமீறல், குற்றம் புரியப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் அம்மக்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை உரிய தரப்பினரால் எடுக்கப்பட்டு வெளியேற்றல் மற்றும் தண்டனை வழங்கல் இடம்பெறுகிறது.

➢ பெருந்தோட்டக் காணிகள் மற்றும் மக்கள் வாழ்ந்து வரும் காணிகள் அரசு நிறுவனங்களுக்கு சொந்தமாக இருந்த போதும் அக்காணிகள் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் நீண்ட கால குத்தகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையை காரணமாக மலையக மக்களின் வீடு மற்றும் காணி உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

➢ பிரஜைகள் என்ற வகையில் மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமையை உறுதி செய்வதனை சாத்தியப்படுத்த நடைமுறையில் நிலவும் சட்டங்களை பயன்படுத்தி அல்லது/ அத்துடன் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுடனான குத்தகை ஒப்பந்தங்களில் மாற்றத்தை அல்லது திருத்தங்களை மேற்கொள்ள அரச தரப்பில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

➢ மலையகத் தமிழர்கள் பிரஜைகள் என்ற வகையில் வீட்டுக்கான காணியுரிமை மற்றும் தொழில் சார்ந்து காணிகளை பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்கான சட்டங்களும் ஏற்பாடுகளும் இருந்த போதிலும் அரசு இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. இதனூடாக மலையக மக்கள் காணி மற்றும் வீட்டுரிமை பிரச்சினையில் பாரபட்சமாக தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றனர்.

➢ குத்தகை ஒப்பந்தங்களுக்கு உட்படாத நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளில் வாழும் மலையக மக்களின் குடியிருப்பு பிரதேசங்கள், வீட்டுரிமைகள் மற்றும் தொழிலுக்கான காணிகளை உரிய சட்டங்களை பயன்படுத்தி உறுதி செய்தல் மிகவும் இலகுவான பணி என்ற போதிலும் இதுவரை அதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் கூட எடுக்கப்படவில்லை.

இதனூடாக மலையக மக்களின் நல்வாழ்வை நோக்காக கொண்டு அத்துடன் அவர்கள் சுதந்திர விவசாயிகளாக நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பது உறுதி செய்யப்படவில்லை. தோட்டத்தில் தொழில் செய்யும் மற்றும் செய்யாத அனைத்து மலையக மக்களும் தொடர்ந்து தோட்டக் கட்டமைப்பிற்குள் அடைக்கப்பட்டவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையினால் பிரஜைகளுக்குரிய சிவில் உரிமைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மறுக்கப்பட்டவர்களாக வாழும் நிலை காணப்படுகிறது.

➢ தனியார் தோட்டங்களில் வாழும் மலையக மக்கள் அவர்களுக்கான விசேடமானதும் குறிப்பானதுமான பிரச்சினைகள் காரணமாக குடியிருப்பு சார்ந்த பாரிய நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

➢ இனக் கலவரம் மற்றும் வேறு அழுத்த காரணிகள் காரணமாக தோட்டங்களை விட்டு வெளியேறி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேங்களில் வாழும் மலையகத் தமிழர்களில் சிலர் அப்பிரதேசங்களில் சொந்த காணி, வீடு அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

➢ மலையக மக்களின் வீட்டுரிமை மற்றும் காணி உடைமை சார்ந்த வழக்குகளில் இலங்கையின் மேல்நிலை நீதிமன்றங்கள் அரசியல்சாசனத்தில் அரசக் கொள்கை வழிகாட்டி கோட்பாடுகள் மற்றும் கடமைகள் என்ற ஆறாவது அத்தியாயத்தில் பிரஜைகளின் வீட்டுரிமை மற்றும் பொருளாதார சுபீட்சத்தை உறுதி செய்தல் தொடர்பான ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு, அத்துடன் வரலாற்று ரீதியாக மலையக மக்களின் வீட்டுரிமை மற்றும் காணி உரிமை தொடர்பான குறிப்பான பிரச்சினைகளை கருத்திற் கொண்டு நோக்கவில்லை.

மாறாக, தொழில் உறவுகள் மற்றும் ஒப்பந்த சட்ட அடிப்படைகளில் இருந்தே குறித்த வழக்கு காரணிகள் தீர்க்கப்பட்டுள்ளன.

முடிவுரையில், மலையக மக்கள் பிரித்தானியர்கள் உருவாக்கிய பெருந்தோட்டங்கள் என்ற கட்டமைப்புக்குள் அடைக்கப்பட்டவர்களாக அதாவது மக்கள் வாழும் குடியிருப்பு பிரதேசங்கள் மற்றும் வர்த்தக பயிர்கள் மற்றும் அது சார்ந்த விடயங்களுக்கான காணிகள் என்ற வேறுபாடுகள் எதுவும் இன்றி வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையிலும் பிரஜா உரிமையை ஒரு இனக்குழுவாக ஏறத்தாழ ஐந்து தசாப்த காலம் இழந்தவர்கள் என்ற ரீதியிலும் தொடர்ந்தும் காணியுடனான வீட்டுரிமை மற்றும் தொழிலுக்கான காணியுரிமை மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். காலனித்துவ ஆட்சியில் அடிமை முறைக்கு மாற்றீடாக புதுவகை அடிமை முறையை அதாவது நவீன அடிமை முறைமையை தாபிக்க உருவாக்கப்பட்ட ஒப்பந்தக் கூலி முறையை அடிப்படையாகக் கொண்ட அடைக்கப்பட்ட பெருந்தோட்டக் கட்டமைப்பு முறையானது சுதந்திர பிரஜை, சுதந்திர தொழிலாளர்கள் மற்றும் சுதந்திர உழைப்பு என்ற நவீன சிந்தனைகளுக்கு எதிரானது என்ற நிலையிலும்கூட இது தொடர்ந்து நிலவி வருகிறது.

1972ஆம் ஆண்டிற்கு பின்னர் மலையக மக்கள் வாழ்ந்த ஏக பெரும்பான்மை காணிகள் அரச காணிகளாக இருந்த நிலையில், மலையக மக்களின் காணி வீட்டுரிமை பிரச்சினைக்கு முதற்கட்ட தீர்வுகளை வழங்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் இருந்தும் அத்தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

1992ஆம் ஆண்டின் பின்னர் பெரும்பாலான பெருந்தோட்டங்கள் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மற்றும் ஏனைய கம்பனிகளுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், தனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டாலும் காணி உரித்துடன் நிலத்தின் விஸ்தீரணம் ஏழு பேர்ச்சுகள் என்றபோதும் கூட வீடமைப்பு என்பது எட்டாக் கனியாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

என்றாலும், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மற்றும் ஏனைய கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்படாத பெருந்தோட்டக் காணிகள் தொடர்ந்தும் எவ்வித சட்டத் தடைகளையும் கொண்டிராத அரசக் காணிகள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை என்ற அரச நிறுவனங்களுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றன.

---

Agriculture Modernization Project

THE WORLD BANK

Funded by The European Union

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### கமத்தொழில் அமைச்சு

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்**

**சர்வதேச அபிவிருத்திச் சங்க கடன் இல.: 5873 LK**

## கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் சீத்தாப்பழ சேகரிப்பு நிலையம் மற்றும் இயந்திராதிகள் நிறுத்துமிடத்தை நிர்மாணித்தல்

**ஒப்பந்த இலக்கம்: LK-MOA-PMU-447637-CW-RFB**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | தேவைப்படும் விலைக் கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைக்கோரல் பிணை முறித் தொகை | செல்லுபடிக் காலம் |
| LK-MOA-PMU-447637-CW-RFB | கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் சீத்தாப்பழ சேகரிப்பு நிலையம் மற்றும் இயந்திராதிகள் நிறுத்துமிடத்தை நிர்மாணித்தல் | 42 | 2 மாதங்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் நிர்மாணம் | 630,000.00 | 2024-12-25 |

3. விலைமனுதாரர்கள் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கோரல் 2024-12-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் 630,000.00 ரூபாவிற்கான விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவார். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.

4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.

5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112877559/0113651102) மற்றும் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 11ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கல்முனை, அம்பாறை வரம்பு, கட்டிடங்கள் திணைக்களம், பிரதான பொறியியலாளர் அலுவலகத்தில் 2024 ஒக்டோபர் 01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.

8. விலைமனுக்கள் 2025 ஜனவரி 17ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 11ஆம் திதகி வரை பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு, செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

11. விலைமனுக்களை 2024 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்டப் பணிப்பாளர், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**2024 செப்டெம்பர் 20ஆம் திகதி.**

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER aDz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

---

## இது எங்கள் பெருந்தோட்டம்

சோகத்தில் ஒரு சுற்றுலா
இது கனவல்ல
கல்லறையாகி விட்ட
எம் தோட்ட நினைவு
ஆறில்லா தோட்டம் தான் ஆனால்
நீரில்லா தோட்டமல்ல
அழகிற்கு குறைவில்லை
அன்னை மடி சுகத்தை
ஆறுதலாய் தரும் தோட்டம்
தேயிலையும் கொக்கோவும்
தென்னையும் இறப்பரும் மிளகும்
கோடியாய் கொட்டித் தரும்
குபேரன் கடைக் கண்
பட்ட தோட்டம்
பள்ளி சென்று ஸ்டோர்
பாதைவழி நடந்துவர
புதுத் தெம்பு பிறந்து வரும்
பாதை இரு மருங்கும்
அன்னாசிப் பழத் தோட்டம்
வாசமும் வனப்பும்
பூ வனமாய் மாறிவிடும்

நெடுந் தொலைவில்
நடந்து வர
பதமாய் வாட்டமிட்டு
நீர் பிரித்து நிறம் மாறி
இதமான தேத் தூளின்
இனிய மனம் நாசியில்
குடியேறும்
பொட்டலில்
பச்சை நிற மிளகு மணி
பதமாய் காய்ந்து வரும்
உயர்வாக விலைபோக

கூந்தல் ஏறா கோப்பி மலர்
வாசமுடன்
கொள்ளை அழகுடனே
கொலுவிருக்கும் செடி முழுக்க

வீடு சென்று பசி யாறி
நிற்கையிலே
அன்னாசிப் பழச்சாறும்
தேயிலையின் நறுமணமும்
சேர்ந்ததொரு ஏப்பம் வரும்

கொக்கோ பழம் பழுத்தால்
துரைசாணி அக்காவின்
நினைவு வரும்
ஓட்டு லய ஆட்டு மந்தை
மேய்ச் சலுக்காய் அணிவகுக்கும்
மேட்டு லய பசுக்களில்
பால் கறந்து மாளாது
பசு நிற்கும்
மதுரை வீரன் சாமிக்கு
ஆட்டுக் கிடா படையல்
ஊமையன் கோயிலுக்கு
ஊர்க் கோழி படையல்
ரோதமுனி சாமிக்கு
ஐப்பசியில் படையல்
நேர்த்திக் கடன் தீர
இது எங்கள் பெருந்தோட்டம்
மனதில் மறையாத அலையாட்டம்

*கேகாலை*
***எஸ். கிருஷ்ணன்...***

## மாயத்தின் காதல்

நிஜம் இல்லா காதல் கனவாய் வாழ
நொடியில் நெஞ்சமெல்லாம்
சுகமே ஆடும்.
அவள் சொன்ன வார்த்தை
தேனென தோன்றும்
அது சொர்க்கமென்று
நம்பினேன் நானும்.

மாயம் மலரும் கண்கள் மூடி
மனதை மயக்கி கனவுகள் புனையும்
சிறகுகள் கொண்டிருக்கும் காதல்
சிறு காற்றில் கூட சிதைந்து போகும்.

நிழலின் பின்னால் நிழலாய் வரும்
நிஜம் இல்லா காதல் நெஞ்சமாகும்.
சில நேரம் வாழ்வின் பாடமாக
சேர்ந்துவிடும் அனுபவமாய் அது.

***முஹம்மது எஸ். முகுசீன்...***
*அவுஸ்திரேலியா*

## எமனை எதிர்பார்த்து....! அவள் ஒரு மூதாட்டி....!

தொண்ணூறு கடந்துவிட்ட
தொன்மையின் சின்னம்!
கணவனை...ஒரே மகனை....
கண் முன்னே இழந்துவிட்ட
துயரத்தின் உறைவிடம்!

வாழும் சமூகத்தில்
வளரும் பிஞ்சுகளை
அறிவூட்டி வளப்படுத்த
ஆர்வம் கொண்ட ஆசான்!
ஆலயமும் நூலகமும்
அமைத்து காத்தவள் தான்!

முதுமையில் தனிமையில்
அந்திமப் பொழுதுகள்..!
மாதத்தில் ஓரிரு நாள்
போகின்ற வேளையிலே
பூரிக்கும் முதுமை முகம்!
தொலை பேசி அழைப்பும் தான்!

"எத்தனை பிள்ளைகள்?"
"என்ன செய்கிறார்கள்?"
நிமிடத்துக் கொருதடவை
நிறுத்தாமல் கேட்கின்றாள்!
வெறுக்காத பொறுமையுடன்
சொல்லுகிறேன் மீள..மீள..!
முதுமையின் வலிகளினை
முன்னரே புரிந்ததாலே..!

***இரா.ஜெயக்குமார்...***

## மலரும் மங்கையும்

மாலைக் கதிரவன் மயங்கும் வேளை
அந்தி மந்தாரமும் மெல்லிதழ்
விரிக்கிறது
மங்கையும் அப்போ நீராட
வருகிறாள்
மலரின் நறுமணம் காற்றில்
கலக்கிறது
மதுவுண்ண வண்டும் துடியாய்
துடிக்கிறது
மலரைத்தேடி வண்டும் வட்டமிடுகிறது
மங்கையின் முகத்தை மலரென்று
எண்ணியவண்டு
முகத்தை சுற்றி சுற்றி வட்டமிட்டது.

நாணத்தால் வெட்கி ஏமாந்த
வண்டுபோல்
தன் வரவுக்காய் காத்திருக்கும்
அவளை நாடி
நாயகனும் பொடிநடையாய்
வந்தானங்கே
அய்யன் வரவறிந்த பேதையவள்
நகை கொண்டு மெதுவாக
மறைந்தான் மலர்அடியில்
பூவையவள் உடல்வாடை தனை
உணர்ந்து
நாயகியே வேண்டாமிந்த
விளையாட்டு
விரைவாய் வந்துவிடு கூடி
மகிழ்ந்திடுவோம்

இதழ் விரித்து மணம் கமழும்
மலரைப் போல்
நானும் மொட்டவிழ்ந்து மணம்வீசும்
மங்கைதானே
இங்கு மதுவுண்டு மகிழ வருவாய்
நீயென
மாலைப் பொழுதின் சாயலிலே
மயங்கிவிட்டேன் நானும்
இதயத்தில் இடம் தந்தேன் உனக்கு
அதில் குடியமர இன்னும் நாள்
வரவில்லை
இளமையின் துடிப்பை நானும்
அறிவேன்
அருகில் வா அணைத்துக் கொள்ள

***கு. சண்முகம்...***
*வந்தாறுமூலை*

# பாதுகாப்பு மற்றும் சூழல் நிலைபேற்றியல் அர்ப்பணிப்பு மீளவலியுறுத்தியுள்ள Pelwatte Dairy Industries Ltd



இலங்கையில் பாலுற்பத்தித் துறையில் முன்னணி நாமமாகத் திகழ்ந்து வருகின்ற Pelwatte Dairy Industries Ltd, பாதுகாப்பு மற்றும் சூழல் நிலைபேற்றியல் கலாசாரத்தை ஊக்குவிப்பதில் தனது வலுப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பைக் காண்பிக்கும் வகையில், பத்திரிகையாளர் மாநாடொன்றை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. பாதுகாப்பான பணிச்சூழலை வளர்த்து, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் உள்நாட்டு மற்றும் சர்வதேச தராதரங்களுடன் ஒன்றிணையும் வகையில் தனது தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வதில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு இப்பத்திரிகையாளர் மாநாட்டு நிகழ்வின் போது வலியுறுத்தப்பட்டது.

தனது அதியுச்ச பாதுகாப்பு மூலோபாயத்தின் ஒரு அங்கமாக, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Occupational Health and Safety OH&S) குறித்த சர்வதேச தரநடைமுறையான ISO 45001 இனை Pelwatte Dairy உள்வாங்கியுள்ளது. இச்சான்று அங்கீகாரமானது ஊழியர்களை பாதுகாப்பினை மேம்படுத்தி, பணியகத்தில் எழுகின்ற ஆபத்துக்களைக் குறைத்து மற்றும் சிறப்பான, பாதுகாப்பான பணி நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்கான கட்டமைப்பினை ஸ்தாபிக்கின்றது. தலைமைத்துவம் மற்றும் ஊழியர் பங்கேற்பினை ஊக்குவிப்பதனூடாக பாதுகாப்பான கலாசாரமொன்றை ஊக்குவித்தல், தொழிற்சாலை கட்டளைச் சட்டம் போன்ற உள்நாட்டுச் சட்டங்கள், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (International Labour Organization ILO) போன்றவற்றின் சர்வதேச தர நடைமுறைகள் ஆகியவற்றுடன் சட்ட மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாட்டை உறுதி செய்தல் ஆகியன இத்தரநடைமுறையின் கீழான பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

# குருநாகலில் மார்க்ஸ்பென் ஹோல்டிங்ஸின் 'ஸ்மார்ட் ஹப்'



DOMA CTP20 தானியங்கு அரிசி ஆலையின் ஒரே இறக்குமதியாளரும் விநியோகஸ்தருமான மார்க்ஸ்பென் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மிக உயர்ந்த தரமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஒரே கூரையின் கீழ் நுகர்வோருக்கு வழங்குவதற்காக தனது புத்தம் புதிய காட்சியறையை குருநாகலில் திறந்து வைத்துள்ளது. இந்த அதிநவீன 'ஸ்மார்ட் ஹப்' இல.389 பமுனுவெல, குருநாகலில் அமைந்துள்ளது. புதிய ஸ்மார்ட் ஹப் 'உங்கள் எதிர்காலத்தை நாங்கள் வடிவமைக்கிறோம்' என்ற கருப்பொருளைஉள்ளடக்கி வாடிக்கையாளர்கள் சிறந்த தரமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பெறுவதை உறுதி செய்கிறது.

மார்க்ஸ்பென் குழுமத்தின் தலைவர் திரு. அமில் கலங்க தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. பணிப்பாளர்களான திரு. சுரேஷ் கலங்க மற்றும் திருமதி. தினலி கலங்க, குழுமத்தின் பொது முகாமையாளர் திரு.துலீப் குணசேகர உட்பட ஏனைய உறுப்பினர்களும் பணியாளர்களும் இத்திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

திறப்பு விழாவில் பேசிய மார்க்ஸ்பென் குழுமத்தின் தலைவர் திரு அமில் கலங்க, புதிய காட்சியறையில் வாடிக்கையாளர்கள் அணுகக்கூடிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சுருக்கமாக விளக்கினார். 'இந்த புதிய மையமானது தானியங்கி அரிசி ஆலை, நெல் உலர்த்தும் இயந்திரங்கள், அரிசி வரிசைப்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் காய்ச்சும் இயந்திரங்கள் போன்ற உயர் தொழில்நுட்ப தயாரிப்புகளை உள்ளடக்கியது. எங்கள் போர்ட்ஃபோலியோவில் விவசாயத் தொழிலுக்கு அவசியமான பல தயாரிப்புகளும் உள்ளன. இந்த இயந்திரங்களை மாத்திரம் உள்ளடக்கியது மட்டுமல்லாமல், எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்குப் பிந்தைய சேவைகளையும் நாங்கள் வழங்குவோம்' என்று அவர் கூறினார்.

# 100% எனிடைம் டேட்டா பிளான்களை அறிமுகம் செய்துள்ள SLT–MOBITEL




வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிகளை சேர்ப்பதற்கான அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்து SLTMOBITEL, புத்தம் புதிய 100% எனிடைம் டேட்டா பிளான்களை அறிமுகம் செய்துள்ளது. டேட்டா Rollover உள்ளம்ச அனுகூலத்துடன் இந்த பிளான்கள் அமைந்துள்ளன.

செலுத்தும் பணத்துக்கு உச்சப் பெறுமதியை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், 100% எனிடைம் டேட்டா பிளான்களினூடாக, பரந்தளவு வாடிக்கையாளர்களின் வெவ்வேறு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் உயர் நெகிழ்ச்சித்தன்மையை பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. SLTMOBITEL இன் நாடளாவிய ரீதியில் பரந்த 4G வலையமைப்பினூடாக, HD தர வீடியோக்கள், பாடல்கள், களிப்பூட்டும் அம்சங்கள் மற்றும் பல விடயங்களுக்கு உயர் வேகங்கள் வழங்கப்படுகின்றன.

டேட்டா பிளான்களினூடாக முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு தமது டேட்டா பாவனையின் மீது அதிகளவு கட்டுப்பாட்டை வழங்குவதுடன், சகல பாவனையாளர்களுக்கும் சிறந்த பெறுமதி மற்றும் மேம்படுத்தப்பட்ட அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்கான SLTMOBITEL இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. மேலும், புத்தாக்கமான டேட்டா Rollover உள்ளம்சத்தினூடாக, வாடிக்கையாளர்களுக்கு அதே பிளானை மீளச் செயற்படுத்தும் போது, தாம் பயன்படுத்தியிராத டேட்டாவை முன்கொண்டு செல்வதற்கு வாய்ப்பளித்து, தமது கொள்வனவுகளுக்கு உயர் பெறுமதியை உறுதி செய்கின்றது. வாடிக்கையாளர்களுக்கு தற்போது டேட்டா விரயமாகிவிடாது என்பதை அறிந்து, தடங்கலகளில்லாத இணைப்புத்திறனை, மன நிம்மதியாக அனுபவிக்க முடியும்.

# ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் பிராட்பி ரக்பி விருதினை வென்ற திரித்துவக் கல்லூரியை கௌரவித்தது NDB




மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 78 வது பிராட்பி கேடயத்தின் இரண்டாவது கட்ட போட்டி செப்டெம்பர் 7 ஆம் திகதி பல்லேகல திரித்துவக் கல்லூரி ரக்பி விளையாட்டரங்கில் நடைபெற்றது. விறுவிறுப்பான மற்றும் கடினமான போட்டியின் பின்னர், திரித்துவக் கல்லூரி ரோயல் கல்லூரிக்கு எதிராக 23-22 என்ற குறுகிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திரித்துவக் கல்லூரியானது கடந்த ஒரு தசாப்த காலத்தில் வென்ற முதல் பிராட்பி கேடயம் இதுவாகும்.

இந்த வெற்றியானது முதல் கட்ட போட்டியில் அவர்களின் 1716 எனும் வெற்றியுடன் இணைந்து, வரலாற்று வெற்றியாக பதிவு செய்யப்பட்டது.

திரித்துவக் கல்லூரியின் ஷான் அல்தாஃப் அவரது சிறப்பான ஆட்டத்திற்காக NDB ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை கொண்டாட்டத்தின் சிறப்பம்சமாக அமைந்தது . NDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பணிப்பாளர் கெலும் எதிரிசிங்க மற்றும் NDB வங்கியின் சிரேஷ்ட உப தலைவர் சஞ்சய பெரேரா ஆகியோரால் ஷானுக்கு விருது வழங்கப்பட்டது. வளர்ந்து வரும் திறமைகளை ஆதரித்து அங்கீகரிப்பதில் NDB வங்கி பெருமிதம் கொள்வதுடன் அவரது வெற்றியின் அங்கீகாரத்தின் ஒரு பகுதியாக, இளம் வயதினருக்காக வங்கியினால் வடிவமைக்கப்பட்ட சமீபத்திய டிஜிட்டல் தீர்வான NDB பிக்சலும் ஷானுக்கு வழங்கப்பட்டது.

NDB பிக்செல் [Pixel]என்பது ஒரு தனித்துவமான டிஜிட்டல் சேமிப்புக் கணக்காகும், இது இளம் வயதினரை நிதியியல் சுதந்திரத்துடன் மேம்படுத்துவதையும் சிறு வயதிலிருந்தே சேமிப்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்குக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ கல்வியகத்துடன் கைகோர்க்கும் Cinnamon Hotels & Resorts

சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமியுடன் (SHMA), Cinnamon Hotels & Resorts கைகோர்த்து, Cinnamon Hospitality Academy அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத் தரம் வாய்ந்த சுவிஸ் விருந்தோம்பல் கல்வியை தொழிற்பயிற்சி கல்வி மற்றும் பயிற்சியினூடாக (VET), நிபுணத்துவ டிப்ளோமாவை இலங்கையில் பெற்றுக் கொடுத்து, இலங்கையில் விருந்தோம்பல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவது இந்த கைகோர்ப்பின் இலக்காக அமைந்துள்ளது.

Cinnamon Hospitality Academy இல் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட EHL தகைமையை பெற்றுக் கொள்வதற்கான பிரத்தியேக வாய்ப்பை வழங்குவதாக அமைந்துள்ளது. உலகின் முதல் தர விருந்தோம்பல் முகாமைத்துவ பல்கலைக்கழகமாக EHL தரப்படுத்தப்பட்டுள்ளது. சுவிஸ் ஆற்றல் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட EHL பாடவிதானம், உயர் தகைமை வாய்ந்த நிபுணர்களை தயார்ப்படுத்துவதில் புகழ்பெற்றுள்ளதுடன், தொழிற்துறை தொடர்பான பிரயோக திறன்கள் மற்றும் ஆழமான புரிதல்கள் ஆகியவற்றை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

18 மாத முழுநேர நிபுணத்துவ டிப்ளோமா கற்கைநெறியான EHL இன் VET கற்கை அமைந்திருப்பதுடன், ஒரு வருட கால தொழிற்பயிற்சி அனுபவத்தை வழங்கி, மொத்தமாக இரண்டரை வருட கால அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

# விவசாயத்துக்கு நிலைபேறான நைதரசன் நிர்வகிப்பு நிபுணர்களின் அமர்வை முன்னெடுத்த பவர்




விவசாயத்தில் நைதரசன் பாவனையினால் ஏற்படும் சூழல் மற்றும் பொருளாதார பாதிப்புகள் தொடர்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் கண்டறியப்பட்ட விடயங்களின் பிரகாரம், நிலைபேறான வகையில் நைதரசன் முகாமைத்துவத்துக்கான அவசர தேவை என்பது இலங்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும். சுப்பர் யூரியா தொடர்பான தொழில்நுட்ப அமர்வை, இலங்கையின் விவசாயத்துறையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள பவர் என அறியப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு கோல் ஃபேஸ் ஹோட்டலில் செப்டெம்பர் 4ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட இந்த அமர்வின் போது, துறையின் இரு நிபுணர்களான பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பயிர் விஞ்ஞான பிரிவின் பேராசிரியர். எஸ்.பி.நிஸ்ஸங்க மற்றும் Innovar Ag, LLC இன் உப தலைவரும் Kansas அரச பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறையின் முன்னாள் உதவி பேராசிரியருமான ரே அசேபெடோ ஆகியோர் கலந்து கொண்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தனர்.

பவர் பிரதம நிறைவேற்று அதிகாரி/முகாமைத்துவ பணிப்பாளர் ரொல்ப் பிளாசர், விவசாய செயற்பாடுகளுக்கான பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்/பணிப்பாளர் ஜனக குணசேகர மற்றும் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தை சேர்ந்தவர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் FAO ஸ்ரீ லங்காவின் சிரேஷ்ட விவசாய நிபுணர் கலாநிதி. டபிள்யு. எம். டபிள்யு. வீரகோன் அவர்களும் அடங்கியிருந்தார். இவர், விவசாய முன்னாள் பணிப்பாளர் நாயகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உயிரியல் பரம்பல் மீளமைப்பில் தனது முயற்சிகளை உறுதி செய்கின்றது Star Garments Group



இலங்கை வருடாந்தம் 8000 ஹெக்டெயர்கள் வீதம் வனாந்தர அழிப்புக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளது. உலகின் மழைக் காடுகளில் 2030 ஆம் ஆண்டளவில் 10 சதவீதம் மாத்திரமே எஞ்சியிருக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

Star Garments Group (“Star”) தனது நிலைபேறாண்மை மூலோபாயத்தின் அங்கமாக, தனது தொழிற்சாலை மற்றும் அலுவலக வளாகங்களில் உயிரியல் பரம்பலை மீள நிறுவுவதில் கவனம் செலுத்தியுள்ளது.

2023 உலக கடல்புல் தினத்துடன் உயிரியல் பரம்பல் மறுசீரமைப்பு பணிகளுக்கான தனது அர்ப்பணிப்பை Star ஆரம்பித்திருந்தது.

3 ஹெக்டெயர்களில் கண்டல்தாவரங்களை மீளுருவாக்கவும் உறுதியளித்திருந்தது. சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களுக்கிடையிலான பகுதியில் அமைந்துள்ள ஆனவிழுந்தாவ ரம்சார் ஈரநில காப்பக பகுதியில் இந்த பணிகளை மேற்கொள்ள முன்வந்திருந்தது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், வனாந்தர பாதுகாப்பு திணைக்களம், இலங்கை கடற்படை, வனஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS) மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து உயிரியல் பரம்பல் மீளநிறுவும் பயணத்தை Star முன்னெடுத்திருந்தது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான கொள்கைகளைப் பின்பற்றி இயற்கையான முறையில் கண்டல்தாவரங்கள் மீளுருவாவதை துரிதப்படுத்துவதில் கவனம் செலுத்தியிருந்தது. இந்தத் திட்டத்துக்கு, 2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கான UN Decade of World Restoration Flagship விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"முற்போக்கு இலக்கிய செம்மல் கே. கணேஷ் நூற்றாண்டு விழா"

# வல்வெட்டித்துறையில் இருந்து காரைக்காலுக்கு ஜீவாவை படகில் அழைத்துச் சென்ற கே. கணேஷ்!

## இலக்கிய முகத்தைப் போலவே செய்து முடிக்கும் அறம்சார் முகமும் அவருக்கிருந்தது



பயிற்றப்படுவதன் மூலம் மாத்திரம் எழுத்தாளர்கள் படைப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர் உருவாக்கப்படுவதில்லை. இயல்பிலேயே இத்துறைகளில் ஆர்வமும், திறமையும் கொண்டவர்கள் மாத்திரமே பயிற்றப்படுவதன் மூலம் பட்டை தீட்டப்பட்டவர்களாக பிரகாசிக்க முடியும்.

ஆசிரியர்களான சிவகுருநாதன், வீரகேசரி வாஸ், தினபதி சிவநாயகம், ரட்ணசிங்கம் ஆகியோர் ஊடகக் கல்லூரிகளில் பயின்றவர்கள் அல்ல.

தெளிவத்தை ஜோசப், செங்கை ஆழியன், எஸ்.பொ. தெனியன் ஆகிய படைப்பாளர்கள் சுயம்புவாக உருவானவர்கள். வித்தைகளில் ஒருவன் சிறந்து விளங்குகிறான் என்றால் அவனுள் இயற்கையாகவே அது உள்ளது என்று பொருள். இது அப்படியே தலாத்துஓயா கணஷுக்கும் பொருந்தும்.

இவரது பெற்றோர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தத்தமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். பெற்றோராகிய கருப்பண்ணபிள்ளை – வேலூரம்மாள் தம்பதிகளின் ஏகபுத்திரனாக 1920 ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் திகதி கண்டி அம்பிட்டியவில் தலைப்பின்னாவ தோட்டத்தில் பிறந்தார்.

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறியவர்களை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணியாற்றுவதற்காக ஆங்கிலேயரால் கண்டிச் சீமைக்கு அழைத்துவரப்பட்டவர்கள். மலையக தமிழர் என்றதும் அனைவருக்கும் நினைவுக்கு வருவது. இச் சமூகத்தின் பல்கிப் பெருகிற வழித் தோன்றல்களே. தோட்டங்கள், கிராமங்கள், நகரங்கள் என எங்கும் பரந்து வாழ்கிறார்கள். இச் சமூகத்துக்கென சங்கங்கள், கட்டமைப்புகள் உள்ளன.

இந்தியாவின் கண்காணிப்பும், அக்கறையும் உள்ளது. மேலும் இச் சமூகத்துக்கென தேசிய அளவில் ஓர் அரசியலும் உள்ளது.

இரண்டாவது பிரிவினர் மன்னர் காலத்திலும், அந்நியர் ஆட்சிக் காலத்திலும் இலங்கை வந்து குடியேறிய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் கன்னடியர்களும், தெலுங்கர்களும், மலையாளிகளும் இவற்றுள் அடங்குவர். இவர்கள் அனைவருமே தமிழ் பேசக்கூடியவர்கள். ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனும் தமிழ் பேசும் தெலுங்கு குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான்.

அரசர் காலத்தில் மன்னர்களின் உதவியாளர்களாக, ஆலோசகர்களாக சமயப் பணியாற்றுவோராக, படைவீரர்களாக, சமைத்தல், மழித்தல், சலவை செய்தல் போன்ற அரச குடும்பத்தின் அத்தியாவசிய காரியங்களைச் செய்பவர்களாக இத் தமிழர்கள் இலங்கை வந்தார்கள். இத்தகையோர் கண்டி அரசினால் குடியமர்த்தப்பட்டிருந்த இடம் இன்றைக்கும் கண்டி நகரில் மலபார் வீதி என அழைக்கப்படுகிறது. மன்னராட்சிக் காலப் பகுதியிலும் கோட்டே ராஜ்ஜியத்திலும் காலி துறைமுகப் பகுதியிலும் பல தமிழர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் குறிப்பிடத்தக்கோர் அரசர்களால் அழைத்துவரப்பட்டவர்கள். அரசர்கள் அவர்களுக்கு அரச பட்டங்களை வழங்கினார்கள்.

பின்னர் இப்பட்டங்களாலேயே இவர்களும் இவர்களின் சந்ததியினரும் அழைக்கப்பட்டனர். இலங்கையின் பிரபலமான, அரசியல் முன்னணி வகித்த குடும்பங்களின் வேர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவை. இக் குடும்பத்தினரின் பெயர் முன்னெழுத்துகளை விரிவாக்கிப் பார்த்தோமானால் அக் குடும்பங்களின் சரித்திரத்தை ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும்.

பின்னர் போர்த்துக்கேயர் காலத்தில் கொழும்பு மற்றும் காலி துறைமுக பட்டினங்களில் இந்திய வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்கள் வந்து குடியேறினர். எனினும் பெரிய அளவில் இது இடம்பெறவில்லை. தமக்கு கீழ் பணியாற்றக் கூடியவர்கள் கத்தோலிக்கர்களாக இருக்க வேண்டும் என்ற போர்த்துகேயரின் எதிர்பார்ப்பு இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

டச்சு ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் தென்னிந்தியர்களின் குடியேற்றம் நிகழ்ந்தது. டச்சு ஆட்சியில் வணிக நடவடிக்கைகள், பிரதானமாக கறுவா ஏற்றுமதி, அதிகரித்தபோது இந்திய வணிகர் மற்றும் தொழிலாளர்களின் தயவு அவர்களுக்கு தேவையாக இருந்தது.

ஆங்கிலேயர் நாட்டை ஆட்சி செய்தபோது, பெருந்தோட்டத் தொழிலாளர் வருகையைத் தவிர்த்து பார்த்தோமானால், பெருந்தோட்டத் தொழில் நீடித்து நிலைப்பதற்கான பக்கத் துணை தொழில்களைச் செய்வதற்காக பெருமளவு தமிழகத்தில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு வந்தார்கள். பெருந்தோட்டப் பகுதிகளில் மட்டுமின்றி நாட்டின் பல பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற ஆரம்பித்தன. பாதைகள் அமைப்பு, ரயில் பாதை அமைப்பு, பாலங்கள், கட்டங்கள் அமைத்தல் என்பனவற்றோடு கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

தோட்டங்களிலும் நகரப்பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகளும், புதிய தொழில்களும் நடைபெற ஆரம்பித்ததால் இந்திய வணிக சமூகம் இலங்கையை ஒரு வாய்ப்பான இடமாகக் கருதி இங்கே குடியேறத் தொடங்கியது.

கொழும்பு, காலி பகுதிகளிலும் மலையக பிரதேசங்களிலும் செட்டியார்மாரும் நாடார்களும் வர்த்தக நிலையங்களை ஆரம்பித்தனர். அரிசி மா, எண்ணெய் பலசரக்கு, புடவைகள், குளிர் கால ஆடைகள் என்பனவற்றின் தேவை அதிகரித்தது. இதேசமயம் தோட்டங்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் தேவையான மேலதிக நிதியை வழங்க வங்கிமுறை இல்லாததால் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் இத்தேவையை ஈடு செய்யும் வங்கிகளாகத் திகழ்ந்தனர்.

பெற்றோலியத்துறை எழுபதுகளில் அசுரப் பாய்ச்சலை நிகழ்த்தியபோது மூன்றாம் மண்டல நாடுகளைச் சேர்ந்தோர் தொழில்களைத் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு படையெடுத்ததைப் போலவே, வணிகத்துக்கும், பயிர்ச் செய்கைகளுக்கும், வாழ்வதற்கும் ஏற்ற இடமாக தென்னிந்திய மத்தியத்தர சமூகம் இலங்கையைக் கருதியது.

இச்சமூகம் கையில் பணத்துடன் இங்கே வந்தது. ஒரு பகுதியினர் நகரங்களில் தமது பணத்தை முதலீடு செய்தனர். வேறு சிலர் மலையகப் பகுதிகளில் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்தனர். இப்பிரிவினர் தமது சொந்தப் பணத்துடன் வந்து மலிவு விலையில் காணிகளை வாங்கி கொக்கோ, மிளகு, ஏலக்காய், கிராம்பு போன்ற பயிர்களை வளர்ந்தனர். பால் உற்பத்தியில் ஈடுபட்டனர். தேயிலைத் தோட்டங்களை வாங்கினர்; இவர்களை கண்டிச் சீமையை மையம் கொண்டவர்கள் என பொதுவாக அழைத்தாலும் கம்பொளை, நாவலப்பிட்டி, கொஸ்லந்த, பதுளை, ஹட்டன் போன்ற பகுதிகளிலும் இக்குடும்பங்கள் சொத்துகளை வாங்கி செல்வாக்குடன் திகழ்ந்தனர்.

இவர்கள் பெருந்தோட்ட சமூகத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. ஆனால் பெருந்தோட்ட பொருளாதார வளர்ச்சியில் பயன் பெற்ற சமூகம் என்றழைக்கலாம். உதாரணத்துக்கு கண்டி கெங்கல்லை நகரில் ஒரு பழைய கல் சத்திரம் காணப்படுகிறது. வழிப் போக்கர்களுக்காக அமைக்கப்பட்ட இச் சத்திரத்துக்கு அண்மையிலேயே மாட்டி வண்டில்களை நிறுத்தும் இடமும் காணப்பட்டதாம். இச் சத்திரத்தை அமைத்தவர் பெயர் வைத்திலிங்கம் பிள்ளை. கெங்காலை, தெல்தெனிய ஆகிய இடங்களில் பெருமளவு காணிகளை வாங்கி, மிளகு, கொக்கோ போன்ற சிறு பயிர் செய்கையில் ஈடுபட்டவர். பாடசாலை, கோவில், விகாரைகளையும் இவர் அமைத்ததாகத் தெரிகிறது. இத்தகைய குடும்பங்களைப் பற்றி எழுதுவது தனி வரலாறாக அமையும்.

தலாத்துஓயா கணேஷும் இத்தகைய சொந்தமாக தொழில் செய்த குடும்பம் ஒன்றை சேர்ந்தவரே. அவரது இயற்பெயர் சித்திவிநாயகம். வைணவர்களாக இவரது முன்னோர் தமிழகத்தைத் தாக்கிய தாதுவருட பஞ்சத்தில் அடிபட்டு மன்னார் மாத்தளை வழியாகக் கண்டிச் சீமைக்கு வந்தவர்கள். முதலில் கோப்பித் தோட்டங்களில் பணியாற்றி படிப்படியாக முன்னேறி செல்வம் சேர்த்தவர்கள். கணேஷின் தாய்வழித் தாத்தா கங்காணியான இருந்தவர் என்றும் பின்னர் வெள்ளை அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று அன்று பாதை அமைக்கும் பணியை செய்துவந்த பொதுப்பணித்துறை திணைக்களத்தில் கண்காணிப்பாளராக பதவி பெற்றவர் என்று அறிய முடிகிறது. கணேஷின் தாய்மாமனாரே கொழும்புக்கும் களுத்துறைக்கும் இடையே பேருந்து சேவையை நடத்தி வந்திருக்கிறார். தலபின்னாவை தென்னந்தோட்டத்தின் உரிமையாளராக இவர் தாத்தா இருந்துள்ளார். இத் தோட்டத்தில்தான் கணேஷ் பிறந்தார்.

கணேஷின் பெற்றோருக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் கிட்டாத நிலையில், தத்தமங்கலம் ஆற்றங்கரை விநாயகரை வழிபட்டு வந்த பின்னரே அவருடைய அன்னை கருவுற்றார். அதனால் தான் அவருக்கு சித்திவிநாயகம் என்று பெயர் சூட்டப்பப்பட்டது. ஆனால் வீட்டில் கணேசன் என்றே செல்லமாக அழைக்க, அதுவே பெயராக நிலைத்தது. மணிக்கொடி காலத்தில் அவர் எழுதியவை தத்தமங்கலம் கணேசன் என்ற பெயரிலேயே வெளியாயின. புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர். ஆர்.கே. நாராயணன் தன் பெயரை ஆர். கே. நாராயண் எனச் சுருக்கிக் கொண்டதை அவதானித்த இருவரும் தன் பெயரை கே. கணேஷ் என வைத்துக் கொண்டார். அதுவே நிலைத்தது.

தலபின்னாவ தோட்ட எல்லையில் இருந்த சிங்கள பாடசாலையில் ஆரம்பக் கல்வி பெற்ற கணேஷ், பின்னர் கண்டி புனித அன்தனீஸ் கல்லூரியில் ஆங்கில வழிக் கல்வியைத் தொடர்ந்தார். ஆனாலும் கணேஷின் தமிழ்ப் பற்று குறையவில்லை. இதை அவதானித்த பெற்றோரும் உறவினர்களும் இவரை மதுரை தமிழ்ச் சங்கத்தில் தமிழ்வழிக் கல்வியில் சேர்க்க முடிவு செய்தனர். 1934 இல் தமிழ்ச் சங்க பாடசாலையில் அவர் பயிலத் தொடங்கினார்.

அவரது தமிழக வாழ்க்கை கணேஷின் எதிர்காலத்துக்கான பாதையை போட்டுத் தந்தது. அது இந்திய சுதந்திரப் போராட்டம் காந்திஜியின் தலைமையில் உச்சத்தை குறிப்பாக இளைஞர், மாணவர் மத்தியில் அனலாகத் தகித்தது.

தமிழ்ச் சங்கத்தில் பயின்றவர், தனது சைவ உணவுக்காக வெளியே செல்ல நேர்ந்தபோது வழியில் அமைந்திருந்த ஜதீந்தாஸ் வாசிகசாலை அவரை வழி மறித்தது. வாசிப்பில் இயல்பிலேயே நாட்டம் கொண்ட கணேஷ், தினமும் அதைப் பயன்படுத்த ஆரம்பித்தார். காங்கிரஸ் இளைஞர்களால் அமைக்கப்பட்ட ஜதீந்தாஸ் நிலையமே அதை நடத்தியது. எனவே அந்த இளைஞர்களின் நட்பின் ஊடாக சுதந்திர போராட்ட வீரரும் ஒரு சதி வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று விடுதலையானவருமான மாயாண்டி பாரதி என்பவரின் நட்பும் தொடர்பும் கணேஷுக்குக் கிடைத்தது. மாயாண்டி பாரதியின் நட்பு கணேசை இந்திய சுதந்திரப் போராட்ட சூழலுக்குள் கொண்டு சேர்ந்தது. அதன் வழியே சுபாஷ் சந்திரபோஸ் எழுதிய நூல்கள், நேருஜி, ஜெயபிரகாஷ், நாராயணன் ஆகியோரின் நூல்களையும் கணேஷ் வாசித்தார்.

அக்காலத்தில் முழு இந்தியாவிலும் ஆங்கில ஆட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி மட்டுமே பேரியக்கமாக போராட்டங்களை நடத்திவந்தது. ரஷ்யாவில் லெனின் தலைமையில் நிலைபெற்ற கம்யூனிசம் இந்தியாவில் மெதுவாகப் பதவி வந்த காலம் அது. காங்கிரசை சகித்துக் கொண்ட பிரிட்டிஷ் இந்தியா, கம்யூனிசம் தலையெடுப்பதை அனுமதிக்கவில்லை. எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் வெறுப்புடனேயே நோக்கப்பட்டது.

ஆனால் சோஷலிசம் தொடர்பான நூல்களை வாசித்த கணேஷுக்கு பொதுவுடமை தத்துவத்தின் பால் ஈர்ப்பு ஏற்பட்டதில் ஆச்சரியம் இருக்க முடியாது. இக் காலப்பகுதியில் இத்தனையிலும் செயல்படுத்துவதிலும் பெரும் மாற்றங்களை உருவாக்கியவர்கள் பொதுவுடமைவாத பற்றும் சிந்தனையும் கொண்டவர்களாக இருந்தனர். மாணவர்கள் இச் சிந்தனையின்பால் ஈர்க்கப்பட்டனர். கணேஷும் தான்.

காங்கிரஸ் தோழர்களுடன் நட்பு, கம்யூனிசத்தின்பால் ஈர்ப்பு என இரண்டும் வெளியே தெரியவரவே அரசு விசுவாசியான பள்ளி நிர்வாகம் அவரை தமிழ்ச் சங்க பள்ளியில் இருந்து நீக்கியது. இதனால் திருவையாறு அரச கல்லூரியில் அவர் படிப்பைத் தொடர நேரிட்டது.

அவர் கல்வி பயின்று கொண்டிருக்கையில் தந்தை சுகவீனமுற்றிருப்பதால் இலங்கை திரும்பும்படி அவருக்கு அழைப்பு வந்தது. கண்டிக்குத் திரும்பி தந்தையின் தோட்ட வேலைகளைப் பார்க்கத் தொடங்கினாலும் அவரது ஆன்மா சென்னையிலேயே தங்கியிருந்தது. அவரது தமிழகத் தொடர்புகள் அப்படியே இருந்தன. சித்தாரிப்பேட்டையில் இருந்து வெளியாகிக் கொண்டிருந்த சுபாஷ் சந்திரபோசின் கொள்கைகளை ஆதரிக்கும் லோக சக்தி என்ற இதழுக்கு சந்தா செலுத்தி வீட்டுக்கு வரவழைத்துக் கொண்டார்.

மாயாண்டி பாரதி உட்பட அவரது நண்பர்களாலும் நடத்தப்பட்ட இப்பதிரிகைக்கு கதை கவிதைகள் எழுதினார்.

இக்காலப்பகுதியில் இவர் எழுதிய ஆசாபாசம், அதிர்ஷ்டசாலி ஆகிய இரு சிறுகதைகள் மணிக்கொடியில் வெளியாகின. இவரைத் தவிர வேறு இலங்கை எழுத்தாளர்கள் மணிக்கொடியில் எழுதினார்களா என்று தெரியவில்லை. கணேஷ் தன் இளமைக் காலத்தில் இந்திய படைப்பாளர்களுடன் கடிதத் தொடர்புகளை பேணிவந்தார்.

அக்காலத்தில் அறுபது, எழுபதுகளிலும் கூட, எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், படைப்பாளர்கள், பேராசிரியர்களுக்கு கடிதம் எழுதினால் அவர்கள் பதில் எழுதுவார்கள். வாசகர்களினால் இலக்கியவாதிகளுடன் இவ்வாறு தொடர்புகளை பேணிக் கொள்ள முடிந்தது. தொலைத் தொடர்பு வெகு சாதாரணமாகிப் போன இக் காலத்தில் அன்றைய நெருக்கம் இன்றில்லை என்று தான் சொல்லவேண்டும்.

மணிக்கொடி எழுத்தாளர் பி.எஸ். ராமையாவுடன் கணேஷ் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். கல்கி சதாசிவம் மற்றும் பேராசிரியர் கல்கியுடன் கணேஷுக்கு நேரடித் தொடர்பு இருந்தது. கணேஷின் கதைகள் கல்கியில் வெளியாயின. ஒரு தடவை வீட்டில் பகல் உணவளித்து கல்வி தன்னை உபசரித்தாக கணேஷ் குறிப்பிட்டுள்ளார். மணிக்கொடி ஆசிரியர் ப.ராமசாமி இலங்கைக்கு வந்திருந்தபோது மலையகத்துக்கு அவரை அழைத்துச் சென்ற மணிக்கொடிக்கு சந்தா சேர்க்க உதவியவர் கணேஷ்.

தமிழகத்தில் இன்றளவும் போற்றப்படும் கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் ஒரு சிறந்த பேச்சாளராகவும் இலக்கியவாதியுமாகத் திகழ்ந்தவர்.

1950 இல் கல்கத்தாவில் கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடைபெற்றபோது இலங்கைப் பிரதிநிதியாக டொக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க அம்மாநாட்டில் கலந்து கொண்டார். அங்கே ஜீவானந்தத்தை சந்தித்த விக்கிரமசிங்க, ஆளும் காங்கிரஸ் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்யும் என்பதை முன்கூட்டியே அவரிடம் கூறியதோடு, என்னோடு இலங்கை வந்துவிடுங்கள் பாதுகாப்பாக இருக்கும் என்று அழைப்பு விடுத்தார்.

விக்கிரமசிங்கவுடன் இலங்கை வந்த ஜீவாவுக்கு, ஜனசக்தியில் எழுதுபவர் என்ற வகையில் கே.கணேஷை தெரியும். அவர் கண்டிக்கு வந்தபோது சில காலம் கணேஷ் வீட்டில் தங்கியிருந்தார். எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. தலைவர்கள் கைதாகினர். எனவே ஜீவா இலங்கையிலும் தலைமறைவு வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது.

அச்சமயத்தில் அவருக்கு உற்ற துணையாக இருந்தவர் கே.கணேஷ். அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்ற கணேஷ், அவரை பாதுகாப்பாக வைத்திருந்ததோடு அவரை தமிழகத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக விமானமூலம் சென்னை சென்றிருந்தார். திரும்பி வந்த கணேஷ், வல்வெட்டித்துறையில் ஒரு விசைப்படகில் ஜீவாவை ஏற்றி தானும் ஏறிக் கொண்டார். நாகப்பட்டினம் கடற்கரையில் படகு நங்கூரமிட்டது. பின்னர் ஒரு வள்ளத்தில் காரைக்கால் அதிராமபட்டினத்தை அடைந்த இருவரும் ஒரு பாக்கு வியாபாரியின் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்திய அரசியலிலும் கம்யூனிச சித்தாந்தத்திலும் கணேஷுக்கு இருந்த ஈடுபாடும், ஜீவாவின் மேல் அவருக்கு இருந்த அன்பும், ஜீவானந்தத்தை இலங்கையில் பாதுகாப்பாக வைத்திருக்கவும் துணிச்சலுடன் அவரை படகில் ஏற்றி காரைக்காலில் கொண்டு சேர்க்கவும் செய்திருக்கிறது. கே. கணேஷுக்கு ஒரு விசாலமான இலக்கிய முகம் இருந்ததைப் போலவே, கொண்ட கொள்கைக்காக எத்தகைய துணிச்சலான காரியாலயத்தையும் செய்து முடிக்கக்கூடிய வீரமுகமும் இருந்தது.

இலக்கியம், மொழிபெயர்ப்பு, சமதர்ம பற்றி, கடல் கடந்த இலக்கியவாதிகளுடனான நெருங்கிய தொடர்பு வீரம், தியாகம் என ஒரு முன்னுதாரண வாழ்க்கையை அமைத்துக் கொண்ட படைப்பாளர் கே. கணேஷின் நூற்றாண்டு விழா (1920 – 2020) எதிர்வரும் அக்டோபர் இறுதியில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் விமரிசையாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கணேஷின் குடும்பத்தினர் முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜின் வழிகாட்டலிலும் நெறியாள்கையிலும் "முற்போக்கு இலக்கிய செம்மல் கே. கணேஷ் நூற்றாண்டு விழா குழுவினர்" முன்னெடுத்து வருகின்றனர். ஏனைய விபரங்கள் பின்னர் அறிக்கப்படும்

சுவாதி.

## பக்தர்களின் தலைவிதியையே ...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

***முருகனின் அழகு – முத்தமிழ் முருகன்***

தமிழ்க்குடி தோன்றிய நாள் தொட்டு முருகன், தமிழர்களால் நம் கடவுளாக அங்கீகரிக்கப்பட்டு, பக்தி செலுத்தப்பட்டு வரும் பெருமை படைத்தவன். மலையும், மலை சார்ந்த குறிஞ்சிக் கடவுளாக துவக்கத்தில் வணங்கப் பெற்று, பின்னர் முல்லை, மருதம், நெய்தல், பாலை என அனைத்து இடங்களிலும் வழிபடப் பெற்று, குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்கும் இடம் ஆனான். நாவிலே தமிழை வைத்து சுட்ட கனி வேண்டுமா, சுடாத கனி வேண்டுமா என இயற்றமிழால் ஔவையோடு விளையாடினான். நக்கீரனின் திருமுருகாற்றுப் படையிலும், அருணகிரியாரின் தேமதுரத் திருப்புகழிலும் மற்றும் வள்ளலார் பெருமானின் திருஅருட்பாவிலும், பண்ணோடும் இசையோடும் கலந்து விரவி இசைத் தமிழானான். எக்காலத்திலும் அடியார்கள் பாடும் பாடல்களின் இசையைக் கேட்டு மயங்கும் முருகன் அவ்விசையை சுவைக்கிறான். உண்ணுகிறான். அதைக் கேட்டு உறங்குகிறான். மீண்டும் கேட்டு விழிக்கிறான். என்றுமே இசைத்தமிழோடு கலந்து உறவு கொள்கிறான். பெரும்பைப் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை வள்ளியின் மேல் காதல் கொண்டு மணம்புரிய விரும்பிய கந்தவேள் தன்னுடைய மான் ஒன்று அந்தப் புனத்திற்குள் நுழைந்து விட்டதாகவும், அதைத் தாம் தேடி வந்ததாகவும் நாடகமாடி நாடகத் தமிழிலும் இயைந்தான். இவற்றை ஒன்று சேரப் பார்க்கும் போது முருகன் முத்தமிழ் முருகன் தானே.

முருகு என்றால் அழகு, இளமை என்று இலக்கியங்கள் செப்புகின்றன. தமிழ்த்தாய், சீர் இளமைப் பொலிவோடு என்றும் இருக்கின்றாள். எங்கள் முருகனும் என்றும் இளமையாகவே இருக்கின்றான். தமிழ்த்தாய் அழகு படைத்தது போல் எங்கள் முருகனும் குன்றா அழகு படைத்தவன். நல்ல தமிழ் நூலை படிக்கும் பொழுதும், படித்த பின்பும், எண்ணும் பொழுதும், அதைப் பேசும் பொழுதும், சுவையும் தெரியும், சுகமும் தெரியும், எங்கள் திருமுருகனின் திருமுகத்தை, உருவத்தை, வனப்பை எத்தனை முறை பார்த்தாலும் புதியதாகவே தோன்றும். சலிப்பே தட்டாத அழகு முகம் படைத்தவன் அழகன் தானே.

முருகனின் பிறப்பும் அடியார்க்கு அருளும் கருணையும்

பஞ்ச பூதங்களையும் தனக்குள் அடக்கியவன் என்பதையும், முருகன்பால் உள்ள பக்தி உணர்வு முழுமையான நம்பிக்கையோடு உறுதியாக இருக்க வேண்டும் என்பதையும் அருணகிரியார் கூறுகிறார்.

அறுபடை வீடுகளில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு செயலை முருகன் புரிந்தான். பழத்திற்காக பழனியில் மலை மேல் நின்றான். உபதேசம் செய்வதற்காக சுவாமிமலையில் அமர்ந்தான். சூரனை வதைக்க செந்திலில் வீறிட்டு எழுந்தான். அதற்குப் பரிசாக பரங்குன்றில் தேவயானையை மணந்தான்.

வள்ளியை மணந்து திருத்தணிகையிலே கோபம் தணிந்தான். தேவியர் இருவரோடு பழமுதிர்சோலையில் காட்சி தந்தான். இவ்வாறாக, நின்றான், அமர்ந்தான், எழுந்தான், மணந்தான், தணிந்தான், தந்தான் என ஆறு செயல்களைப் புரிந்த முருகன் ஒரு செயலை மட்டும் செய்யவில்லை. அவன் நடக்கவில்லை. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடக்கும் செயலை அடியார்களுக்குத் தந்தான். உண்மையான பக்தி உணர்வோடு நடக்கும் அடியார்களுக்கு அத்தனை வளங்களையும் அள்ளித் தருகிறான் "கருணைவாரி கந்தவேள்".

கண்ணால் அவனது திருவடியைக் கண்டு ஆதரவு பெருகி இரு கையால் தொழுது, காலால் வலம் செய்து பண்ணால் உருகி பரவும் அடியார்களை கண் கலங்காமல் தாயாக நின்று காக்கின்றான்.

தனதொடு நின் அடியவர்கள் மனம் மகிழ, வரபுத்திர சந்தானமும் கொடுத்து, தரும சிந்தனையோடு இல்லற வாழ்விற்குரிய சம்பவத்தையும் அளித்து, கனமான தீவினை பயனெலாம் கதிர் முகம் கண்ட பனி போல் விடுத்து, கம்பலைகள் உற்ற துன்பம் அனுகாதபடி காக்கின்றான்.

திருமுருகன் பொற்பாதத்தில் அடியார் தலையை வைத்து வணங்கினால் பிரம்மன் எழுதிய விதியையே மாற்றி நன்மை பயக்கும் கருணை வள்ளல் முருகன் என்று பாடிப் பரவுகிறார்.

அளப்பரிய கரையில்லா கருணையை வாரி வழங்கும் முத்தமிழ் முருகன் பொற்பாதங்களை சிரம் தாழ்த்தி வணங்கி நாடும் பயன்பெறுவோமாக.

மாநாடு உலகெங்கிலும் 'கருணை வாரி முருகனின்' அருளையும், புகழையும், தேமதுரச் செம்மொழி தமிழால் பரப்பி உலகமெலாம் எல்லா வளங்களையும், நலங்களையும் நிறைவாக அடைய முத்தமிழ் முருகனின் பொற்பாதங்களை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.



# வாரபலன்

22.09.2024 - 28.09.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். மற்றவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எண்ணிய காரியங்கள் நடக்கும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையில் திடீர் இடைவெளி ஏற்படலாம். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். மாணவர்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் ஆசிரியர்கள் மனதில் இடம் பிடிப்பார்கள்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

எதிலும் சாதகமான நிலை காணப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது அவசியம். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பெண்களது செயல்களில் மற்றவர் குறை காண நேரலாம். மாணவர்கள் சக மாணவர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. கவனத்தை சிதறவிடாமல் படிப்பது அவசியம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். சிந்தித்து செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். பயணங்களின் போதும், வாகனங்களை ஓட்டி செல்லும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் கூடும். புதிய ஆர்டர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைபளு குறைந்து மன மகிழ்ச்சியடைவார்கள். மேலதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சிகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தருவதாக இருக்கும். பெண்கள் எடுத்த காரியத்தை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்..

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம், சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து நிதானமாக நடந்து கொள்வது வியாபாரம் நன்கு நடக்க உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். பெண்களுக்கு பயணங்களின் மூலம் நன்மை உண்டாகும். உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற மிகவும் கவனமாக படிக்க வேண்டியது அவசியம்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

மற்றவர்களால் மனக்கஷ்டங்கள் ஏற்படும். அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. எந்தவொரு காரியமும் மந்தமாக நடக்கும். எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியிருக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக தள்ளிப்போன பதவி உயர்வு வர வேண்டிய பணம் வந்து சேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய பாடுபடுவீர்கள். பொழுதுபோக்கில் நாட்டம் அதிகரிக்கும். பெண்களுக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். யோகா, தியானம் செய்து வர மன அமைதியை தரும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் ஏற்பட்டு நீங்கும். தெளிவாக பாடங்களை படிப்பது நல்லது.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல மனநிலையில் மாற்றம் இருக்கும். தருமசிந்தனை உண்டாகும். பணநெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். ஆர்டர்கள் கிடைத்தாலும் சரக்குகள் அனுப்புவது தாமதமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆனாலும் எதிர்பார்த்தபடி இருப்பது சிரமம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவர். கணவன், மனைவிக்கிடையில் கருத்து வேற்றுமை வராமல் இருக்க மனம் விட்டு பேசுவது நல்லது. எதிலும் திருப்தி இல்லாதது போல் தோன்றும். பெண்களுக்கு வீண்கவலைகள், எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

மனதில் இருந்த கவலைகள் அகலும். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வெளி வட்டார தொடர்புகளில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். புதிய ஆர்டர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் பல தடங்கல்கள் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு பணத்தேவை பூர்த்தியாகும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை ஏற்படும். டென்ஷனை குறைத்து பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

மங்கள செலவுகள் ஏற்படும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மற்றவர்கள் உங்களின் பிரச்சினைகளுக்கு வலிய வந்து உதவிகள் செய்வார்கள். விருப்பம் இல்லாத இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவதில் இருந்த தாமதம் நீங்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண்கள் மனதில் இருக்கும் திட்டங்களை சரியாக செயல்படுத்துவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். கஷ்டமாக தோன்றிய பாடங்களை எளிதாக படித்து முடிப்பர்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

வீண்செலவுகள் குறையும். சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செய்ய முடியாத சூழ்நிலை வரும். எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பார்கள். எனவே கவனமாக இருப்பது நல்லது. நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடந்தாலும் சற்று நிதானமாக இருக்கும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இடைவெளி குறைய மனம் விட்டு பேசுவது நல்லது. பெண்களுக்கு விருப்பம் இல்லாமல் பயணம் செல்ல நேரிடலாம். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் நீங்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

நிதானமாக எந்த முடிவையும் எடுப்பது மனமகிழ்ச்சியை தரும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மை நன்மை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். பெண்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுகட்டைகள் அகலும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகரிக்கும். பாடங்கள் எளிமையாக தோன்றினாலும் கவனமாக படிப்பது அவசியம்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

தடங்கல்கள் அகலும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த இழுபறியான நிலை மாறும். சாதாரணமாக செயல்பட்டாலும் அது மிகப் பெரிய வெற்றி பெறும். வாகனப் பிராப்தி ஏற்படும். பணவரத்து கூடும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். அதிக நேரம் உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகள் உங்களை அனுசரித்து செல்வார்கள். குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். மனதில் இருப்பதை வெளியில் சொல்லாமல் செய்கையில் காட்டுவார்கள். பெண்கள் எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மனஉறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பார்கள். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

திட்டங்கள் வெற்றி பெறும். பயணங்கள் குறிக்கோள் உள்ளவைகளாக மாறும். அலைச்சல், உடல் ஆரோக்கிய குறைபாடு போன்றவை அகலும். திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வரா விட்டாலும், சுமாராக வரும். ஆனால் புதிய ஆர்டர்கள் வந்து சேரும். தொழில் தொடர்பான செலவுகள் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகள் முடியாமல் மனசங்கடத்திற்கு ஆளாக நேரிடும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவதை குறிக்கோளாக கொண்டு செயல்படுவார்கள்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

# மலேசிய தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை எழுதிய சிறப்பிற்குரியவராக பேராசிரியர் சீனி முகமது

அருணாசலம் லெட்சுமணன் 50

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வரிசையில் இலங்கையில் இடம்பெற்ற நான்காவது மாநாடு முக்கிய கவனத்தை வென்றதாக அமைகிறது. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் திகதி தொடக்கம் 09ம் திகதி வரையிலான நாட்களில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. இந் நிகழ்வில் ஆய்வு அமர்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும், யாழ். றிமர் மண்டபத்திலும் இடம்பெற்றுள்ளன. மாநாட்டின் சிறப்பு ஏற்பாடாக கண்காட்சி கூடம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் அமைக்கப்பட்டிருந்தது. யாழ். திறந்த வெளி அரங்கில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இம் மாநாட்டின் மூலவரான தனிநாயகம் அடிகளார் மாநாட்டின் தொடக்க உரையை ஆற்றியுள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வெளிநாடுகளில் இருந்தும் தமிழறிஞர்கள் பலர் பங்கேற்றுள்ளார்கள்.

மலேசிய தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை எழுதிய சிறப்பிற்குரியவராக பேராசிரியர் சீனி முகமது விளங்குகிறார். 1947இல் பிறந்த அன்னார் தமிழ் மொழியை நன்கு கற்ற தமிழ் அறிஞராவார். மலேசியாவில் ஏலவே இடம்பெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தனது பங்களிப்பை வழங்கியவர். மலேசிய தமிழ் கவிதை இலக்கியத்துறையின் சிம்ம சொப்பனமாக திகழ்பவர். 2014ஆம் ஆண்டு அன்னார் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது. நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்வில் சீனி நைனா முகமதுவும் பங்கேற்று சிறப்புரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் பயில் நிலைக்குரிய கூத்துக் கலைகளில் 'முக்கூத்துகள்' சிறப்பிடம் பெறுகின்றன. காமன் கூத்து, அருச்சுணன் தபசு, பொன்னர் சங்கர் ஆகிய கூத்துக்களே மலையக மக்களின் நேசிப்பிற்குரிய கூத்துகளாக கைக்கொள்ளப்படுகின்றன. 'பொன்னர் சங்கர்' கதை என்பது தமிழகம், வீரப்பூரில் இடம்பெற்ற உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கலை வடிவங்களாக மாற்றம் கண்டுள்ளன. இச் சம்பவம் இடம்பெற்ற களத்தில் இருந்து கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆராய்ந்த பேராசிரியர் பிருந்தாபேக் முக்கியத்துவத்திற்குரியவர். மலையகத்தில் வழிபாட்டிற்குரிய கூத்து கலையாக அனுஷ்டிக்கப்படுகின்ற பொன்னர் சங்கர் பற்றிய தேடலையும் பிருந்தாபேக் கொண்டிருந்தார், என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் பிருந்தாபேக் அம்மையாரும் இந் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியுள்ளார். பொன்னர் சங்கர் கதை மரபின் ஊடாக வடிவமைக்கப்பட்ட கலை வடிவங்கள், மற்றும் சம்பவத்தின் உண்மைத் தன்மை தொடர்பிலும் நீண்டகால அனுபவத்துடன் ஆராய்ந்தவர். அந்த வகையிலும் 2018ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக வருகை தந்திருந்தார். மாநாடு நிறைவின் பின்னர் கலாநிதி எஸ.ஜெயசங்கர், விரிவுரையாளர் கேதீஸ் தர்சினி ஆகியோரின் உதவியுடன் மலையகத்திற்கு வருகை தந்திருந்தார்.

மலையகத்தோடு மிக நெருங்கிய தொடர்பினை கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர் மணிசேகரனின் தொலைபேசி தொடர்பு கலாநிதி ஜெயசங்கருடனான தொடர்பையும் ஏற்படுத்தியது. 'இலக்கிய சந்திப்பு 47' நிகழ்வில் ஜெயசங்கர் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கில் 'மலையக அரங்கியல் களம்' எனும் தலைப்பிலான கட்டுரையை வாசித்தேன். அந்த நிகழ்வோடு கலாநிதி ஜெயசங்கருக்கும் எனக்குமான தொடர்பு வலுப்பெற்றிருந்தது. தொலைபேசி தொடர்பூடாகவே 'பொன்னர் சங்கர்' பயில் நிலையிலுள்ள களங்களை பார்வையிடவும் அக் கதை தொடர்பான அனுபவங்களை பகிர்ந்துக்கொள்வதற்கான களங்கள் தீர்மானிக்கப்பட்டன. நாவலப்பிட்டியில் இவர்களுடனான சந்திப்பின் ஊடாக பத்தனை ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் முதல் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. விரிவுரையாளர்கள், ஆசிரியர் பயிலுனர்களுடனான சந்திப்பு மிகத் திருப்திகரமாக இடம்பெற்றது. மலையகத்தின் சகல பிரதேசங்களை சேர்ந்தவர்களின் களம் என்ற வகையில் ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றது. பிருந்தாபேக், ஜெயசங்கர் ஆகியோரின் அனுபவ உரைகளை ஆசிரிய பயிலுனர்கள் செவிமடுப்பதற்கான வாய்ப்பாக அமைந்தது. மாலை வேளையில் இடம்பெற்ற இச் சந்திப்பை தொடர்ந்து இரவு போசனத்துடன் கல்லூரியில் இருந்து விடைபெற்றோம்.



பொன்னர் சங்கர் கூத்து அரங்கேற்றப்படும் களங்கள் என்ற வகையில் மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக், சாமிமலை கொமரித் தோட்டம் தோட்டங்களுக்கு சென்று அண்ணாவிமார், கலைஞர்கள் போன்றோரை சந்தித்தும் இக் கூத்தை அனுஷ்டிக்கும் களங்களையும் பார்வையிட்டு தகவல்களை திரட்டிக்கொண்டோம். இக் களங்களில் சந்திப்புக்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது, முகநூல் பதிவுகளை பின்வருமாறு உலவவிட்டமை மறக்க முடியாத அனுபத்தை தந்தது. 'மலையகத்துக்கான தனித்துவ கலைகளை வெளிநாட்டவர்களுக்கு விற்கும் நோக்கில் வெளிநாட்டவர்களை அழைத்து வந்து பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அடித்து விரட்டுங்கள்,' இப் பதிவு என்னில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. சம்பவத்தின் பின்னரும் உண்மை நிலையை எடுத்துரைப்பதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. உண்மையிலும் தமிழர்கள் நம்மை விட இக் கதையையும், கலையையும் நேசிப்பதில் பிருந்தாபேக் அம்மையாரின் உணர்வை அவரை சந்தித்து அறிந்தவன் என்ற வகையில் உணர்கிறேன். அவ்வாறே கலாநிதி ஜெயசங்கர் அரங்கியல் துறையில் மலையகத்தின் பங்கேற்பை நியாயமாக வெளிப்படுத்துபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்களையும் எம்மையும் வேதனைப்படுத்திய இச் சம்பவம் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறே பல சந்தர்ப்பங்களில் முகநூல் போராளிகள் கிளப்புகின்ற புரளிகள் மலையகத்தின் சாபங்களாக அமைந்து விடுகின்றன.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் தீராத வடுவை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திரத்தின் பின்னரான இரட்டை தேசியவாத முனைப்பில் தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையின் உச்சத்தின் விளைவே முப்பது வருட கொடூர யுத்தத்திற்கு வழி வகுத்தது. ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதும், ஊர்வலத்தின் போது மின்சாரம் தாக்கி உயிரிழக்கச் செய்த சம்பவமும் தமிழர்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இப் படுகொலைகளை வேதனைப்பட்டியலாக காண்பித்து வெளியிடப்பட்ட ஆவணம் முக்கிய கவனத்திற்குரியதாகிறது. இவ் விடயத்தை ஆவணப்படுத்தும் வகையில் மறவன் புலவு க.சச்சிதானந்தன் எழுதி வெளியிட்ட 'தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள்' எனும் தலைப்பிலான நூல் மிகுந்த அவதானத்திற்குரியதாகிறது. இலங்கையின் யுத்தம் பல்வேறு இழப்புகளைத் தந்துள்ளது. இனங்களுக்கிடையிலான யுத்தம் என்பதற்கப்பால் ஏழைகள், பணக்காரர்களுக்கிடையிலான யுத்தமாகவும், மேட்டுக்குடியினருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்குமான யுத்தமாகவே நிகழ்ந்து முடிந்தது. களத்தில் மாய்ந்தவர்கள் ஏழைத் தாய்களின் பிள்ளைகளாகவே திகழ்ந்தார்கள். உதிரிகளாக மேட்டுக்குடியினர் ஆங்காங்கே இழப்புகளை சந்தித்த போதிலும் பெரும்பாலும் இரண்டு இனங்களிலும் ஒடுக்கப்பட்ட குடும்பத்தினரே இழப்புகளை சந்தித்தார்கள். பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் களத்திற்கு செல்லவில்லை என்பதோடு அவர்கள் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்வதற்கு வாய்ப்பாக அமைந்து போனமையும் கவனிக்கத்தக்கது.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் மலையக கலைகள் தொடர்பான அவதானமும் உள்வாங்கப்பட்டிருந்தமை திருப்தியளிக்கிறது. மலையகத்தின் தனித்துவ கூத்தான 'காமன் கூத்தை' இந் நிகழ்வில் அரங்கேற்றியதில் மலையக சமூகத்தின் மண்ணின் கலைஞர் ஒருவர் பங்களிப்பை ஆற்றியுள்ளமையை பொன் பிரபாகரனின் முகநூல் பதிவின் ஊடாக அறிய முடிந்தது. பொகவந்தலாவ, கொட்டியாகலை தோட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்த 'தங்கவேலு மாஸ்டர்' என அழைக்கப்பட்ட இராமசாமிவேலு என்ற இயற் பெயரைக் கொண்ட கலைஞரே இப் பணியை ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 'கூட்ட ரீதியான புறக்கணிப்புகள், இன ரீதியான பாரபட்சங்கள், பிரதேசவாத ஒடுக்குமுறைகள், 'தோட்டக்காட்டான்' 'கள்ளத்தோணி' 'வடக்கத்தியான்' என்ற வசவுப் பெயர்களுக்கு மத்தியில் தூது சென்ற தங்கவேல் மாஸ்டர், தன்னிடம் இருந்த அனைத்து ஆற்றலையும் பயன்படுத்தி 'மலையகத் தமிழர்' பண்பாட்டின் மகத்தான ஆளுமையாக தன்னை முன்னிறுத்தியிருக்கிறார். மலையக தொழிலாளியொருவர், மலையக பாட்டாளிவர்க்க கலைஞர் ஒருவர் பண்பாடுத் தூதுவனாக வடக்கு, கிழக்கு, தெற்கு எங்கெனும் பயணப்பட்டு மலைத்தூதுவனாக பயணித்துள்ளார் என்பது வியப்பளிக்கிறது.' என்ற பொன் பிரபாகரனின் வரிகள் கவனிக்கத்தக்கதாகும்.

மலையக அரங்கியல் துறையின் முக்கிய ஆளுமையாக தங்கவேல் மாஸ்டர் திகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. அரங்கியலின் அவதானத்தில் சிறந்த இயக்குனராகவும், ஒப்பனைக் கலைஞராகவும் தனது ஆளுமையை வெளிப்படுத்திள்ளார். பாடல் புனையும் ஆற்றலிலும் பல பாடல்களை இயற்றியுள்ளார். இராமர் பஜனை வழிபாடு என்பது ஆரியவாத முனைப்பின் திணிப்பாக இருந்த போதிலும், சமூகம் ஒன்று கூடி கலைகளை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. பஜனை வழிபாட்டின் அர்த்தம் மலையகத்தில் வேறு விதமாக கையாளப்படுகின்ற போதிலும் அதனுள் பொதிந்துள்ள சமூகவியல் அணுகுமுறைகள் கவனத்திற்குரியதாகும். இவ் வழிபாட்டிற்காக தங்கவேல் மாஸ்டர் இயற்றிய பாடல்கள் முக்கிய கவனத்தை பெறுகின்றன. நாடகங்களை எழுதி இயக்கும் இவருடைய ஆற்றலும் மிகுந்த கவனத்திற்குரியதாகும். காத்தவராயன் கூத்து, அருச்சுணன் தபசு, காசிராஜன் கதை, தேசிங்கு இராஜன் கதை, ஒட்டக்கூத்தன் போன்ற வரலாற்று நாடகங்களிலும் நவீன நாடகங்கள், சமூக நாடகங்கள் மீதும் ஆர்வத்தை காட்டியுள்ளார்.

2023.11.18இல் மரணமடைந்த அன்னாரின் நினைவுகளை மீட்கும் வகையிலும், அவரது சமூக பங்களிப்புகளையும் ஆவணப்படுத்தும் வகையிலும் 'தங்கவேல் மாஸ்டர் வாழ்வும் பணியும்' என்ற சிறு தொகுப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் தொகுப்பை வெளியிடுவதில் பொன் பிரபாகரன், டி.தேவதாஸ், எல். சால்ஸ், எப். லாசரஸ், வீ.கருணாகரன் ஆகியோரின் ஒன்றிணைந்த செயற்பாடுகள் போற்றுதற்குரியதாகும்.

மலையகத்தில் ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் குடும்பங்களை பிரித்திருக்கிறது. உறவுகள் பிரிந்ததை பல படைப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. பொதுவாக காதலர்களின் பிரிவு தொடர்பான பதிவுகள் குறைவான நிலையில், தங்கவேல் மாஸ்டரின் காதல் பிரிவு வேதனையை பின்வரும் பாடல் ஊடாக தான் பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது.

உயர்ந்த மலை மீதினிலே ஜோடிப் புறா
இரு துருவம் கொண்டு பாடுது
அமுத நிலவூட்டும் இள நேரம்
அருவி இசை பாடும் குளிர் நேரம்....

இன்று கல்வி நிலையில் உயர்ந்தவர்கள் இருக்கின்ற நிலையில் சமூக ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவதை தவிர்க்கின்ற நிலையில், கல்வி அறிவு குறைந்த காலத்தில் மலையக சமூகத்தின் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதில் தங்கவேல் மாஸ்டர் போன்ற ஆளுமைகளின் ஆர்வம், பங்களிப்புகள் போற்றப்பட வேண்டியவையாகும்.

அம் முற்போக்கு செயற்பாட்டாளரின் உள்ளத்தில் உதித்த மலையக எழுச்சி தொடர்பான் பின்வரும் பாடல் வரிகள் கவனிக்கத்தக்கதாகும்.

மலையகத் தோழா
மானம் இங்கே போவதைப் பாராய்,
ஈழ நாடும் தரவில்லை
இந்திய நாடும் ஏற்கவில்லை
இனிமேல் இங்கே இருந்திடுவாயோ
இதயம் இங்கே துடிக்குது தோழா
காலமும் உழைத்தாய்
கடமையும் புரிந்தாய்
தேயிலை நாட்டை திருத்தியும்
அமைத்தாய்..........

பயணம் தொடரும்......

# படித்ததும் பகர்வதும் 209



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தேர்தலின் பின்....!

இலங்கையின் மற்றுமொரு ஜனாதிபதி தேர்தல் நேற்று நடைபெற்று முடிந்துள்ளது. யார் அடுத்த ஜனாதிபதியாக முடி சூடுவார் என நாட்டு மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதி பதவியை ஏற்பவர் நாட்டை தன்னிறைவு பெற்றதாக ஆக்கி நாட்டு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் ஆட்சி செய்ய பிரார்த்திக்கின்றோம்.



தேர்தலின் போது வெவ்வேறு வேட்பாளருக்காக ஆதரவு திரட்டி, அதற்கென அயராது உழைத்தவர்கள் தமது வேட்பாளர் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் ஏனைய வேட்பாளர்களின் ஆதரவாளர்களோடு எந்த விதமான போட்டி, பொறாமை, வஞ்சகம் போன்றன இல்லாமல், நல்லுறவோடு வாழ முயற்சிக்க வேண்டும்.

தமது சுய நல இலாபங்களைக் கருத்தில் கொண்டு, குறுகிய வட்டத்துக்குள் செயற்படாமல், தன்னை சூழ உள்ளவர்களும், சமூக, கிராம, நகர, நாட்டு மக்கள் அனைவரும் நலமே மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

இருக்கும் ஆட்சியே தொடருமாயின் அவர்கள் எடுக்கும் புதிய தீர்மானங்களுக்கு ஆதரவளித்தும், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சியொன்று அமையுமாயின், புதிய மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கும், நாடும் நாட்டு மக்களும் நலம் பெற வேண்டும்' என்ற நல்ல எண்ணத்தோடு செயற்பட உறுதிகொள்ள வேண்டும்.

தேர்தல் ஒன்று முடிவடைந்த உடனேயே தேவையற்ற வாக்குவாதங்களும் கைகலப்புகளும் மோதல்களும் சண்டை சச்சரவுகளும் ஆங்காங்கே ஏற்படுகின்ற ஒரு நிலை வழக்கமான செயற்பாடுகளாகவே இருக்கின்றன. இத்தகைய தவறான நிலைமை உருவாகாமல் தவிர்த்துக் கொள்வதற்கும், அத்துடன் பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் தமது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ளவும் இந்நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக உறுதி கொள்ள வேண்டும்.


இந்த ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், இந்நாட்டில் சட்டம் ஒழுங்கை சரியாக நிலைநிறுத்தவும், சட்ட ஆட்சியை ஏற்படுத்தவும், நீதி, நியாயம், தர்மங்கள் தளைத் தோங்கவும் சிறந்த திட்டங்களோடு செயற்படுவது அவசியமாகும். இதன் மூலமே நாட்டு மக்களுக்கு வெற்றிபெற்ற ஜனாதிபதியின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும் என்பதோடு ஆதரவும் ஒத்துழைப்பும் பெருமளவில் கிடைப்பதற்கு வழி ஏற்படும்.

மக்கள் ஆணையோடு வெற்றி பெறுகின்ற புதிய ஜனாதிபதிக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர் காலத்துக்கு நல் வாழ்த்துகள்!

## புது வரவு

### திக்குவல்லை ஸும்ரியின் 'நட்பு'

சிறந்த சிறுகதை எழுத்தாளர், சிறந்த வானொலி நாடக எழுத்தாளர், ஓவியர், பாடகர் என பன்முக ஆற்றல்களை பெற்ற இலக்கியவாதி திக்குவல்லை ஸும்ரி எழுதியுள்ள சிறுகதைகளின் தொகுப்பு, 'நட்பு' என்ற பெயரில் புது வரவாக வந்துள்ளது.




முப்பது சிறுகதைகள் அடங்கியுள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் அனைத்தும் அன்றாட வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பது விஷேட அம்சமாகும். பல்வேறு சிறுகதை போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்று சாதனை படைத்திருப்பது இவரது ஆற்றலுக்கு சிறந்த சான்று என்பதோடு, அதன் சிறப்பை இந்த சிறுகதைகளிலும் அனுபவிக்கக் கூடியதாக உள்ளமை குறப்பிடத்தக்கது..

"திக்குவல்லை ஸும்ரியின் சிறுகதைகள் சமூக யதார்த்தங்களைப் பிரதிபலிப்பவை. தென்னிலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும் நகைச்சுவை கலந்தும் அவர் எழுதும் கதைகள் அனைவரதும் பாராட்டைப் பெற்றவை. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் அவர் எழுதும் வானொலி நாடகங்களினதும் ரசிகன் நான். அந்த வகையில் இந்நூல் ஊடாக அவர் எழுத்துலகிலும் தனது தடத்தைப் பதிப்பது மகிழ்ச்சிக்குரியது." என்று குறிப்பிட்டுள்ளார் விடிவெள்ளி பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைறூஸ்.

"தொகுப்பில் அடங்கியுள்ள ஒவ்வொரு கதையும் நம்மைச் சுற்றி நடப்பவைதான். ஆனால் அதனுள்ளே நாம் அறியாத பல விடயங்களைக் கண்டு மூக்கில் கை வைக்க வேண்டிய நிலையில் உள்ளோம். அந்த விடயங்களை மிகுந்த அவதானமாகவும் கலை நயத்தோடும் முன்வைத்து ஒவ்வொரு கதையினூடாகவும் ஒவ்வொரு நல்ல செய்தியை வாசகர் மனதில் புகுத்தி சிந்திக்கவும் செயற்பட வைப்பதிலும் கதாசிரியர் ஸும்ரி வெற்றி பெற்றுள்ளார்.

இவரது கதைகளின் இயக்கம் ஒரு பிரதேசத்தை மாத்திரம் மையப்படுத்தியதல்ல. பல்வேறு பகுதிகளிலும் பின்னணிகளிலும் கதா மாந்தர்களை உலாவவிடுகிறார். அதற்கேற்ப மொழி நடையையும் கையாள்கிறார். கதாமாந்தர்களின் மொழிநடையும் எவருக்கும் விளங்கக் கூடியதாகவும் முஸ்லிம் அடையாளங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளமை ஒரு சிறப்பியல்பாகும்." என்று சிலாகிக்கிறார் பிரபல சிறுகதை எழுத்தாளர் திக்குவல்லை கமால்.

நூல்: நட்பு (சிறுகதைத் தொகுப்பு), ஆசிரியர்: திக்குவல்லை ஸும்ரி, முதற்பதிப்பு: ஆகஸ்ட் 2024, பக்கங்கள்: XVI + 232, விலை: ரூபா. 1,000/=, தொடர்புகளுக்கு: 0714857195


## அந்த நாள் ஞாபகம்

### மரங்களும் சிவக்கும்

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஹத்தரலியத்த, தெஹிதெனிய மடிகேயைப் பிறப்பிடமாகக் கொண்ட மரீனா இல்யாஸ் 1981 முதல் 'மரீனா ' என்ற தனது சொந்தப் பெயரிலும் 'மடிகே மதியழகி' என்ற புனைப் பெயரிலும் கவிதை, நாடகம், கதை போன்ற பல வடிவங்களில் ஆக்கங்கள் படைத்துத் தமிழ் இலக்கியத்திற்கு பங்களிப்பினை வழங்கி வருகிறார்.

இப்போது நியூசீலாந்தில் வாழ்ந்தாலும், நான்கு தசாப்தங்களைத் தாண்டி அவரது இலக்கியப் பயணம் சிறப்பாகத் தொடர்வது மகிழ்ச்சிக்குரியது. 1993.01.31ம் திகதிய 'மித்திரன் வாரமலர்' பத்திரிகையில் பிரசுரமான "மரங்களும் சிவக்கும்" என்ற இவரது கவிதை பி.எம். புன்னியாமீன் தொகுத்து வெளியிட்ட "பாலங்கள்" என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. அந்தக் கவிதை அந்த நாள் ஞாபகமாக இங்கே:






என்ன கேவலம் ...!  
விஞ்ஞான யுகத்திலேயே  
அஞ்ஞானச் சிந்தனைகளால்  
அழிந்து  
கொண்டிருக்கிறது மனிதம்...!  
ஓ... விடியலின் போது  
பூபாளம் பாடிய  
பூலோகமா இது...?  
ஒருபுறம் அபயக்குரலும்  
மறுபுறம் அபாயக்குரலுமாய்  
ஒரு நரகலோகத்தையல்லவா  
நினைவூட்டிக்கொண்டிருக்கிறது...!  
இது நவீன யுகமாம்  
அதனால் தான்  
மாக்களுக்குப் பதிலாக  
மக்கள் வேட்டை நடக்கிறது...!  
கத்திகளின் கூர்மையைச்  
சோதிப்பதற்காகக்  
கழுத்துகள்  
துண்டிக்கப்படுகின்றன...!  
சமாதானம்  
மேடைப் பேச்சுக்களில்  
கருக்கட்டி  
கைதட்டல்கள் ஓய்ந்தபின்  
கருச்சிதைவு செய்யப்படுகிறது...!  
பூக்கள் மட்டுமென்ன  
பச்சை மரங்களும்  
இனிமேல் சிவப்பாக மாறும்  
ஏனெனில்  
வேர்கள் உறிஞ்சுவது நீரையல்ல  
மனித இரத்தத்தை...!

## சிந்தனை செய் மனமே

### யானையும் காகமும்!

ஒரு யானையின் சடலம் ஆற்றில் அடித்துச் செல்லப் பட்டுக் கொண்டிருந்தது. காகம் ஒன்று அந்த சடலத்தைப் பார்த்ததும், மகிழ்ச்சியடைந்தது. உடனடியாகப் போய்



அதன் மீது அமர்ந்து கொண்டது. போதுமான இறைச்சியை கொத்திக் கொத்தித் தின்றுவிட்டு, ஆற்றின் நீரைக் குடித்து ஆனந்தமாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தது, மிகுந்த திருப்தியுடன் தனது இறக்கைகளை விரிந்துப் பறந்து ஆனந்தக் கூத்தாடியது.

காகம் யானையின் சடலத்தைப் பார்த்து நினைத்துக் கொண்டது, 'ஆஹா! இது மிகவும் அழகான வாய்ப்பு. இங்கு உணவுக்கும், தண்ணீருக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. நாம் ஏன் இதை விட்டுவிட்டு எங்கெங்கோ அலைந்து திரிய வேண்டும்?'

ஆற்றில் மிதந்து ஓடும் அச்சடலத்தின் மீது காகம் பல நாட்களாக அமர்ந்து கரைந்து கொண்டிருந்தது. பசி எடுத்தால் யானையின் சடலத்தை உண்பதும், தாகம் எடுத்தால் ஆற்று நீரை அருந்துவதும், என அதன் வாழ்வே ஆனந்தமாகப் போய்க் கொண்டிருந்தது. பிரம்மாண்டமான நீர்நிலை.

அதன் வேகமான ஓட்டம், கரையோரம். பரந்து விரிந்து கிடக்கும் இயற்கையின் அழகிய காட்சிகள் என எல்லாவற்றையும் கண்டு இரசித்துக் கொண்டிருந்தது.



நாட்கள் சென்றன. இறுதியாக ஒரு நாள் நதியானது கடலை வந்து சேர்ந்தது.

நதி தன் இலக்கைக் கண்டுபிடித்து விட்டது அது தான் ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்ந்தது. கடலைச் சந்திப்பதே அதன் இறுதி இலக்காக இருந்தது,

ஆனால் இலக்கற்றுப் பறந்து திரிந்த அக்காகத்திற்கு மட்டும் அந்தநாள் மிகவும் துரதிர்ஷ்டமாகிப் போனது. சில நாட்களாக நடந்த வேடிக்கை, முடிவுக்கு வந்தது.

உணவு, குடிநீர், தங்குமிடம் என எதுவும் இல்லாத இடத்திற்கு அந்த யானையின் சடலமும் அந்த நதியும் அதனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டது. எல்லா இடங்களிலும் எல்லையற்ற உப்பு நீர். அக்காகம் அலைந்து திரிந்து சலித்துப் போனது.

பல நாட்களாக களைப்புடனும் பசியுடனும் தாகத்துடனும் நாலா திசைகளிலும் சிறகுகளை அசைத்து, கரைந்து கொண்டிருந்தது. கடலின் ஆழம் மற்றும் பரந்து விரிந்த மேகக் கூட்டங்கள் என அதன் முடிவற்ற திசைகளில் தேடியலைந்தது ஆனால் கடலின் முடிவை எங்குமே அதனால் காண முடியவில்லை.

கடைசியில், சோர்ந்து, சோகத்தில் மூழ்கி, கடலின் அலைகளில் விழுந்து மடிந்தது. அப்பொழுது பெரிய முதலை ஒன்று அதனை மிகவும் லாவகமாக விழுங்கியது.

உடல் இன்பங்களில் மட்டும் மகிழும் மனிதர்களும் அதே காக்கையைப் போலத்தான் நகர்கிறார்கள், அவர்கள் உணவையும் தங்குமிடத்தையும் நிரந்தரம் என்று எண்ணிக் கொள்கிறார்கள், இறுதியில்?

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

---




# பண்டாரவன்னியன் வரலாற்றை நாடகமாக வெளிக்கொணர்ந்த முல்லைமணி



கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியத்துக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது 'பண்டார வன்னியன்' என்ற வரலாற்று நாடகமாகும். இந்நாடகம் பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'வரலாற்று மாணவர்களாலேயே சரியாக அறியப்படாதிருக்கும் வன்னி இராச்சியத்தின் முக்கியத்துவத்தினையும், ஆங்கில ஆதிபத்தியத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய பண்டாரவன்னியனின் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துகின்றது 'பண்டாரவன்னியன்' நாடகம். இந்த நாடகத்தை ஆசிரியர் சிக்கல் இல்லாது தெளிவாக ஆக்கியிருப்பதன் மூலம், தான் மேற்கொண்ட நோக்கங்களை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றியிருக்கிறார். வன்னிப்பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை குறைந்து தளர்ந்துபோயிருக்கும் இலங்கைத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும் தேசப்பற்றும் உரிமைக் குரலும் ஓங்க இந்நாடகம் பயன்படும். வன்னி நாட்டுத் தலைவனொருவனின் சிறந்த வாழ்க்கையை நாடகமாக்கியிருக்கும் ஆசிரியர், ஒடுங்கிய பிரதேச மனப்பான்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தேசிய நோக்குடன் தேசப்பகைப்புலத்தில் பண்டாரவன்னியனின் சிறப்பைத் தீட்டியிருப்பது பாராட்டுக் குரியது' (பண்டாரவன்னியன் நாடகநூல் அணிந்துரையில்)

1970இல் முல்லைமணி எழுதிய இந்த வரலாற்று நாடகம் இலங்கை கலைக்கழக நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. இந்த நாடக நூலின் இரண்டாவது பதிப்பு 1972இல் வீரகேசரி வெளியீடாக வந்து 5000 பிரதிகளுக்குமேல் விற்பனையாகி அகில இலங்கைக்கும் அறிமுகமாகியது. அதன் பின் இந்நூல் நான்கு பதிப்புகளைக் கண்டது. இந்நாடகம் இலங்கையில் மாத்திரமன்றி அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளிலும் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தை அடியொற்றி தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி 'பாயும்புலி பண்டாரவன்னியன்' என்னும் நாவலையும், கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் 'பண்டார வன்னியன்' காவியத்தையும் யாத்துள்ளார்கள். முல்லைமணி, பண்டாரவன்னியன் நாடகத்தை மேடை நாடகமாக மட்டுமன்றி நாட்டுக்கூத்தாகவும் இயற்றியுள்ளார். இந்த நாடகம் பிறந்த வரலாறு பற்றி முல்லைமணி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'அந்நியரின் இறுதி மூச்சுவரை அயராது போரிட்ட அடங்காப்பற்றின் காவலன் பண்டார வன்னியனுக்கு எதிரிகளே சிலை எழுப்பினர். நினைவுச் சிலை அமைந்த கிராமம் கற்சிலையின் பெயராலேயே கற்சிலைமடு என அழைக்கப்படுகிறது. ஆங்கிலப் படைத்தளபதி வொன்டிறிபேக் தன்புகழை நிலைநாட்ட நிறுவிய கல், பண்டார வன்னியனின் வீரத்தைப் பறைசாற்றுகிறது.



ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலமாக கவனிப்பாரற்றுக் கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கும் கற்சிலை கூறும் செய்தியே பண்டார வன்னியனின் வரலாற்றாராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இதன் பின்னணியிலேயே இந்நாடகம் பிறந்தது. சுமார் பத்து ஆண்டுகளாக வன்னிநாட்டுக் காட்டிலும், ஏட்டிலும் கொழும்பு நூதனசாலை நூல் நிலையத்திலும் தேடிச் சேர்த்த பல தகவல்கள் நாடகத்தை எழுத அடிப்படையாக இருந்தன.'

சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட முல்லைமணி, முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளை கிராமத்தில் சபாபதி வேலுப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிக்கு இரண்டாவது மகனாக 03.05.1933இல் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையில் பெற்ற இவர், பின்னர் திருநெல்வேலி பண்டித கலாசாலையில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். 1949முதல் 1952வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று ஆங்கிலத்தில் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்தார். 1954இல் மஹரகம ஆங்கில ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்குத் தேர்வுபெற்று 1955முதல் 1956வரை பயிற்சிபெற்றார். 1969இல் தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, ஆகிய பாடங்களில் கலைமாணி சிறப்பு பட்டம் பெற்றார்.

03.10.1957இல் இவருக்கு வவுனியா மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. அங்கிருந்து முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு மாற்றம்பெற்றார். அக்கல்லூரியில் 16 வருடங்கள் கடமையாற்றிய பின்னர் விரிவுரையாளர் நியமனம் பெற்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் நான்கு வருடங்களும்; கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பதினொரு வருடங்களும் கடமையாற்றினார். அதன்பின்னர் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபராக நான்கு வருடம் கடமையாற்றியபோது ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டார். அதன் பேறாக பதவி உயர்வுபெற்று பிரதேச கல்விப் பணிப்பாளராக 01.10.1991 முதல் 03.05.1993 வரை பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம், கட்டுரை எனப் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்தவர்.



இவரது முதற் படைப்பு 1951இல் ஈழகேசரியில் வெளிவந்த 'எனது கிராமம்' என்ற 15 வரிக் கட்டுரையாகும். பண்டாரவன்னியன் நாடகத்தைத் தவிர முல்லைமணி இருபது நாடகங்கள் வரை எழுதியுள்ளார். அவற்றுள், 'சிதையாத செல்வம்', 'சேற்றில் மலர்ந்த செந்தாமரை', 'யாதும்ஊரே', 'கர்ணனின் கடைநாள்', 'வரப்பிரசாதம்' 'இருள் நீங்கியது, 'மலர்ந்த வாழ்வு', 'கலையரசி' 'நன்னித்தம்பி கீரன்', 'லோச் செலப்பர்', 'எது வாழ்வு, 'வெற்றித் திருநகர்', 'பெட்டிசம் போடுவேன்', 'இரவில் முல்லைத்தீவு' என்பன முக்கியமான நாடகங்களாகும். 1959இல் வீரகேசரி நிருபராக இவர் நியமிக்கப்பட்டார். முல்லைமணி எழுதிய முதல் சிறுகதை 'துணை 1970ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியாகியது. ஏறத்தாழ ஐம்பது சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். அவற்றில் பன்னிரண்டு சிறுகதைகள் 'அரசிகள் அழுவதில்லை' என்னும் தொகுப்பாக 1977இல் மலர் வெளியீடாக வந்தது. இத்தொகுதி இலங்கை அரசின் சாகித்திய விருதைப் பெற்றது. 2005இல் 'கொண்டுவந்த சீதனம்' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்தது.

ஞானம் நடத்திய புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'கொக்கிளாய் மாமி'என்ற சிறுகதை முதற் பரிசினைத் தட்டிக்கொண்டது.

'முல்லைமணி வே.சுப்பிரமணியம் இயற்கையாகவே கவிபுனையும் ஆற்றல் அமைந்தவர்' என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இவர் பாடிய தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். 'ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை (1976), 'நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை (1978), 'காவத்தை நீலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல் (1978) என்பன இவரது நூலுரு பெற்ற பக்திப் பனுவல்கள். இவற்றைவிட பண்டாரவன்னியன் நாடகம் (1970), வன்னியர் திலகம் வரலாற்று நாவல் (1998), இலக்கியப் பார்வை கட்டுரைகள் (1999), தமிழ் மொழிப் பயிற்சி (1975) ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

பண்டாரவன்னியன் நாடகம் நான்கு பதிப்புகள் வெளியிடப்பட்டதுடன் இந் நாடகத்திற்கு கலைக்கழகப் பரிசும் கிடைத்தது. 'அரசிகள் அழுவதில்லை', 'வன்னியர் திலகம்' ஆகியன முறையே சிறுகதைக்கும் நாவலுக்கும் தேசிய சாகித்திய மண்டலப்பரிசு பெற்றன.

பண்டாரவன்னியன் நாடகம் வன்னிப்பிராந்திய நாவலுக்கான வீரகேசரிப் பரிசினைப் பெற்றுக் கொண்டதும் சிறப்பெனலாம்.

வீரகேசரி வெண்பாப் போட்டியிலும், துறைநீலாவணை இலக்கியப் பேரவையின் கவிதைப் போட்டியிலும் இவர் பரிசு பெற்றுள்ளார்.

இலங்கை வானொலியிலும், ஏனைய கவியரங்குகளிலும் தலைமைக் கவிஞனாக இவர் பங்கு கொண்டுள்ளார்.

வானொலி நாடகங்கள், வில்லுப் பாட்டு பிரதிகள் என்பவற்றை எழுதியதோடு; 'மக்கள் கலை' என்னும் தலைப்பில் பன்னிரண்டு சொற்பொழிவுகளை வானொலியில் நிகழ்த்தி வன்னிநாட்டார் இலக்கியத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

முல்லைமணி எழுதிய 'மல்லிகை வனம்' சமூக நாவல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் வன்னிப் பிராந்தியத்திற்கான பரிசினைப் பெற்றது.

இவரது 'வன்னியர் திலகம்' என்ற நாவல் (1998) தேசிய சாகித்திய விருதினையும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பரிசையும் கலை இலக்கியப் பேரவையின் பரிசையும் பெற்றது. இவற்றைவிட 'பிறந்தமண்' 'கமுகஞ்சோலை'(2000) 'மழைக்கோலம்' (2003) ஆகிய நாவல்களையும் முல்லைமணி எழுதியுள்ளார். 'கமுகஞ்சோலை' நாவல் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசினைப் பெற்றது.

முல்லைமணி பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1999இல் 'இலக்கியப் பார்வை', 'வன்னியியற் சிந்தனை' (2001) ஆகியவை கட்டுரை நூல்களாக வெளி வந்துள்ளன. பல சமயக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். 'மதியும் பிறையும்' என்பது இவர் ஈழமுரசில் எழுதிய ஐம்பது கட்டுரைகளின் பொதுத்தலைப்பாகும். 'தமிழ் மொழிப் பயிற்சி' என்ற இவரது நூல் 1975இல் வெளியானது.

முல்லைமணி நாட்டார் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். 1972இல் அது தொடர்பாக 'மக்கள் கலைகள்' என்னும் தலைப்பில் வானொலியில் பன்னிரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இச்சொற்பொழிவுகள் பின்னர் வானொலி மஞ்சரியில் வெளியாகின.

இவர், தான் பிறந்த மண்ணோடு சேர்ந்த பல பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி சமூகத்தின் உயர்வுக்கும் பாடுபட்டார். இவர் முல்லை இலக்கிய வட்டத் தலைவராகவும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட உறுப்பினராகவும் பதவிவகித்தவர். கலை இலக்கிய சமயத் துறைகளில் ஈடுபட்ட இவரது சுயசரிதை 2007இல் 'நினைவுச் சரங்கள்' என்ற மகுடத்தில் வெளியிடப்பட்டது.

அல்லி, சுடர், பண்டிதன், வெளிச்சம், எரிமலை(பிரான்ஸ்) தமிழ்முரசு, கொம்பறை (கனடா) ஆகிய சஞ்சிகைகளிலும் ஈழகேசரி, ஈழநாடு தினபதி, சிந்தாமணி, ஈழமுரசு, உதயன் (கனடா) தமிழர் செந்தாமரை ஆகிய பத்திரிகைகளிலும் ஆக்கங்களைப் பிரசுரித்து தமிழ் வாசகர் பயனடையச் செய்துள்ளார்.

முல்லைமணியின் இலக்கியப் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்கள், கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. கலாபூஷணம், தமிழ்மணி, இலக்கியச் செல்வர், 'இலக்கிய ஜோதி' 'கலைஞர் திலகம்' 'தமிழ் அறிஞர்' என்பன அவற்றுள் சிலவாகும். வடக்கு கிழக்கு கல்வி கலாசார விளையாட்டுத் துறை 1995இல் இவரைக் கௌரவித்தது. 1999இல் இவருக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டது. இவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார். இவரது கலை இலக்கிய ஆய்வுப் பணிகளை அங்கீகரித்து 2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'கௌரவ கலாநிதி' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இலங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாகித்திய ரத்னா விருது இவருக்கு 2015இல் வழங்கப்பட்டது. இவர் 13.12.2016 அன்று அமரரானார்.

# சிறுவர் உலகம்

சுகந்தி



**அருளுடைமை: மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்**
**லென்ப தன்னுயி ரஞ்சும் வினை**

***தெளிவுரை :***
*தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.*

# இவ்வார மழலை




Mafaz - Rizmina rafeek

# ஏமாந்த கழுதை

முன்னொரு காலத்தில், ஒரு பசியெடுத்த சிங்கம், நரியிடம் சொன்னது;

"எனக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வா; இல்லையெனில் உன்னை சாப்பிட்டு விடுவேன்."

நரி ஒரு கழுதையிடம் சென்று சொன்னது; "சிங்கம் உன்னை காட்டுக்கு ராஜாவாக முடிசூட்ட அழைத்து வரச்சொன்னது. நல்ல நாட்கள் வரப்போகின்றன."

கழுதையும் சென்றது.

கழுதையைக் கண்டதும் சிங்கம் அதனைத் தாக்கியது, அதனால் கழுதையின் காதுகள் அறுபட்டாலும், அது தப்பித்து, நரியிடம் சென்று சொன்னது;

நீ என்னை ஏமாற்றிவிட்டாய். சிங்கம் என்னை கொல்லப் பார்த்தது...

நரி: இல்லை... இல்லை... உன் தலையில் கிரீடம் சூட்டவே, சிங்கம் உன் காதுகளை அகற்றியது. வா மீண்டும் செல்வோம்.

"கிரீடம் வேண்டும்."

கழுதைக்கு அது சரி எனப்பட்டது, அதனால் திரும்பிச் சென்றது.

மீண்டும் கழுதையைத் தாக்கிய சிங்கம், இம்முறை அதன் வாலை அறுத்தது.

கழுதை மீண்டும் தப்பித்து நரியிடம் சென்றது.

நீ பொய் சொல்கிறாய்; இதோ பார், சிங்கம் என் வாலை அறுத்துவிட்டது.

நரி: நீ அரியாசனத்தில் வசதியாக அமரவேண்டும் என்பதற்காகவே சிங்கம் உன் வாலை அகற்றியது. மீண்டும் செல்வோம்.

"வேண்டும் அரியாசனம்."

நரி கழுதையை மீண்டும் அழைத்து சென்றது. இந்த முறை, சிங்கம் கழுதையைப் பிடித்து கொன்றது.

சிங்கம் நரியிடம்...

பலே பலே, எப்படி சிக்கி சீரழிந்தாலும், திரும்ப கழுதையை அழைத்து வந்துவிட்டாயே. போய் கழுதையின் தோலை உரித்து, அதன் மூளை, நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தைக் கொண்டு வா.

நரி கழுதையின் தோலை உரித்து, அதன் மூளையை சாப்பிட்டது; கழுதையின் நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தை சிங்கத்திற்கு கொண்டு வந்தது.

சிங்கம் கோபமடைந்தது, மூளை எங்கே?

"அந்த கழுதைக்கு மூளை இல்லை அரசே. மூளை இருந்திருந்தால், காதையும், வாலையும் இழந்த பின்னர் உங்களை நம்பி மூன்றாம் முறை வந்திருக்குமா?" என்றது நரி.



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 132

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | 13 | |
| | | | 14 | 15 | 16 |
| | 17 | 18 | 19 | 20 | |
| 21 | 22 | | 23 | | |

பெயர் ..............................................

வகுப்பு ..............................................

தொலைபேசி இல ..............................................

பாடசாலை பெயர் ..............................................

வதிவிட முகவரி ..............................................

..............................................

.............................. ..............................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) ஜனநாயக ஆட்சி நிலவுகின்ற நாடுகளில் ஆட்சியைத் தெரிவு செய்வதற்காக குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதடவை நடத்தப்படுகின்ற மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு இது. மக்கள் அளிக்கும் தீர்ப்பில்தான் அரசாங்கம் உருவாகின்றது.

(8) தாவரங்களில் உணவுத் தயாரிப்பான ஒளித்தொகுப்பு தொழிற்பாட்டைப் புரிகின்ற அங்கம் இது. தாவரங்களின் சுவாசத்துக்கான இலைவாய்களும் இதில்தான் அமைந்துள்ளன.

(10) இவன் நண்பன் இல்லை. தீங்கான காரியங்கள் செய்கின்ற எதிரி இவன்.

(14) மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்ற சொல்.

(17) வானத்தில் தோன்றி புவியை வந்தடைகின்ற இயற்கை அனர்த்தம் இது. முகில்களில் உருவாகின்ற மின்னேற்றம் காரணமாக ஏற்படுகின்ற அனர்த்தம்.

(21) மனிதனுக்கு உணவு, உறையுள் போன்று இதுவும் மிகவும் அத்தியாவசியமானது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) தவளை, மரத்தவளை, சலமந்திரா போன்று இதுவும் ஒரு ஈரூடகவாழி.

(3) இவள் இளைய சகோதரி.

(5) ஐவகை நிலங்களில் முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் போன்று இதுவும் ஒன்று.

(8) இடர், அல்லல், துன்பம் என்றெல்லாம் இச்சொல்லைக் கூறலாம்.

(12) எழுத்துகளில் இருந்து உருவாகுவது சொல். சொற்களில் இருந்து உருவாகுவது இது. அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து பொருளை உணர்த்தினால் வருவது இது.

(17) அரிசியின் கவசமாக உள்ள கோது இது. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 131

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஞாயிறு 06. யன்னல் 12. வான் 15. மிடி
17. கோதுமை 21. வீதி 23. மைனா

**மேலிருந்து கீழ்**

01. ஞாலம் 03. பயறு 04. மின்னல் 09. வால்
14. அமைதி 15. கோடி 20, கனா

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 130

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.எப். மிஹ்ரா**
தரம் 01C, கமு/சது/ அல்-அர்ஷத் மகா வித்தியாலயம், இல. 60C, அல்-அர்ஷத் வீதி, மலையடிக் கிராமம் 03, சம்மாந்துறை.

**2. இப்திகர் ஸைத்**
தரம் 07, மாவனல்லை சாஹிராக் கல்லூரி, மாவனல்லை.

**3. ஆர். ஸம்ரக்ஷா**
தரம் 02C, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, பொற்கொல்லர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

**4. எம்.ஆர். முஹம்மது இஸ்ஹாக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி, இல. 44/40, இந்திரஜோதி வீதி, இர்மலானை.

**5. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் கல்லூரி, இல. 155/32, மொஹிதீன் ம.வீதி, மருதானை, கொழும்பு 10.

**6. எம்.ஏ. முஹன்னித்**
தரம் 08, அறபா வித்தியாலயம், இல. 170A, R.D.S. வீதி, அட்டாளைச்சேனை - 08.

**7. சாஹிட் நூரி**
தரம் 06E, அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 132
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## அறிந்து கொள்வோம்

- ★ 21ஆம் நூற்றாண்டின் முதல் ஒலிம்பிக் போட்டி நடந்த இடம் **சிட்னி.**
- ★ உலகக் கோப்பையை இரண்டு முறை வென்ற கிரிக்கட் வீரர் **கிளைவ் லொய்ட் (மேற்கிந்திய தீவுகள்)**
- ★ ஒரு பில்லியர்ட்ஸ் மேசையின் நீளம் **12 அடி.**
- ★ உலகிலேயே அதிக ஆண்டுகள் ஆட்சி செய்தவர் **விக்டோரியா மகாராணி (63 ஆண்டுகள், 216 நாட்கள்).**
- ★ கோல்ஃப் மைதானத்தில் உள்ள துளைகளின் எண்ணிக்கை **18.**
- ★ முதன்முதலில் கால்பந்தாட்டம் ஆரம்பித்த நாடு **இங்கிலாந்து.**
- ★ 200 நாடுகளுக்கு மேல் விளையாடப்படும் விளையாட்டு **கால்பந்து.**
- ★ சந்திரனில் இல்லாத மண்டலம் **வாயு மண்டலம்.**
- ★ சந்திரனில் வெப்ப நிலை பகலில் **180 டிகிரி, இரவில் 100 டிகிரி.**
- ★ லண்டனுக்கு முன் இங்கிலாந்தின் தலைநகரமாக இருந்த ஊர் **வின்ஸ்டர்.**
- ★ பெல்ஜியம் நாட்டின் அரச மொழி **பிளமிஷ்.**

## சிறுவர் சித்திரங்கள்



**எம்.ஆர். ஹமத் ராஹில்**
அந்நூர் பாலர் பாடசாலை, பொல்கஹவெல.



**ஆர். அத்தேஷ்**
தரம் - 9R, கேம்பிரிட்ஜ் பாடசாலை, கொழும்பு 15.

# வானவில்



இயற்கையின் வண்ணமயமான மாயம் வானவில். மழைத்துளிகள் வழியாக சூரிய ஒளி கடந்து செல்லும்போது நிகழும் ஒரு அழகான இயற்கை நிகழ்வு. ஒளி வளைந்து அல்லது விலகி, சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா மற்றும் வயலட் ஆகிய ஏழு வண்ணங்களாகப் பிரிந்து வானவில்லின் வளைவை உருவாக்குகின்றன.


ஒவ்வொரு வண்ணமும் வெவ்வேறு கோணத்தில் வளைவதால் வானவில் எப்போதும் ஒரே வண்ண வரிசையைப் பின்பற்றுகின்றன. நாம் பொதுவாக ஒரு வானவில்லின் பாதியை மட்டுமே பார்கின்றோம். அவை உண்மையில் முழு வட்டங்களாக இருப்பினும் தரை கீழ் பாதியை மறைக்கிறது. அரிதான சந்தர்ப்பங்களில், இரட்டை வானவில் தோன்றும்.இது மழைத்துளிகளுக்குள் ஒளி இரண்டு முறை பிரதிபலிப்பதால் ஏற்படுகின்றன. இரண்டாவது வானவில் மங்கலானது. அதன் வண்ணங்களை தலைகீழ் வரிசையில் கொண்டுள்ளன. வானவில் என்பது இயற்கை உருவாக்கக்கூடிய அழகின் அற்புதமான நினைவூட்டலாகும். சூரிய ஒளியையும் தண்ணீரையும் ஒன்றாக இணைத்து வண்ணமயமான வானவில்லாக அனைவரும் இரசிக்கிறார்கள்.

# ஈக்களின் உலகம்

ஈக்கள் சில அற்புதமான திறன்களைக் கொண்டுள்ளன. அதன் ஒவ்வொரு கண்களிலும் 7,000 சிறிய லென்ஸ்கள் உள்ளன. அவை எல்லா திசைகளிலும் பார்க்க உதவுகின்றன.

ஈக்கள் நிமிடத்திற்கு 1,000 முறை தங்கள் இறக்கைகளை அடிக்கின்றன. அதற்கு பற்கள் இல்லை. எனவே, அவை உமிழ்நீரைப் பயன்படுத்தி உணவைக் கரைக்கின்றன. ஈக்கள் சுமார் 28 நாட்களே உயிர் வாழ்கின்றன.

ஒரு பெண் ஈ தனது வாழ்நாளில் 500 முட்டைகள் வரை இடும்.இவற்றின் தனித்துவமான திறன்கள் கிட்டத்தட்ட எந்த சூழலிலும் உயிர்வாழ உதவுகின்றன.



# மெகா சுனாமியின் அச்சுறுத்தல்



ஜப்பானிய மொழியில் 'சு' என்றால் துறைமுகம், நாமி என்றால் அலை. எனவே துறைமுகத்தைத் தாக்கும் பேரலைகளுக்கு சுனாமி என்று பெயர் வைத்தனர்.

டிசம்பர் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பாதிப்புகளை நாம் மறந்திருக்க மாட்டோம். இந்தோனேசியாவில் நடந்த கடலடி பூகம்பத்தால் உருவான இந்த சுனாமி சுற்றியிருந்த 14 நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது.

எதிர்காலத்தில் இதை விட மிகப்பெரிய பேரழிவை உருவாக்கும் "மெகா சுனாமி" ஏற்படலாம் என்கின்றனர் புவியியல் ஆய்வாளர்கள்.

புவி வெப்பமயமாதலால் உலகம் முழுதும் தொடர்ந்து பனிக்கட்டிகள் உருகி வருகின்றன. இதனால் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் கடல் மட்டம் 3.8 செ.மீ. உயரம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 500 அடி உயரமான அலைகள் தோன்றலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

கடலோரம் உள்ள துருவப் பகுதிகளில் பனிக்கட்டிகள் உருகும்போது பெரிய அளவிலான பனிப்பாறைகள் கடலில் விழலாம். அதேபோல், பனி உருகியதால் மண் அல்லது பெரும் பாறைகள் சமநிலை இழந்து சரியலாம். இதனால் மிக உயரமான அலைகள் தோன்றி பேரழிவு ஏற்படுத்தும்.


இப்படியான பேரலைகள் ஏற்கனவே கிரீன்லாந்தில் ஏற்பட்டுள்ளன. ஒரு கால் பந்து மைதானத்தின் அளவுள்ள பனிப்பாறை கடலில் விழுந்தபோது 200 அடி உயரமான அலைகளை உருவாக்கியுள்ளன.

இதேபோல் எதிர்காலத்தில் ஏனைய கண்டங்களிலும் நிகழலாம். இன்றைக்கு சுனாமியைக் கணிக்கப் புதிய தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன. என்றாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது நமது கடமை.

## மாற்றத்தின் விதை புத்தகம்

புத்தகம் நமக்கு ஒரு நல்ல நண்பன்.
புத்தகங்கள் நமக்கு புதிய உலகைக் காட்டும்.
புத்தகம் ஒரு கடல், அதில் மூழ்கித் திளைக்கலாம்.
புத்தகம் நம்மை சிந்திக்க வைக்கும்.
புத்தகம் நமக்கு அறிவை வழங்கும்.

# அசையாக்கரடி 'ஸ்லாத்'



தென் அமெரிக்காவின் அடர்ந்த மழைக்காடுகளில் வாழும் அசையாக்கரடி, தனது மெதுவான இயக்கத்திற்காகவே பிரபலமானது. ஆங்கிலத்தில் 'ஸ்லாத்' என்று அழைக்கப்படும் இந்த அமைதியான உயிரினம், பெரும்பாலான நேரத்தை மரத்தில் தொங்கிக்கொண்டே கழிக்கும். இதன் மெதுவான இயக்கம் மற்றும் அமைதியான வாழ்க்கை முறை, பலரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.

அசையாக்கரடி மணிக்கு சுமார் 0.04 கிமீ வேகத்தில் மட்டுமே நகரும். இது மிகவும் மெதுவான வேகம். இது உண்ணும் இலைகளில் குறைந்த அளவு ஊட்டச்சத்து இருப்பதால், அதிக அளவில் உணவை உண்ண வேண்டியிருக்கும். இதற்கு அதிக ஆற்றல் தேவைப்படாது என்பதால், மெதுவாகவே நகர்கிறது.

இவை மெதுவாக நகர்வதால், வேட்டையாடுபவர்களிடமிருந்து தப்பிக்க எளிதாக இருக்கும்.

அசையாக்கரடி தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் ஒரு அற்புதமான உயிரினம். அதன் மெதுவான இயக்கம் மற்றும் அமைதியான வாழ்க்கை முறை நமக்கு பல பாடங்களை கற்றுத்தருகிறது. இந்த அழகான உயிரினத்தை பாதுகாப்பது நம் அனைவரின் கடமை.

# மஞ்சரி விளையாட்டு



# கிரிக்கெட் ஜாம்பவான்களின் பாதையில் கமிந்து

கமிந்து மெண்டிஸ் சிட்டக்ராமில் 19 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்றார், ஓல்ட் டிரபர்ட்டில் 25 பந்துகளுக்கு 12 ஓட்டங்களைப் சேர்த்தார், லோட்ஸில் 5 பந்துகளில் நான்கு ஓட்டங்களைக் குவித்தார். அவர் இதுவரை ஆடிய 11 டெஸ்ட் இன்னிங்ஸ்களில் குறைகூறுவதென்றால் இந்த மூன்று இன்னிங்ஸ்களையும் தான் சொல்ல வேண்டும்.

மற்ற இன்னிங்ஸ்களில் அவர் தவறாது ஐம்பதுக்கு மேல் ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். இதில் மூன்று தடவைகள் சதம் பெற்றிருக்கிறார். அதாவது அவர் ஆடிய அல்லது ஆடி வரும் 7 டெஸ்ட் போட்டிகளில் ஓர் இன்னிங்ஸிலேனும் தொடர்ச்சியாக 50 ஓட்டங்களுக்கு மேல் பெறுவதற்குத் தவறியதில்லை. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இது அதிக பட்சமாகும். பாகிஸ்தானின் சவூத் ஷகீலுடன் இந்த சாதனையை சமன் செய்திருக்கிறார்.

இதன்போது தொடர்ந்து முதல் ஆறு டெஸ்ட்களிலும் 50க்கும் மேல் ஓட்டங்கள் பெற்ற சுனில் கவாஸ்கர், சயீட் அன்வர் மற்றும் பசில் புட்சர் ஆகிய கிரிக்கெட் பெரும்புள்ளிகளை பின்தள்ளி இருப்பது முக்கியம்.

இதன்மூலம் அவரது ஓட்ட சராசரி கூட 80.90 ஆக உயர்ந்துவிட்டது. குறைந்தது 10 இன்னிங்ஸ்கள் ஆடியவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் டெஸ்ட் வரலாற்றில் அதிக ஓட்ட சராசரியை பெற்றவர்களில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மனுக்கு மாத்திரம் தான் பின்நிற்கிறார். பிரட்மனின் ஓட்ட சராசரி என்பது அசாத்தியமானது. விளையாட்டு உலகில் யாரும் எட்டாத அளவு 99.94 ஓட்ட சராசரி அவருடையது.

கமிந்துவின் இந்த ஆட்டம் என்பது இலங்கைக்கு பிரத்தியேகமானது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் டெஸ்ட் அறிமுகம் பெற்ற இலங்கை வீரர் ஒருவர் இப்படி தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்துவது இது தான் முதல் முறை. முந்தைய சம்பவங்களைப் பார்த்தோம் என்றால் முதல் தரப்போட்டிகளில் சோபித்து அதே உற்சாகத்துடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் பெற்று ஒரு சில இன்னிங்ஸ்களில் சிறப்பாக ஆடிவிட்டு காணாமல்போனவர்கள் ஏகத்துக்கு உள்ளனர். அப்படி ஓட்ட சராசரியை 50 க்கும் மேல் தனது டெஸ்ட் வாழ்வை ஆரம்பித்து 40 ஆகக் குறைந்து, 30க்கு சரிந்து பின்னர் 20 ஆகி காணமல்போனவர்கள் எப்போதுமே தேர்வுக் குழுவினருக்கு தலையிடி கொடுப்பவர்கள். அவ்வாறான வீரர்கள் நம்பிக்கை தந்துவிட்டு ஏமாற்றுவதால் தேர்வாளர்கள் புதிய வீரர்களை தேடும் பணியை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டி இருக்கும்.

கமிந்துவை இந்த வகையராவுக்குள் சேர்க்க முடியாது. அவர் இப்போது பதினொரு இன்னிங்ஸ்களில் ஆடி இருக்கிறார். அவரது துடுப்பாட்டத்தில் இதுவரை எந்தத் தொய்வும் தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனது கன்னி டெஸ்டில் ஆடி அரைச்சதம் பெற்றபோதும் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீதும் வாய்ப்புப் பெற்ற கமிந்து தொடர்ந்து உறுதியாகவே ஆடுகிறார்.

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் 11 இன்னிங்ஸ்கள் முடிவில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர்கள் என்ற பட்டியலை எடுத்துப் பார்த்தால் பெரும்பாலான வீரர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்.

கமிந்து தனது முதல் 11 இன்னிங்ஸ்களிலும் 809 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். இது முதல் 11 இன்னிங்ஸ்களில் வீரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டங்கள் வரிசையில் 8 ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பது மேற்கிந்திய தீவுகளில் கிரிக்கெட் ஜாம்பவான் எவர்டன் வீக்ஸ் (968 ஓட்டங்கள்). இந்தியாவின் சுனில் கவாஸ்கர் மூன்றாவது இடத்தில் இருப்பதோடு டொன் பிரட்மன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

இப்போது இலங்கை டெஸ்ட் அணியில் இன்றியமையாத வீரராக மாறிவரும் கமிந்து நியூசிலாந்துக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வரிசையில் முன்கூட்டியே களமிறக்கப்பட்டது முக்கியமான முடிவாகும். முன்னர் 7ஆவது வரிசையில் வந்த அவர் காலியில் நடைபெற்று வரும் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் ஐந்தாவது வரிசையில் வந்து சதம் பெற்றார். அந்த சதம் தான் இலங்கை அணியை முதல் இன்னிங்ஸில் ஸ்தரம் அடையச் செய்தது.

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஆட்டத்தின் மூன்று நாட்கள் நிறைவடைந்த நிலையில் நேற்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றதால் அன்றைய தினம் ஓய்வு நாளாக இருந்தது. இன்று (22) நான்காவது நாள் ஆட்டம் ஆரம்பமாகிறது.

இரண்டாவது இன்னிங்ஸை ஆடும் இலங்கை அணி 4 விக்கெட்டு இழப்புக்கு 237 ஓட்டங்களைப் பெற்றிருப்பதோடு நியூசிலாந்தை விடவும் 202 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. இதன்மூலம் இலங்கை அணிக்கு நியூசிலாந்துக்கு சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

என்றாலும் முதல் இன்னிங்ஸில் சோபித்த கமிந்துவால் இரண்டாவது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களையே பெற முடிந்தது. ஆனால் இலங்கை இன்னும் 150க்கு மேல் ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றியை உறுதி செய்ய வாய்ப்பு அதிகம்.

எஸ்.பிர்தௌஸ்...

# நல்ல ஆரம்பம்...




சென்னையில் நடந்த 4ஆவது தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி இலங்கையின் இளம் வீரர்கள் பற்றிய நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது. இந்தப் போட்டியில் இலங்கையால் 9 தங்கப்பதக்கங்களுடன் 35 பதக்கங்களை வென்று இந்தியாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பிடிக்க முடிந்தது.

என்றாலும் முப்பாய்ச்சல் வீராங்கனை மதுஷானி ஹேரத் உபாதைக்கு உள்ளாகாது இருந்தால் இன்னும் இரண்டு தங்கப் பதக்கங்களை எதிர்பார்த்திருக்கலாம். அதாவது மதுஷானி நீளம் பாய்தலில் பெற்ற சிறந்த பாய்ச்சல் என்பது 6.30 மீற்றராக இருக்கும் நிலையில் சென்னையில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை பிரதிஷா யமுனாவின் சிறந்த தூரம் 5.79 ஆகும். இதுவே முப்பாய்ச்சலில் மதுஷானி 13.13 மீற்றர் தூரம் பாய்ந்தது சிறந்ததாகும். ஆனால் தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் தங்கம் வென்ற இந்தியாவின் ரிஷாகா அவஸ்தி பாய்ந்த தூரம் 12.76 மீற்றர்.

அதேபோன்று 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை தங்கத்தைத் தவறவிட்டது நூலிழையில்.

தெற்காசிய கனிஷ்ட விளையாட்டுப் போட்டியில் இலங்கை 9 தங்கப்பதக்கங்கள் தவிர 9 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களை வென்றது. இதில் இலங்கை வீரர்கள் 5 புதிய தெற்காசிய சாதனையை படைத்தனர். அது 100 மீற்றர், 100 மீற்றர் அஞ்சலோட்டம், 200 மீற்றர், 800 மீற்றர் மற்றும் உயரம் பாய்தல் போட்டிகளிலாகும்.

குறிப்பாக ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த டெரோன் விஜேசிங்க 100 மீற்றரில் தங்கம் வென்று ஆசியாவின் அதிவேக இளம் வீரராக பதிவானார். 100 மீற்றர் அஞ்சலோட்டத்திலும் இலங்கை கனிஷ்ட மெய்வல்லுனர் சாதனையை முறியடித்து தங்கம் வெல்ல முடிந்தது.




கனிஷ்ட விளையாட்டுப் போட்டி என்பது ஓர் ஆரம்பக் கட்டம் தான், இவர்கள் சர்வதேச மட்டத்தில் சாதனைகள் புரிய இவர்களை கவனமாக பராமரிக்க வேண்டியது அவசியம்.

தற்போது ஆண்களுக்கான 100 மீற்றர் 200 மீற்றர் போட்டிகளில் இலங்கை சாதனைக்கு (முறையே 9.96 விநாடி மற்றும் 20.13 விநாடி) சொந்தம் கொண்டாடு யுபுன் அபேகோன் முதல் முறை சர்வதேச போட்டியில் பங்கேற்றது 2013 ஆம் ஆண்டு நடந்த தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியிலாகும். அந்தப் போட்டியில் முப்பாய்ச்சலிலும் பங்கேற்ற அவர் நான்காம் இடத்தைப் பெற்றார். என்றாலும் தனது திறமை எதுவென்று புரிந்து கொண்ட யுபுன் குறுந்தூர ஓட்டத்தில் உச்சத்தைத் தொட்டார். இன்று அவர் தெற்காசியாவின் அதிவேக வீரராக மாறியிருக்கிறார்.

என்றாலும் தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி என்பது திறமைகளை அடையாளம் காண்பதற்கான ஆரம்பப் படியாகவே இருக்கும். சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடுகையில் தெற்காசியாவில் இலங்கை மெய்வல்லுனர்கள் எப்போதுமே சாதித்து வருவதோடு, அதிலும் ஓட்டப்போட்டிகளில் இந்தியா மாத்திரமே இலங்கைக்கு சவாலாக இருக்கும்.

எனவே தற்போது பதக்கம் வென்றிருக்கும் வீரர்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்கு இதனை சிறந்த தருணமாக எடுத்துக் கொள்வது அவசியமாகும். தங்கம் மற்றும் வெள்ளி வென்றவர்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கும். அவர்களால் எப்படியேனும் முன்னேற முடியும். ஆனால் இலங்கை சார்பில் வெண்கலம் வென்றிருக்கும் 17 பேர் தொடர்பிலும் பிரத்தியேக அவதானம் செலுத்தினாலேயே அவர்களை தங்கம் வரை அழைத்துச் செல்ல முடியும். இல்லாவிட்டால் அவர்களின் தடகள வாழ்க்கை என்பது தெற்காசியாவுடன் சுருங்கிவிட அதிக வாய்ப்பு இருக்கிறது.

# குறிப்புகள்



## பௌண்டரி இன்றி அதிக ஓட்டம்

இந்த ஆண்டு கரீபியன் பிரீமியர் லீக்கில் ஷிம்ரோன் ஹெட்மியர் ஒரு பௌண்டரி கூட பெறாது 91 ஓட்டங்களைக் குவித்தார். சென் கீட்ஸ் அணிக்கு எதிராக கயானா அமசோன் வொர்ரியஸ் அணிக்காகவே அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றார். இதன்போது அவர் ஒரு பௌண்டரி கூட பெறாததற்கு என்ன 39 பந்துகளில் 11 சிக்ஸர்களை விளாசியே 91 ஓட்டங்களைப் பெற்றார்.

அதாவது டி20 கிரிகெட்டில் ஒரு பௌண்டரி கூட பெறாது பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் இதுதான். முன்னதாக 2022 ஜுனில் கொழும்பில் நடந்த பொலிஸ் அணிக்கு எதிரான போட்டியில் செபஸ்டியன் அணி சார்பில் ஷஷ்ரிக புஸ்ஸேகொள்ள ஒரு பௌண்டரி கூட பெறாது 78 ஓட்டங்களைக் குவித்தது சாதனையாக இருந்தது. இதன்போது ஷஷ்ரிக 40 பந்துகளில் 7 சிக்ஸர்களை விளாசி இருந்தார். ஆனால் டி20 போட்டி ஒன்றில் ஒரு பௌண்டரி அல்லது ஒரு சிக்ஸர் கூட பெறாது அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற சாதனை ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த நவ்தீப் பூயாவையே சாரும். 2008 ஓகஸ்ட் மாதம் பெல்பெஸ்டில் நடந்த பெர்முடா அணிக்கு எதிரான போட்டியில் அவர் 54 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்றதோடு அனைத்து ஓட்டங்களையும் ஓடியே பெற்றார். நல்லவேளை ஸ்கொட்லாந்து அந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

## டெண்டுல்கரின் விசித்திர சாதனை



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சக வீரர்களுடன் ஆடியவர் யார் தெரியுமா? அது இங்கிலாந்தின் கிராஹம் கூச் தான். அவர் டெஸ்ட் ஆடிய காலத்தில் மொத்தமாக 113 சக வீரர்களுடன் ஆடி இருக்கிறார். இந்த வரிசையில் மற்றொரு இங்கிலாந்து வீரரான பிரான்க் வூல்லி 111 சக வீரர்களுடன் ஆடி இரண்டாவது இடத்திலும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 110 சக வீரர்களுடன் ஆடி மூன்றாம் இடத்திலும் உள்ளனர். ஆனால் தம்முன் விளையாடிய எதிரணி வீரர்களையும் சேர்த்துப் பார்த்தால் டெண்டுல்கரை விஞ்ச ஆளில்லை. அவர் எதிரணி வீரர்கள் உட்பட மொத்தம் 492 வீரர்களுடன் டெஸ்ட் போட்டிகளில் ஆடி இருக்கிறார். இந்த வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கு ஷ்வ்னாரின் சந்தர்போல் எதிரணி வீரர்கள் உட்பட 426 வீரர்களுடன் ஆடியிருக்கிறார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளைப் பொறுத்தவரை அதிக சக அணி வீரர்களுடன் ஆடிய சாதனை மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெயில் வசமே இருக்கிறது. அவர் மொத்தம் 128 சக அணி வீரர்களுடன் ஆடியிருக்கிறார். மேற்கிந்திய தீவுகள் அண்மைக் காலத்தில் ஸ்திரமற்ற நிலையில் இருப்பதால் அணிக்கு மாறி மாறி புதிய வீரர்கள் வருவது கெயில் இந்த சாதனையை படைக்க உதவி இருக்கிறது.

ஆனால் டெண்டுல்கர் சக வீரர்கள் மற்றும் எதிரண வீரர்கள் என்று மொத்த 743 வீரர்களுடன் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடி முன்னிலையில் இருப்பதோடு ஜயவர்தன இவ்வாறு மொத்தம் 725 வீரர்களுடனும், ஜயசூரிய மொத்தம் 714 வீரர்களுடனும் ஆடியுள்ளனர்.

## லாராவின் அசாத்திய சாதனை

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அணித் தலைவராக அதிகூடிய ஓட்டங்களை பெற்றவர் என்ற சாதனையில் இந்திய வீரர்களை அசைக்க முடியாது. விரேந்திர செஹ்வாக் 2011 ஆம் ஆண்டு இந்தோரில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் 219 ஓட்டங்களை விளாசினார். அந்தப் போட்டியில் அவர் இந்திய அணித் தலைவராகவும் இருந்தார்.

இந்த வரிசையில் இரண்டாவது இடத்திலும் இந்திய வீரரே இருக்கிறார். அது ரோஹித் ஷர்மா. 2017 டிசம்பரில் மொஹாலியில் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய அணித் தலைவராக அவர் ஆட்டமிழக்காது 208 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் இவர்களுக்கு முன்னாள் ஒருநாள் சர்வதேச போட்டியில் அணித் தலைவராக அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற சாதனை இலங்கையின் சனத் ஜயசூரியவே படைத்திருந்தார். 2000 ஆம் ஒக்டோபரில் ஷார்ஜாவில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் ஜயசூரிய 189 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

என்றாலும் டெஸ்ட் போட்டிகளில் பிரையன் லாராவை யாராலும் நெருங்கக் கூட முடியாது. 2004 ஆம் ஆண்டு அன்டிகுவாவில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் லாரா ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களைப் பெற்றார். அதாவது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அணித் தலைவராக பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் இது தான். இதற்கு அடுத்த இடத்தில் 2018 ஜுலையில் ஹராரேயில் நடந்த சிம்பாப்வேயுக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் அரோன் பின்ச் ஆட்டமிழக்காது பெற்ற 172 ஓட்டங்கள் உள்ளன.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 செப்டெம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை



# தெரிந்தால் சொல்லிவிடுங்கள்



**1979** செப்டெம்பர் 22 ஆம் திகதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.00 மணிக்கு இந்திய சமுத்திரத்தின் தொலைதூரப் பகுதியில் அசாதாரணமான ஒளி தோன்றித் தோன்றி மறைந்தது. அமெரிக்க தானியக்க சக்திவலு கண்காணிப்பு செய்மதிக்கு அது தெளிவாகத் தெரிந்தது.

சில நொடிகளுக்குப் பின் வழக்கத்திற்கு மாறாக அயனாதிக்க இடையூறை பூர்டோரிக்கோ கண்காணிப்பகத்தில் அவதானிக்க முடிந்தது. சரியாக அதே நேரத்தில் அமெரிக்க கடற்படையின் நீருக்கடியில் இருக்கும் ஒலிக் கண்காணிப்பு அமைப்பில் ஒரு முணுமுணுப்புச் சத்தம் கேட்டது.

இந்த தடயங்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது தென்னாபிரிக்க முனைக்கு அப்பால் ஏதோ தீவிரமான வெடிப்பு ஒன்று நிகழ்ந்திருப்பது உறுதி.

செய்மதி தரவுகளை வைத்துப் பார்க்கும்போது ஏதோ அணு குண்டு சோதனை நடந்திருப்பது போன்று தெரிகிறது. இந்த சம்பவத்தின் அனைத்து அம்சங்களும் முன்னர் அணு ஆயுத சோதனைகளின்போதும் நிகழ்ந்த அம்சங்களுடன் சரியாக பொருந்துகிறது.

அமெரிக்க உளவுப் பிரிவுக்குக் கூட இன்றுவரை கண்டுபிடிக்க முடியாத இந்த நிகழ்வு, வேலா சம்பவம் என்று வரலாற்றில் பதிவாகி இருக்கிறது. ஆனால் இந்த மர்மத்திற்கான காரணம் இன்றும் வெளியே வரவில்லை. ஆனால் யாரோ அணு ஆயுத சோதனை நடத்தி இருக்கிறார்கள் என்பது பொதுவான நம்பிக்கை. தென்னாபிரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்து அணு ஆயுத சோதனை செய்ததன் விளைவுதான் இது என்று அங்கங்கே பேச்சு அடிபடுகிறது.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



# ஸ்லோவேனியா... ஸ்லோவாக்கியா...

ஸ்லோவேனியா, ஸ்லோவாக்கியா என்பது உலகையே குழப்பும் இரண்டு நாடுகள். நாக்கு சற்று தவறினால் கூட வரைபடமே மாறிவிடும். இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன் ஸ்லோவேனியா, ஸ்லோவாக்கியா இரு நாடுகளின் பிரதமர்களும் ஒரே வாரத்தில் இராஜினாமா செய்தார்கள். உலகமே குழம்பியது இரண்டும் ஒன்றா, இரண்டா என்று கேள்வி மேல் கேள்வி.

தேசிய கீதம் ஒலிப்பது தொடக்கம், உலகத் தலைவர்கள் வரை இந்த இரண்டு நாடுகளையும் குழுப்பிக்கொள்வது அடிக்கடி நிகழும் ஒன்று. என்ன பிரச்சினை என்றால் இந்த இரு நாடுகளினதும் தேசியக் கொடி, தேசிய கீதம், மொழி எல்லாமே கிட்டத்தட்ட ஒன்றுபோல் இருக்கும்.

இத்தனைக்கும் இந்த இரு நாடுகளும் அண்டை நாடுகள் கூட இல்லை. இரு நாடுகளையும் ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி பிரிக்கின்றன. ஆனால் இரு நாடுகளும் முன்னாள் சோசலிச குடியரசுகளாக இருந்தன. 1990களிலேயே தனி நாடுகளாக உருவெடுத்தவை. என்றாலும் ஒவ்வொரு மாதமும் ஸ்லோவேனியா, ஸ்லோவாக்கியா தமக்கு தவறுதலாக வரும் கடிதங்களை பரிமாறிக்கொள்வது ஒரு தனி வேலையாக பார்த்து வருகின்றன.

# சுவிட்சர்லாந்தை கலைக்க முயன்ற கடாபி

லிபிய முன்னாள் சர்வாதிகாரி கடாபி சுவிட்சர்லாந்து நாட்டை கலைத்துவிடும்படி ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்த கதையை என்னவென்று சொல்வது.

தனது இரு வேலைக்காரர்களை தாக்கியதாக ஜெனீவா பொலிஸார் 2008 ஆம் ஆண்டு கடாபியின் மகன் மற்றும் மகனின் மனைவியை கைது செய்து இரண்டு நாள் சிறை வைத்தனர். கோபமடைந்த கடாபி, உள்நாட்டில் இருக்கும் சுவிஸ் நாட்டின் நெஸ்ட்லே, ஏ.பி.பி நிறுவனங்களை மூடினார். ஏதேதோ காரணம் கூறி இரு சுவிஸ் வர்த்தகர்களை கைது செய்தார், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக விமானங்களை ரத்துச் செய்தார், சுவிஸ் வங்கிகளில் இருந்த சுமார் 5 பில்லியன் டொலர் பணத்தை வாபஸ் பெற்றார். இத்தனை செய்தும் அவரது கோபம் அடங்கவில்லை.

ஐ.நாவுக்குச் சென்று பரிந்துரை ஒன்றை சமர்ப்பித்தார். அதாவது சுவிட்சர்லாந்தின் இத்தாலி பேசும் மக்கள் வாழும் பகுதியை இத்தாலியிடமும், ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியை ஜெர்மனிடமும் பிரெஞ்ச் பேசும் மக்கள் வாழும் பகுதியை பிரான்ஸிடமும் கொடுத்து அந்த நாட்டை கலைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இது ஐ.நா விதிகளுக்கே முரணானது என்று கடாபியின் கோரிக்கையை அந்த அமைப்பு நிராகரித்துவிட்டது.





# ஒளி வேகம் தெரியுமா?

உங்களுக்கு வயது 15 என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு விண்களத்தில் ஏறி ஒளியின் வேகத்தில் பயணித்து 5 ஆண்டுகள் விண்வெளியில் கழித்துவிட்டு பூமிக்கு திரும்பினால் உங்களுக்கு 20 வயதாக இருக்கும்.

அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் நீங்கள் புறப்படும்போதும் உங்களுடைய வயதிலேயே இருந்த உங்களின் நண்பனின் வயது அப்போது 65 ஆக இருக்கும்.

அதாவது நேரம் என்பது பயணிக்கும் வேகத்தைச் சார்ந்தது. வேகம் கூடினால் நேரம் சுருங்கும்.

அதன் விளைவுதான் மேற்சொன்ன உதாரணம். இதற்கு மேல் இதனை விளக்கப்போனால் ஐன்ஸ்டைனின் சிறப்பு சார்பியல் தத்துவத்தை எல்லாம் சொல்லி குழப்ப வேண்டி இருக்கும்.

உன் கணவர் எப்போதும் மனச்சாட்சிப்படி நடப்பவரா?
பின்ன, நான்கு வேட்பாளர்கள் கிட்டயும் பணம் வாங்கியதால் யாருக்கும் துரோகம் செய்யக்கூடாதுன்னு அவர் ஓட்டு போடவே போகாம விட்டுட்டாரே?





பிஞ்சு போன தோசை, கருகிப் போன வடை.... என்னய்யா ஹோட்டல் ஐயா இது?
தலைவரே ஓட்டு கேட்டு வந்தப்ப நீங்க செய்தது தான் அது. சாப்பிடுங்க.



மக்கள் நலனுக்காகத்தான் நான் நடிக்கிறதை விட்டுட்டு அரசியலுக்கு வந்திருக்கிறேன்
அதுக்கு நடிக்கிறதை மட்டும் விட்டிட்டா போதுமே!

என்னது உன்னோட கைவிரலில் நீல கலரில் மை பூசி இருக்கு?
வோட்டுக்கு பணம் கொடுத்ததுக்கு அடையாளமா கட்சிக் காரங்க இப்படி பண்ணிட்டாங்க.





நீங்க குண்டாயிட்டீங்கன்னு உங்க மனைவி கோபமா இருக்காங்களே.. ஏன்?
எனக்குத் தெரியாம எந்த ஹோட்டல்ல சாப்பிடுறீங்கன்னு அவ கேட்கிறா....?

"டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!"
"கனவு தானே வருது அதனாலென்ன?"
"இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!"



காதலன் : நம்ம காதலை மெதுவா எங்க வீட்டில் சொல்லிட்டேன்.
காதலி : அவங்க என்ன சொன்னாங்க, ஒத்துக்கிட்டாங்களா?
காதலன் : மெதுவா சொன்னதால அவங்களுக்கு கேட்கலை
காதலி : !!!!





கணவன் : ச்சீய்! காப்பியாடி இது? நாய்கூட இதை குடிக்காதுடி.
மனைவி : ஆமாங்க! அதனாலதான் நம்ம நாய்க்கு ஹார்லிக்ஸ் போட்டு வச்சுருக்கேன்.
கணவன் : ????!!!!

தொண்டர் 1 : "தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"
தொண்டர் 2 : " சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"



எம்.டி. எதுக்கு அடுத்த வாரம் லீவு வேணும் உனக்கு?
ஊழியர்: எனக்கு கல்யாணம் சார்!
எம்.டி.: உனக்கு எந்த முட்டாப்பய பொண்ணு கொடுக்கறான்
ஊழியர்: என்ன சார் மறந்துட்டீங்களா? உங்கப் பொண்ணைத்தான் கல்யாணம் செஞ்சுக்கப்போறேன்!





நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"
திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"

# அருந்ததீயின் மாபெரும் Aari Work Fashion Show














கொழும்பில் Hotel Sapphire வில் நடைபெற்ற அருந்ததீயின் மாபெரும் Aari Work Fashion Show 2024 ஆனது அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஸ்ரீகஜன், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான செந்தில் வேலவர், Hotel Sapphire வின் முகாமையாளரான சிவரத்னத்தோடு Nayagara Salon and Academy யின் உரிமையாளரான கயல்விழி ஜெயப்பிரகாஷை தொடர்ந்து ஆரி குழுவின் இயக்குனரான ஜெயந்தி முரளி, செயலாளரான வினோஜினி ரோய் மற்றும் ஒருங்கிணைப்பாளரான வினோதினி சுரேந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் பல ஆரி வடிவமைப்பாளர்கள், தையற்கலைஞர்கள் மற்றும் ஒப்பனை கலைஞர்கள் என சுமார் 300 பேர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

# காரைக்கவியின் 'சீத்துவக்கேடு' நூல் வெளியீட்டு விழா














காரைக்கவியின் 'சீத்துவக்கேடு, துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' எனும் நூல் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்த, வாழ்த்துரையை பேராசிரியர் தை.தனராஜும் முகப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும் நயவுரையை வைத்தியர் செல்வரஞ்சனி சுப்ரமணியமும் ஆய்வுரையை பேராசிரியர் வ.சிவலோகதாசனும் நோக்குரையை கலாநிதி க.ரகுபரனும் மகிழுரையை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும் நன்றியுரையை நூலாசிரியரும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சாகித்திய ரத்தினா தி.ஞானசேகரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.சிவராஜா, புற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் ந.ஜெயகுமாரன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மேனாள் ஆசிரியர் க.குகப்பிரியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சமய, சமூக சேவையாற்றி வரும் செல்லதுரை நிமலஸ்பரன்

கட்டுக்கித்துல ஹெல்பொட மத்தியப்பிரிவைச் சேர்ந்த செல்லதுரை நிமலஸ்பரன் கடந்த காலங்களில் ஆற்றிய சேவைகளுக்காகவும் தொடர்ந்து ஆற்றி வருகின்ற சமய, சமூக சேவைகளுக்காகவும் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டவர்.

07.05.1993ஆம் திகதி பிறந்த இவர், க.பொ.த. உ/த(கலைப் பிரிவு) சித்தி பெற்று, அடிப்படை மனித உரிமைகள், சமூக விஞ்ஞானம், தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல், பொதுமுகாமைத்துவம், ஆங்கில பேச்சு, ஆளுமை விருத்தி, அனர்த்த முகாமைத்துவம், குடியியல் கல்வி, சிறுவர்களுக்கான ஆரம்ப உளவளத்துணை, ஆரம்ப கட்ட ஆலோசனை வழிகாட்டல், டிஜிட்டல் மீடியா, ஆரம்ப மன அழுத்த முகாமைத்துவம், மற்றும் பஃரல் நிறுவனத்தினூடாக சிறந்த ஜனநாயக ஆட்சி தொடர்பான இன்னோரன்ன டிப்ளோமாக்களை நிறைவு செய்துள்ளார்.





சமய கல்வியில் நாட்டம் கொண்ட இவர், அறநெறி பாடசாலை இறுதி பரீட்சையில் சித்திப்பெற்றுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட ஹெல்பொட மத்திய பிரிவின் வரலாற்றிலேயே முதன்முதலாக அகில இலங்கை சமாதான நீதவானாக மிளிர்கின்றவர்.

இவர், ஹெல்பொட மண்ணின் வரலாற்றிலேயே முதன்முதலாக சிறந்த சமூக சேவகருக்கான "தேசிய கலாவிபூஷணம் விருதினை கடந்தாண்டு சங்கவி பிலிம்ஸ் பிறைவேட் லிமிடட் நிறுவனத்தின் ஊடாக பெற்றுக்கொண்டவராவார். (இலங்கையில் கடந்தாண்டு 100 சமூக சேவகர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டமை கண்கூடு.)

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் 18வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் ஆன்மீக கௌரவ விருது வழங்கும் பெருவிழாவில் கடந்தாண்டு இலங்கையிலுள்ள 12 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 சமூக, மற்றும் சமய சேவையாளர்களுக்கான அதியுயரிய விருதான "ஸ்ரீ சைவ ருத்ரா " விருதினை ஹெல்பொட மண்ணின் வரலாற்றிலேயே முதன்முதலாக பெற்றுக்கொண்டவராவார்.



இம்முறை ஹெல்பொட மத்திய பிரிவு மண்ணின் வரலாற்றில் முதன்முறையாக நடைபெற்ற மாபெரும் கலைவிழாவுடன் கூடிய கௌரவிப்பு விழாவில், இவர் ஆலயத்திற்காக அதி சிறந்த முறையில் சமய மற்றும் சமூக சேவைகளை ஆற்றியமைக்காக "ஸ்ரீ சைவ கீர்த்தி" விருதினை பெற்றுக்கொண்டவராவார்.



ஹெல்பொட மண்ணின் வரலாற்றிலேயே முதன்முறையாக முதலாவது அரச சார்பற்ற நிறுவனத்தில் சொந்த மற்றும் சகோதர மண்ணில் 3வருடங்களாக நுவரெலியா எக்சத் லங்கா நலன்புரி அமைப்பில் கொத்மலையில் செயற்றிட்ட அதிகாரியாக கடமையாற்றிவராவார்.{Christopal blind mission of german)

ஹெல்பொட மத்தியப்பிரிவில் கடந்த 16 வருடங்களாக புனருத்தாபன பணிகளுக்காக உடைக்கப்பட்டு சிற்சில பிரச்சினைகள் காரணமாக இடை நடுவே கைவிடப்பட்டிருந்த பேரருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினை 2017ம் ஆண்டு பொறுப்பெற்று ஆலய புனருத்தாபன குழுவினை ஸ்தாபித்து இளைஞர்கள் மற்றும் பொதுமக்களை ஒன்றிணைத்து அனைவருடைய ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புடன் ஊரிலுள்ள அனைவரையும் ஓரணியில் திரட்டி ஆலய புனருத்தாபான பணிகளை தன்னுடைய நிர்வாக திறமையாலும், தன்னுடைய குழு அங்கத்தவர்களின் கூட்டு முயற்சியூடாகவும் மேற்கொண்டு 2019.09.13ம் திகதியன்று மாபெரும் மகா கும்பாபிஷேகம் மற்றும் தேர்த்திருவிழா/அலங்கார உற்சவத்தையும் 2021ம் வெற்றிகரமாக நடாத்தி முடித்தவராவார்.

ஹெல்பொட மத்தியப் பிரிவு பேரருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வரலாற்றில் 20192021ம் ஆண்டு ஜனவரி வரை 30வயதிற்கு குறைவான முதலாவது இளம் வயதில் ஆலய பரிபாலன சபையின் பொதுச்செயலாளராக காணப்பட்டவராவார்.

ஹெல்பொட மத்தியப் பிரிவு பேரருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனருத்தாபன குழுவின் பொதுச்செயலாளராக தற்போது வரை காணப்படுகின்றார்.

2021ம் ஆண்டு டாக்டர் கலாம் நற்பணி மன்றத்தினை ஸ்தாபித்து ஸ்தாபகர்/ தலைவராக இன்று வரை பல்வேறு சமூக சேவைகளை தனக்கான பணியில் பக்கச்சார்பின்றி ஆற்றிவருகின்றார்.

விக்னேஸ்வரியன்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் கல்வி, பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான அலுவலக பிரிவு செயலாளராக செயற்பட்டவராவார்.

ஹெல்பொட மத்திய பிரிவின் உதயம் இளைஞர் கழகத்தில் 2012 2018வரை தலைவர், உபதலைவர், கல்வி செயற்பாடுகளுக்கான அலுவலக பிரிவு செயலாளர் மற்றும் கணக்கு பரிசோதகர் போன்ற இன்னோரன்ன பதவிகளை வகித்து அதன் மூலமாக சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை செய்ததோடு 2013ம் கொத்மலையில் காணப்பட்ட 42இளைஞர் கழகங்களில் தமது பொறுப்பிலுள்ள உதயம் இளைஞர் கழகத்தினூடாக அனைவருக்கும் சிறப்பான சேவையாற்றி நுவரெலியா மாவட்டத்தின் அதி சிறந்த இளைஞர் கழகத்திற்கான அதியுயரிய சேவை மேன்மை விருதினையும் பெற்றுக்கொடுத்தார்.



25.05.2024ம் திகதியன்று நிவ் சமூக அபிவிருத்தி கழகத்தின் 30வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட நிகழ்வில் சிறந்த சமூக சேவகருக்கான " சேவை மேன்மை" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2017ம் ஆண்டில் இருந்து இன்றுவரை ஹெல்பொட மத்தியப்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனருத்தாபன குழுவின் பொதுச் செயலாளாக சேவைற்றி வருகின்றார்.

ஹெல்பொட மத்தியப் பிரிவு பேரருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 2019 2021ம் ஆண்டு வரை ஆலய பரிபாலன சபையின் பொதுச்செயலாளராக கடமையாற்றினார். தற்போது ஆலய பரிபாலன சபையின் ஆலோகராக செயற்படுகின்றார். ஹெல்பொட மத்தியப்பிரிவு இந்து கலாசார மன்றத்தின் உதவி செயலாளராக செயற்பட்டு வருகிறார்.

ஹெல்பொட மத்தியப்பிரிவிலுள்ள டாக்டர். கலாம் நற்பணி மன்றத்தின் ஸ்தாபகர்/தலைவராக செயற்படுகின்றார்.

ஹெல்பொட மத்தியப்பிரிவிலுள்ள பாரதி அறநெறி பாடசாலையின் செயலாளராக செயற்படுகின்றார்.

ஹெல்பொட மத்தியப் பிரிவிலுள்ள எண்ணம் போல் வாழ்க்கை சமூக அபிவிருத்தி நற்பணி மன்றத்தின் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

ஹெல்பொட மத்தியப் பிரிவில் உள்ள நாளை நமதே நற்பணி மன்றத்தின் ஆலோசகராக செயற்படுகின்றார்.

ஹெல்பொடையில் உள்ள நவயுக சிற்பிகள் சிறுவர் கழகம், அன்பென்று கொட்டும் முரசே சிறுவர் கழகம் மற்றும் அறம் இளைஞர் கழகத்தின் ஆலோசகராக செயற்பட்டு வருகின்றார்.

# சமூக வலைதளங்கள் சார்ந்ததாகவே இனி இந்த உலகம் இயங்கப் போகிறது

## பிரபல அறிவிப்பாளரும் You Tube புகழ் மேனகா

**சமூக வலைதளங்கள் சார்ந்ததாகவே இனி இந்த உலகம் இயங்கப் போகிறது என்கிறார் பிரபல அறிவிப்பாளரும் யூரியூபருமான மேனகா! அவருடனான பேட்டியை கீழே தருகிறோம்!**

**தனியார் தொலைக்காட்சி ஒன்றில் சிறந்த அறிவிப்பாளராக பணியாற்றி நேயர்களின் மனதில் இடம்பிடித்த நீங்கள், திடீரென்று ராஜினாமா செய்து பின்னர் யூடியூப் செனல் மூலம் பிரபலமாக அறியப்படுகிறீர்கள். இது தொடர்பில் உங்கள் கருத்தென்ன...?**

திடீரென என்று இல்லை. என் கணவர் பல மாதங்களாக யோசித்து முடிவு எடுத்து என்னிடம் சொல்லி சரியான நேரம் பார்த்து நாம் எடுத்த முடிவு தான் அது.

**குறைந்த காலத்திற்குள்ளேயே நீங்களும் உங்கள் கணவர் சந்துருவும் யூடியூப் செனலில் அதிமுக்கியத்துவமிக்கவர்களாக திகழ்ந்து இன்று அனைவராலும் பின்தொடர்பவர்களாக இருக்கிறீர்கள். இதனைப்பற்றி கூறுக?**



அதற்கு முக்கிய காரணம் என் கணவர் தான்.

சமூக வலைத்தளங்கள் பற்றிய அவரின் தேடல் ஆர்வம் எனக்கும் ஒரு உந்துசக்தியாக இருந்தது. இறைவனின் அருள் என் குடும்பத்தின் ஆசி ஆதரவோடு பயணம் தொடர்கிறது.எம்மை ரசிக்கும் உறவுகளின் அன்பும் ஒத்துழைப்பும் கூட எம் மிகப் பெரிய பலம் தான்.

**பெரும்பாலும் உங்களது யூடியூப் நிகழ்ச்சிகள் நகைச்சுவை கலந்த கருத்தாழம் மிக்கவைகளாக இருக்கின்றன என்பது பொதுவான கருத்து. எவ்வாறு நீங்கள் இருவரும் ஒத்துழைப்பில் ஈடுபடுகிறீர்கள் ?**

சந்துரு அதிகமாக இதற்காக நேரம் செலவழிப்பார்.பின் என்னுடன் அது பற்றி பேசுவார்.இருவரும் கலந்து பேசி நகைச்சுவைகளை பதிவு செய்வோம்.

**உங்கள் யூடியூப் நிகழ்ச்சிகளில் நேயர்களால் அதிகம் பார்க்கப் பட்ட நிகழ்ச்சி எதுவென்று கூறுவீர்களா ...அதற்கான காரணம் என்ன?**

நாங்கள் பதிவேற்றும் அனைத்தையுமே எம் ரசிகர்கள் விரும்பிப் பார்ப்பார்கள்.எம் சமூக வலைத் தளங்களை பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம்.எனவே எது எதுவென பிரித்துக் கூற முடியாது.

**இவ்வாறான நிகழ்ச்சியொன்றை தயாரிக்கும்போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் அல்லது அனுபவம் ஏதேனும் உண்டா....?**

பொதுவாக எந்த ஒரு துறையிலும் சவால்கள் இருக்கும்.அவை பொதுவான சவால்கள் தான். குறிப்பிட்டு சொல்வதென்றால் நேரம் தான் பெரிய சவால்.

**இந்த சமூக ஊடகங்களில் உங்களுக்கு ஆர்வம் ஏற்பட என்ன காரணம் ?**

உண்மையைச் சொன்னால் என் கணவருக்கு இருந்த மிகப்பெரும் ஆர்வம் ,எனக்கிருந்த ஆர்வம் ,அத்தோடு சமூக வலைத்தளம் இப்போது செலுத்திக் கொண்டிருக்கும் ,இனி வரும் காலங்களில் செலுத்தப் போகும் பாதிப்பைக் குறித்து அவர் சொல்லும் விடயங்கள் தான் எனக்கு ஆர்வத்தைத் தூண்டிய காரணிகள்.

**இந்த துறையில் நீங்கள் அதிகம் ஈடுபாடு கொண்ட நிலையில், உங்களது குடும்ப வாழ்வில் நேரமுகாமைத்துவம் எப்படி செய்கிறீர்கள்?**

உண்மையில் என் கணவர்,குழந்தைகள்,அம்மா மற்றும் சகோதரி என மொத்தக் குடும்பத்தின் உதவியுடனேயே இது சாத்தியமாகிறது. அத்தோடு சுற்றிச் சுழன்று என்னோடு எல்லோருமே ஓடுவதால் எல்லாவற்றையும் சரியாக நேர்த்தியாக கொண்டுசெல்ல என்னால் முடிகிறது.

**யூடியூப் மூலம் உங்களுக்கு கிடைக்க கூடிய வருமானத்தில் மற்றவர்களுக்கு உதவும் நோக்கில் நீங்கள் செலவிடுவது தொடர்பில் விளக்க முடியுமா?**

YouTube வருமானம் வருவதற்கு முதலே நாங்கள் பல உதவிகளை செய்துள்ளோம். இப்போதும் செய்கிறோம். இனிவரும் காலங்களிலும் நிச்சயம் செய்வோம்.

இது செய்தோம் அது செய்தோம் என்று சொல்வதை விட பலருக்கு தொடர்ந்து எம்மாலான உதவிகளை செய்ய வேண்டும் என்பதே எம் ஆவல் மற்றும் எண்ணம். இன்னும் பல திட்டங்களை வைத்துள்ளோம் நிச்சயம் செயற்படுத்துவோம்.




**நீங்கள் இந்த துறையில் ஈடுபடுவதற்கு என்ன காரணம் ...அல்லது யாராவது உறுதுணையாக இருந்தார்களா?**

நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டுமே இனி சமூகவலைத்தளம் சார்ந்ததாகத் தான் உலகம் இயங்கப் போகிறது இயங்குகிறது. எனவே இந்தத் துறை தான் நமக்கானது எனக் கண்டுபிடித்தோம். பயணிக்கிறோம்.

இதில் முக்கியமாக எம் குடும்பம் மற்றும் சில உறவுகள் , சில நண்பர்களின் உறுதுணை இருந்தது.இருக்கின்றது.

**இது சம்பந்தமாக வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

.உங்களால் முடிந்தளவு இந்த சமூக வலைத்தளம் பற்றிய போதிய அறிவு, ஆர்வம் மற்றும் ஆசையை வளர்த்துக் கொள்வதோடு சரியான விடயங்களை சமூக வலைத்தளங்களுக்குள் கொண்டு வர முன்வாருங்கள். தேடல் மற்றும் ஆர்வம் மிகவும் முக்கியம்.



✍ பாத்திமா நளீரா

## சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் மீலாத் தின நிகழ்வு









(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

15 ஆம் பக்கம் பார்க்க

## விஜே பார்வதி!

கடந்த சில வருடங்களாக ரசிகர்களுக்கு பரிச்சயமான ஒருவராக இருப்பவர் விஜே பார்வதி. சென்னையில் டிகிரி முடித்த இவர் மதுரைக்கு போய் பத்திரிகை தொடர்பான படிப்பை படித்தார். அதன்பின் சென்னை வந்து சில பத்திரிகைகளில் வேலை செய்தார்.

ஒருகட்டத்தில் ஊடகங்களுக்கு வந்தார். சில யுடியூப் சேனல்களில் வேலை செய்தார். ஒரு யுடியூப் சேனலுக்காக இளசுகளிடம் ஏடாகூடமான கேள்விகளை கேட்டு வெளியான வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி பார்வதியும் பிரபலமானார்.

காபி வித் டிடி போல இவரும் பிரபலங்களிடம் பேட்டியெடுத்தார். இது தொடர்பான வீடியோக்களும் ரசிகர்களிடம் வைரலானது.

நடிகர் அர்ஜுன் நடத்திய சர்வைவர் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். ஆனால், சரியாக விளையாடாமல் நிகழ்ச்சியிலிருந்து வெளியேறினார்.

மாடலிங் துறையிலும் ஆர்வம் கொண்ட விஜே பார்வதி அவ்வப்போது நடிகைகள் போல ஆடைகள் அணிந்து போட்டோஷூட் நடத்தி புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். மேலும், இன்ஸ்டகிராம் மூலம் நெட்டிசன்களை சேர்த்துக்கொண்டு பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணமும் செய்து வருகிறார்.

அது தொடர்பான புகைப்படங்களையும் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.



## கட்டழகில் கலக்கும் ஜான்வி

தமிழ், தெலுங்கு, ஹிந்தி என 3 மொழிகளில் நம்பர் ஒன் நடிகையாக கலக்கியவர் மறைந்த நடிகை ஸ்ரீதேவி. பதினாறு வயதினிலே படத்தில் துவங்கிய அவரின் கலைப்பயணம் பல வருடங்கள் நீண்டது. ஒரு நடிகை ஒரு மொழியில் நம்பர் ஒன் இடத்தை பிடிப்பதே கடினம். ஆனால், 3 மொழிகளில் முதலிடத்தை பிடித்தார் ஸ்ரீதேவி. ஹிந்தி படங்களில் நடித்தபோது தயாரிப்பாளர் போனிகபூரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இத்தனைக்கும் போனிகபூர் ஏற்கனவே திருமணமானவர். ஆனாலும், இருவரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியாகவே சென்றது. இரண்டு மகள்கள் பிறந்தார்கள். அதில் மூத்தவர்தான் இந்த ஜான்வி கபூர். இவருக்கும் சினிமாவில் நடிப்பது மற்றும் மாடலிங் துறையில் அதிக ஆர்வம் ஏற்பட்ட நடிகையாக மாறினார். அம்மா ஸ்ரீதேவியின் மரணம் ஜான்வியை மிகவும் பாதித்தாலும் அதிலிருந்து மீண்டு தனக்கு பிடித்த சினிமாவில் நடித்து வருகிறார். இதுவரை 15க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துவிட்டார். இவர், சில வெப் சீரியஸ்களிலும் நடித்திருக்கிறார். இப்போது தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆர் நடித்து வரும் தேவாரா படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். இதுதான் ஜான்வி நடிக்கும் முதல் தெலுங்கு படமாகும். விரைவில் கோலிவுட்டிலும் அவர் கால் பதிப்பார் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் நானும் ரவுடிதான் படத்தை பார்த்துவிட்டு விஜய் சேதுபதியின் ரசிகையாக மாறிவிட்டதாக சொல்லி இருந்தார். ஒருபக்கம், தளதள உடம்பை காட்டி அடிக்கடி புகைப்படங்களையும் வெளியிட்டு வருகிறார். இந்நிலையில், சேலை காட்டும் கட்டழகை காட்டி ஜான்வி வெளியிட்டுள்ள போட்டோக்கள் ரசிகர்களை கிறுகிறுக்க வைத்திருக்கிறது.

## கோவா டிரிப் பாடகியிடம் மயங்கிய ஜெயம் ரவி இதனால்தான் ஆர்த்தி ரவியிடம் விவாகரத்தா?

சினிமா நட்சத்திரங்களின் விவாகரத்து செய்தி ஒரிரு நாளில் ரசிகர்களின் கண்ணீர் பதிவுடன் முடிந்துவிடும். ஆனால் ஜெயம்ரவி விவாகரத்து செய்து மட்டும் வெடித்துக்கொண்டே இருக்கிறது. தற்போது இந்த பிரச்னைக்கு பாடகி ஒருவர் காரணமாக கூறப்படுகிறார்.

ஜெயம் ரவி கோலிவுட்டில் தனக்கென ஒரு இடம் வைத்திருந்தவர். இதுவரை கிசுகிசுவில் கூட சிக்காமல் இருந்து வந்தவர். தற்போது ஒரு விவாகரத்து செய்தியால் மொத்த பரபரப்புக்கும் காரணமாகி இருக்கிறார். கடந்த வாரம் திடீரென ஜெயம்ரவி விவாகரத்தை அறிவித்தார். ஆனால் சமூகவலைத்தளங்களில் ஆக்டிவாக இருக்கும் ஆர்த்தி எந்த பதிவும் போடாமல் இருந்தார்.

இரண்டு தினங்களில் அவர் தரப்பில் இருந்து இதில் எனக்கு உடன்பாடில்லை என பதில் வந்தது. என் கணவர் சுயநலத்துக்காக இப்படி செய்வதாகவும், என்னை பற்றி அவதூறு பேசாதீர்கள் எனவும் காட்டமாக அறிக்கையில் தெரிவித்து இருந்தார். இந்நிலையில், இந்த விவகாரம் தற்போது சூடு பிடித்து இருக்கிறது. ஜெயம் ரவி தன்னுடைய நண்பர்களுடன் கோவா செல்வது வழக்கமாம்.



அப்படி ஒரு கோவா ட்ரிப்பில் தான் பாடகி ஒருவரை சந்தித்துஇருக்கிறார். இவர் பெங்களூரை சேர்ந்தவர். கோவா பப்புகளில் பாடுபவர். ஆல்பம் சாங்கிலும் நடித்து இருக்கிறார். தமிழில் பிரபல நடிகர் தயாரித்த ஆல்பமிலும் பாடி இருக்கிறார். ஏற்கனவே திருமணமானவர்.

இருவருக்கும் நட்பு உருவானதாம். அந்த நட்பால் திசை திரும்பி இருக்கிறார் ஜெயம்ரவி. திருமணநாளுக்கு கூட குடும்பத்துடன் இல்லாமல் கோவா சென்று இருக்கிறார்.ஜூலை மாதம் ஜெயம்ரவியின் சொகுசு காரில் பாடகி பயணம் செய்த போது காவல்துறையிடம் கருப்பு நிற கண்ணாடியால் அபராதம் கட்டி இருக்கிறார். அதுபோல அதேமாதம் ஒரேவாரத்தில் அதே காருக்கு ஓவர் ஸ்பீடால் ஜெயம் ரவி அபராதம் கட்டி இருக்கிறார். இந்த விவகாரம் தான் தற்போது விவகாரத்தில் மேலும் பிரச்னையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நட்பு விவகாரம் வெளியில் தெரிந்தபின்னரே ஆர்த்தி கடுப்பில் இன்ஸ்டாவில் இருந்து ஜோடி போட்டோக்களை நீக்கி இருக்கிறார். இருந்தும் கணவனை விடமுடியாமல் பேச முயற்சி செய்து தோற்று இருக்கிறாராம். ஆர்த்தி கவலையில் இருக்க ஜெயம்ரவி கோவாவில் கொண்டாட்டத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

ஆர்த்தி குடும்பம் மற்றும் ஜெயம்ரவி குடும்பம் இணைந்து இருவரை சேர்க்க முயற்சி செய்து வருகின்றனர். ஆனால் ரவி கோவா தோழி பேச்சை கேட்டு ஆடுவதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மேலும் சர்ச்சை வெடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



## ஸ்ருதிஹாசன் முதல் சௌபீன் வரை கூலி படத்தில் வாங்கும் சம்பளம் என்ன தெரியுமா?

ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் கூலி திரைப்படத்தில் மல்டி ஸ்டார்கள் நடிக்க இருக்கும் நிலையில் அவர்கள் சம்பளம் குறித்த முக்கிய தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கி வரும் திரைப்படம் கூலி. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்க இருக்கிறார். படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு விசாகப்பட்டினத்தில் தொடங்கி நடந்து வருகிறது. ரஜினிகாந்த் கலந்து கொண்டு நடித்து வருகிறார்.

இப்படத்தில் உபேந்திரா, ஷோபீன் ஷாபீர், ஸ்ருதிஹாசன், நாகர்ஜூனா உள்ளிட்ட முன்னணி பிரபலங்கள் நடித்து வருகின்றனர். இவர்களின் சம்பளம் குறித்த விவரங்கள் தற்போது வெளியாகி இருக்கிறது. இதில் முதற்கட்டமாக நாகர்ஜூனாவுக்கு 10 கோடி ரூபாய் சம்பளமாக கொடுக்கப்படுகிற



தாம்.ஸ்ருதிஹாசன் 5 கோடி சம்பளமாகவும், சௌபீன் ஷாகிருக்கு 85 லட்சம் சம்பளமாகவும் கொடுக்கப்படுகிறதாம். அதுமட்டுமல்லாமல் உபேந்திராவுக்கு 8 கோடி வரை சம்பளம் கொடுக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

லோகேஷ் கனகராஜின் கேரியரில் கூலி வித்தியாச படமாக இருக்கும் என நம்பப்படுகிறது. ஆனாலும், தங்க கடத்தல் சம்மந்தப்பட்ட கதையாகவும் கூலி இருக்கலாம் என்கின்றனர். இப்படத்தில் மல்ட்டி ஸ்டார் நடிகர்கள் மட்டுமல்லாமல் சத்யராஜும் இணைந்து நடிக்க இருக்கிறார்.

38 வருடங்களுக்கு பின்னர் ரஜினியின் படத்தில் சத்யராஜ் நடிக்க இருக்கிறார். மேலும் இப்படத்தில் அனிருத் ரஜினியுடன் மூன்றாவது முறையாக தொடர்ந்து இணைவதால் ரசிகர்களிடம் மேலும் எதிர்பார்ப்பு உருவாகி இருக்கிறது. விரைவில் அடுத்தடுத்த அப்டேட்கள் கசியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மீண்டும் திருமண வதந்தி: நடிகை திவ்யா கொந்தளிப்பு



மீண்டும் பரவி வரும் திருமண வதந்தி குறித்து நடிகை திவ்யா காட்டமாக பதிலளித்துள்ளார்.

கன்னடத்தில் பல்வேறு படங்களில் நடித்தவர் திவ்யா ஸ்பந்தனா. நடிகை, தயாரிப்பாளர் மற்றும் அரசியல்வாதி என பல முகங்களைக் கொண்டவர். இவருக்கு வயது 40ஐ கடந்துவிட்டாலும் திருமணம் செய்யாமல் வலம் வருகிறார். தமிழில் சிம்பு நடித்த ‘குத்து’ படத்தில் நாயகியாக நடித்தவர் தான் திவ்யா என்பது நினைவுகூரத்தக்கது. இவருக்கு திருமணமாகப் போகிறது என்று அவ்வப்போது வதந்திகள் பரவுவது வழக்கம். அதேபோல் தொழிலதிபர் ஒருவருடன் திவ்யாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகின.இது பலராலும் பகிரப்பட்டது. இந்த திருமண வதந்தி தொடர்பாக திவ்யா தனது இன்ஸ்டாகிராம் பதிவில் “ஊடகங்களால் எனக்கு பலமுறை திருமணம் நடந்துள்ளது. அந்த எண்ணிக்கையை தவறவிட்டுவிட்டேன். நான் திருமணம் செய்து கொண்டால், நானே உங்களிடம் தெரிவிக்கிறேன். சரி பார்க்கப்படாத ஆதாரங்களில் இருந்து வரும் வதந்திகளை நிறுத்துங்கள்” என்று கொந்தளிப்புடன் தெரிவித்துள்ளார் திவ்யா ஸ்பந்தனா.

## ‘கடலோர கவிதை’

ஒரு ஊரிலேயொரு ஃபிலிம் ஹவுஸுடன் இணைந்து ஒன்ட்ராகா என்டர்டெயின்மென்ட் தங்களின் அடுத்த தயாரிப்பை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. தமிழில் 'கடலோரக் கவிதை' மற்றும் மலையாளத்தில் 'ஈ தீரம்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படைப்பை ப்ரீத்தி ஶ்ரீவிஜயன் தயாரித்துள்ளார்.

ஸ்வாதினி இயக்கத்தில், தர்ஷன் மற்றும் நிஹாரிகா ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் இந்த மியூசிக்கல் டிராமா நிச்சயம் பார்வையாளர்களைக் கவரும். இதற்கு விஷால் சுரேஷ் இசையமைத்துள்ளார். கான்செப்ட் மற்றும் ஒளிப்பதிவை இலை கையாண்டுள்ளார். படத்தொகுப்பை ரிச்சர்ட் கெவின் கவனித்துள்ளார்.



## விஸ்வாசம் பட நாயகி

கேரளாவை சேர்ந்தவர் அனிகா சுரேந்திரன். குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி சில மலையாள படங்களில் நடித்தார். கவுதம் மேனன் கண்ணில் பட்டதால் என்னை அறிந்தால் படம் மூலம் தமிழ் சினிமாவில் நடிக்க துவங்கினார். இந்த படத்தில் திரிஷாவின் மகளாகவும், அஜித்தின் வளர்ப்பு மகளாகவும் நடித்திருந்தார். இந்த படம் பெரிய வெற்றி பெறவில்லை என்றாலும் அனிகாவுக்கு தமிழில் தொடர்ந்து வாய்ப்புகளை பெற்று கொடுத்தது. நானும் ரவுடிதான் படத்தில் குட்டி நயன்தாராவாகவும் நடித்தார். ஜெயம் ரவியின் தங்கையாக மிருதன் படத்தில் நடித்தார். அடுத்து அஜித் – நயன்தாரா ஜோடிக்கு மகளாக நடித்திருந்தார். இந்த படத்தில் இடம் பெற்ற கண்ணான கண்ணே பாடல் பட்டிதொட்டியெங்கும் பிரபலமானது. அந்த பாடலுக்கு இசையமைப்பாளர் இமானுக்கு தேசிய விருதையும் பெற்று தந்தது. இந்த படத்தில் அனிகாவுக்கு தனது நடிப்பு திறமையை காட்ட பல காட்சிகள் இடம் பெற்றிருந்தது.

எல்லாவற்றிலும் ஸ்கோர் செய்தார் அனிகா. அதன்பின் மாமனிதன் உள்ளிட்ட சில படங்களில் நடித்தார். ஒருகட்டத்தில் டீன் ஏஜை எட்டிய அனிகாவுக்கு கதாநாயகியாக நடிக்க வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது. தெலுங்கு படமொன்றில் கதாநாயகியாக நடித்தார். முதல் படத்திலேயே முத்தக்காட்சியில் நடித்து அதிர வைத்தார்.இனிமேல் அவர் சிறுமியாக நடிக்க மாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஒருபக்கம், மற்ற நடிகைகளை போல கவர்ச்சியாக டிரெஸ் அணிந்து அழகை காட்டி போட்டோக்களையும் வெளியிட துவங்கிவிட்டார். அந்தவகையில், புடவையில் அழகை காட்டி அனிகா வெளியிட்டுள்ள போட்டோக்கள் இளசுகளை கிறங்க வைத்திருக்கிறது.

# மற்றவர்கள் மனதையும் புரிந்து கொள்வோம்

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப தறிவு(குறள் 422)**

மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

சிலர் மனதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது, காரணம் அவர்கள் அழுத்தமான மனம் கொண்டவர்கள் அவர்களில் மனம் மிகவும் ஆழமானது என்று சொல்வார்கள்.

ஏன், எதனால், எதற்கு இப்படி சொல்கிறார்கள் என்று சிந்தித்தால் காரணம் தெரியவில்லை.

இங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் மனம் என்பதும் அதன் ஆசை விருப்பு வெறுப்புகள் தனிப்பட்டதாகும் என்பதையும் யாரும் உணர்ந்து கொள்வதில்லை.

இப்படி அழுத்தமான எண்ணம் கொண்டவர்கள் மனதை எளிதாக புரிந்துக் கொள்ளமுதலில்அவர்கள்பேசுவதைசெவிமடுங்கள். இங்கு மற்றவர்களின் உள்ளம் பேசுவதை கேட்பதற்கு ஆளில்லை.

பலர் தங்களுக்கு மட்டுமே பிரச்சினைகள் இருப்பதாக நினைத்துக் கொண்டு எதிரில் இருப்பவரிடம் கொட்டித் தீர்த்து விடுவார்கள்

பெரும்பாலான மனிதர்கள் தங்கள் மனதில் இருப்பதை, தங்களுக்கு விருப்பமானதை, தாங்கள் எதிர்பார்ப்பதை எல்லாம் பகிர்ந்துக்கொள்ள அதிகம் தேடுவது எதிர் பாலினத்தை மட்டும்தான்.

அதுவும் தன்னுடைய நெருங்கிய உறவுமுறையாக நினைப்பவர் தன் எதிர்காலம் இவர்களே என்று நம்புவர்களிடத்தில் பகிர்ந்துக் கொள்ள நினைக்கிறார்கள். பகிர்ந்தும் கொள்கிறார்கள்.

அப்படி பகிரும் இரகசியங்கள், தனிப்பட்ட பிரச்சினைகள், தங்கள் இயலாமை என்பன நம்பி சொல்லப்படும் நபரின் ஊடாக வெளியே கசியும் போது அல்லது நம்பிக்கையாய் சொன்ன நபராலே பரிகாசம் செய்யப்படும் போது மனம் உடைந்து தங்களுக்குள் முடங்கிப் போகிறார்கள்.

இந்த வேதனை அவர்களை தனிமைப் படுத்தி விடுகிறது.

அதேபோல மன இருக்கத்துடன் இருக்க இன்னொரு காரணம்



இவர்களிடம் நம் பிரச்சினை சொல்வோம் என்று தேடி வரும் நபரிடம் தங்கள் பிரச்சினைகளை சொல்லி அவருக்கு நம் பிரச்சினையே மேல் என்கிற நிலையை நம்பிக்கைக்குரிய எதிர் தரப்பு உருவாக்கி விடுகிறார். இதனால் யாரிடமும் சொல்லாமல் தன் மனதிற்குள்ளே அழுது அடக்கி வைத்து விடுகிறார்கள். இவர்கள் சகஜமாக பேசாமல், பழக்காமல் உம்.... மென வாழும் சிடுமூஞ்சிகளாக சித்தரிக்கப் படுகின்றனர்.

புரிந்து கொள்ள முடியாத அகராதி என்கிற எல்லைக்குள் எல்லாம் இங்கு யாரும் இல்லை..

பெரும்பாலான மனிதர்கள் இங்கு நாம் படிக்க நேரம் ஒதுக்க முடியாத, அர்த்தங்கள் பல பொதிந்த ஒரு வாழ்வியல் புத்தகமாக இருக்கிறார்கள்.

வாழ்வியல் புத்தகமாக வாழும் அவர்களில் எண்ணங்களையும் , உணர்வுகளையும் புரிந்து உணர்ந்து பேச்சிற்கு செவிக் கொடுத்து இரசித்து நேசித்து ஒவ்வொரு மன இறுக்கத்திலிருந்து வெளி கொண்டு வருவோம்.ஒருவர் நம்பிக்கை கொண்டு பகிரும் செய்திகளை பாதுகாத்து மதிபளிப்போம்.இங்கு யாரும் ஆழமான மனம் கொண்ட நபர்கள் கிடையாது என்பதை புரிந்துகொண்டாலே பல சண்டைகள், தற்கொலைகள், பிரிவுகள் என்கிற பல விடயங்களை தவிர்த்து விடலாம்.

எனவே மற்றவர்கள் மனதைப் புரிந்துகொள்வோம்.



**கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...**



P.duwagaran

# குழந்தைகளுக்கான அழகான ஆடைகளை எப்படி தெரிவு செய்யலாம்?

ஆடம்பரமான ஆடை நிகழ்வுகள் குழந்தைகள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த ஒரு வேடிக்கையான வழியாகும். சரியான ஆடையைத் தேர்ந்தெடுப்பது உற்சாகமாக இருக்கும். குழந்தைகளுக்கான சில அழகான மற்றும் எளிதான ஆடம்பரமான ஆடை யோசனைகள் இந்த பதிவில் உள்ளன, அவை அவர்களை தனித்து நிற்க வைக்கும்.

சூப்பர் ஹீரோ ஆடைகள் குழந்தைகள் மத்தியில் பிரபலமாக உள்ளன. அவர்கள் ஸ்பைடர் மேன், பேட்மேன் அல்லது வொண்டர் வுமன் போன்ற தங்களுக்குப் பிடித்த கதாபாத்திரங்களாக உடை அணிய விரும்புகிறார்கள். இந்த ஆடைகளில் பொதுவாக ஒரு கேப் மற்றும் முகமூடி ஆகியவை அடங்கும், இது அவற்றை அணிய எளிதாக்குகிறது.

விசித்திரக் கதை பாத்திரங்கள் மற்றொரு சிறந்த தேர்வு. குழந்தைகள் சிண்ட்ரெல்லா, ஸ்னோ ஒயிட் அல்லது பீட்டர் பான் போன்ற ஆடைகளை அணியலாம். இந்த ஆடைகள் பெரும்பாலும் குழந்தைகள் விரும்பும் அழகான ஆடைகள் அல்லது வேடிக்கையான ஆடைகளுடன் வருகின்றன.

வரலாற்று நபர்களாக ஆடை அணிவது வேடிக்கையாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும். மகாத்மா காந்தி, ராணி எலிசபெத் அல்லது அல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்ற பிரபலமான ஆளுமைகளை குழந்தைகள் தேர்வு செய்யலாம். இந்த ஆடைகள் எளிமையானதாகவும் சரியான பாகங்கள் மூலம் பயனுள்ளதாகவும் இருக்கும்.

உணவு சார்ந்த ஆடைகள் நகைச்சுவையாகவும், வேடிக்கையாகவும் இருக்கும். குழந்தைகள் வாழைப்பழங்கள் அல்லது ஸ்ட்ராபெர்ரிகள் போன்ற பழங்களாகவோ அல்லது பாப்கார்ன் அல்லது பீட்சா போன்ற தங்களுக்குப் பிடித்தமான தின்பண்டங்களாகவோ உடுத்திக்கொள்ளலாம். இந்த ஆடைகள் பொதுவாக வண்ணமயமானவை மற்றும் அணிய எளிதானவை. தொழில்சார் ஆடைகள் குழந்தைகள் தங்களை வெவ்வேறு பாத்திரங்களில் கற்பனை செய்ய அனுமதிக்கின்றன. அவர்கள் மருத்துவர்கள், தீயணைப்பு வீரர்கள், சமையல்காரர்கள் அல்லது விண்வெளி வீரர்களாக உடை அணியலாம். இந்த ஆடைகள் பெரும்பாலும் ஆடைகளை மிகவும் யதார்த்தமானதாக மாற்றும் பொருட்களுடன் வருகின்றன.



இயற்கையால் ஈர்க்கப்பட்ட ஆடைகள் இயற்கையை விரும்பும் குழந்தைகளுக்கு ஏற்றது. அவர்கள் பூக்கள், மரங்கள் அல்லது சூரியன் மற்றும் சந்திரன் போன்ற ஆடைகளை அணியலாம். அட்டை மற்றும் பெயிண்ட் போன்ற எளிய பொருட்களைப் பயன்படுத்தி இந்த ஆடைகளை வீட்டிலேயே செய்யலாம்.

# கோலாகலமாக இடம்பெற்ற வலம்புரி கவிதா வட்டத்தின் 104 ஆவது கவியரங்கு





வலம்புரி கவிதா வட்டம் தனது 104 ஆவது தொடர் கவியரங்கினை இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கவிஞர் வாழைத்தோட்டம் எம். வஸீர் கவியரங்கத் தலைமையினையேற்று நடாத்தினார். கவிஞர் ந. தாமரைச் செல்வி அவரை வரவேற்றுக் கவிதை பாடினார்.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். பொருளாளர் ஈழ கணேஷ் வரவேற்புரையையும் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நன்றியுரையையும் வழங்கினர். எம்மை விட்டும் மறைந்த கலைஞர் ஆர். ராஜசேகரன் அவர்களுக்கும், வகவக் கவிஞர் பவானி சச்சிதானந்தனின் தாயார் ராமாயி துரைசாமி அவர்களுக்கும் மௌனப் பிரார்த்தனை இடம் பெற்றது.

வாழைத்தோட்டம் எம். வஸீரின் தலைமையில் விறுவிறுப்பாக நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் ஆர். தங்கமணி, கம்மல்துறை இக்பால், பதுளை கபிலகன் ஒகஸ்டீன், பவானி சச்சிதானந்தன், எம். ஐ. சாஹுல் ஹமீத், மட்டக்களப்பு கே. லோகநாதன், மலாய்கவி டிவாங்சோ, தி. ஸ்ரீதரன், பர்ஹாத் சித்தீக், ராஜா நித்திலன், எம். எஸ். அப்துல் லதீப், இ. கலைநிலா, அருந்தவம் அருணா, வெளிமடை ஜஹாங்கீர், கிண்ணியா அமீர் அலி, இறைஞானக்கவி ரமீஸ், இளநெஞ்சன் முர்ஷிதீன், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், ந. தாமரைச் செல்வி ஆகியோர் கவிதை பாடினர்.

ஏ.ஆர்.எம். முஸம்மில், கனிவுமதி, ரி.என். இஸ்ரா, அமல் பாண்டியன், எம்.பீ.எம். சித்தீக், ஏ.கே. இளங்கோ, கவிதா இளங்கோ, எஸ். சித்ரா, எஸ். சண்முகசுந்தரி, எம்.எம்.நவாஸ்தீன் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

**படங்கள் முஹம்மத் நசார்**




# கண்டியில் அலங்காரத்துறை தொடர்பாக இருநாள் கருத்தரங்கும் பயிற்சியும்

அவதார் ஹெபல் பிரைவட் லிமிட்டட் நடத்தும் இரண்டு நாள் கருத்தரங்கும் பயிற்சிக்களமும் எதிர்வரும் 2024.10.23ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கண்டி மகாவலி ரிச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதனை அவதார் ஹெபல் பிரைவட் லிமிட்டட்டின் தலைவரும் ஸ்தாபகருமாகிய திருமதி காயத்ரி மனோஜ் நடராஜபிள்ளை தெரிவித்தார். இந்த இரு நாள் பயிற்சியின் முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். அலங்காரத் துறையில் நிபுணத்துவம் பெற்று சிறந்து விளங்கும் டிப்ளோமா பட்டம் பெற்ற ஆர். அபிராமியும் திருமதி காயத்ரி மனோஜ் நடராஜ பிள்ளையும் இந்தப் பயிற்சிகளை வழங்கவுள்ளார்கள்.

இவர் பல்கலைக்கழகம், தொழிற் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் இத்துறை தொடர்பாக முழுமையான பயிற்சி பெற்றவராவார். நக அலங்காரம், கண் இமை அலங்காரம், முக அலங்காரம், முடி அலங்காரம் என அலங்காரம் தொடர்பாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் இவ்வாறான அலங்காரத்திற்கு இரசாயன கலவைகள் அற்ற இயற்கையான மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட அலங்கார கிறீம்கள் உபயோகப்படுத்தவும் தயாரிக்கவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

**அவதார் ஹெபல் பிரைவட் லிமிட்டட்டின் இரண்டு நாள் பயிற்சிக்களம் 2024.10.23ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கண்டி மகாவலி ரிச் ஹோட்டலில்**

இவ்வாறான இயற்கை மூலிகளால் தயாரிக்கப்பட்ட கிறீம் வகைகளால் உடலுக்கோ முகத்துக்கோ சருமத்திற்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாது என இத்துறையில் நீண்ட கால அனுபவம் பெற்ற பயிற்றுவிப்பாளர்களாகிய இவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த அலங்கார கிறீம்களை பயன்படுத்துவதற்கும் தயாரிப்பதற்கும் பயிற்சி அளிக்கும் இவர்கள் இவற்றை சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் இவர்கள் கற்றுக் கொடுக்க இருக்கிறார்கள்.



இதுதொடர்பாக மேலதிக தகவல்கள் அறிய விரும்பின் 072 9997992 என்ற தொலைப்பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு கைத்தொழில் ஒன்றை செய்ய விரும்புகின்ற பெண்கள் இத்துறையில் பயிற்சி பெற்று தங்களுக்குத் தேவையான வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம்.

# சிறைக்கைதிகள் மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்சி ஆரம்பம்











சிறைச்சாலையில் குற்றங்களுக்கான தண்டனைகளை அனுபவித்துவரும் கைதிகளுக்கு அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கான வழிகாட்டலுக்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண சிறைச்சாலை கைதிகளுக்கான திறன் விருத்தி பயிற்சிக்கான வாய்ப்பு சிறைச்சாலை அத்தியட்சகரின் ஆதரவுடன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் Ratnam FoundationUK ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதரவுடன் தேசிய தொழிற்பயிற்சி நிறுவன வளவாளர்களின் பங்களிப்போடு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வை Ratnam Foundation ஸ்தாபகர் Dr நித்தியானந்தனும் அவரது பாரியாரான திருமதி சரோஜினி நித்தியானந்தமும் மற்றும் IMHO நிறுவன இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணனும் ஆரம்பித்து வைத்தனர். முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமாரும் திட்ட இணைப்பாளர் துஷாந்தனும் பங்குபற்றி சிறப்பித்தனர், செயற்றிட்ட தொகுதியை, பெயர்பலகையை திரைநீக்கி ஆரம்பித்து வைத்த Dr நித்தியானந்தன் இது கைதிகளும் மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம் எனவும் இதற்கு முழுமையாக உதவியாக செயற்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமாரும் அவரது சக உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள் எனக்குறிப்பிட்டார். தொடர்ந்து கைதிகளின் செயற்றிறன் காட்சிக்கூடமும் விற்பனை கூடமும் திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சி ஆண் கைதிகளுக்கானது பயிற்சியின் நிறைவில் சான்றிதழும் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பெண் கைதிகளுக்கான இத்தகைய பயிற்சி IMHOUSA தலைவி Dr.இராஜம் தெய்வேந்திரனால் கடந்த ஏப்பிரல் மாதமளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்களது திறன்விருத்தியின் ஆக்கங்களும் விருந்தினர்களால் அவதானிக்கப்பட்டு பாராட்டப்பட்டது.

# ஆடம்பரம் இல்லாத தப்புகள் அற்ற எளிமையான நடத்தை கோலமுள்ள நல்லதொரு ஆளுமை

## சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் மகிந்திர குமார் (SLEAS)

செமமாலை வசந்தா தேவியின் இரண்டாவது வாரிசாக 1972 /09 /30 ஆம் திகதி மட்டக்களப்பில் திரு மகிந்திரக் குமார் பிறந்தார்.

நான்கு ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் கொண்ட சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியினை மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியினையும் உயர்தரத்தினையும் மட்டக்களப்பு ஹிந்து கல்லூரியிலும் கற்றார்.



பாடசாலைக்காலங்களில் மாணவத் தலைவராகவும், சாரணியம், சென்ஜோன் அம்பியூலன் அணிகளிலும் திறன் பட செயற்பட்டார்.

அது மட்டுமல்லாமல் பாடசாலையின் உதைப்பந்தாட்ட அணியிலும் முன்னணி வீரராக விளையாடினார்.

கற்கின்ற காலத்தில் கல்விப் புலத்தில் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டு வெற்றி கண்டார்.

1994 ஆம் ஆண்டு ஆரம்பப் பிரிவுக்காக வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டு தனது கற்கை நெறியினை பூர்த்தி செய்தார்.

முதல் நியமனம் மட்டக்களப்பு களுவன் கேணி சிங்கார தோப்பு சரஸ்வதி வித்தியாலயத்தில் கிடைத்தது. கடமைப் பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக தனது கற்பித்தல் செயற்பாட்டினை நிலை நாட்டி மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் நிலையான இடத்தை பிடித்தார் .



2001 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாக BA பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தார். 2005 ஆம் ஆண்டு திறந்த பல்கலைக்கழகத்தில் PGDE கற்கை நெறியை பூர்த்தி செய்தார் .

2006 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் உளவளத்துணை பட்டத்தை பூர்த்தி செய்தார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணி பட்டத்தையும் பெற்றார் .தொடர்ந்து பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் மீண்டும் இடமாற்றத்தை மட்டக்களப்பு கழுவங்கேனி வித்தியாலயத்துக்கு பெற்று சென்று கற்பித்தல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே SLEAS

(16ஆம் பக்கம் பார்க்க)

# வெலிகமயில் வாழ்ந்த முஸ்லிம் புத்திஜீவி ஆசிரியர், மர்ஹூம் ஏ.எச்.எம். யூஸுப்

ஏ.எச்.எம். யூஸுப் ,தென்மாகாணம், காலி மாநகரின் உமர்தீன் அப்துல் ஹாதி, நஸ்ருதீன் ஷம்ஸூன் நகார் தம்பதிகளின் ஏக புதல்வராக 1936.12. 09 ஆந் திகதி கந்தவத்தயில் பிறந்தார். களுவல்ல கந்தவத்தை அல் மீரான் பாடசாலை மற்றும் ஆங்கில பாடசாலை என்பவற்றில் ஆரம்ப கல்வியைப் பெற்றார்.

1953 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தி அடைந்தார். தனது கல்வித் தகைமைக்கு ஏற்ற தொழில் ஒன்றை பெற அன்று காலியில் வாழ்ந்த நாட்டின் பிரதமரை சந்திக்கச் சென்றார்.

முன்னாள் பிரதமர் தஹனாயக காலத்தில் ஆசிரியர் சேவையில் இணைவதற்கு சென்ற போது நடந்த ஒரு கதையை நகைச்சுவையாக அடிக்கடி சொல்வார். அவர் தனது முதல் நியமனத்தைப் பெறுவதற்காக பிரதமரைச் சந்திக்க சென்றுள்ளார். என்.ஸீ.ஜி. பரீட்சை பெறுபேறுடன் அங்கு சென்ற போது நாட்டின் மிகவும் எளிமையாகக் காணப்பட்டுள்ளார் பிரதமர் தஹநாயக.

அன்று காலி ரிஷ்மண்ட் பாடசாலை அமையப் பெற்றிருக்கும் இடத்திற்கு மறுபுறமாக சிறிய ஒரு தேநீர் பெட்டிக் கடை காணப்பட்டுள்ளது.



அந்தக் கடைக்கு மிகவும் எளிமையான உடையோடு, தேநீர் குடிக்க பிரதமர் தஹநாயக வந்துள்ளார். பிரதமரை அங்கு தான் இவர் சந்தித்துள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை அங்கு தான் வழங்கப்பட்டது. ஒருவரின் முதுகு புறமாக அக்கடிதத்தை வைத்துத் தான் பிரதமர் ஒப்பமிட்டுள்ளார்.

அந்த நியமனத்தை வழங்குவதற்கு சட்டம் தடையாக இருப்பதைக் கண்ட பிரதமர் விசேட அரச வர்த்தமானி அறிவிப்பு நாளை விசேடமாக வெளியிடப்படும் எனக்கூறி அந்த நியமனத்தை அவ்வாறே வழங்க, ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டிருக்கிறார்.

மர்ஹூம் யூஸூப் ஆசிரியர் சிறு பிராயம் முதல் எழுத்துத் துறையில் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். அவர் கற்ற பாடசாலையில் கலா மன்ற செயலாளராகவும் " கலைமதி" என்ற கையெழுத்து சஞ்சிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார் என்பது இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும்.


கல்வி மறுமலர்ச்சிக்காக உழைத்த அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் கொண்டு நடாத்திய முஸ்லிம் கல்வி புலமை நிதியத்தால் இஸ்லாமிய அறிவுப் போட்டிகளில் இரு முறை முதலிடங்களைப் பெற்றுள்ளதோடு, அறிஞரின் கையொப்பம் இடப்பட்ட சான்றிதழ்கள் இன்றும் சான்று பகர்கின்றன.

1957,1958 காலங்களில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் கற்ற காலப்பகுதியில் ஆக்கபூர்வமான பல அறிவு ஆராய்ச்சி மற்றும் பயிலுனர் பணிகளில் மும்முரம் காட்டியுள்ளார் . அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையான "கலை அமுதம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக பதவி வகித்துள்ளார்.

இந்திய பெங்களூர் தபால் மையத்தால் நடாத்தப்பட்ட தபால் சேவை பயிற்சியை பூரணப்படுத்தி 1957 இல் சான்றிதழ் பெற்றுள்ளார். அதேபோல் 1958 இல் ஸென். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவி பயிற்சிக்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்.

அன்று கலைகட்டிக் காணப்பட்ட சாரணியர் இயக்கத்தில் பயிற்சி பெற்றுள்ளார்.

1960 களில் ஆசிரியர் பயிற்சியை முடித்து ஊர் வந்ததும் "அகில இலங்கை முற்போக்கு முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும்" காலி இஸ்லாமிய கலாசார மன்றத்தின் தலைவராகவும் பதவிவகித்து துடிப்புள்ள இளமைக் காலத்தில் பயனுள்ள விதமாக பல அரிய அறிவியல் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.




ஈழத்து இலக்கியம் படைப்போரில் தென்மாகாண முஸ்லிம்களும் சளைத்தோர்கள் அல்லர் என்பதை நிருபிக்கும் விதமாக 1966 இல் "நகைமலர்" எனும் நகைச்சுவை நாவலை எழுதி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் தினசரி பத்திரிகைகளான தினபதி, தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளுக்கு சமய, சமூக, இலக்கியம் தொடர்பான பல படைப்புக்களை எழுதிவந்துள்ளார் .

வெலிகம கல்பொக்கை அரசியல் பிரமுகராகக் காணப்பட்ட ஐ.எல். முஹம்மதுவின் மகள் பௌசுல் ஹனாவை தனது வாழ்க்கைத் துணையாக அமைத்துக் கொண்டார் . இவர் எதிலும் நகைச்சுவையாக கதைப்பதை அதிகம் விரும்புவார்.

1983 இல் இந்தியா மதுரை நகரில் இருந்து வெளிவரும் "குர்ஆனின் குரல் " எனும் மலருக்கு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வெள்ளி விழாவினை ஒட்டி உலக ரீதியில் தமிழ் மொழியில் நடாத்தப்பட்ட " பிரிவினைக்கெதிரான பெருமார்க்கம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வித் துறையிலே தேசிய ரீதியிலான பங்களிப்புகளை வழங்கிய எழுத்தாளராகவும் யூஸூப் ஆசிரியர் காணப்பட்டார். இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆரம்பப் பிரிவு மற்றும் இடைநிலைப் பிரிவுகளுக்கு பாடத் திட்டத்தை வடிவமைக்கும் நூலாக்க குழுவில் 1985 ஆண்டுகளில் பணியாற்றி உள்ளார். இதுவும் ஒரு முஸ்லிம் இந்த நாட்டுக்குப் புரிந்த தேசிய மட்ட கல்விச் சேவையாக நோக்கப்படுகிறது. ஓய்வின் பின்னரும் அவர் ஓயாமல் பல இடங்களில் சேவைபுரிந்துள்ளார்.

முதலில் கடமை உணர்வில் மிகுந்த சிரத்தை காட்டக்கூடியவர். ஒவ்வொரு நாளையும் நேரசூசி அமைத்து தொழிற்படக் கூடியவர். தினசரி பத்திரிகை வாங்கி வாசிக்கக் கூடியவர்.

சிறப்பு பத்திரிகையையும் வாங்கி அதனை நேரம் ஒதுக்கி வாசிக்கக் கூடியவர். அதில் வரக்கூடிய குறுக்கெழுத்து போட்டிகளை தொடராக நிரப்பி ஒவ்வொரு வீட்டு உறுப்பினர் பெயரிலும் விடை எழுதி அனுப்புவார். தொழுகை, குர்ஆன் ஓதுதல் போன்ற வணக்க வழிபாடுகளில் அக்கறை காட்டிய அவர் இரவு 9.00 மணி செய்தி, பீ.பீ.ஸி. தமிழோசை செய்தி தவறாமல் செவிமடுக்கக் கூடியவர்.

2007 ஆம் ஆண்டு கலாபூசணம் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டு அகில இலங்கை இஸ்லாமிய கலை இலக்கிய சம்மேளனமும் வெலிகம முஸ்லிம் கல்வி ஸ்தாபனமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய கருத்து சுதந்திர விமர்சன போட்டியில் முதலிடம் பெற்றார்.

"மனிதப் புனிதர் முஹம்மது ரசூலுல்லாஹ்" என்ற நூல் அவரது எழுத்துத் துறைக்கு மகுடம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. நபி ஸல் அவர்களின் புனித வரலாற்றை மிகவும் ஆதாரபூர்வமாக முன்வைக்கும் தமிழ் மொழியில் தரும் சிறந்த நூலாக விளங்குகிறது.


நோய்வாய்ப்பட்டு மாத்தறை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, 2024.08.20 ஆம் திகதி நம்மை விட்டும் பிரிந்தார்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# உமறுப் புலவர் சீறாப் புராணம்




உமறுப் புலவர் சீறாப் புராணம் "பெருகிய கோடிச் சந்திரப் பிரகாசமாய் வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே கருணை வீற்றிருந்த செங்கமலக் கண்ணிணைத் திரு நபி வரும் அவதாரம் செப்புவாம்' உமறுப் புலவர் சீறாப்புராண நபி அவதாரம் படலத்தை இப்படித் தொடங்குவார்.

பெருமானார் நபிஸல் அவர்கள் மாநிலத்தின் மாமனிதராய்; மானுடத்தின் மகத்துவ வழிகாட்டியாய் வாழ்ந்தவர். பூவுலகின் புனிதரவர்.

இத்தகைய பரிசுத்த மனிதரைப் பாடாத நாவு இருக்க முடியாதல்லவா. நபி புகழ் கேட்கும் செவிகளும், நபி புகழ் எண்ணும் மனங்களும் கோடி கோடி எனலாம்.

இலக்கியப் புலத்தில் மா நபி ஸல் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தோன்றிய காவியங்களும், புராணங்களும், சிற்றிலக்கியங்களும், நாமா, கிஸ்ஸா, மஸ் அலா, படைப் போரும், கஸீதா, கஸல், இஸ்லாமிய கீதம் மற்றும் நவீன காவியங்களும், கவிதைகளும் உலக வெளியில் அதிகமதிகம் உள்ளன.

உமறுப் புலவர் முதுமொழி மாலையிலே 'நலன் திகழ் புருடோத்தமரைப் பூலோக நாரதரை ஏக நாயகரை' என நபிமார்களுக்கெல்லாம் சிறப்புறு பெருமானாரின் பெருமை கூறுவார்.

நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் செய்யது அனபியா புலவரால் இயற்றப்பட்டது. நபிகளாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவர் தம் பிள்ளைப் பருவம் பாடப்பட்டது.

சலவாத்துச் சதகம் சங்கை நபிகளார் புகழ் பாடுவது அருங்கவி முஹம்மது தஜா இயற்றியது. இது 'நபியார் நற்புகழை சொல்லக் கருத்தாய்ப் பொருந்தி எனக்கருள் புரிவாய் ரஃமானே' என் ஸல்லல்லாஹூ அலை ஹிவஸ்ஸலமே 'என்று ஸலவாத்து சதகம் அமைகிறது.

'சீர் அருந்தவத்தின் செல்வமென்றாகி சிந்தும் புகழாகி பேரின்பத்தின் பெருங் களமாகி பேறாம் உயிராகி சேர்ந்தீர் நபியே ஸல்லல்லாஹூ அலைஹிவஸ்ஸலம் 'என்று புகழ்பாடுகிறது சலவாத்துச் சதகம்.

நபிகளார் பேரில் கவிக்கோ நவீன மொழிக் கவிதைகள் பாடியவர். 'அஹமது நபியின் ஆள் மயக்கும் அழகு கண்டால் அகம் அது மயங்கும் முஹம்மது நபியின் முத்து நிலா முகம் கண்டால் மூவுலகும் தான் மயங்கும்' எனப் புகழ்வார்.

'கீறல் நிறை மண் குடிலே தங்கள் மாளிகை குவலயம் போற்றிடும் எளிமை வாழ்வே...' என்பார் கடைய நல்லூர் முஹம்மது காஸீம். 'மனித வாழ்வின் உயிர் மொழி உயர் வழி நபி மொழி' என்பார் முஹமத். கௌஸ்.

மு.மேத்தா 'நாயகம் ஒரு காவியம்' நவீன வரலாற்றுக் கவிதையை எழுதியுள்ளார். எளிய தமிழின் எளிய மனிதர் கதை அது.

நபிஸல் அவர்களின் அன்பு மனசை ; ஆழ்ந்தகன்ற செயல் வாண்மைக் கவிதைகளில் பதைதல் என்பது புவியுள்ளவரைத் தொடர்வது தான். பெருமானார் ஸல் அவர்களின் காலத்திலும்கூட ஹஸ்ஸம்பின் ஸாபித், அப்துல்லாஹ் பின்ரவாயா, கஃப் பின் மாலிக் போன்ற கவிஞர்கள் பூமான் நபிஸல் அவர்களின் அவையை அலங்கரித்துள்ளனர், அவர்களது கவிதைகளை அண்ணலார் கேட்டுக் கொண்டிருக்கிறார். திண்ணைத் தோழர்களும் கவி மழை பொழிந்துள்ளனர்.

"கருணையின் ஊற்றை எழுத முனைந்தேன் கல்பில் ஈமானிய ஊற்றுச் சுரந்தது"

# ரூமியின் வைரங்கள்




(ஐ)
ஆயிரம் சூரியன்கள் திறத்தல்
இருளுக்குப் பின் ஆயிரம் சூரியன்கள் திறந்து கொண்டு பிரகாசித்தது போல்
ஆளவும் மாற்றவும் வந்துள்ளது காதல்
விழித்திரு என் நெஞ்சே !
விழித்திரு!



காயம் தான் ஒளி உன்னுள் நுழையும் வாசல்
மதிக்கிற ரோஜா
தன்னைத் திறந்து வீழ்கிறது
நறுமணம் தூவி
ஒவ்வொரு வீட்டிற்கும் சாளரம் ஆவாய் நீ
ஒவ்வொரு களத்திலும் ரோஜாத் தோட்டம் ஆவாய் நீ!
எத்தனை நிம்மதி வெறுமையாய் இருத்தல்
பிறகு இறைவன் வாழலாம்
உன் வாழ்க்கை!
வார்த்தைகளை பயன்படுத்தாத குரலொன்று உள்ளது
செவி கொடு!
இங்கே அங்கே
இனம் தேசம் மதம்
புறப்படுமிடம் சேருமிடம்...

அபத்தமான பிரிவுகளை மறந்துவிடு
நீ ஆன்மா!
நீ காதல்!
ஜின் அல்ல காதலர். அல்ல மனிதனும் அல்ல நீ
தந்திரக்காரனாய் இருந்தேன் நேற்று
உலகை மாற்றிவிட நினைத்தேன்
பக்குவம்பட்டுள்ளது அறிவு இன்று
என்னைமாற்றிக் கொண்டிருந்தால் ஏன்
பற்றியிருத்தல்
விட்டுவிடுதல்
இரண்டுக்கும் இடையில்
சமநிலை கொள்வதே
வாழ்க்கை
இதயத்திலிருந்து மட்டும்
விண்ணைத் தொட முடியும் நீ

(வைரங்கள் ஒளிரும்)



இற்றைப்படுத்தப்படும் கவிதைகளின் மொழி பெயர்ப்புக் கூட்டொன்று அதிர்வை ஏற்படுத்தக் கூடியது.

# தமிழ் நவீன கவிதைகளின் ஆங்கிலத் திரட்டு – இரண்டு

தமிழில் இயங்கிக் கொண்டிருக்கும் கவிஞர்களின் ஒவ்வொரு கவிதையை ஆங்கிலத்தில் மொழிப்படுத்தி அதனை இரு தொகுதிகளாக தந்திருப்பது அளப்பரிய காரியமாற்றுகை தான்.

நவீன தமிழ்க் கவிதையின் முந்நூறு கவிஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் கூட்டை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் அனாமி காரிஷி என்கிற லதாராம கிருஷ்ணன் மற்றும் சிறிய என்வத்சலா ஆகியோரின் உழைப்பு கவிதை வியர்வை சொட்டுவது.

கலைஞன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ளது Modern Tamil PoetryVolumes 1 & 11.

புவனமெங்கும் தமிழில் இயங்கும் கவிஞர்களின் கூட்டாக அவர்கள் பற்றிய அறிமுகக் குறிப்புகளோடு அழகிய வடிவமைப்பில் ஆங்கிலக் கவிதைப் புலத்துக்கு நல்வரவை வழங்கியிருக்கும் இக்குழுமத்துக்கு வாழ்த்துக்கள்.

# மாற்று மொழிக் கவிதை

கவிதை வார்த்தைகளாலானது தான். அந்த வார்த்தைகளுக்குள் இருக்கும் பொருள் , வார்த்தைகள் தரும் ஓசைநயம், அதற்குள்ளாலான அனுபவம், உணர்வுகளின் திரட்சியென கவிதைகள் பெறும் முக்கியத்துவம் வரலாறு நெடுகிலும் கவிதையை முதன்மைப்படுத்தி வந்துள்ளது. மறுசொல் மாற்று மொழிக் கவிதையாக இங்கிலாந்து நாட்டுக் கவிஞர் ரெபெக்கா என்கிற பெக்கி ஹெம்ஸ்லே எழுதிய'சில நேரங்களில் சிலருக்கு'கவிதையை சிறிய வத்சலாவின் தமிழில் தருகிறது.

சில நேரங்களில் சிலருக்குப்
பரிபூரணமாக இருப்பது
இன்னொருவருக்கு குறை
யுள்ளதாக இருக்கும்.
சில சமயங்களில் சிலருக்கு
அமைதியாக இருப்பது
சலிப்பூட்டுவதாக இருக்கும்.
சில நேரங்களில் சிலருக்குச்
சுதந்திரமாகத் தோன்றுவது
இன்னொருவருக்கு மாட்டிக்
கொண்டிருப்பதாகத்
தோன்றும் அத்துடன் சில
சமயங்களில் சிலருக்குக்
கற்பனையானது
வேறொருவருக்கு உண்மை
யானதாகும்.
ஒரு மனிதரின் கழித்துக்
கட்டல் வேறொருவரின்
பொக்கிஷம்
என்று அடிக்கடி
சொல்லப் படுவதுண்டு.
அதோடு யாரோ ஒருவரின்
புயல் முன்னறிவிப்பு
இன்னொருவரின் பரிபூரண
மான வானிலையாக
இருப்பதுண்டு. சில போது
சிலருடைய தழும்புகள்
ஒரு வேதனை
நிறைந்த கதையைச்
சொல்லுபவை சில போது
கொண்டாடப்பட்ட ஒரு
பெருஞ்சிறப்பை அவை
நினைவுபடுத்துபவை.
ஏனென்றால் இதெல்லாம்
நீங்கள் எங்கே
நின்றிருந்தீர்கள்,
நீங்கள் எதை அக்கறையாய்
கவனித்தீர்கள் என்பதோடு
எவ்வளவு தூரம் வரை
பார்க்கிற தைரியம்
உங்களுக்கு இருக்கிறது
என்பதைப்
பொறுத்திருக்கிறது.
அதோடு சில சமயங்களில்
உங்களுக்கு நேர்
எதிராக நின்று
கொண்டிருக்கும் யாரோ
மறு பக்கத்திலிருந்து
மிகவும் வேறுபட்ட
ஒரு காட்சியைக் காணலாம்.
ஆம். எப்போதுமே
கண்ணோட்டம்தான்
நாம் காண்பதைத்
தீர்மானிக்கிறது,
அப்படித்தான் 6 என்கிற
எண் சில சமயம்
யாருடையதாவது
9 என்கிற எண்ணாக
ஆகி விடுகிறது.
அப்படித்தான்
நீங்கள் அமர்ந்து கொண்டு
உங்களுடைய
குறைகளையும்
வடுக்களையும்
எண்ணுகிறீர்கள்.
அதே நேரத்தில்
உங்களுக்கு நேர்
எதிரில் உள்ள யாரோ
ஒருவருக்கு
நீங்கள் தற்போது
இருப்பது போலப்
பரிபூரணமாக
இருக்கிறீர்கள்.

# Arunthathee Pvt. Ltd யாழ்ப்பாணத்திலிருந்து சர்வதேச அரங்கிற்கு தடம் பதிக்கிறது

## சென்னையில் செப். 26இல் மாபெரும் நிகழ்வு

இலங்கை வாழ் தமிழ் சமூக பெண் தொழில் முனைவோருக்கான முக்கிய ஊக்குவிப்பு கரமாக Arunthathee Pvt. Ltd இயங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட Arunthathee Pvt Ltd எனும் வர்த்தக நாமம் இன்று தன் தேசத்தை கடந்து சர்வதேச அரங்கு வரை வெற்றிகரமாக தன்னை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது. முதல் படியாக Arunthathee Pvt Ltd நிறுவனத்தில் "மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார கண்காட்சி" சர்வதேச நிகழ்வு 2024 செப்டம்பர் 26 அன்று சென்னையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வானது Arunthathee நிறுவனத்தில் தொடர் விரிவாக்கத்திற்கான அஸ்திவாரமாக அமையும் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அருந்ததீ நிறுவனம், குறிப்பாக அழகுக் கலை, ஒப்பனை, மணமகள் அலங்காரம் மற்றும் நவநாகரீக வடிவமைப்பு சார் தொழில்களில் பெண்களை வலுவூட்டுவதற்கு ஒரு உந்து சக்தியாக இருந்து வருகிறது. பல ஆண்டுகளாக, இந்நிறுவனம் பல்வேறு பயிற்சி பட்டறைகள் மற்றும் கற்கை நெறி நிகழ்வுகள் மூலம் 1,500 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கியுள்ளது. அவர்களில் பலர் தற்போது தங்கள் சொந்த வணிகங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளனர்.




பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துதல் மற்றும் வலுவூட்டுதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அருந்ததீ நிறுவனம் இலங்கை முழுவதிலும் உள்ள பெண்களுக்கான வளர்ச்சி மற்றும் வாய்ப்புக்கான அடித்தளமாக இருந்துவந்துள்ளது.

சென்னையில் நடக்கும் "மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார கண்காட்சி" அருந்ததியின் சர்வதேச ரீதியிலான விரிவுபடுத்தலின் முதல் முயற்சியாகும். பாரம்பரிய மற்றும் சமகால போக்குகளை முன்னிலைப்படுத்தி, பிரமிக்க வைக்கும் மணப்பெண் அலங்கார பாணியை இந்த நிகழ்வு காட்சிப்படுத்தும் என்பது திண்ணம்.

நாகரீகத்திற்கு அப்பால், இந்த நிகழ்வு இலங்கை மற்றும் இந்திய திறமைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கான ஒரு தளமாகவும், கலாச்சாரங்களை இணைக்கவும் மற்றும் தொழில்சார் நல்லுறவு பாலமாகவும் இருபுறங்களிலும் பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.

விழாவில் பேசிய அருந்ததீ Pvt Ltd இன் நிர்வாக இயக்குநர், "எங்கள் முதல் சர்வதேச நிகழ்வை சென்னையில் நடத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எனவும் யாழ்ப்பாணத்தில் அருந்ததீ ஒரு கனவாக ஆரம்பித்து, இன்று அந்தக் கனவு எல்லைகளைத் தாண்டி வளர்ந்து நிற்கிறது எனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த நிகழ்வு வெறும் நவநாகரீக கண்காட்சியாக மட்டும் இல்லாமல், எங்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இருந்த அனைத்து பெண்களின் கடின உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் ஒரு சான்றாகவும் அமைகிறது என தெரிவித்தார்.

அருந்ததீ இலங்கையிலிருந்து பயணிக்கும் பங்கேற்பாளர்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விமான டிக்கெட்டுகள், தங்குமிட பரிந்துரைகள் மற்றும் ஷாப்பிங் சலுகைகளை ஏற்பாடு செய்துள்ளது, இதன் மூலம் உள்ளூர் ஆதரவாளர்களும் சென்னையில் நடைபெறும் இந்த சர்வதேச கொண்டாட்டத்தில் இணைவதை ஊக்குவிப்பதோடு எளிமையாக்க உதவுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய அளவிலான முன்முயற்சியாகத் ஆரம்பிக்கப்பட்டு, இன்று சிறப்பான மற்றும் வலுவூட்டலுக்கான அர்ப்பணிப்புக்காக அறியப்பட்ட ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமமாக அருந்ததீ Pvt Ltd வளர்ந்துள்ளது. அருந்ததீயின் பயிற்சி பட்டறைகள், நவநாகரீக கண்காட்சிகள் (Fashion shows) மற்றும் வணிகப் பயிற்சிகள் என்பன 500க்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோரை உருவாக்கியுள்ளன. அவர்களில் பலர் இப்போது இலங்கை முழுவதும் அழகியல் துறை மற்றும் திருமண ஒழுங்கமைப்பு சார் தொழிற்துறைகளில் முன்னணியில் உள்ளனர்.

இந்த சர்வதேச விஸ்தரிப்பு அருந்ததீக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கைத் தமிழ் சமூகத்தினருக்குமான வெற்றி என கூறலாம்.

உள்ளூர் திறமைகள் உறுதியுடனும் தொலைநோக்குடனும் தொடர் முயற்சியுடனும் செயற்பட்டால் இவ்வாறு புதிய உயரங்களை அடைய முடியும் என்பதை இவ்வளர்ச்சியானது எடுத்துக்காட்டுகிறது.

அருந்ததீ சர்வதேச அரங்கில் அடியெடுத்து வைக்கும் வேளையில், உலக அளவில் பெண் தொழில் முனைவோருக்கு வளர்ச்சி, வெற்றி மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றின் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கிறது. அருந்ததீ நிறுவனத்தின் பார்வை வலுவாக உள்ளது. இலங்கையிலும் தற்போது சர்வதேச ரீதியிலும் பெண்கள் தங்கள் திறனை உணர்ந்து கொள்ள உதவுகிறது.

**அருந்ததீ Pvt. Ltd பற்றி:**

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட அருந்ததீ Pvt Ltd மணமகள் அலங்காரம், ஒப்பனை மற்றும் அழகியல் சார் தொழில் முனைவோரின் துறைகளில் முன்னணியில் உள்ளது. பயிற்சித் திட்டங்கள் மற்றும் நவநாகரீக கண்காட்சி நிகழ்வுகள் மூலம், இந் நிறுவனம் பெண்களுக்கு அதிகாரத்தையும் அங்கீகாரத்தையும் அளிக்கிறது.

அந்தந்த துறைகளில் வெற்றி பெறத் தேவையான திறன்கள் மற்றும் நம்பிக்கையுடன் அவர்களை மெருகூட்ட துணை நிற்கிறது.

07 ஆம் பக்க தொடர்









கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட தொளஸ் மகேபான வேலைத்திட்டத்தின் கீழ் மீலாதுந் நபி பிறந்த தினம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றது. உதவி பிரதேச செயலாளர் எம்.ஜ. முஆபிகாவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். றின்ஸான், உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா, நிர்வாகப் பிரிவு பிரதம முகாமையாளர் ஏ.சீ. முஹம்மட், சாய்ந்தமருது (கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் அஸீம் (நளீமி), கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம். தௌபீக் (நளீமி), கலாசார பிரிவைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட தஃவா இஸ்லாமிய கலாபீட மாணவர்களும் கலந்துகொண்டனர். ஒருங்கிணைப்பாளர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இந் நிகழ்வு நடைபெற்றது.

# கிழக்கிலங்கையின் தேசியம் வென்ற இளம் இயக்குனர் இறக்காமம் இல்ஹாம்

கிழக்கு மாகாணத்தின் நுழைவாயில் என வர்ணிக்கப்படும் பலம்பெறும் கிராமமாம் இறக்காமம்.







இயற்கை அழகோடு செயர்க்கையும் இரண்டறக் கலந்து பிணைந்து கொஞ்சி விளையாடுகின்ற ஒரு மூத்த கிராமத்தில் தான் முகமது அபூபக்கர் ஆமினா உம்மாவின் கடைசிப் புதல்வனாக 1999 .02.02 திகதி நல்ல தண்ணீர் மழை எனும் சிற்றூரில் இல்ஹாம் பிறந்தார்.

ஆரம்பக் கல்வி முதல் உயர் தரம் வரையில் இறக்காமம் அல் அஸ்ரப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் கற்றார்.

பாடசாலைக் காலங்களில் மாணவத் தலைவராகவும், நுண்கலை மன்றத்தின் செயலாளராகவும், பாடசாலையின் ஏனைய அமைப்புகளின் அங்கத்தவராகவும் திகழ்ந்தார்.

கலையில் ஆர்வம் உள்ள இவர் சிறந்த புகைப்படக் கலைஞராகவும், குறும்பட இயக்குனராகவும் பாடசாலைக் காலத்திலே கொடிகட்டி பறந்தார்.

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட "கசக்கும் சீனி" என்ற படத்தை இயக்கி மாணவர்கள் மத்தியில் அழியாத பெயரைப் பெற்றார்.

நல்லதொரு ஏழ்மையான கூட்டுக் குடும்பத்தில் பிறந்த இல்ஹாம் தனது வாழ்வில் நிறைந்த சவால்களையும், தடைகளையும் தாண்டி முன் வந்த ஒரு மாணவன் ஆவார்.

தற்போது ஆங்கில மொழி மூலம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான துறையில் பட்டப் படிப்பினை மேற்கொண்டு வருகின்றார். உளவியல் சமூகப் பணியில் டிப்ளோமா மன ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் அம்பாறை பொது வைத்தியசாலையில் நிறைவு செய்தார். இலங்கையில் காணப்படும் விரல் விட்டு எண்ணக்கூடிய குறும்பட கலைஞர்களில் இல்ஹாமும் முதன்மையானவர் ஆவார். இவரால் இயக்கப்பட்ட குறும்படங்கள் பின்வருமாறு

ஏழையின் உள்ளம், ஆசான், போதையால் மாறிய பாதை, கசக்கும் சீனி, கருணை, மாற்றம், செப்டம்பர்_ 15, Code Red, உளம் காப்போம்,

நாம் போன்ற படங்களை வெளியிட்டு இலங்கையில் வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயத்தின் நட்சத்திரமாக இடம் பிடித்தார் .

புன்னகையே எப்போதும் தனது ஆயுதமாகக் கொண்டு நடமாடும் இல்ஹாம் 2020 ஆம் ஆண்டு தேசிய மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு இலங்கை முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குறுந்திரைப்பட போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று ஒரு லட்சம் ரூபாய் பண பரிசினையும் வென்றார் .

*Media Net works* இனால் மாபெரும் குறுந்திரைப்பட போட்டி ஒன்று 2021ல் நடாத்தப் பட்ட போது அதில் அவரால் இயக்கப்பட்ட " மாற்றம்" என்ற குறும் திரைப்படத்துக்கு சிறந்த இயக்குனருக்கான விருதும் , சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதும், சிறந்த நடிகருக்கான விருதும் கிடைக்கப்பெற்றது .

*Unity is our strength* என்ற தொனிப் பொருளில் CORE அமைப்பின் ஊடாக நடாத்தப்பட்ட குறுந்திரைப்பட போட்டியில் Runner up இரண்டாமிடம் கிடைக்கப் பெற்று பண பரிசினையும் வென்றார்.

இந்திய திரையுலகை பிரம்மாண்டமாக்கிய சங்கரைப் போல் இறக்காமத்தில் இளைஞர்கள் மத்தியில் திகழும் இல்ஹாம் புகைப்படத்திலும் சாதனைகளை படைத்துள்ளவர்.

அவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இலங்கையில் பிரபல்யமான பல்வேறு பத்திரிகைகளில் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது .

தரமான கமரா வசதிகள் இல்லாமல் தன்னிடமுள்ள கைபேசி சிறிய கமராவினைப் வைத்து இவ்வாறான சாதனையைப் படைத்த இல்ஹாமின் திறமையைக் கண்ட Dr கனி ஒரு கமராவினை வழங்கி அவரை ஊக்கப்படுத்தினார் .

இவ்வாறு தன்னகத்தே ஆயிரம் ஆயிரம் திறன்களைக் கொண்ட அபூபக்கர் இல்ஹாம் நல்லதொரு சமூக சேவையாளர் என்பதும் யாவரும் கண்ட உண்மையே.

இல்ஹாமின் கலைப்பயணம் மென்மேலும் தொடர்ந்து இன்னுமின்னும் பற்பல சாதனைகள் படைக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**குத்தூஸ்**




## ஆடம்பரம் இல்லாத தப்புகள் அற்ற எளிமையான...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

பரீட்சை எழுதி சித்தி அடைந்தார் . 2007 / 03 /12 ஆம் தேதி உதவி கல்வி பணிப்பாளராக மாகாண கல்வி திணைக்களத்தில் கடமையாற்றினார்

பின்னர் 2006 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் அதிபராக 2010 வரை கடமையாற்றினார். பின்னர் திருக்கோயில் வலய கல்வி அலுவலகத்தில் கல்வி அபிவிருத்தியின் பிரதி கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றி பின்னர் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் கல்வி அபிவிருத்தி நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்வி̇ப் பணிப்பாளராகவும் கடமை ஆற்றினார். 2019 ஆம் ஆண்டு பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தில் நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளராக கடமை ஆற்றினார். சொற்ப காலம் பதில் வலய கல்விப் பணிப்பாளராகவும் கடமை ஆற்றினார்.

பின்னர் மீண்டும் 2023இல் மேற்கு கல்வி வலயத்தில் நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்வி பணிப்பாளராக கடமை ஆற்றினார் . கல்வி மீது அவர் கொண்ட தாகம் அர்ப்பணிப்புகள் அவர் வேலையை செய்யும் இடங்களில் எல்லாம் இன்னும் அவரது நாமத்தை ஒழித்துக் கொண்டே இருக்கின்றது.

இவ்வாறு செயல்பட்டிருக்கும் போது சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு வலயக் கல்வி பணிப்பாளர் வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையிலும் வெற்றி கொண்டார். அதிகப்படியான புள்ளிகளை பெற்றதன் ஊடாக சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு 2024 / 06 / 03 ஆம் திகதி வலயக்கல்வி பணிப்பாளராக நியமனம் பெற்றார்.

ஆடம்பரம் இல்லாத தப்புகள் அற்ற எளிமையான நடத்தை கோலமுள்ள நல்லதொரு ஆளுமை. வாய்மை தவறாத ஒரு செயல் வீரன் எமது வலயத்துக்கு கிடைத்திருப்பது மிக்க மகிழ்ச்சியை தருகின்றது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரிட்சை கா.பொ.த சாதாரண உயர்தரப் பொதுப் பரீட்சைகளில் எமது சம்மாந்துறை வலயம் மிகப் பின்னடைவில் இருந்தாலும் அதனை தொடர் முயற்சியிலும் அர்ப்பணிப்பினாலும் இளம் பிரதி கல்விப் பணிப்பாளர்களின் நிர்வாக திறன், ஆசிரியர் ஆலோசர்களின் முயற்சியுடன் எமது வலயத்தை கிழக்கு மாகாணத்தில் பேசும் வலயமாக முன்னேற்ற என்னாலான அத்தனை முயற்சிகளையும் செய்வேன் எனக் கூறிய மகேந்திர குமார் ZDE அவர்கள் சம்மாந்துறை வவய மாணவர்கள் பற்றி பின்வருமாறு கூறினார் .

"மிகத் திறமையானவர்களையும் அர்ப்பணிப்புள்ள நல்ல ஆசிரிய உள்ளங்களையும் வலயத்தில் கண்டுள்ளேன்.

எல்லோரையும் ஒன்று சேர்த்து அதிபர்களின் உதவியுடன் பயணிக்கும் போது அவர்கள் தேவை அறிந்து செயல்படும்போது எமது இலக்கை இலகுவில் அடையக் கூடியதாக இருக்கும்" கல்விப் புலத்தில் உள்ள பிரதி கல்வி பணிப்பாளர் விக்னேஸ்வரன் நிதர்சினியை திருமணம் முடித்த இவருக்கு ஓர் மகனும் உண்டு .

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.